

ஆண்டறிக்கை

2021

இலங்கை துறைமுக அதிகாரசபை

எமது தொலைநோக்கு

‘‘ உலகலாவிய சமுத்திரவியல் மற்றும் சேவை வழங்கல் மையத்தின் தரத்தில் பேணிச் செல்லும் இலங்கையின் பாரிய முன்னனி முகவர் நிலையமாக அமைத்தல்’’

எமது பணிக்கூற்று

‘‘அனைத்து சேவைகள் பெறும் நிறுவனங்களுக்கு சர்வதேச தரத்திலான துறைமுக வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல் ஊடாக தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்’’

உள்ளடக்கம்

எமது நிறுவனரீதியான நோக்கங்கள்	3
எமது நிறுவனரீதியான மூலோபாயங்கள்	4
எமது இயக்க கோட்பாடுகள்	5
இலங்கை துறைமுக அதிகாரசபை என்பது	6
இயக்க முக்கிய விடயங்கள்	7
நிதிசார் முக்கிய விடயங்கள்	10
எங்கள் அமைச்சர்கள்	11
தலைவரின் மீளாய்வு	12
பணிப்பாளர் சபை	17
முகாமைக்குழுவும் கணக்காய்வுக் குழுவும்	23
வர்த்தக அபிவிருத்தி	25
இயக்க மீளாய்வு	26
நிதி மீளாய்வு	63
மனித மூலதனம்	68
ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள்	69
ஒன்றிணைந்த நிர்வாக அறிக்கை	70
துறைமுக புள்ளி விபரங்கள்	75
முக்கிய நிகழ்வுகள்	80
நிதி அறிக்கைகள்	87
பணிப்பாளர் சபையின் அறிக்கை	88
நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை	90
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களின் அறிக்கை	91
சட்டபூர்வ இணக்கப்பாட்டு அறிக்கை	92
இயக்க முக்கிய விடயங்கள்	93
நிதி நிலைமை தொடர்பான அறிக்கை	94
விபரமான வருமான அறிக்கை	95
திணிவு மாற்றம் மீதான அறிக்கை	96
காசுப் பாய்ச்சல் அறிக்கை	98
பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்	99
நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்	119
வரைபட மீளாய்வு	141
கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	143
அமைப்பு விதி தொடர்பான தகவல்கள்	160

2019 - 2021 திட்டமிடப்பட்ட கால எல்லையினுள் கீழ்க்குறிப்பிடப்படும் ஏழு (07) நோக்கங்களையும் அடைந்துக்கொள்வதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை முன்னோக்கிப் பயனிக்கின்றது.

1. நவீன தொழிநுடபம் மற்றும் ஜய கொள்கலன் முனைய நவீனமயப்படுத்தலுக்கு இணையாக பொதுப்பணிக் கட்டமைப்புக்கள் மற்றும் உயர் கட்டமைப்புக்களின் நிலையை அதிகரிப்பதன் ஊடாக திறனான துறைமுகமொன்றை உருவாக்குதல்

2. எதிர்வரும் மூன்று ஆண்டினுள் கொழும்பு துறைமுகத்தின் தரத்தை உலகளாவிய சிறந்த கொள்கலன்களை கையாளும் துறைமுகங்கள் (20) இருபதிற்கிடையே உயர்த்துதல்.

3. இலங்கை துறைமுக அதிகாரசபையின் உற்பத்தித்திறன் சிறப்புத்தன்மை மற்றும் செயற்திறனை உயர்மட்டத்தில் பேணிச்செல்வதற்கு மனித மூலதன திறன்களை உயர்வடையச் செய்தல்.

4. நன் நோக்கிலான ஒத்துழைப்புக்களை பலமான முறையில் கட்டியெழுப்பும் பொருட்டு அனைத்து துறைமுகம் தொடர்பான வர்த்தக நிறுவனங்கள், கப்பல் கம்பனிகள் மற்றும் அரச நிறுவனங்களின் ஒத்துழைப்பினை மேம்படுத்துதல்.

5. குறைந்த ஆகுசெலவில் உயர் பெறுமதியினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு கொடுக்கல்வாங்கல் அடிப்படையில் உச்ச அளவில் மற்றும் மொத்த திரும்பலை அதிகரித்தல்.

6. நிறுவனரீதியான விசேட நிருவாக தொழிற்பாட்டு வரையறை, தொகுதி மற்றும் விதிமுறைகளை விருத்தி செய்தல்.

7. ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நோக்குக்கு (UNSDGs) மற்றும் அதற்கு ஏற்றவகையில் கொழும்பு துறைமுகத்தை பசுமையான மற்றும் நிலைபேறான நிலையினை அடைந்துகொள்ளல்.

நிறுவன ரீதியான குறிக்கோள்கள் மற்றும் நீண்டகால குறிக்கோள்களை அடையும் பொருட்டு எடுக்கப்படவுள்ள உத்திகள் கீழ்வருமாறு;

சந்தையை கைப்பற்றிக்கொள்வதற்கான மூலோபாயங்கள்

அபிவிருத்தி, இயக்கம் மற்றும் விற்பனை ஆகிய பிரிவுகள் தொடர்பாக அதிகூடிய கவனம் செலுத்துவதனூடக தற்போதுள்ள சந்தையினால் பெற்றுக்கொடுக்கப்படும் துறைமுக சேவைகள் தொடப்பான சந்தை பங்குகளின் வளர்ச்சியை அதிகரிப்பது இந்த உத்திகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த உத்திகளினுள் மூன்று வழிமுறைகள் உள்ளடங்கியுள்ளன

- மீள் ஏற்றுமதி மைய நிலைய மூலோபாயம்
- சேவை வழங்கல் மைய மூலோபாயம்
- பசுமையான மற்றும் நிலைபேறான துறைமுக மூலோபாயம்

உற்பத்தி/ சேவை அபிவிருத்தி மூலோபாயம்

இது இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு தனது தற்போதைய உற்பத்தி மற்றும் / அல்லது துறைமுக சேவைகளை மேம்படுத்துவதன் ஊடாக அல்லது நவீனமயப்படுத்தல் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கான வழிமுறைகள்.

பல்வகைப்படுத்தலிற்கான வழிமுறைகள்

இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் இயக்கங்கள் தற்போதைய சந்தை மற்றும் சேவையை தாண்டிய செயற்பாடுகளை முன்னெடுத்த போதிலும் தற்போதுள்ள வலையமைப்பு பெறுமதியை சாத்தியவளத்தின் ஊடாக இயக்க செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

ஒத்துழைப்புக்கான மூலோபாயங்கள்

பிற நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் கடல்சார் மற்றும் சேவை வழங்கல் துறையினுள் போட்டித்தன்மையான அனுகூலத்தை பெற்றுக்கொள்வதற்கான மூலோபாயங்களாகும். கீழ்வரும் ஒத்துழைப்புக்கான மூலோபாயங்கள் பயன்படுத்த முடியும்

- மூலோபாயமாக கூட்டமைத்தல்
- பரஸ்பர சேவைகளின் கூட்டமைப்புக்கள்
- அரச – தனியார் கூட்டுரிமை

வெளிவாரியாக பயன்படுத்தும் மூலோபாயங்கள்

கீழ்காணும் காரணிகள் மீது அடையாங்கண்டு கொண்ட பணிகளை வெளிவாரியாக செயற்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை தீர்மாணித்துள்ளது.

- ஆகு செலவு உற்பத்தித்திறனை அதிகரித்தல்
- ஏனைய வியாபாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல்
- சேவை வழங்குனர்களுக்கு தரமான சேவையை பெற்றுக்கொடுத்தல்

மேற்குறிப்பிட்ட நிறுவனரீதியான நோக்கங்கள் மற்றும் மூலோபாயங்கள் மீது அடிப்படையாகக் கொண்ட குறுகிய கால மற்றும் நீண்டகால குறிக்கோள்களை அடைந்துக்கொள்ளும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையினால் பல்வேறுப்பட்ட பகுதியளவிலான உத்திகள் மற்றும் இயக்க மூலோபாயங்கள் பயன்படுத்தப்படுகின்றது.

துறைமுக இயக்க செயற்பாடுகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புப்படுத்தி தீர்மானங்கள் மேற்கொள்ளும் இணக்கப்பாட்டு தன்மையை பேணிச் செல்வதற்கு தொடர்பாக்கிக் கொள்ளும் பொருட்டு சமனான மதிப்பீட்டு இயக்க கோட்பாடு எனக் கருதப்படுகிறது.

நிலைபேறான தன்மை

துறைமுகத்தின் அனைத்து இயக்க நடவடிக்கைகளினதும் மையமாக அமைவது நிலைபேறான அபிவிருத்தியாகும்

பசுமை துறைமுகம்

அனைத்து துறைமுகங்களினதும் கவர்ச்சிகரமான நோக்கு எல்லை சூழலுக்கு உகந்த சுற்றாடல் ஆகும்.

புதிய கண்டுபிடிப்புக்கள்

மூலோபாய நோக்கங்களை அடையும் பொருட்டு நவீன வியாபார மாதிரிகளை அபிவிருத்திக்கு பயன்படுத்தல் புதிய கண்டுபிடிப்புகளாகும்

தொழில் முயற்சி

மாற்று வியாபார வழிமுறை செயற்பாட்டின் ஆனகூலம் தொடர்பாக பின்பற்ற முடியுமான சந்தர்பங்களை ஆராய்தல்

வலையமைப்பு தொடர்பாக

வாடிக்கையாளர்களுடனான பல்மாதிரியானதும் ஆரம்ப செயற்பாடு மிக்கதுமான தொடர்பாடலை ஏற்படுத்தி பெறுமதியான பங்காளர்களை உருவாக்குதல்

உற்பத்தித்திறன்

இலங்கை துறைமுக அதிகார சபையின் சொத்துக்கள், முதலீடுகள் மற்றும் வளங்களை உன்னதமாக பயன்படுத்துதல்.

தரவுகள் தயாரித்தல்

அனைத்து மட்டத்திலும் பயனாளிகளின் உரிமம் மற்றும் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு குறித்த மற்றும் காலத்திற்கான தகவல்கள் முன்னுரிமை பெறுகின்றன

செயற்திறனான முகாமைத்துவம்

அனைத்து முகாமைத்துவம் மற்றும் ஊழியர்களுக்கிடையில் அந்நியோந்நிய ஒத்துழைப்பான தொடர்பொன்று உருவாகும் வகையில் சிறந்த அனுபவங்கள் கொண்ட திறமையான ஊழியர்களை தக்கவைத்துக் கொள்ளும் தந்திரோபாய நோக்கத்திற்காக அனைத்து ஊழியர்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளனர்.

இலாபம் பங்களிப்பு

அனைத்து செயற்பாடுகளும் முழுமையான நிதி கணிப்பீட்டுடன் முன்னெடுத்து நிலையான தன்மை மற்றும் வளர்ச்சியை உறுதிப்படுத்தப்படுகிறது.

அபிலாசைகள்

ஒட்டுமொத்த இயக்க பணிகள் தொடர்பாக சரியான நோக்குடன் கூடிய கடமைகளுக்கு முன்னுரிமை வழங்கும் குழு உணர்வுடன் செயற்படும், புதிய கருத்துக்களிற்கு முன்னுரிமை வழங்கும் தலைமைத்துவத்துடன் கூடிய செயற்பாட்டு திறன் கொண்ட நிறுவனமொன்றை கட்டியெழுப்புதல்.

ஒருங்கிணைப்பு

எந்தவொரு நிலையிலும் போட்டித்தன்மையான கட்டணத்தின் கீழ் உயர் தரத்திலான சேவைகள் வழங்கும் பொருட்டு சாதாரணமான, உண்மையான மற்றும் தொழிற் தரத்தில் செயற்படுதல்.

ஒத்துழைப்பு

கூட்டிணைந்த, பயனுறுதியான மற்றும் தனியார் தொடர்புகளின் வளர்ச்சியான திறந்த மற்றும் விருந்தோம்பல் சூழலை உருவாக்குவதற்கு முயற்சித்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் மீது 1979.08.01 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டு பின்னர் 1984 இன் இல. 07 மற்றும் 35 ஆம் சட்டங்களின் ஊடாக திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 6 (1) பிரிவில் அதன் நோக்கங்கள் மற்றம் செயற்பாடுகள் பின்வருமாறு வரைவிலக்கணம் அளிக்கப்பட்டுள்ளன.

- கப்பல் சுமை நடவடிக்கைகள், கப்பல்களில் ஏற்றல் இறக்கல் மற்றும் மீள் ஏற்றல், பயணிகள் தரையிறக்கல், குதங்களிடுதல், வாப்பு நடவடிக்கைகள், கலங்களுக்குத் தேவையான நீர், எரிபொருள் மற்றும் மின்சாரம் வழங்கல், பெற்றோலிய எண்ணெய் உற்பத்திகள், உராய்வு நீக்கிகள், கலங்களுக்கும் கலங்களில் இருந்து வத்தைகளுக்கும் களஞ்சியங்களுக்கும் இடையில் போக்குவரத்து செய்தல், கலங்களின் வழிகாட்டிப் பணிகள், நங்கூரமிடப்படுதல், நீர் மூழ்குதல் மற்றும் நீருக்கடியிலான கப்பல் பழுதுபார்த்தல் தொடர்பில் திறன்மிகு தொடர்ச்சியான சேவை மற்றும் அதற்கான துணை சேவைகளை வழங்கல்.

- திறன்மிகு நிலையான ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவை வழங்கல்.

- துறைமுக எல்லைகளினுள்ளும் துறைமுகங்களினது உட்புகு வழிகளிலும் கப்பலோட்டம் ஒழுங்குபடுத்தல் மற்றும் நிர்வாகம்.

- துறைமுக நிறுவுதல்களைப் பராமரித்தல் மற்றும் அவைகளின் பாவனைகளை மேம்படுத்தல் குறிப்பிட்ட துறைமுகங்களினுள் மேம்படுத்தலும் விருத்தி செய்தலும்

- ஏதாவது விசேட துறைமுகமொன்றினுள் சுங்க திணைக்களப் பணிகள் தவிர்ந்த ஏனைய சகல நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தலும் முறைப்படுத்தலும்.

- விசேட துறைமுகங்களினுள்ளும் அதன் வெளியேயும் கப்பலோட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலங்களுக்கு வழிகாட்டலும் பாதுகாப்புக்குத் தேவையான வெளிச்சங்கள் மற்றும் வேறு தேவைப்பாடுகளை இலங்கை கடற்கரையில் மற்றும் அதற்கப்பால் நிறுவுதலும் பராமரித்தலும்.

- துறைமுக அதிகாரசபை சட்டத்தின் மீது ஒப்படைக்கப்படும் வேறோதாவது அலுவல்களை நிறைவேற்றுதல்.

- சொத்துக்கள் மீள் முதலீடு செய்யப்படுவதற்கும் புதிய முதலீடுகள் ஏற்படுத்தப்படுவதற்கும் போதுமான பொது சேமிப்பு நிதியமொன்றை ஏற்படுத்தி,பராமரித்து செல்லப்படுவதற்காகவும்,அதிகாரசபையின் வருமானத்திற்கு கொடுக்கப்படுவதற்கான தகுந்த கட்டணம் செலுத்தப்படுவதற்கும், போதுமான வருமானத்துக்கு குறையாத வருமானம் அதிகாரசபைக்கு கிடைக்கும் வண்ணம் அதிகாரசபையின் பணிகளை நடாத்திச் செல்லல். மேற்கூறப்பட்டுள்ளவாறு அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவை தொடர்பிலான கட்டணங்களை சம்பந்தப்பட்ட சட்டத்திற்கேற்றவாறு அறவிட்டுக்கொள்ளுதல்.

- சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக குறிப்பிட்ட துறைமுகங்கள் மற்றும் ஒவ்வொரு துறைமுகமும் நிதி அடிப்படையில் தன்நிறைவான திட்டமொன்றை முகாமைத்துவம் செய்வதற்கு முயற்சித்தல்.

இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்தின் 5 (1) பிரிவின் பிரகாரம் கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படும் 09 பணிப்பாளர்கள் துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபையில் உள்ளடங்கப்பட்டிருப்பர்.

தலைவர், பிரதான நிறைவேற்றுனராக இருப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழு நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருப்பார்.

கப்பல்களின் வருகை (சகல துறைமுகங்களினதும்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
கொழும்பு துறைமுகம்	3,806	3,675	-3.4
காலி துறைமுகம்	22	14	-36.4
திருகோணமலை துறைமுகம்	135	117	-13.3
காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை மற்றும் காரைநகர்	0	0	-
ஹம்பாந்தோட்டை துறைமுகம்	374	374	0.0
மொத்தம்	**4,337**	**4,180**	**-3.6**

கொள்கலன் கையாளல் கொள்ளளவு (இருபது சம அலகுகள்) கொழும்பு துறைமுகம்

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
இலங்கை துறைமுக அதிகாரசபை (SLPA)			
இறக்குமதி	115,624	162,388	40.4
ஏற்றுமதி	115,429	158,733	37.5
மாற்றியேற்றல்	1,855,713	1,846,264	-0.5
மீள் அடுக்குதல்	11,038	30,949	180.4
மொத்தம்	**2,097,804**	**2,198,334**	**4.8**
சவுத் ஏசியா கேட்வே டர்மினல்ஸ் (SAGT)			
இறக்குமதி	132,277	136,824	3.4
ஏற்றுமதி	132,912	128,461	-3.3
மாற்றியேற்றல்	1,568,769	1,521,373	-3.0
மீள் அடுக்குதல்	38,094	52,035	36.6
மொத்தம்	**1,872,052**	**1,838,693**	**-1.8**
கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT)			
இறக்குமதி	295,680	303,223	2.6
ஏற்றுமதி	297,747	309,426	3.9
மாற்றியேற்றல்	2,188,979	2,482,410	13.4
மீள் அடுக்குதல்	102,500	117,272	14.4
மொத்தம்	**2,884,906**	**3,212,331**	**11.3**
கொழும்பு துறைமுகம்			
இறக்குமதி	543,581	602,435	10.8
ஏற்றுமதி	546,088	596,620	9.3
மாற்றியேற்றல்	5,613,461	5,850,047	4.2
மீள் அடுக்குதல்	151,632	200,256	32.1
மொத்தம்	**6,854,762**	**7,249,358**	**5.8**

கப்பற்சரக்குகள் கையாளல் (சகல துறைமுகங்களினதும்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
மொத்த கப்பற்சரக்கு கையாளல் பரிமாணம் (மெ.தொ.மி)	103.0	109.0	5.8

கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
கொள்கலனிலிடப்பட்டவை	14,423	14,935	3.5
தொகை பிரிப்பு	552	854	54.7
உலர் மொத்தம்	2,988	3,141	5.1
திரவ மொத்தம்	4,826	4,679	-3.0
மொத்தம்	**22,789**	**23,609**	**3.6**

கொழும்பு துறைமுகத்தில் ஏற்றப்பட்ட கப்பற்சரக்குகள்- இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
கொள்கலனிலிடப்பட்டவை	12,176	13,198	8.4
தொகை பிரிப்பு	7	4	-42.9
உலர் மொத்தம்	0	0	-
திரவ மொத்தம்	521	551	5.8
மொத்தம்	**12,704**	**13,753**	**8.3**

கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற்சரக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபை (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
கொள்கலனிலிடப்பட்டவை	26,599	28,133	5.8
தொகை பிரிப்பு	559	858	53.5
உலர் மொத்தம்	2,988	3,141	5.1
திரவ மொத்தம்	5,347	5,230	-2.2
மொத்தம்	**35,493**	**37,362**	**5.3**

திருகோணமலை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
இறக்கப்பட்டது	2,874	3,052	6.2
ஏற்றப்பட்டது	198	138	-30.3
மொத்தம்	**3,072**	**3,190**	**3.8**

காலி துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
இறக்கப்பட்டது	404	106	-73.8
ஏற்றப்பட்டது	0	0	-
மொத்தம்	**404**	**106**	**-73.8**

காங்கேசன்துறை, மயிலிட்டி, பருத்தித்துறை மற்றும் காரைநகர் துறைமுகங்களில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
இறக்கப்பட்டது	0	0	-
ஏற்றப்பட்டது	0	0	-
மொத்தம்	**0**	**0**	-

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற்சரக்குகள் (ஆயிரம் தொன்களில்)

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
இறக்கப்பட்டது	1,229	1,710	39.1
ஏற்றப்பட்டது	521	539	3.5
மொத்தம்	**1,750**	**2,249**	**28.5**

மொத்த ஊழியர் தொகை

விபரம்	2020	2021	வித்தியாசம் (%)
கொழும்பு துறைமுகம்	8,567	8,285	-3.3
திருகோணமலை துறைமுகம்	387	381	-1.6
காலி துறைமுகம்	339	331	-2.4
மொத்தம்	**9,293**	**8,997**	**-3.2**

சகல துறைமுகங்களும்

(ரூபா மில்லியன்)

விபரம்	**2021**	**2020**	**வித்தியாசம் (%)**
வருமானம் மற்றும் செலவினம்			
மொத்த வருமானம்	60,606.4	52,657.2	15.1
செலவினம்	(32,935.8)	(29,746.6)	(10.7)
வெளிநாட்டு கடன் மீதான வட்டி மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்கள் /நட்டங்களுக்கு முன்னரான இலாபம் /(நட்டம்)	**27,670.6**	**22,910.6**	**20.8**
வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி	(799.6)	(1,531.7)	47.8
அந்நிய செலாவணி (நட்டம்) / கிடைக்கப்பெறுதல்	(1,269.7)	(1,051.7)	(20.7)
வரிக்கு முன்னராக மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்/(நட்டம்) பின்னரான இலாப /(நட்டம்)	**25,601.3**	**20,327.1**	**25.9**
வரிகள்			
வருமான வரி	(2,676.3)	(2,603.4)	(2.8)
சம பங்கு இலபா வரி	-	-	-
மாறுபடும் வரி	(2,229.8)	1,014.6	(319.8)
ஒன்றினைந்த நிதிக்கான பங்களிப்பு	-	-	-
வரி ஏற்பாடுகளின் பின்னரான தூய இலாப/ (நட்டம்)	20,695.3	18,738.3	10.4
ஐந்தொகை			
நடைமுறை சாராத சொத்துக்கள்	396,375.5	394,795.7	0.4
நடைமுறை சொத்துக்கள்	96,245.7	78,787.1	22.2
நடைமுறை பொறுப்புக்கள்	24,698.9	24,454.5	(1.0)
திணிவு மற்றும் ஏனைய மூலதனம்	7,591.4	7,591.4	-
ஒதுக்கீடும் ஏற்பாடுகளும்	362,542.1	342,849.7	5.7
நடைமுறை சாராத பொறுப்புக்கள்	97,788.9	98,687.2	0.9
விகிதம்			
வருமானத்திற்கான இயக்க இலாபம்	43.0	41.0	
வருடாந்த வருமான வளர்ச்சி	15.1	(3.6)	
மூலதனமிடலின் மீதான இலாபம்	6.9	5.8	

ரோஹித்த அபேகுணவர்தன

கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர்

மற்றும்

ஜயந்த சமரவீர

கௌரவ களஞ்சிய வசதிகள், கொள்லன் முனையங்கள், துறைமுக வழங்கல் வசதிகள் மற்றும் படகுகள், கப்பல் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

பகுப்பாய்வு

கடந்த இரண்டு வருடங்களுக்குள் துறைமுகத்துறை உட்பட ஒட்டுமொத்த வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைகளில் பாரிய பாதிப்பான விளைவுகளை ஏற்படுத்தி முழு உலகமும் பேரழிவுக்கு உட்படுத்திய கொவிட் 19 உலகளாவிய வைரஸ் காரணமாக 2021 ஆம் ஆண்டு பல சவால்களைக் கொண்டதோடு அந்நிலமை நிகழ்காலத்தில் மிகவும் சுமூகமாக சூழ்நிலையொன்றாக மாறியது. இவ்வாறு கடினமான நிலமையின் கீழும் விசேட முன்னேற்றமொன்றை பெற்றுக்கொள்ள முடியுமென 2021 வருடத்துக்கு முன்னைய வருடத்துடன் ஒப்பீட்டளவில் வெற்றிகரமான வருடமொன்றாகியது.

கொவிட் 19 தொற்று நிலமை உலகத்திலிருந்து மீண்டு சுமுகமான நிலையொன்று ஏற்பட்டதுடன, தெற்கு ஆசியாவில் கடலக கேந்திரஸ்தானமாக கருதுகின்ற கொழும்பு துறைமுகத்துக்கு, துறைமுக வரலாற்றில் அதி உயர் கொள்கலன்கள் கையாளும் திறனான 7.24 மில்லியன் வருடாந்த கொள்கலன் கையாளும் திறனை அறிவித்து மற்றும் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.8% குறிப்பிடத்தக்க விருத்தியொன்று அதாவது மில்லியன் 6.85 ஒட்டுமொத்த பரிமாணமொன்று அறியப்பட்டதுடன், சுய செயற்திறனை விஸ்தீரனமாக்குவதற்கு முடிந்துள்ளது. கொழும்பு துறைமுக வரலாற்றில் இதுவரை கையாளப்பட்ட அதி கூடிய வருடாந்த கொள்கலன் கையளல் தொன் பிரமானமான 103,823,774 மெற்றிக் தொன் அறியப்பட்டு இந்த வருடம் மேலும் விசேட வருடமொன்றாக அமைந்தது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பங்குதாரர்களுக்கு தடைகளின்றி செயற்தினான சேவையொன்றை பெற்றுக்கொடுப்பதற்காக இலங்கை துறைமுக அதிகார சபை அதன் நாளாந்த இயக்க செயற்பாடுகளிற்காக பல்வேறு தொழிநுட்ப மற்றும் டிஜிடல் தொழிநுட்ப கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது. பெரும்பாலான பகுதிகளில் இணைய சேவையை பயன்படுத்துவதன் மூலம் ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்கு மற்றும் உள்ளக மற்றும் வெளிப்புறத் தரப்பினர்களுக்கு இலங்கை துறைமுக அதிகார சபையுடன் இலகுவான முறையில் வியாபாரத்தை முன்னெடுப்பதற்கான சாத்தியம் பெற்றுள்ளது. விசேடமாக இவ்வாறான சவால்கள் மிகு காலப்பகுதியினுள் கடலக இயக்க செயற்பாடுகளுடன் தொடர்ச்சியான தொடர்புகளை பேணுவதற்கு தொழிநுட்பத்தை பயன்படுத்துவது விசேட மூலோபாய மார்கமாவதுடன், இதன் மூலம் இயக்க செயற்பாடுகள் இலகுவாக்கப்படுவது மாத்திரமன்றி அநாவசிய எச்சரிக்கைகளை நீக்கி செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையை பேணிச் செல்வதுடன் அன்றாட இயக்க நடவடிக்கைகளின் செலவுகள் மற்றும் ஏற்படுகின்ற குறைப்பாடுகளை மட்டுப்படுத்திக் கொள்வதற்காகவும் சாதகமான நிலையொன்று உருவாகியுள்ளது.

நிதி செயலாற்றுகை

2020 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபை ரூபா 21 பில்லியன் இயக்க இலாபத்தை அடைந்துள்ளதோடு, 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலங்கை துறைமுக அதிகார சபை ரூபா 25 பில்லியன் இயக்க இலாபத்தில் வளர்ச்சியொன்றை பதிவுச்செய்துள்ளது. 2020 ஆண்டினுள் ரூபா 53 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டில் தேறிய வருமானம் ரூபா 61 பில்லியனாவதோடு அது ரூபா 8 பில்லியன் விசேட அதிகரித்த பணவீக்கமாகும். 10% அதிகரிப்பொன்று அறியப்பட்டு 2021 ஆம் ஆண்டில் அந்நிய செலாவனி பெறுதல்கள்/ (நட்டம்) மற்றும் வரி, கடன் வட்டிக்கு முன் ஒட்டுமொத்த செலவினம் ரூபா 33 பில்லியன் ஆவதோடு, அது 2020 ஆம் ஆண்டில் ரூபா 30 பில்லியனாகியது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டினுள் கடன் மீதான வட்டி 48% ஆல் குறைந்துள்ளது. வெளிநாட்டு நிதிகளுக்கு ஒப்பாக இலங்கை நிதியின் பெறுமதி குறைவடைந்துள்ளதன் காரணமாக 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 1.05 பில்லியனான அந்நிய செலாவனி நட்டத்துடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் அந்நிய செலாவனி நட்டம் ரூபா 1.27 பில்லியனாக காட்டப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் ரூபா 18.7 பில்லியனோடு ஒப்பிடுகையில் மூலதனங்களுக்கு பின் தேறிய இலாபம் ரூபா 20.7 பில்லியனாவதோடு, அது கடந்த

நிதி ஆண்டுடன் ஒப்பிடும் போது 10.4 % வீதத்தினால் அதிகரிப்பாகும்.

துறைமுக இயக்க மற்றும் சேவைகள் வழங்கல் செயலாற்றுகை

கொழும்பு துறைமுகம் 2021 ஆம் ஆண்டில் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 7.24 மில்லியன் கையாளப்பட்டதோடு, அது 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 5.8% அதிகரிப்பாகும். களம்பு இண்டர்நெஷனல் கன்டேனர் டர்மினல் முனையம் கொள்லன்கள் இருபதின் சம இலகு 3.21 மில்லியன் கையாளப்பட்டதோடு, சவுத் ஏசியா கேட்வே டர்மினல் கம்பனி கையாளப்பட்ட கொள்கலன்கள் இருபதின் சம அலகு 1.83 மில்லியனுடன் ஒப்பிடும் போது இலங்கை துறைமுக அதிகார சபையின் முனையங்களினால் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 2.19 மில்லியன் கையாளப்பட்டுள்ளது. கொழும்பு துறைமுகத்தில் மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் கையாளல் 4.9% வளர்ச்சியொன்று அறியப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு கொள்கலன்கள் கையாளல் 10% ஆல் அதிகரித்துள்ளது.

- 2021 ஆம் ஆண்டினுள் கொழும்பு துறைமுகத்தினுள் கொள்கலன்கள் கையாளல் தொடர்பான அறிவித்தல் மூலம் 2020 ஆண்டில் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 6,854,762 முதல் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 7,249,358 வரை ஒட்டுமொத்தமாக அதிகரித்துள்ளதாக அறியப்படுகிறது.

- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட தொன் பிரமாணம் 6.3 % வரை வளர்ச்சியடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டினுள் கொழும்பு துறைமுகத்துக்கு கப்பல்களின் வருகை 3,806 முதல் 3,675 வரை (-3.4%) குறைவொன்று அறியப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் வருகைதந்த 3,281 கொள்கலன் கப்பல்களின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டில் 3.1% குறைந்துள்ளதோடு 3,180 வரை குறைவடைந்துள்ளது.

2021 ஆம் ஆண்டில் பூரண கொள்கலன்கள் (FCL) இருபதின் சம அலகு 23,117 நேரடியாக ஒப்படைக்கப்பட்டதோடு, குறை பூரன கொள்கலன்கள்/ பல்வேறு நாடுகளுக்குரிய மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் இலங்கை துறைமுக அதிகார சபையில் கொள்கலன்கள் கையாளும் நிலையத்தில் கையாளப்பட்டுள்ளது. பூரண கொள்கலன்கள்/ குறைகொள்கலன்கள் ஒப்படைப்பதற்கா இணையவழி ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பணவுகளில் இலத்திரன் கடித கோவைகள் (E- Doc) சமர்பிப்பது வெற்றிகரமாக கையாளப்பட்டதோடு, அபிவிருத்தி செய்யப்பட்ட மேடைகள் உள்ளடங்கலாக கொள்கலன் கையாளும் தொகுதியொன்று நவீன திருத்தங்களுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், பண்டாரநாயக்க துறைமேடை களஞ்சிய தொகுதியில் வசதிகளை அதிகரிப்பதற்கான நவீனமயப்படுத்தும் செய்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ட்ரேலர் வண்டிகளை அடிப்படையாகக் கொண்டு கொள்கலன்களில் அடைத்தல் மற்றும் கொள்கலன்களை வெற்றாக்கும் கையாளல்களுக்கு மேடைகளை நிர்மாணித்தல் மற்றும் நிருவாக கட்டிடத்தை திருத்துதல் மூலம் அதனுள் மிகவும் சிறந்த வசதிகள் கொண்ட அலுவலக இடவசதிகள் பெற்றுக்கொடுப்பது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மனிதவள அபிவிருத்தி

உறுதியான நிறுவன கலாசாரமொன்றை உருவாக்குவதில் மிகவும் முக்கிய காரணி எமது பணிக்குழுவினர் என்பதனால், இலங்கை துறைமுக அதிகார சபையின் இயக்க நடவடிக்கைகள் அதன் மனித மூலதனத்துடன் தொடர்புபடுத்தும் முக்கியத்துவம் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவம் மிகவும் புரிந்துணர்வுடன் இருக்கின்றது. எனவேஇ வெளிய/ உள்ளக ஆட்சேர்ப்புக்கள் ஊழியர்களின் நிலைமை, உள்ளீட்டு முகாமைத்துவம் ஊழியர் பொது நலன்கள் போன்று அவர்களின் தேர்ச்சி மற்றும் உளப்பாங்கினை அதிகரிப்பதன் ஊடாக எமது மனித மூலதனத்தை பரந்தளவில் திட்டமிடப்பட்டுள்ளது.

எமது ஊழியர்களின் அர்பணிப்பு மூலம் இலங்கை துறைமுக அதிகார சபையின் பெறுமதி அதிகரித்துள்ளதோடு, போட்டியான சம்பளம் மற்றும் வேதனம், பல்வேறு பிரதிபலன்கள், கற்றல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக சந்தர்பங்கள் மற்றும் அவர்களின் தகுதிகள் மற்றும் நிபுணத்துவத்தின் மீது அடிப்படையாக தகுந்த சேவை சூழலொன்றை உருவாக்குதல் ஆகியன மூலம் இலங்கை துறைமுக அதிகார சபை அவர்களுக்கு மதிப்பினை ஒன்றுசேர்த்துள்ளது. அதேப்போன்று, எமது பணியாளர் குழு மீளாய்வு செய்யும் மற்றும் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று தரம் அல்லாத இரு வகை பதவிகளுக்கு புதிய ஆட்சேர்ப்பு விதிமுறையொன்றை தயாரித்தல் போன்று தகுந்த திறமைகளுடன் உரிய அனுபவம் கொண்ட நபர்களை கவர்ந்து கொள்வதற்கு உறுதிப்படுத்தலுடன் பூரணத்துவமிக்க மனிதவள கொள்கையொன்றை நகலாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதோடு, அதன் மூலம் எமது ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதோடு நிறுவன ரீதியான இலக்கொன்றை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கொவிட் 19 தொற்று நிலமையிலும் மீளாய்வு ஆண்டினுள் மொத்த பணியினரினதும் ஆரம்ப சம்பளத்துக்கு 25% சம்பள உயர்வொன்று சேர்க்கப்பட்டதோடு, நிறைவேற்று தரமல்லாத தரங்களில் உள்ள சம்பள முரண்பாடுகளுக்கு வெற்றிகரமாக தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், கொவிட் 19 தொற்றுக் கால எல்லையினுள் அனைத்து தடுப்பூசிகளும் (பூஸ்டர் தடுப்பூசி உட்பட) மற்றும் ஏனைய மருத்துவ உதவிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு, ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை பேணியது மட்டுமன்றி நிறுவனத்தின் நடவடிக்கைகள் தடைகள் இன்றி பேணிச் செல்வதற்கான அபிலாசையுடன் பணிமுறை, வீட்டிலிருந்து கடமையாற்றுதல், போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொடுத்தல் ஆகிய வசதிகள் மேற்கொள்வதன் எமது பணிக்குழுவினருக்கு உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கவர்ச்சியான துறைமுகமொன்று தொடர்பாக தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.

உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக புதிய இலத்திரனியல் தொழிநுட்ப செயன்முறை மற்றும் மூலோபாய தகவல் தொழிநுட்ப தொகுதியை பயன்படுத்தல் மற்றும் கனணி அல்லது ஏனைய இயந்திரங்களை குறைந்த காலத்துடன் கூடிய தமது வாடிக்கையாளர்களுக்கு தடைகள் இன்றி சேவைகள் வழங்குவதற்காக இலங்கை துறைமுக அதிகார சபை தமது அனைத்து சக்திகளையும் போட்டியாகவும் அனுகூலமாகவும் வழங்குவதற்கு சந்தர்பம் அமைத்துக்கொடுப்பதில் கவனம் செலுத்தியுள்ளது. தகவல் தொழிநுட்ப தொகுதி வன் பொருள் மற்றும் மென் பொருள் உரிய காலத்துக்கு பராமரித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக தகவல் தொழிநுட்ப பகுதயினால் கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவைகளை உறுதி செய்வதற்காக மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக செயற்பாடுகள் எடுக்கப்பட்டதோடு, அதன் விளைவாக முனைய முகாமைத்துவ தொகுதியில் (N4) மேம்படுத்தும் குறியீடொன்று வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டதோடு, 2021 ஏப்பிரல் 29 ஆம் திகதி பாவனைக்கு எடுக்கப்பட்டுள்ளது. Oracle- E-Biz Suit தொடர்பான DR பக்கமொன்று ஆரம்பிக்கப்பட்டதோடு, விலை மணு ஆவணங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. குறை தன்னியக்க கிழக்கு கொள்கலன் முனையத்துக்காக முனைய முகாமைத்துவ தொகுதியொன்றுக்கான பெறுகை மேற்கொள்வதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, முதலாவது உபகரண சேர்த்தலுடன் 16 மாதத்திற்குள் செயற்படுத்தும் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்படும்.

எதிர்கால அபிவிருத்தி பணிகள்

கிழக்கு கொள்கலன் முனையத்தின் கையாளல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதும், தனியார் பிரிவின் பங்களிப்புடன் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்வதும் துறைமுக துறை தொடர்பாக அரசாங்க கொள்கைகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளதோடு, கொழும்பு

துமுகத்தின் திறன் மேலும் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 7 மில்லியனால் அதிகரிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை கிழக்கு கொள்கலன் முனையம் மற்றும் மேற்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. இது 2024 – 2025 இல் பூரணமாக செயற்படுத்தப்படும்.

கொழும்பு தெற்கு துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையம், மீட்டர் 18 முதல் -20 வரையான ஆழமான துறைமேடையொன்றினை இயக்க கூடிய – 400 மீட்டர் அல்லது அதற்கு கூடுதலான நீளத்துடன் கூடிய விசாலமான மூன்று கொள்கலன் கப்பல்களை கையாளும் வசதிகள் ஏற்படுத்தக் கூடியவாறு, பின்புற முனைய பிரதேசமொன்றுடன் கூடிய மீட்டர் - 12320 நீளமான மேடைச் சுவருடன் கூடியது. முனைய பிரதேசத்துக்கு அண்ணளவாக ஹெக்டேயார் 72 ஆவதோடு வருடாந்த திறன் கொள்கலன் இருபதின் சம அலகு 3 மில்லியனாகும்.

மீட்டர் 440 நீளமான நங்கூரத்தளத்தை இயக்கும் நோக்கத்துடன் இலங்கை துறைமுக அதிகார சபை 2015 ஆம் ஆண்டில் 440 மீட்டர் நீளமான இயக்க நிலையிலுள்ள நங்கூரத் தளத்துடன் 600 மீட்டர் நீளமான மேடைச் சுவர், 18 ஹெக்டெயார் பூராகவும் பரந்துள்ள மேடை, முனைய எல்லை மார்க்கம் மற்றும் தொடர்பான வாயில் வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 600 மீட்டர் நீளத்துடன் கூடிய தற்போதிருக்கும் மேடைச் சுவர் மீட்டர் 18 ஆழமுள்ள நங்கூர தளத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளதோடு, எஞ்சிய 720 மீட்டர் மேடைச் சுவரின் அடித்தளம் மீட்டர் 20 ஆழத்துடன் கூடிய நங்கூரத்தளங்களுடன் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தின் செயற்பாட்டு திறனை விருத்தி செய்வதற்கு கொழும்பு வடக்கு துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் சாத்தியவள ஆய்வொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி திட்டத்துக்கு ஏற்ப, கொழும்பு துறைமுகத்தின் கப்பல் சரக்கு பரிமாணம் தொடர்பாக இருக்கின்ற கேள்வி தொடர்பில் பூர்வாங்க முடிவொன்றினை அடிப்படையாகக் கொண்டு செய்திட்டத்தின் முதலாவது கட்டம் 2030 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும். இவ்வாய்வினை துரிதமாக நிறைவு செய்வதினால் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கேள்வி ஏற்படும் காலம் உருவாகும் சந்தர்பமாகும் போது திட்டங்கள் பெறுகை செய்தல் ஆகியன செயற்படுத்துவதற்கு முடிகின்றது.

துறைமுக பிரவேச அதிவேக மேம்பால திட்டம் இங்குருகடை சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரை இலங்கை துறைமுக அதிகாரசபை வளாகத்தின் ஊடாக அமைக்கப்படுவதோடு இந்நிர்மாணம் மூலம் பாதகம் ஏற்படும் அனைத்து பகுதிகளுக்கும் அலுவலக வசதிகள் வழங்குவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான காரியாலயமாக 17 மாடிகளைக் கொண்ட கட்டிடமொன்று கனெல்யாட் முனைய வளாகத்தில் நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது. செய்திட்டத்தின் ஆகு செலவு ரூபா 6200 மில்லியன் ஆவதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி வழங்கப்படுவதுடன் இந்த செயல்திட்டத்தை அமுல்படுத்துவது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பொறுப்பேற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 6% பௌதீக முன்னேற்றம் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி

வாடிக்கையாளர்களுடன் உறுதியான தொடர்பொன்றை பேணிச்செல்வதற்காக கொழும்பு துறைமுகத்தில் வர்த்தக சந்தர்ப்பங்களை அபிவிருத்தி செய்தவற்கான பிரதான மார்க்கமாகும். எனவே, முதலீடு செய்வதை துரிதப்படுத்துவதற்கு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தன்மையை மேம்படுத்துவதற்காக வாடிக்கையாளர்கள் மற்றும் தரப்பினர்குகளுடன் நித்தம் தொடர்பினை ஒருங்கிணைப்பதற்காக வருடம் பூராகவும் பேணிச்செல்லப்படுகின்றது. இதன் விளைவாக ஆறாவது Global Ports Forum Awards வழங்கும் விழாவின் போது இலங்கை துறைமுக அதிகாரசபை 2021 ஆம் ஆண்டில் சிறந்த துறைமுக அதிகாரசபையாகவும் சிறந்த அரச பிரிவின் கொள்கலன்கள் கையாள்வதற்காகவும் விருது கிடைக்கப்பபெற்றுள்ளது.

மேலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்கள் மற்றும் கொழும்பு துறைமுகத்தை விட அதிகமாக கொள்கலன் பரிமானத்தை கவர்ந்து கொள்வதற்காக இலங்கை துறைமுக

அதிகாரசபையின் முகாமைத்துவம் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி மூலோபாயங்கள் பல செயற்படுத்தியுள்ளன. இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் நிறுவன ரீதியான தொடர்புகளை விஸ்தரிப்பதற்காக பிரதான கப்பல் கம்பனிகளுடன் முனைய சேவைகள் ஒப்பந்தங்கள் இரண்டு மீண்டும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முடிவு

2021 ஆம் ஆண்டினை மீண்டும் பின்னோக்கிப் பார்க்கும் போது சவால்களான நிலைமையின் கீழ் கொழும்பு துறைமுகம் வெற்றியை அடைந்து கொண்ட முறை மற்றும் அதன் வருமானத்தை அதிகரித்துக்கொண்ட முறை தெளிவாகின்றது. கடந்த வருடத்தில் வெற்றிகளை அடைந்து கொள்வதற்கு சாத்தியமாயிருப்பது இலங்கை துறைமுக அதிகாரசபை, சவுத் ஏஷியா கேட்வே டேர்மில் கம்பனி மற்றும் கழம்பு இன்டர்நெஷனல் கெண்டெனர் டேர்மினல் கம்பனி ஆகிய மூன்று கம்பனிகளிலும் இருந்த உறுதியான தொடர்பு மற்றும் ஒருமைப்பாடே காரணமாகும்.

2021 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தின் வரலாற்றில் கூடுதலான கொள்கலன் பரிமானம் மற்றும் தொன் பிரமானத்தை கையாண்ட வருடமாக குறிப்பிடப்பட முடியும். இவ்வெற்றியில் மிகவும் குறிப்பாகத் தெரிகின்ற பின்னனியாவது ஒட்டுமொத்த துறையும் உயர் உலகளாவிய சிக்கல்களுக்கு முகங்கொடுத்து, உலகளாவிய தொற்று நிலைமையிலும் கூட விசேடமான அபிவிருத்தியொன்றை பெற்றுக்கொள்வதற்கு கொழும்பு துறைமுகத்திற்கு முடிந்துள்ளது. இவ்வெற்றியின் பின்னணியாக இருப்பது மூன்று முனையங்களிலுமுள்ள அனைத்து ஊழியர்களினதும் கூடிய அர்ப்பணிப்பேயாகும். எனவே ஊக்கமாக கடமை மேற்கொள்வதற்குள்ள அர்ப்பணிப்பு தொடர்பாக மூன்று முனையங்களிலும் முகாமைத்துவத்திற்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ் அர்ப்பணிப்பின் பின்னால் நியதிச்சட்ட முகாமைத்துவத்தின் வழிகாட்டல் மற்றும் ஊக்கம் தெரிவதோடு 2021 வெற்றிகரமான வருடமொன்றாக அடைந்து கொள்வதற்காக நித்தம் பெற்றுக்கொடுத்த வழிகாட்டல்கள் தொடர்பாக கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், கௌரவ ராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர், அமைச்சின் உத்தியோகத்தர்கள் மற்றும் பணிப்பாளர் சபைக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

எதிர்கால பாதையை வெற்றிகொள்வதில் 2022 ஆம் ஆண்டு மேலும், சவாலான வருடமொன்றாக ஆகக் கூடும் என்பதால் கடந்த கால அனுவத்தின் ஊடாக பாடங்கற்றுக்கொண்டு, அதன் விளைவுகளை முன்னோக்கிலான அபிவிருத்தியை முன்னிட்டு ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்காக பயன்படுத்திக் கொள்வது எமக்கு மிகவும் முக்கியமாவதோடு, இதன் மூலம் கொழும்பு துறைமுகம் தெற்கு ஆசிய வலயத்தின் கேந்திர மையமான துறைமுகமாகவும் மாற்றுவதற்கு முடியுமென்பது எமது எதிர்பார்ப்பாகும்.



கலாநிதி பிரசான்த்த ஐயமான்ன
தலைவர்

கெப்டன் நிஹால் கெப்பட்டிபொல
தலைவர்

கண்டி தர்மராஜ கல்லூரியின் பழைய மாணவரான கெப்டன் திரு நிஹால் கெப்பட்டிபொல அவர்கள் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் மற்றும் சர்வதேச கப்பல் நிறுவனங்களிற்கு சொந்தமான கப்பல்களில், அதாவது சாதாரண சரக்கு கப்பல், தொகை பிரிப்பு கப்பற்சரக்கு கொள்கலன்கள், எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்து கப்பல்கள் போன்ற பல கப்பல்களில் கெப்டன் ஒருவராக பணியாற்றியுள்ளார்.

கெப்டன் நிஹால் கெப்பட்டிபொல அவர்கள் 1990 ஆம் ஆண்டு கப்பல் வழிக்காட்டியாக இலங்கை துறைமுக அதிகார சபையில் சேவையில் இணைந்தார். 1999 முதல் 2005 வரை இலங்கை துறைமுக அதிகார சபையின் ஹாபர் மாஸ்டராக பணியாற்றியதுடன் 2005 முதல் 2007 வரை பணிப்பாளர் (இயக்கம்) ஆகவும், 2007 முதல் 2009 வரை மேலதிக முகாமைத்துவ பணிப்பாளராகவும், 2009 முதல் 2015இல் அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரையில் இலங்கை துறைமுக அதிகார சபையின் முகாமைத்துவ பணிப்பாளராக கடமையாற்றினார்.

அவர் இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக பதவியேற்பதற்கு முன்னர், இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுதாபனத்தின் தலைவராக 2020 சனவரி மாதம் முதல் 2021 ஜூன் 21 ஆம் திகதி வரை கடமையாற்றினார்.

கொழும்பு துறைமுக விரிவாக்க செய்திட்டம், அம்பாந்தோட்டை துறைமுக செய்திட்டம், கொழும்பு துறைமுக நகர செய்திட்டம் மற்றும் இலங்கை மீன்பிடி துறைமுகங்கள் கூட்டுதாபனத்தின் அத்தியாவசியமாக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்திட்டம் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கெப்டன் கெப்பட்டிபொல அளப்பரிய சேவையாற்றியுள்ளார்.

கலாநிதி பிரசான்த்த ஜயமான்ன
உப தலைவர்

இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவர் கலாநிதி திரு பிரசான்த்த ஜயமான்ன அவர்கள் DPJ Holdings & Affiliated Companies நிறுவனத்தின் ஸ்தாபகர் ஆவதோடு, அதன் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருக்கின்றார். அவர் கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் சிரேஷ்ட ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார. அதற்கு மேலதிகமாக அவர் அரச நிறுவனங்களாக பட்டியலிடப்பட்ட தனியார் கம்பனிகளான சவுத் ஏஷியா கேட்வே டேர்மினல் தனியார் கம்பனி (SAGT), களம்பு இன்டர்நெஷனல் கன்டேனர் டேர்மினல்ஸ் கம்பனி (CICT), ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் குரூப் தனியார் கம்பனி (HIPG), ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் சேர்விசஸ் கம்பனி தனியார் கம்பனி (HIPS), வ/ப லங்கா கோர்ல் கம்பனி ஆகிய நிறுவனங்களில் பணிப்பாளர் சபையின் அங்கத்தரொருவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். வர்த்தக நிருவாகம் தொடர்பான கலாநிதி பட்டம் பெற்ற கலாநிதி ஜயமான்ன அவர்கள் இலங்கையில் மிகவும் கூடிய விருதுகளைப் பெற்ற வயதில் குறைந்த தொழில் முயலுனராவார். அவர் மூலோபாய தீர்வுகளை அமுல்படுத்தல் தொடர்பான பரந்த அறிவுடன் கூடிய தலைமைத்துவ விரிவுரையாளரொருவராவார்.

அவுஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் வர்த்தக நிருவாகம் தொடர்பான முதுமாணிப்பட்டமும், ஹவார்ட் பிஸ்னஸ் ஸ்கூலில் Owner President Management (OPM) பட்டமும், ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் Leading Product Innovation (LPI) பட்டமும் பெற்றுள்ளார். 2012 ஆம் ஆண்டு முதல் இதுவரை அவுஸ்திரேலியாவில் வர்த்தக நிறுவனம் (AIB), அவுஸ்திரேலிய முகாமைத்துவ நிறுவனம் (AIM), ஐக்கிய இராட்சியத்தில் ஹெரியட் வொட் பல்கலைக்கழகம், பெட்பேட்ர்சய் ஆகிய பல்கலைக்கழக நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட விரிவரையாளரொருவராக

கடமையாற்றுவதோடு, ஆசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் (AIT) வெளிக்கள விரிவுரையாளரொருவராகவும் மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து நிறுவனங்களிலும் விஞ்ஞானமானி மற்றும் கலாநிதி பட்டம் பெற்ற விரிவுரையாளராகவும் கடமை மேற்கொள்கின்றார்.

இலங்கையின் இளமையான வெற்றிகரமான தொழில் முயலுனராக திரு. ஜயமான்ன அவர்கள் பெற்றுள்ள விருதுகளுக்கிடையே, 2014 ஆம் ஆண்டில் இலங்கையில் தொழில்முயலுனர்களுக்கு உரித்தான தேசிய மட்டத்திலான விருது 2013 ஆம் ஆண்டில் இலங்கையில் தொழில் முயலுனருக்கு உரித்தான தேசிய மடத்திலான விருது உலகளாவிய வர்த்தக மேம்பாட்டு கல்விசார் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கலாநிதிப்பட்ட கையேடுகள் தொடர்பான சிறப்பு விருது, 2013 இலங்கை தேசிய கைத்தொழில் சபையினால் வழங்கப்பட்ட வெற்றிக்கான விருது 2012, 2012 ஆம் ஆண்டில் இலங்கையில் தொழில் முயலுனர் (தேசிய மட்டத்திலான விருது) இலங்கையின் வாலிப தொழில் முயலுனர்களின் சபையினால் வழங்கப்பட்ட (COYLE) விருது – 2011, இலங்கை வாலிப தொழில்முயலுனர்களின் சபையினால் வழங்கப்பட்ட COYLE விருது – 2010 (தேசிய மட்டத்திலான விருது) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பிரிவினால் வழங்கப்பட்ட தேசிய வர்த்தக சிறப்பு வென்கல விருது – 2010 இலங்கை வாலிப தொழில் முயலுனர்களின் சபையின் சிறப்பு திறமை காட்டும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்காக கௌரவ விருதாக வழங்கும் தேசிய விருது, 2009 ஆம் ஆண்டில் இலங்கையின் சிறப்பான வாலிப தொழில் முயலுனர்கள் பதின்மருக்காக வழங்கப்படும் விருது, இலங்கையில் சிறப்பான தொழில் முயலுனர் 2008 போன் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

தமது சுய ருவிட்டர் கணக்கில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது, வர்த்தக நிருவாகம் தொடர்பான கலாநிதிப் பட்டதாரியாவார். DPJH ஹோல்டிங்ஸ் கம்பனியின் தலைவராவார். இலங்கையில் அதிகூடிய விருதுகளை பெற்ற தொழில்முயலுனரொருவர், தலைமைத்துவ விரவுரையாளரொருவர், தேசப்பற்றாளரொருவர்.

திரு உபுல் ஜயதிஸ்ஸ
முகாமைத்துவப் பணிப்பாளர்

திரு உபுல் ஜயதிஸ்ஸ அவர்கள் ஸ்ரீ ஜயவர்தனபர பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான (விசேட வர்த்தக நிருவாகம்) பட்டமொன்றை பெற்றுள்ளார் அதற்கு மேலதிகமாக, சுவீடனில் வேர்ல்ட் மெரிடைம் பல்கலைக்கழகத்தில் துறைமுக முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞானிமாணி பட்டமொன்றையும், ஐக்கிய இராட்சியத்தில் Wigon & Leigh College கல்வி நிறுவனத்தில் சந்தைப்படுத்தல் தொடர்பான டிப்ளோமா ஒன்றிணையும் பெற்றுள்ளார்.

பட்டத்தைப் பெற்ற பின் 1986 ஆம் ஆண்டில் முகாமைத்துவ பயிலுனராக இலங்கை துறைமுக அதிகாரசபையில் சேர்ந்த திரு. ஜயதிஸ்ஸ அவர்கள் துறைமுகத் துறையில் 35 வருடங்களுக்கு மேற்பட்ட சேவை அனுபவத்தைப் பெற்றுள்ளார். மத்திய கிழக்கு வலயத்தின் துறைமுங்களில் அதாவது குவைட் அரசாங்கத்தில் Ports Public Authority – Shuaiba Container Terminal மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசின் Sharjah Ports of Khorfakkan Container Terminals இல் முனைய வடிவமைப்பாளர் ஒருவராக ஐந்து வருட அனுபவம் பெற்றுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகம;, மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் றுஹுனு பல்கலைக்கழகம் உட்பட பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் இலங்கையில் ஏனைய முன்வரிசையிலுள்ள நிறுவனங்கள் பலவற்றிலும் தற்காலிக விரிவுரையாளரொருவராக 14 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தொட்டு பணிபுரிகின்றார்.

திரு. உபுல் ஜயதிஸ்ஸ அவர்கள் 2021 ஆம் ஆண்டில் ஜுன் மாதத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவ பணிப்பாளர் பதவியில் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் ஜீ.வி ரவிபிரிய
WWV RWP NDVIG (ஓய்வுபெற்ற)
பணிப்பாளர்

மேஜர் ஜெனரல் ஜீ.வி ரவிபிரிய அவர்கள் 1970 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை கேரி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்று 1976 ஆம் ஆண்டில் தேர்ஸ்டன் வித்தியாலயத்தில் சேர்ந்து 1983 ஆம் ஆண்டில் உயிரியல் விஞ்ஞான பாடநெறியில் க.பொ.த (உயர்தர) பரீட்சைக்கு முகங்கொடுத்தார். மேஜர் ஜெனரல் ஜீ.வி ரவிபிரிய அவர்கள் 1985 ஆகஸ்ட் 08 ஆம் திகதி கடெட் உத்தியோகத்தராக இலங்கை ஆயுதப்படையில் நிரந்தர படையில் சேர்ந்து தியதலாவ இலங்கை ஆயுதப்படை கலாசாலையில் பயிற்சிபெற்றார். பயிற்சிக் கால இறுதியில் அவர் குழுவில் உயர் திறமை வரை வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்து கடெட் உத்தியோகத்தர் பெறக்கூடிய அதிஉயர் கௌரவமான "கௌரவத்தின் வாள்" (Sword of Honoar) விருதைப் பெற்றுள்ளார். ஆயுதப்படை கலாசாலையின் பயிற்சியை நிறைவு செய்ததன் பின் அவருக்கு இலங்கை பீரங்கி படைக்கு இணையும் சந்தர்ப்பம் கிடைத்தது.

34 வருடத்துக்கு மேலதிகமாக ஆயுதப்படை சேவைக் காலத்தினுள் அவர் பல்வேறு பதவிகளை வகித்துள்ளதோடு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆயுதப்படை தொடர்பான பாடநெறிகள் பலவற்றை கற்றுள்ளார்.

வன்னி மனிதாபிமான செயற்பாட்டின் ஆரம்பத்தில், அவர், ஒரு தாக்குதல் படைக்கு கட்டளையிடும் அதிகாரியாக பணிபுரிந்துள்ளதோடு, எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தில் தலைவரின் உடலைக் கண்டுபிடித்த குழுவின் 08 ஆவது செயற்பாட்டுப் படையணிக்கு கட்டளையிட்டு இறுதி பாரிய யுத்தத்துக்கு பங்களிப்பை பெற்றுக்கொடுத்துள்ளார்.

மனிதாபிமான செயற்பாட்டின் பின்னர் தமது தாய்நாட்டுக்காக செய்த விசேட சேவையை பாராட்டுமுகமாக அவர் ஐக்கிய அமெரிக்க இராட்சியத்தில் வொசிங்டன் DC இல் இலங்கை தூதுவர் ஆலயத்தில் தூதுவர் சேவைக்கு இணைக்கப்பட்ட ஆலோசனை பாதுகாப்பு உத்தியோகத்தரெருவராக நியமிக்கப்பட்டார். இலங்கைக்கு திரும்பி வந்ததன் பின், அவர் இலங்கை ஆயுதப்படை தலைமையகத்தில் திட்டமிடல், ஊடகவியல் பணியினர் நிருவாகம் மற்றும் பயிற்சியளித்தல் போன்ற பணிப்பாளர் பதவிகள் பலவற்றை செய்துள்ளார்.

மேலும், திரு. ரவி பிரிய அவர்கள் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆண்டுவரை ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் கட்டளையிடும அலுவலகராவார். 2020 சனவரி 13 ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் அவர் கிளிநொச்சியில் பாதுகாப்பு படை கட்டளையிடும் பதவியை பொறுப்பேற்றிருந்தார். வன்னி மனிதாபிமான செயற்பாட்டின் போது அவர்காட்டிய துணிச்சலுக்காக அவருக்கு "வீரவிக்ரம விபூசன மற்றும் ரணவிக்ரம" பதக்கங்கள் அகிய கௌரவ விருதுகள் இரண்டு வழங்கப்பட்டன.

செல்வி ஜே.சி. வெலிகமகே
பணிப்பாளர்

அரச துறையில் 37 வருடங்களுக்கு மேலான தொழில்துறை அனுபவமுள்ள செல்வி வெலிகமகே அவர்கள் தற்போது நிதி அமைச்சில் இராஜாங்க நிதி திணைக்களத்தில் பணிப்பாளர் நாயகம் பதவியில் இருக்கின்றார்.

அவர் ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் வர்த்தக (சிறப்பு) பட்டம் பெற்றவராவார், மேலும், அவர், இலங்கை கணக்கியல் வல்லுநர்களின் சங்கத்தில், இலங்கை இராஜாங்க நிதி மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தில் அரசப்பிரிவின் பகுதியான இலங்கை அரச நிதிக் கணக்காளர்களின் சங்கத்தில் (CA Sri Lanka) பூரண கால அங்கத்துவத்தையும் பெற்றுள்ளார்.

செல்வி வெலிகமகே அவர்கள் வ/ப லங்கா பொஸ்பேர்ட் கம்பனி, வ/ப லங்கா கனியவள கம்பனி, காணி கரைப்படுத்தும் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத்தாபனம், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு பணியக தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனி, இலங்கை மீன்படி துறைமுக கூட்டுத்தாபனம், வ/ப சீனோர் அமைப்பு, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், வ/ப திறன்கள் அபிவிருத்தி நிதியம், தேயிலை சத்தி நிதியம், தேசிய பொறியியல் ஆய்வு

மற்றும் அபிவிருத்தி நிலையம் மற்றும் நவீன தொழில்நட்பம் தொடர்பாக ஆதர் சீ கிளாக் நிலையம் உட்பட பிரதான தர அரசுக்குரிய தொழில் தருனர் நிறுவனங்களில் பொது திரை சேரியினை பிரதிநிதிப்படுத்தும் பணிப்பாளர்சபை அங்கத்தவராக கடந்த 18 வருட காலமாக செயற்பட்டுள்ளார்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1992 நிதி விதி முறைகளை திருத்துதல் மற்றும் இலங்கை தேசிய மட்டத்தில் கணக்கியல் மென்பொருள் பெகேஜான பொது திறைசேரி தனி அலகு கணக்கியல் தொகுதி (TSA) மற்றும் கணனிமயப்படுத்தப்பட்ட ஒன்றணைந்த அரச கணக்கியல் தொகுதி (CIGAS) அமுல்படுத்துவது தொடர்பாக 1996-2015 காலத்தினுள் நியமிக்கப்பட்ட பிரதான தரக்குழுக்களின் அங்கத்தவருமாவார்.

அக்காலத்தினுள் அவர் ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், சீனா, பிலிப்பைன், இந்தியா, ஜப்பான், மலேசியா மற்றும் கொரியா ஆகிய நாடுகளில் முகாமைத்துவம், அபிவிருத்தி பொருளாதாரம், தலைமைத்துவம் மற்றும் தகவல்கள், தொழிலநுட்பம் ஆகிய துறைகளில் வெளிநாட்டு பயிற்சியை பெற்றுள்ளார். மேலும், அக்கால எல்லைக்குள் அவர் கணனியமப்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த அரச கணக்கியல் தொகுதியை (CIGAS) அமுல்படுத்துவதற்காக 1996 முதல் 2004 வரை கணக்கியல் துறையில் ஈடுபட்டுள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட தொகையினரை இலங்கை அபிவிருத்தி மற்றும் நிருவாக நிறுவனத்தில் (SLIDA) மற்றும் அரசாங்க கணக்குகள் மற்றும் நிதி நிறுவனத்தில் (INGAF) பயிற்சியளிக்கும் உத்தியோகத்தராக பணியாற்றியுள்ளார்.

திருமதி என்.ஏ.ஏ.பி.எஸ். நிஸ்ஸங்கா
பணிப்பாளர்

திருமதி நிஸ்ஸங்கா அவர்கள் 1990 ஆண்டில் அரச நிர்வாக சேவையில் இணைந்து தற்போது மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சின் மேலதிகச் செயலாளராக (சமூக அபிவிருத்தி) கடமையாற்றுகின்றார்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ள இவர் மாகோ, நாத்தன்டிய போன்ற பிரதேசங்களில் பிரதேச செயலாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

திரு. ஜே.ஆர்.யூ.த சில்வா
பணிப்பாளர்

ரொஹான் த சில்வா அவர்கள் வர்த்தகம் மற்றும் அரச துறையில் வர்த்தக முகாமைத்துவம் தொடர்பாக 40 வருடங்களுக்கு மேலான அனுபவம் பெற்றுள்ளார். முன்னோடி வியாபாரங்களை பேணிச்செல்லல் மற்றும் தொழிற்றுறையில் புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான பரந்த அறிவைப்பெற்றுள்ள இவர், கடலகப் பணிகள், சேவை வழங்கல், கடல்சார் மற்றும் ஹோட்டல் வியாபாரத்துறை தொடர்பான நிபுனராவார்.

த சில்வா அவர்கள் தற்போது இலங்கையில் பிரசித்திபெற்ற பல்வித வியாபார நிறுவனமான மெக்லரன்ஸ் கூட்டு வியாபாரத்தின் தலைவராக கடமையாற்றுகின்றார். அவர் நமீபியா குடியரசின் இலங்யின் கௌரவ சேவை பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

த சில்வா அவர்கள் இலங்கை துறைமுக அதிகார சபையின், வரையறுக்கப்பட்ட அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவை கம்பனி (HIPS) மற்றும் ஜயா கொள்கலன் முனையத்தின் பணிப்பாளரொருவராகவும் கடமையாற்றுகின்றார். இவர் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் ஆலோசகர் குழுவின் அங்கத்தவராவார். இவர் இலங்கை கப்பல் முகவர்களின் ஆலோசகர் குழுவின் அங்கத்தவரொருவருமாவார். அதேபோன்று, இவர் இலங்கை கப்பல் முகவர்கள் கம்பனியின் ஆலோசக குழுவின் அங்கத்தவருமாவார். கடந்த காலத்தில் அவர் பல அரச நிறுவனங்களில் பணிப்பாளர் சபை அங்கத்தவராக பணியாற்றியுள்ளார்.

இலங்கை கப்பற்றுறைக்கு ஆற்றிய சேவை மற்றும் வழங்கியிருக்கும் பங்களிப்பை பாராட்டி ஐக்கிய இராஜ்ஜியத்தின் பட்டயம் பெற்ற கப்பல் முகவர் நிறுவனத்தின் இலங்கை கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட கொழும்பு சர்வதேச சமுத்திரவியல் மகாநாட்டில் விசேட விருது உள்ளடங்கலாக கப்பற்றுறை ஆளுமைக்கான விருதாகிய ‘ Shipping

Personality" எனும் சிறப்பு விருது உள்ளடங்கலாக பல விருதுகள் பெற்றுள்ளார். மேலும், மத்திய வங்கி அதிபதியின் சவாலுக்கான கிண்ணம் எனும் சர்வதேச வர்த்தக சிறப்பு கிண்ணமும் அவருக்கு வழங்கப்பட்டது. மேலும் அவர் LMD சஞ்சிகையினால் தேர்வுச்செய்யப்பட்ட சமமான வியாபாரத்தின் முன்னனி தொழில்முயலுனர்களின் A பட்டியலில் "Captains of Business in 2020" உள்ளடங்கப்பட்டுள்ள பெயர்களில் இவருடைய பெயரும் உள்ளடங்கப்பட்டுள்ளது.

டாக்டர் எம்.எல். கிரிஸ்ரோ பர்னாந்து பணிப்பாளர்

டாக்டர் கிரிஸ்ரோ பெர்னாந்து அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பீடத்தில் மருத்துவப் பட்டம் பெற்றுள்ளார். அவர் American College of Emergency Physicians என்ற நிறுவனத்தின் அங்கத்தவரொருவராவதோடு, சுகாதார பாதுகாப்பு தொடர்பான பட்டம் மற்றும் மருத்துவமனை நிருவாகம் தொடர்பான டிப்ளோமா பாடநெறியையும் பூர்த்திசெய்துள்ளார்.

டாக்டர் பெர்னாந்து அவர்கள் களுத்துறை தெற்கில் அமைந்துள்ள புதிய பிலிப் மருத்துவமனையின் தலைவராவதோடு Philip Health Care Solutions (Pvt) கம்பனியின் பணிப்பாளர் மற்றும் களுத்துறை தெற்கு பிலிப் ஆய்வு கூடத்தின் பணிப்பாளரொருவராகவும் சேவையாற்றுகிறார்.

டாக்டர் கிரிஸ்ரோ பெர்னாந்து அவர்கள் இலங்கையின் மருத்துவ சங்கத்தில் அங்கத்தவரொருவராவதோடு, இலங்கை மருத்துவ சங்கத்தின் உப தலைவர் பதவியையும் 2018 ஆம் ஆண்டில் வகித்தார். இந்த வருடத்தில் அவர் இலங்கை மருத்துவர் சங்கத்தின் செயலாளர் பதவியையும் வகிக்கின்றார். நல்லொழுக்கம் தொடர்பான குழுவில் மற்றும் இல்லம் மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவரொருவர் மற்றும் விசக்கடி விஞ்ஞானம் தொடர்பான நிபுனத்துவக் குழுவின் அங்கத்தவரொருவராகவும் டாக்டர் பெர்னாந்து அவர்கள் சேவையாற்றுகிறார்.

டாக்டர் கிரிஸ்ரோ பெர்னாந்து அவர்கள் தொழில்ரீதியாக குடும்ப மருத்துவரொருவராக களுத்துறை தெற்கு புதிய பிலிப் மருத்துவமனையில் சேவையாற்றுவதோடு, கௌரவ துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரின் ஆலோசனையின் பேரில் அவர் இலங்கை துறைமுக அதிகாரசபையின் கௌரவ மருத்துவ ஆலோசகரொருவராக சேவையாற்றுகின்றார். அவர் களுத்துறை மாவட்டத்தில் பல விடுமுறை விடுதிகள் தொடர்பாக மருத்துவ ஆலோசகரொருவராக பணியாற்றுகின்றார். அவர் 2020 ஒக்தோபர் மாதம் முதல் இலங்கை துறைமுக அதிகார சபையின் கணக்காய்வு குழுவின் அங்கத்தவரொருவராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு இசுறு பாலபட்டபெந்தி பணிப்பாளர்

திரு இசுறுபாலபட்டபெந்தி அவர்கள் தொழில்ரீதியாக சட்டத்தரணியாற்றுவதுடன், சிவில் மற்றும் வணிக சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தெடர்பான சட்ட நிறுரனமொன்றையும் நடாத்திச் செல்கின்றார். அவர் ஐக்கிய அமெரிக்காவின் பென்சில்வேனியாவின் பீட்டர்ஸ்பேர்க் பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பிலான பட்டத்தைப் பெற்றுள்ளார்.

2008 முதல் 2010 ஆம் ஆண்டு வரை நெதர்லாந்தின் ஹெக் தலைநகரில் இலங்கைக்கான தூதுராலயத்தில் தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரசாங்க சட்டத்தரணியாக கடமையாற்றினார். இக் காலப்பகுதியில் அவர் இரசாயன ஆயுதங்களை தடைசெய்யும் இயக்கத்தில் மற்றும் தனியார் சர்வதேச சட்டம் தொடர்பாக ஹெக் மகாநாட்டில் இலங்கை பிரதிநிதியாக செயற்பட்டார்.

ஹெக் தலைநகரில் இலங்கை தூதுக் குழுவின் சட்டப்பகுதி தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டார். 2012 ஆம் ஆண்டு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரின் இலங்கையில் முதலீட்டு சட்டம் தொடர்பிலான சட்டவாக்க செயற்பாடுகள் தொடர்பாக மற்றும் முதலீட்டு சபையின் சட்ட ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டதுடன்

இலங்கை காப்புறுதிகூட்டுத்தாபனம், செலான் வங்கி மற்றும் இலங்கை வங்கியின் பணிப்பாளர்சபையின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று சபை உறுப்பினராக செயற்பட்ட திரு பாலபட்டபெந்தி 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய கணிஷ்ட சட்ட சம்மேளத்தின் தலைவராக நியமிக்கப்பட்டதுடன் 2020 தேசிய சட்ட மகாநாட்டின் அழைப்பாளராகவும் நியமிக்கப்பட்டார். அவர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று குழு உறுப்பினராகவும் செயற்பட்டுள்ளார். இவர் சட்டத்தரணிகள் சங்கத்தின் தற்போதைய செயலாளராவார்.

திரு இசுறுபாலபட்டபெந்தி அவர்கள் மக்கள் வங்கியில், இலங்கை துறைமுக அதிகார சபையில், வ/ப களம்பு வெஸ்ட் இண்டர் நெஷனல் டர்மினல் (தனியார்) கம்பனி, வ/ப செலியோ நெச்சுரல்ஸ் (தனியார்) கம்பனிகளின் பணிப்பாளர்சபை உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்டுள்ளதுடன், பீப்பல்ஸ் இன்சுரன்ஸ் பி.எல்.சி கம்பனியின் தலைவராகவும் பணிப்புரிகின்றார்.

திருமதி பமுதி வீரசூரிய
பணிப்பாளர் சபையின் செயலாளர்

முகாமைத்துவக் குழு

கப்டன் நிஹால் கெப்பட்டிபொல
தலைவர்

கலாநிதி பிரசான்த்த ஜயமான்ன
உப தலைவர்

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
முகாமைத்துவ பணிப்பாளர்

திரு. சுசந்த அபேசிறிவர்தன
மேலதிக முகாமைத்துவ பணிப்பாளர் (தொழிநுட்ப)

திருமதி. சிராணி வன்னியாரச்சி
பணிப்பாளர் (நிதி)

திரு. எச்.எம் பிரபாத் ஜயந்த
பணிப்பாளர் (சேவை வழங்கல்)

திரு. டி.எல்.ஆர்.வீரசிங்க
பணிப்பாளர் (துறைமுக இயக்கம்)

திரு. டப்.எம் நளின் அபோன்சு
பணிப்பாளர் (மனிதவள அபிவிருத்தி)

திரு. பி.ஏ.ஆர்.டி. பதிராஜ
பணிப்பாளர் (தொழிநுட்பம்)

திரு.எஸ்.எஸ். தேவப்பிரிய
பணிப்பாளர்(அபிவிருத்தி)

மேஜர் ஜெனரல் சுதத் பெரேரா (ஓய்வு பெற்ற)
பணிப்பாளர் (பாதுகாப்பு)

திரு. எல்.பிரேமசிரி டி சில்வா
பிரதான உள்ளக கணக்காய்வாளர்

திரு. ஜி.வி.ரி.நானாயக்கார
பிரதான பொறியியலாளர் (கடலகம்)

திருமதி அபர்னா திலக்கரத்ன
பிரதான சட்ட அலுவலர்

திரு. நிர்மால் டி. பொன்சேக்கா
பிரதான முகாமையாளர் (தகவல் பொறிமுறை)

திரு. ஜே.ஏ. சந்திரரத்ன
பிரதான பொறியியலாளர் (இயந்திர வேலைகள்)

திரு. எம்.எஸ் ஏ. பத்திரகே
பிரதான பொறியியலாளர் (இயந்திர பொறி)

திரு. கே.ஜீ.எஸ் தயானந்த
பிரதான முகாமையாளர் (விற்பனை மற்றும் வர்த்தக அபிவிருத்தி)

திரு. டி.ஜி.ஆர்.எம். பத்திவில
பிரதான பொறியியலாளர் (ஒப்பந்தங்கள் மற்றும் வடிவமைப்பு)

கெப்டன் கே.எம்.என்.பீ.சில்வா
ஹாபர் மாஸ்டர்

திருமதி எஸ்.எச்.எஸ். பத்மினி
பிரதான பயிற்சி முகாமையாளர்

திருமதி நெலும் அனவரத்ன
பிரதான முகாமையாளர் (நிருவாகம்)

திரு. சி.ஜே. வீரவிக்ரம
பிரதான முகாமையாளர் (கொள்கலன் கையாளல்)

திரு. சித்ரால் ஜயவர்ன
பிரதான முகாமையாளர் (நலன்புரி / பொதுசன உறவுகள்)

திருமதி. ஜி.என்.லியனகே
பிரதான நிதி முகாமையாளர்

திரு.எ.எல்.எம். நௌபர்
பிரதான பொறியியலாளர் (அபிவிருத்தி)

திரு.ரீ.சி.கே. பரனவித்தான
பிரதான பொறியியலாளர் (சிவில்)

திருமதி.எப்.எம். ஹுசேன்
பிரதான பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி)

திருமதி. ஜி. இசட் மிஸ்கின்
பிரதான முகாமையாளர் (சேவை வழங்கல்)

திரு.கே.எஸ். ஹெட்டியாரச்சி
பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்)

டாக்டர் (திருமதி) யு.எஸ்.ஜயசேகர
பிரதான மருத்துவ அலுவலர்

திரு.எஸ்.எச். திலக்கபால
பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)

திரு.எச்.ஜே.கே.யூ. குமார
பிரதான மனிதவள முகாமையாளர்

திரு.எல்.பி.எஸ். சந்தன
பிரதான முகாமையாளர் (மரபு ரீதியான கப்பற்சரக்கு கையாளல்)

கணக்காய்வுக் குழு

செல்வி. ஜே.சி. வெலிகமகே
தலைவர்

மேஜர் ஜெனரல் ஜி.வி. ரவிப்பிரிய
அங்கத்தவர்

திரு. இசுறு பாலபட்டபெந்தி
அங்கத்தவர்

திரு. உபுல் ஜயதிஸ்ஸ
முகாமைத்துவ பணிப்பாளர்

அல்லது

திரு. சுசந்த அபேசிறிவர்தன
மேலதிக முகாமைத்துவ பணிப்பாளர் (தொழிநுட்ப)
கட்டாயமாக கலந்துக்கொள்ள வேண்டிய அங்கத்தவர்கள்

திருமதி. சிரானி வண்ணியாரச்சி
பணிப்பாளர் (நிதி)
கட்டாயமாக கலந்துக்கொள்ள வேண்டிய அங்கத்தவர்

திரு. ஹர்மன் பெர்னாந்து
துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சின்
கண்காணிப்பாளர்

திரு. கே.ஏ.ஏ.குலதுங்க
அரச கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பிரதிநிதி

திரு. எல்.பிரேமசிறி டி சில்வா
அழைப்பாளர் மற்றும் குழுவின் செயலாளர்

2021 ஆம் ஆண்டில் சிரேஷ்ட முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

ஓய்வு பெறுதல் மற்றும் விலகுதல்

திரு. எச்.டிஎ.எஸ் பிரேமசந்திர – முகாமைத்துவ பணிப்பாளர் இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவையிலிருந்து விலகினார்.

திரு. கே.எ. அன்சார், பிரதான முகாமையாளர் (விற்பனை மற்றும் வியாபார அபிவிருத்தி) அவருடைய சேவைக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து ஓய்வு பெற்றார்.

திரு. தர்ஷக பெரேரா, பிரதான முகாமையாளர் (தகவல் பொறிமுறை) சுய விருப்பின் பேரில் இலங்கை துறைமுக அதிகார சபை சேவையிலிருந்து விலகினார்.

திரு. பி.யூ.சுமனசேகர, பிரதான பொறியியளாளர் (மின்சாரம்) அவருடைய சேவைக் காலம் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கை துறைமுக அதிகார சபையிலிருந்து ஓய்வு பெற்றார்.

நியமனங்கள்

திரு. திரு. உபுல் ஜயதிஸ்ஸ, முகாமைத்துவ பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் சுதத் பெரேரா (ஓய்வுபெற்ற), பணிப்பாளர் (பாதுகாப்பு) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. நிர்மால் பொன்சேகா, பிரதான முகாமையாளர் (தகவல் பொறிமுறை) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கே.ஜி.எஸ்.தயானந்த, பிரதான முகாமையாளர் (விற்பனை மற்றும் வியாபார அபிவிருத்தி) ஆக நியமிக்கப்பட்டுள்ளார்.

திருமதி எஸ்.எச்.எஸ் பத்மினி, பிரதான பயிற்சி முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எஸ்.எச். திலகபால, பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்) நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எச்.ஜே.கே.யு. குமார, பிரதான மனிதவள முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. எல்.பி.எஸ். சந்தன, பிரதான முகாமையாளராக (மரபுரீதியான கப்பற்சரக்கு கையாளல்) நியமிக்கப்பட்டுள்ளார்.

உலகலாவிய கொவிட் 19 தொற்று நிலைமைக்கு மத்தியில் கொழும்பு துறைமுகம் 2021 ஆம் ஆண்டில் கொள்கலன்கள் இருபதின் சம அலகு 7.24 மில்லியன் கையாளமுடிந்துள்ளது. இது சென்ற வருடத்துடன் ஒப்பிடும் போது 5.8% வளர்ச்சியயை காட்டுகின்றது. 2021 ஆண்டினுள் முனையம் என்றவகையில் நோக்கும் போது களம்பு இன்டர்நெஷனல் கன்டேனர் டேர்மினல், இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சவுத் ஏசியா கேட்வே டேர்மினல் கம்பனி முறையே இருபதின் சம அலகுகள் 3.21 மில்லியன், 2.19 மில்லியன் மற்றும் 1.83 மில்லியன் 2021 ஆம் ஆண்டில் கையாளப்பட்டுள்ளது. ஆதற்கேற்ப, 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது சவுத் ஏசியா கேட்வே டேர்மினல் கம்பனியின் இயக்கப் பரிமாணம் 1.8% ஆல் குறைந்துள்ளதோடு, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் களம்பு இன்டர்நெஷனல் கென்டேனர் டேர்மினல் இல் இயக்கப் பரிமாணம் முறையே 4.8% மற்றும் 11.3% இனால் அதிகரித்துள்ளது. கிழக்கு கொள்கலன் முனையத்தில் 2021 ஆம் ஆண்டில் கொள்கலன்கள் இருபதின் சம அலகுகள் 390,069 கையாளப்பட்டிருந்தன.

2021 ஆம் ஆண்டில் களம்பு இன்டர்நெஷனல் கன்டேனர் டேர்மினல், இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் சவுத் ஏசியா கேட்வே டேர்மினல் ஆகிய கம்பனிகளினால் கையாளல்கள் மேற்கொள்ளப்படுகின்ற முனையங்களில் சந்தைப் பங்குகள் முறையே 44%, 30% மற்றும் 25% ஆக பதியப்பட்டதோடு, 2020 ஆம் ஆண்டில் அச்சந்தைப் பங்குகள் முறையே 42%, 31% மற்றும் 27% ஆக பதிவாகியது.

2021 ஆண்டினுள் கொழும்பு துறைமுகத்தின் ஆழம் மீட்டர் 14.25 ஐ விட கூடிய கொள்கலன் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கான வருகை 300 ஆக பதிவிடப்பட்டிருந்தது. ஆழமான முனையங்கள் இருக்காவிட்டால் இவ்வளவு கப்பல்கள் வராமல் இருந்திருக்க முடியும்.

2020 ஆம் ஆண்டில் கையாளப்பட்ட 97.6 மில்லியன் தொன்களுக்கு ஒப்பாக 6.3% அதிகரிப்பொன்றினை காட்டுவதோடு, கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட கப்பற் சரக்கு பிரமாணம் 103 மில்லியன் தொன்கள் வரை அதிகரித்துள்ளது.

ஏனைய துறைமுகங்களின் செயலாற்றுகை

- ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பல்களின் பிரமாணம் 374 ஆனதோடு, கப்பற் சரக்கு கையாளல் தொடர்பில் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பீட்டளவில் கையாளப்பட்ட தொன் பிரமாணம் 28.5% ஆல் அதிகரித்துள்ளது.

- ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் வாகனங்கள் கையாளல் 40.4% ஆல் அதிகரித்துள்ளது.

- காலி துறைமுகத்தில் 2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் கப்பல்களின் வருகை 36.4% ஆல் குறைந்ததன் காரணத்தினால் கையாளப்பட்ட கப்பற் சரக்குகள் தொன் பிரமாணம் 73.8% ஆல் குறைந்துள்ளது. .

- திருகோணமலை துறைமுகத்துக்கு வருகைதந்த கப்பல்களின் பிரமாணம் -13.3% ஆல் குறைவடைந்துள்ள போதிலும் கையாளப்பட்ட கப்பற்சரக்கு தொன் பிரமாணம் 3.8% ஆல் அதிகரித்துள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் விருது வழங்கும் இரவு (Port of Colombo Awards Night) போன்ற கப்பல் கம்பனிகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களை பாராட்டுவதற்குட்படுத்தும் சந்தர்ப்பம் உலகளாவிய கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக 2021 ஆண்டில் நடாத்துவதற்கு முடியாமற் போயுள்ளது.



இயக்க மீளாய்வு

ஆண்டறிக்கை 2021

திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பகுதி

1. கொழும்பு துறைமுக விரிவாக்க செய்திட்டம்

கிழக்கு கொள்கலன் முனையத்தின் இயக்கத்தை ஆரம்பித்து, மேற்கு கொள்கலன் முனையத்தை தனியார் துறையின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்ய வேண்டுமென துறைமுக துறை தொடர்பான அரசாங்க கொள்ளை பிரகடனத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு கொள்கலன் முனையத்திற்கு இணையாக மேற்கு கொள்கலன் முனையத்தை 05 ஆண்டுகளுக்குள் அபிவிருத்தி செய்து எதிர்வு கூறலுக்கு ஏற்ப கிராக்கிக்கு அமைவாக 2025 ஆண்டளவில் இயக்க செயற்பாடுகளை முழுமையாக முன்னெடுக்கும் நிலைக்கு கொண்டு வருவதற்கான செயற்பாடுகளில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது.

1.1 கிழக்கு கொள்கலன் முனையம்

கிழக்கு கொள்கலன் முனையம் 400 மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீளத்தைக் கொண்ட பாரிய கொள்கலன் கப்பல்கள் (ULCC) மூன்றினை (03) கையாள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பின்புற துறைமேடையுடன் இணைந்த 18 – 20 மீட்டர்கள் வரை ஆழமான 1320 நீளமான மேடைச் சுவரைக் கொண்டுள்ளது முனையப் பிரதேசம் அண்ணளவாக 72 ஹெக்டயார் ஆவதுடன் வருடாந்த துறைமேடை கொள்ளளவு கொள்கலன்கள் இருபதின் சம அலகுகள் 2.4 மில்லியன்களாகும். சேய்திட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் 18 ஹெக்டயாருடன் கூடிய மேடைப் பிரதேசம், மேடைச் சுவரின் 600 மீட்டரும், முனையப் பாதை மற்றும் வாயில் வசதிகளும் 2015 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது அதற்கேற்ப, 440 மீட்டரான முதலாவது நங்கூரத்தளத்தில் கொள்கலன்கள் கையாளல் 2020 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை துறைமு அதிகார சபையினால் கிழக்கு கொள்கலன் முனையத்தை கட்டங்களாக அபிவிருத்தி செய்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பூரண உரிமையுடன் கூடிய முனையமாக இயக்கங்களை மேற்கொள்வதற்கு 2021.02.01 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. கிழக்கு கொள்கலன் முனையத்தின் செயற்றிறனை மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் முனையத் திட்டத்தை புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கிடையில் ஒப்பந்த உடன்படிக்கை 2021.12.20 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது.

1.2 மேற்கு கொள்கலன் முனையம் - 1 அபிவிருத்தி செய்தல்

பின்புற துறைமேடையுடன் இணைந்த 20 மீட்டர்கள் வரையில் ஆழமான 1400 மீட்டர் மேடைச் சுவருடன் கூடிய, கொழும்பு தெற்கு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தின் மூலம் 400 மீட்டர் அல்லது அதனை விடக்கூடிய நீளங் கொண்ட பாரிய கொள்கலன்கள் மூன்று (03) கப்பல்களை (ULCC) கையாள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அண்ணளவாக 64 ஹெக்டாயர்களைக் கொண்ட துறைமேடை பிரதேசத்தில் வருடாந்தம் 3 மில்லியன் இருபது சம அலகுகள் பரிமானமாகும்.

நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் அடிப்படையின் கீழ் 35 வருட அரச தனியார் கூட்டுரிமை செய்திட்டமொன்றாக மேற்கு கொள்கலன் முனையம் - 1 இனை அபிவிருத்தி செய்வதற்காக அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப, இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் Colombo West International Terminal (Pvt) Ltd கம்பனிக்கிடையில் நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் ஒப்பந்தம் 2021.09.30 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளது. முனையத்தின் நிர்மாணம் கட்டங்களாக மேற்கொள்ளப்படுவதோடு, முனையத்தின் மொத்த நிர்மாணம் 2026 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படும்.

கிழக்கு கொள்கலன் முனைய திட்டம் மற்றும் மேற்கு கொள்கலன் முனையம் - 1 திட்டம் ஆகிய செய்திட்டங்கள் இரண்டும் மணல் அகழும் பிரதேசத்துக்குத் தேவையான மணல் ஆய்வு அனுமதிபத்திரம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மணல் ஆய்வு நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு,

நகல் அறிக்கை புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க அகழ்வு பணியகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மணல் அகழ்வு தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கடல் மண் அகழும் ஆரம்ப சூழல் ஆய்வு செயற்பாடு நடைபெறுகின்றது.

2. திருகோணமலை துறைமுக அபிவிருத்தி

துறைமுகம் சார்ந்த கைத்தொழில் தொடர்பாக ஈடுபடுத்தக்கூடிய பல காணிகள் திருகோணமலை துறைமுகத்தின் கீழ் உள்ளன. மேலும் இக்காணிகள் மூலம் பிரதேசத்தின் கைத்தொழிலுக்காக இருக்கும் சாத்தியமான கிராக்கிக்கு வழங்கும் ஆற்றல் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகம் தொடர்பாக முதலீட்டாளர்களினால் கிடைக்கப்பெற்றுள்ள பல கோரிக்கைகள் / முதலீட்டு பரிந்துரைகள் தொடர்பாக கருத்திற்கொண்டு கடலுக்கு முன்னாலுள்ளள காணிகள் மற்றும் ஏனைய பிரதேசம் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பதைக் கோருவதற்கு முகாமைத்துவக் குழு தீர்மானித்துள்ளது. ஒரு துறைமுகம் தொடர்பாக ஒரு கனரக கைத்தொழில் மாத்திரம் இருக்க வேண்டுமெனும் கட்டுப்பாடு 2022.1018 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அகற்றப்பட்டுள்ளது.

3. காலி துறைமுக அபிவிருத்தி

இலங்கை அரசு மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை காலி துறைமுகத்தை வலயத்தின் வணிகத் துறைமுகமாக அபிவிருத்தி செய்து வலயத்தின் பொருளாதார நடவடிக்கைகளின் போது உல்லாச கைத்தொழில் தொடர்பாக பரந்த அனுகலை ஏற்படுத்துதல் புயல் நிலைமைகளின் போது சிறு மீனவப் படகுகள் உரித்தான மீனவர்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு பாதுகாப்பான தங்குமிடமொன்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய சுனாமீபோன்ற விபத்துக்களின் தாக்கத்திலிருந்து காலி நகரத்துக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை மட்டுப்படுத்துவது இவ்வபிருத்தித் திட்டத்தின் நோக்கமாகும்.

விசேடமான பூகோள அமைப்பின் அனுகூலமான நிலைமையினை கருத்திற்கொண்டு காலி துறைமுகத்தின் மரபுரீதியான சேவைகளுக்கு கட்டுப்பாடு விதிக்காது நிலைபேறான அபிவிருத்தி வடிவமைப்பொன்றைத் தழுவி, தனியார் பிரிவின் முதலீடுகளை கவர்ந்து கொண்டு விநோத நடவடிக்கைகளுக்கு மற்றும் காலித் துறைமுக குடாவுக்கு அண்மைப் பிரதேசத்தில் காணிகள், சொத்துக்களை அபிவிருத்தி செய்யும் நோக்கோடு, செய்திட்டத்தை வடிவமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அபிப்பிராயம் தெரிவிப்பதனை கோருவதற்கு செய்திட்டக் குழுவொன்று மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்படுகின்ற கலந்துரையாடல் இணக்கக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அபிப்பிராயம் தெரிவிப்பதன் நகல் அறிக்கை தயாரித்தல் நிறைவடையும் செயற்பாட்டில் பெறுகைக்கான குழு மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கலந்துரையாடல் இணக்கக் குழு ஈடுபட்டுள்ளதுடன் 2022 பெப்ரவரி மாதம் நாளாந்த பத்திரிகைகளில் அறிவித்தல் பிரசுரிக்கப்படுவதனூடாக விளம்பரப்படுத்தப்படும்.

4. துறைமுக தொடர்பாடல் தொகுதி

தேசிய துறைமுக பிரதான செய்திட்டம் மூலம் துறைமுக தொடர்பாடல் தொகுதியை (PCS) செயற்படுத்துவதற்கு சாத்தியமான தேவை அடையாளங் காணப்பட்டுள்ளது. துறைமுக தொடர்பாடல் தொகுதி துறைமுக துறையில் வியாபார செயற்பாடுகளை நிறைவேற்ற தொடர்புகளை வழங்குகின்ற சுயாதீனமான மற்றும் அத்தேவைகளிற்கேற்ப வடிவமைக்கப்பட்ட மென்பொருளொன்றாவதுடன், அதன் மூலம் தகவல் கட்டமைப்பு வடிவமைக்கப்படுவதோடு குறித்த செயற்பாட்டின் நேரடி வியாபார வட்டத்தை முறைப்படுத்துவதற்கு தேவையான பொதுவான தொகுப்பு மாத்திரம் இதற்காக உபயோகிக்கப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் ஆரம்ப ஆய்வு, பங்குதாரர்களின் வரைபட வடிவமைப்பு மற்றும் செய்திட்டத்தின் நிருவாக தொகுதி தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது. செய்திட்டத்தின் ஆரம்ப திட்டம் மற்றும் சாத்தியவள ஆய்வு கட்டங்களாக தற்போது நடைபெறுகிறது.

5. கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செய்திட்டத்தின் சாத்திய வள ஆய்வு தொடர்பாக ஆலோசனைச் சேவைகள்

இருபதின் சம அலகு சுமார் 35 மில்லியன் மேலதிக கொள்கலன் கையாளல் பரிமாணத்தை அடைந்து கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிர்காலத்தில் 30 வருட கால எல்லை தொடர்பாக நீண்டகால திட்டமொன்று தேவைப்படுகின்றது. தற்போதிருக்கும் கொழும்பு துறைமுகத்தின் வடக்கு பிரதேசத்தில் கொழும்பு வடக்கு துறைமுகம் என்ற பெயரில் பதிய துறைமுகமொன்று என்ற பெயரில் புதிய துறைமுகமொன்றினை நிர்மாணிப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

அதற்கேற்ப, இத்துறையினால் பெற்றுக்கொடுப்பதற்கு எதிர்பார்க்கும் ஏனைய அனைத்து சேவைகளும் பெற்றுக்கொடுப்பதோடு, அதிகரிக்கும் கொள்கலன்கள் கையாளும் பரிமாணம் தொடர்பாக கவனம் செலுத்தி, கொழும்பு வடக்கு துறைமுக அபிவிருத்தி செய்திட்டம் தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி மூலம் அமுலாகும் போக்குவரத்து செய்திட்ட ஆரம்ப வசதிகளின் கீழ் (Transport Project Preparatory Facility) உத்தேசித்த கொழும்பு வடக்கு செய்திட்டம் தொடர்பாக சாத்தியவள ஆய்வினை பயன்படுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கடன் தொகையிலிருந்து ஒரு பகுதி பெற்றுக்கொண்டிருந்தது. இந்த ஆய்வின் கால எல்லை 15 மாதங்களாகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அபிவிருத்தி பகுதி

1. காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைத்தல்

(அ) வெளிநாட்டு நிதியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

- காங்கேசன்துறை துறைமுகத்தில் தற்போதுள்ள துறைமுக வசதிகளை புனரமைக்கும் நோக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைத்தல் தொடர்பாக இலங்கை அரசாங்கம் இந்தியாவின் எக்சீம் வங்கியுடன் கடன்பெறும் உடன்படிக்கையொன்று 2018 சனவரி 10 ஆம் திகதி கைச்சாத்திட்டதுடன், அதன் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு 45.27 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியை பெற்றுக் கொண்டுள்ளது.

- செய்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக, இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் M/S Haskoning DHV Consulting (Pvt) கம்பனியுடன், செய்திட்ட முகாமைத்துவ ஆலோசனை ஒப்பந்தத்திற்கு 2020 ஜூன் 30 திகதி கைச்சாத்திடப்பட்டுள்ளதோடு, 2020 ஒக்தோபர் 12 ஆம் திகதி ஆலோசனை பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- 2021 ஆண்டு இறுதியில் 47% முன்னேற்றம் ஒன்றை பெற்றுக்கொண்டுள்ளதோடு, மொத்த தொகையின் 30% த்தை ஒப்பந்தக் காரருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. பூரணப்படுத்தப்பட்ட விபர மடங்கிய செய்திட்ட அறிக்கை செய்திட்ட முகாமைத்துவ ஆலோசகரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு பெற்றுக்கொடுக்கப்பட்ட கடன்தொகைக்கு மேலதிகமாக ஆகுசெலவினை ஈடுபடுத்துவதற்கு ஏற்பட்டுள்ளது.

(ஆ) உள்நாட்டு நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

மேற்குறிப்பிடப்பட்ட அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்துவதற்காக கீழ் குறிப்பிடப்படும் பணிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தமது நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதோடு அதன் முன்னேற்றம் கீழே குறிப்பிட்பட்டுள்ளது.

- புதிய வாயில் தொகுதியை நிர்மாணித்தல், எல்லை வேலி/ மதிலை நிர்மாணித்தல், நீர் களஞ்சியப்படுத்தும் தாங்கியை நிர்மாணித்தல், உயரத்தில் நிர்மாணிக்கப்படுகின்ற நீர்த்தாங்கி, வீதி நிர்மாணப் பணிகள் மற்றும் செய்திட்ட நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட வீட்டின் திருத்தப்

பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- காங்கேசன்துறை துறைமுகத்துக்கு அருகே அமைந்துள்ள 50 ஏக்கர் காணி (16 ஏக்கர் மற்றும் 34 ஏக்கர்) கையேற்றல்/ கொள்வனவு செய்வதற்கு தேவையான காணிகளை சுவீகரித்துக் கொள்ளும் நடவடிக்கைகளை நிறைவு செய்வதற்கு தெல்லிப்பளை மாவட்ட செயலாளர் நடவடிக்கைகள் மேற்கொள்கிறார்.

2. துறைமுக உட்புகு அதிவேக மேம்பால செய்திட்டத்தின் கீழ் இலங்கை துறைமுக அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற செய்திட்டம்

துறைமுக உட்புகு அதிவேக மேம்பால செய்திட்டம் இங்குருகடை சந்தியிலிருந்து ஆரம்பிப்பதுடன் இலங்கை துறைமுக அதிகாரசபை வளாகம் ஊடாக காலிமுகத் திடல் வரை நீள்கின்றது. இது 5.3 கி.மீ நீளம் மற்றும் 4 நிரல்களைக் கொண்ட அதிவேக மேம்பாலமாகும். இச்செய்திட்டத்தின் ஆகுசெலவு 300 மில்லியன்கள் அமெரிக்க டொலர்களாவதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி வழங்கப்படும்.

சமுத்திர வசதிகளை வழங்கும் மத்திய நிலையம் (இலங்கை துறைமுக அதிகாரசபையின் பிரதான அலுவலக கட்டிடம்) செய்திட்ட ஆகுசெலவு ரூபா 6200 மில்லியன்களாவதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் இதற்கான நிதி செலவிடப்படுகிறது.

- இலங்கை துறைமுக அதிகாரசபையின் வேலைத்தளங்களிலிருந்து வெளியேற வேண்டி ஏற்பட்டுள்ள பணியாளர்களுக்காக கெனல் மேடை வளாகத்தில் 17 மாடிகளைக்கொண்ட கட்டிடமொன்றை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- செய்திட்ட ஆகு செலவு ரூபா 6200 மில்லியன்கள் ஆவதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி வழங்கி வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் செய்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

- உப கட்டமைப்பு மற்றும் மேலதிக விசேட கட்டமைப்பு ஆகியன 2 கட்டங்களாக முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- உப கட்டமைப்பின் அடித்தளம் 171 தூண்களை கொண்டதுடன் அதன் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளது.

- மேலதிக விசேட கட்டமைப்பின் நிர்மாணப் பணிகள் 2021 ஜூலை மாதம் 02 திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- 2021 வருட இறுதியில் 6% பௌதீக முன்னேற்றம் ஒன்று பெறப்பட்டுள்ளது.

புதிய வேலைத்தள கட்டிடத் தொகுதி

(மதிப்பிடப்பட்ட செய்திட்ட ஆகுசெலவு ரூபா 1200 மில்லியனாவதோடு அதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி பயன்படுத்தப்படுகின்றது.)

- துறைமுக உட்புகு அதிவேக மேம்பால பாதை செய்திட்டம் காரணமாக இலங்கை துறைமுக அதிகார சபையின் வேலைத்தளங்களை மறுசீரமைக்க வேண்டியுள்ளதால் 04 கட்டிடங்கள் உள்ளடங்கலாக வேலைத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- செய்திட்டத்தின் கால எல்லை 09 மாதங்களாகும்.

- மதிப்பிடப்பட்ட செய்திட்ட ஆகு செலவு (நிகழாவற்றுக்கான செலவு மற்றும் வரியற்ற) ரூபா 1090 மில்லியன் ஆவதோடு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியைப் பயன்படுத்தி இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படவுள்ளது.

- பொறுப்பேற்கும் கடிதம் ஒப்பந்தக்காரரான M/S BEL – DGES JV கம்பனிக்கு 2021 ஆகஸ்ட் 06 ஆந் திகதி ஒப்படைக்கப்பட்டதோடு, இதன் வேலைகள் 2021 செப்டெம்பர் 09 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

வேலைத்தள சுத்திகரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளது. அடித்தளம் அகழும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
வடிவமைப்பின் ஒரு பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட திட்டம் கிடைத்துள்ளது.

- ஒப்பந்தத் தொகையில் 10% முற்பணக் கொடுப்பனவாக 2021 நவம்பர் மாதத்தில் விடுவிக்கப்பட்டுள்ளது.

- 2021 வருட இறுதியில் 12% பௌதீக முன்னேற்றம் ஒன்று பெற்றுக்கொண்டுள்ளது.

3. ஒலுவில் துறைமுகம்

துறைமுக பிரவேச பாதையில் சேற்றுப் படிவுகள் ஒன்று சேரும் சிக்கலுக்கு ஒலுவில் துறைமுகம் தற்போது முகம் கொடுத்துள்ளதோடு, இதன் காரணமாக கப்பல்களுக்கு வணிக துறைமுகத்தினுள் உட்புகுவதற்கு முடியாதுள்ளது. Danish Hydrulic Institute நிறுவனத்துடன் ஒன்றிணைந்து இது தொடர்பாக பொறியியல் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதோடு, துரித தீர்வொன்றையும் மற்றும் துறைமுகத்தை செயற்பாட்டு நிலைமையில் பேணிச் செல்வதற்காக செயல்முறையொன்றும் இப்பரிந்துரையில் உட்படுத்தப்பட்டுள்ளதோடு, இதற்காக பாரிய நிதியொன்று செலவாகிறது. நிதி மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் காரணமாக குறித்த எதுவித செயற்பாடுகளும் அமுல்படுத்தப்படவில்லை.

இது தொடர்பாக மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கல் அபிவிருத்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்துடன், குளிர் அறை மற்றும் குறித்த வசதிகள் மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கல் அபிவிருத்தி அமைச்சிடம் ஒப்படைக்க வேண்டுமென மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கல் அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக குளிர் அறை மற்றும் குறித்த வசதிகளை ஒப்படைப்பதற்கு பணிப்பாளர் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதி

சிவில் பொறியியல் கட்டமைப்பை திட்டமிடல் மற்றும் சிவில் பொறியியல் ஒப்பந்தங்களை அமுல்படுத்துதல் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதியின் பிரதான பொறுப்பாகும். இதற்கு மேலதிகமாக நேரடி நிர்மாணிப்பு அலகான முன்வார்ப்பு முனையத்தினால் நிர்மாணப் பணிகள் நேரடியாகவே மேற்கொள்ளப்படுவதோடு, ஒப்பந்த நடவடிக்கைகளை அமுல்படுத்துதல் தொடர்பாக தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும். 2021 வருடத்தில் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதியினால் மேற்கொள்ளப்படுகின்ற

ஒப்பந்தங்களுக்குள், துறைமுக உள்ளக பாதையை விஸ்தரித்தல் ஜய கொள்கலன் முனையம் மற்றும் விஜய இளவரசர் பாலத்தின் மேடையை புணரமைத்தல்இ அதிவேக மேம்பால திட்டத்திற்காக கட்டிடங்களை மீளமைத்தலின் கீழ் உபகரணங்கள் பராமரித்தல் பிரிவு, குளிர்ச்சாதன மற்றும் குளிரூட்டல் பிரிவு மற்றும் போர்க் லிப்ட் திருத்தும் பிரிவுக்கான வேலைத் தளங்களை நிர்மாணித்தல், ஜய கொள்கலன் முனைய V ஆம் திட்டத்தின் கீழ் (JCT V) ஆழமான நங்கூர கொள்திறனை அதிகரிப்பதன் சிவில் வேலைப்பாகங்கள்இ திருகோணமலை துறைமுகத்தின் நீர் வழங்கும் களஞ்சிய தாங்கி, நீர் செலுத்து நிலையம் நிர்மாணித்தல் ஆகியன உள்ளடங்கும். இவ்வருடத்தினுள் இத்திட்டங்கள் தொடர்பாக திட்டங்கள், டென்டர் மற்றும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், அடிக்கடி இலங்கை துறைமுக அதிகார சபையின் தேவைகளுக்கேற்பஇ பல்வேறு வடிவமைப்பு நடவடிக்கைகள் வடிவமைப்பு பிரிவினாலும் மற்றும் நிர்மாணப் பணிகள் முன்வார்ப்பு முனையத்தினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ரூபா 141.5 மில்லியன் ஆகுசெலவிற்கு பிரதான உள்ளக துறைமுக பாதையை விஸ்தரித்தலின் கீழ் ஹார்த்தால் பாலத்திலிருந்து கடற்படை பாசறை வரையிலான நிர்மாணப் பணிகள் 2021 ஆம் ஆண்டில் நிறைவுச் செய்யப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தீயனைப்பு படை தலைமையகத்திலிருந்து சமர்ஹில் வரை பாதையின் நிர்மாணப் பணிகள் 2021 ஆம் ஆண்டிலும் மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிர்மாணப் பணிகளின் மதிப்பீட்டு ஒப்பந்த பெறுமானம் ரூபா 176 மில்லியன்களாகும்.

அதிவேக பாதை செய்திட்டத்திற்கான மீளமைப்பு பணிகளின் பகுதியொன்றாக உபகரணங்கள் பராமரிப்பு பிரிவு, குளிர்சாதனம் மற்றும் குளிரூட்டி புதுப்பித்தல் பிரிவு மற்றும் போர்க்லிப்ட் திருத்தும் பிரிவு ஆகிய வேலைத்தளங்கள் மூன்றின் நிர்மாணப் பணிகள் ஒப்பந்தம் மற்றும் வடிவமைப்பு பகுதியினால் செயற்படுத்தப்பட்டுள்ளது. ஆரம்ப இரு திட்டங்களும் 2021 ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவு நிறைவு செய்யப்பட்டதோடு, போர்க்லிப்ட் இயந்திரம் திருத்தும் பிரிவின் நிர்மாணப் பணிகள் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டு வழங்கப்பட்டு அமுல்படுத்த முடியாமற் போன ஜய கொள்கலன் முனையத்தின் V ஆவது செயல் திட்டத்தின் கீழ் ஆழமான நங்கூரத்தள கொள்திறனை அதிகரிப்பதற்க சிவில் வேலைப்பாகங்களின் பணிகள் 2020 இல் ஆரம்பித்து முன்னோக்கி செயல்படுத்தப்பட்டுள்ளது. கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் பணிகளின் முன்னேற்றத்தில் பாரிய தாக்கமொன்று ஏற்பட்டாலும் பணிகளை 30% இனால் நிறைவு செய்வதற்கு முடிந்துள்ளது.

திருகோணமலை துறைமுகம் தொடர்பாக 500,000 லீட்டர் கொள்ளளவுடன் கூடிய மற்றும் ரூபா 30 மில்லியன் மதிப்பிடப்பட்ட ஆகுசெலவுடன் கூடிய நீர்க் களஞ்சிய தாங்கியொன்றினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதோடு, வேலைப்பணிகள் 2021 ஆண்டில் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.


செயற்பாட்டிலுள்ள நிர்மாணப் பணிகளுக்கு மேலதிகமாக, கொழும்பு துறைமுகத்தினுள் இலங்கை மின்சார சபைக்கான மின் நிலையமொன்றை நிர்மாணித்தல், திருகோணமலை துறைமுகத்தில் பொறியியல் வேலைத்தள கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் கொழும்பு துறைமுகத்தில் பிரதான பணிப் பரிசோதனை பிரிவின் (CIW) களஞ்சிய கட்டிடத்தை நிர்மாணித்தல் ஆகிய செய்திட்டங்களுக்கு பெறுகைச் செயற்பாடுகள் பலவித கட்டங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளதோடு, நிர்மாணப் பணிகள் 2022 ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட செயல்திட்டங்களுக்கு மேலதிகமாக, காலி துறைமுகத்தின் அலைதாங்கி மற்றும் மோட்டார் கராஜ் கட்டிடத்தின் மீளமைப்பு பணிகள் மற்றும் திருகோணமலை துறைமுகத்தின் நீர்க்களஞ்சிய தாங்கிக்கான குழாய்கள் பொருத்துதல் உட்பட மேலும் பல கட்டமைப்புக்களின் வடிவமைப்பு பணிகள் திட்டமிடல் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டதோடு அந்நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் பல்வேறு கட்டங்களாக நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

இயக்கப் பகுதி


கொவிட் - 19 தொற்று நிலையின் தாக்கத்துக்குள்ளாகிய சூழலில் உற்பத்தித்திறன் மட்டத்தினை உயர்மட்டத்தில் பேணிச் செல்வதற்கு மற்றும் கப்பல் இயக்கங்களை தொடர்ச்சியாக செயற்படுத்தும் முயற்சியாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்கப் பகுதியினால் கீழ்வரும் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. சேவைகளின் தரம், நம்பகத்தன்மை மற்றும் செயற்றிறன் எதுவித நிலைமையிலும் குறைவதற்கு இடமளிக்காததோடு, 2021 ஆம் ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களினால் கொள்திறனில் அதிகரிப்பொன்று அறியப்பட்டது.

1. கொவிட் - 19 தொற்று நிலை மற்றும் ஏனைய போட்டியான முனையங்கள் காரணமாக உருவாகிய சவால்களுக்கு முகங்கொடுத்து, இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களினால் கொள்கலன் கையாளும் திறனில் 4.8% அதிகரிப்பொன்றை பெற்றுக்கொண்டதுடன், முந்திய வருடத்தில் அறியப்பட்ட கொள்கலன்கள் இருபதின் சம அலகுகள் 2,097,804 க்கு ஒப்பாக 2021 ஆண்டில் கொள்கலன்கள் இருபதின் சம அலகுகள் 2,198,334 அறியப்பட்டது. ஆசிய வலயத்தில் வர்த்தக கொள்திறன் குறைவடைந்திருக்கும் போதும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களினால் இவ்வாறான அதிகரிப்பொன்று பெறப்படுவது விசேட வெற்றியாவதுடன் ஏனைய பல முனையங்ளில் வர்த்தக கொள்திறன் குறைந்து காணப்பட்டதை அறியக்கூடியதாக இருந்துதது.




2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2021 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கையாளப்பட்ட கொள்கலன் கையாளல் திறன்.

2. 2021 ஆண்டில் ஊட்டக் கப்பல் சேவைகள் மற்றும் பிரதான கப்பல் சேவைகள் தொடர்பாக பாரம் தூக்கியின் உற்பத்தித் திறனின் மொத்த சராசரியாக முறையே ஒரு மணித்தியாலத்துக்கு பயணமுறைகள் 20.0 உம் மற்றும் மணித்தியாலத்துக்கு பயணமுறைகள் 22.7 எனவும் அறியப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் உற்பத்தித் திறன் நிலையுடன் ஒப்பிடும் போது இது முறையே 2.2% மற்றும் 0.7% குறைவாகும். சிதகொங் போன்ற வலய துறைமுகங்களில் மற்றும் மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய, அமெரிக்க ஐக்கிய குடியரசின் மைய துறைமுகங்களின் நெரிசல் காரணமாக கொழும்பு துறைமுகத்தின் முனையங்களில் மேடைகள் பாரிய அளவில் பயன்படுத்துவதற்கு நேரிட்டது. இவ்வாறான நெரிசல்கள் இருந்த போதிலும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களில் உற்பத்தித்திறன் சிறப்பான நிலையில் பேணிச் செல்வதற்கு முடிந்தமை விசேட வெற்றியாகும்.




2020 வருடத்துடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் தேறிய பாரம்தூக்கிகளின் உற்பத்தித் திறன்

3. 2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டில் முனையங்களுக்கிடையேயான முனைய ட்ரக் வண்டிகளின் இயக்கத் திறன் (ITT Volume) 6% ஆல் அதிகரித்துள்ளது. ஐய கொள்கலன் முனையம்/ கிழக்கு கொள்கலன் முனையம் மூலம் கையாளப்பட்ட முனையத்தினுள்ளும் அதன் வெளியேயும் இயக்கத் திறன் இருபதின் சம அலகுகள் 1,063,167 ஆகும். 2020 ஆண்டில் இயக்கத்திறன் இருபதின் சம அலகுகள் 941,324 ஆகும்.



2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டில் துறைமுகத்தின் உள்ளே மற்றும் துறைமுகத்தின் வெளியே போக்குவரத்து செய்த முனையங்களுக்கிடையிலான ட்ரக் வண்டிகளின் திறன்.

4. 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, மரபு ரீதியான கப்பற் சரக்குகள் முனையத்தில் கையாளப்படுகின்ற உலர் தொகை கப்பல் சரக்குகளின் தொன் பிரமானம் 2021 ஆம் ஆண்டில் 5.1% ஆல் அதிகரித்துள்ளது. 2020 ஆண்டில் கையாளப்பட்ட உலர் தொகை திறன் 3,140,637 ஆகும். திரவ தொகை திறன் 2020 ஆண்டில் கையாளப்பட்ட திரவ தொனை தொன் 5,346,585 ஆக இருந்ததோடு, இது 2021 ஆண்டில் 5,230,059 வரை குறைவடைந்திருந்தது. தொகைக் கப்பல் சரக்குகளில் கொள்கலன்களிலான கப்பற் சரக்குகளுக்கு மற்றும் உலகளாவிய திருப்பம் / போக்கு பொதுவாக மரபுரீதியான கப்பற் சரக்குகளின் திறனுக்கு தாக்கம் செலுத்தியுள்ளது., கொள்கலன்களின் கப்பற் சரக்குள், தொகை பிரிப்பு கப்பற் சரக்குகள், உலர் கப்பற் சரக்குகள் உள்ளடங்கலாக கொழும்பு துறைமுகத்தினுள் கையாளப்பட்ட ஒட்டுமொத்த தொன் பிரமாணம் 2021 ஆம் ஆண்டில் 6.3% அதிகரிப்பொன்று காட்டப்பட்டுள்ளது. 2021 ஆண்டில் மொத்த கொள்திறன் 103,823,774 தொன்களாகும்.



2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தினுள் கையாளப்பட்ட மொத்த தொன் பிரமாணம்.

5. கொவிட் - 19 தொற்று நோய் இருந்த கால எல்லையில் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி N4 சூழலொன்றினுள் நடவடிக்கை மேற்கொள்வதற்காக ஜய கொள்கலன்/ கிழக்கு கொள்கலன் முனையங்களில் அனைத்து வகை ஊழியர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. N4 கணனித் தொகுதி செயற்படுத்துவதற்கு முன் உழியர்களை ஆயத்தப்படுத்துவதற்கு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக கல முயற்சிகள் செய்வதற்கு நேர்ந்தது.

6. முனையத்தில் கையாளல் நடவடிக்கைகள் முடக்கி வைக்கும் (Down time) குறைந்த காலத்தை மட்டுப்படுத்துவது மூலம் கப்பல் கையாளும் உற்பத்தித் திறனின் குறைந்த தாக்கமொன்று ஏற்படுத்துமாறு ஜய கொள்கலன் முனையத்தில் மற்றும் கிழக்கு கொள்கலன் முனையத்தில் N4 முனைய கையாளல் தொகுதி ஏப்ரல் 29 ஆம் திகதி அமுல்படுத்தப்பட்டது.

7. Auto Stow, Prime Route மற்றும் Expert Decking ஆகிய N4 கணனித் தொகுதிக்குரிய கணனித் கணனி மாதிரியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. Navis குழுவுடன் இணைந்து Auto Stow, மாதிரிகளை நிலைப்படுத்துதல், பயிற்சியளித்தல் மற்றும் பரீட்சித்துப்பார்த்தல் மேற்கொள்ளப்பட்டது.

8. இலங்கை துறைமுக அதிகார சபையின் இயக்கங்கள் மேற்கொள்ளப்படும் போது, கொவிட் - 19 தொற்று நிலையின் தாக்கத்தக்கு முகங்கொடுப்பதற்காக பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து ஊழியர்களுக்கும் இரு தடுப்பூசிகள் வழங்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் அனைத்து ஊழியர்களுக்கும் பூஸ்டர் ஊசி பெற்றுக்கொடுக்கப்பட்டது.

9. தடுப்பூசி வழங்கலுக்கு புறம்பாக கொவிட் - 19 தொற்று நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக அனைத்து ஊழியர்களுக்கும் இலவசமாக தொற்று நீக்கி திரவம் முகக் கவசம், கையுறைகள், விட்டமின்கள், மூலிகைப் பாணம் மற்றும் பாதுகாப்பு உடைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

10. பிரதான குழுக்களுக்குரிய பணிகளின் போது நித்தம் ஏற்படுகின்ற தாமதங்களை உள்ளடக்குவதற்கு மற்றும் வெளிச்சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் உபகரணங்கள் தட்டுப்பாடுகளின்றி பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றினை உறுதி செய்வதற்கு இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனை சேவைக் கம்பனியூடாக புதிய பொறிமுறையொன்றினை அறிமுகப்படுத்தப்பட்டது.

11. துறைமுக வளவிற்குள் கொவிட் - 19 வைரஸ் தொற்றுவதனை தடுப்பதற்காக எழுவாயாக PCR சோதனை rapid Antigen சோதனைகள் நடாத்தப்பட்டன.

12. ஜய கொள்கலன் முனையத்துக்கு, வலயத்தின் ஏனைய முனையங்களுடன் எவ்வளவு கடுமையான போட்டித்தன்மையொன்று இருப்பதென்பது தொடர்பாக ஊழியர்களை அறிவூட்டுவதற்கு, அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடாத்தப்பட்டது. சரியான இயக்கங்கள் மற்றும் கப்பல் முனையங்களில் தரித்திருக்கு கால எல்லையை மட்டுப்படுத்தும் தேவை தொடர்பாக கப்பல் சேவைகள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாகவும் ஊழியர்களை அறிவுறுத்தப்பட்டதோடு, அச்சவால்களை வெற்றிகொள்வதற்காக எம்மூலம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள் இந்நிகழ்ச்சிகள் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டுதல்களின் கீழ் நடாத்தப்பட்டது.

13. உயர் முகாமைத்துவம், விசேட கடமைப் பொறுப்பு முகாமையாளர் மற்றும் நிறைவேற்று உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் மற்றும் இயக்கத்தின் செயலாற்றுகையை மேம்படுத்தல் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நிருவாக படிமுறை ஆகியன தொடர்ச்சியாக முன்னேற்றும் நோக்கில் ஜய கொள்கலன் / ஐக்கிய கொள்கலன் முனையங்களின் அனைத்து ஊழியர் பிரிவுகளையும் இலக்காகக் கொண்டு, திட்டமிடப்பட்ட அறிவுறுத்தல் மற்றும் உற்சாகமூட்டும் நிகழ்ச்சிகள் வெற்றிகரமான நடைபெற்றது. சுகாதாரப் பாதுகாப்பு செயன்முறையின் கீழ் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

14. ஜய கொள்கலன் முனையத்தை (JCT V) விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் ஜய கொள்கலன் முனைய மேடைச் சுவரை மேலும் 120 மீட்டரினால் நீளமாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

15. இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழ் சேவை வழங்கல் நடவடிக்கைகளை விஸ்தரிக்கும் நோக்குடன் ஐக்கிய கொள்கலன் முனையத்தில் புதிய கொள்கலன் கையாளல் நிலையத்துக்காக அடிக்கல் நடப்பட்டது.

16. முனையங்களுக்கிடையே ட்ரக் வண்டிகள் இயக்க திறன்கள் அதிகரிப்பதால் ஏற்படும் நெரிசல் மற்றும் கொள்கலன்களின் வருகை அதிகரிப்பதனால் ஏற்படும் நெரிசலை முகாமைத்துவம் செய்வதற்கு ஒதுக்கப்பட்ட மேடைகளில் அது தொடர்பாக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களின் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. இதில் கப்பல்களின் இயக்கங்களுக்கு தாக்கங்கள் ஏற்படாத வண்ணம் மனித சிரமம் மற்றும் உபகரணங்கள் வழங்குவதனை கண்டிப்பாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

17. முனையங்களுக்கிடையே ட்ரக் வண்டி சேவைகளை செயற்றிறனாக்குவதற்கு மூன்று முனையங்களிலும் இயக்குனர்களின் முகவர்களினால் அமைக்கப்பட்ட குழுவொன்று நிறுவப்பட்டது. குழுக் கூட்டங்கள் ஜய கொள்கலன் முனையத்தில் நடைபெறும்.

18. மேடைச்சுவருக்கு அருகில் பிரைமுவர் பாதை நிரல்கள் மற்றும் மத்திய வீதி உரிய நிலைக்கு ஆக்குவதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம் முனைய இயக்கங்கள் சிறப்பாக மேற்கொள்வதற்கு முடிகின்றது. மேலும், முனைய இயக்கங்களை இலகுபடுத்துவதற்காக இறப்பர் டயர் பொருத்தப்பட்ட கென்றி பாரம் தூக்கிகளுக்கான பாதை நிரல்கள் மற்றும் அடுக்கி வைக்கும் பிரதேசங்கள் சீரமைக்கப்படுகின்றது.

19 உள்ளக ஆவணங்களை டிஜிடல் மயமாக்கப்பட்டு, குறித்த உரிமையின் கீழ் அந்தந்த அதிகாரசபைக்கிடையில் பயன்படுத்துவதற்கு பரிமாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் துறைமுக தொடர்பாடல் தொகுதியின் ஆரம்ப நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

சேவை வழங்கல் பகுதி

துறைமுகத்தில் தரையிறக்கப்படும் நிறை கொள்கலன்கள் (FCL), குறை கொள்கலன்கள் (LCL), தொகை பிரிப்பு, மொத்தப் பொதி, மோட்டார் வாகனங்கள் மற்றும் செய்திட்ட பொருட்களைக் கொண்ட கப்பற்சரக்குகள் உள்ளடங்கலான அனைத்து கப்பற்சரக்குகளையும் செயற்திறனாக வினியோகிப்பதும், கப்பற்சரக்குகளுடன் தொடர்புபடும் சேவைகளை வழங்கும் பணிகளைக் கையாள்வதும் சேவைகள் வழங்கும் பகுதியின் தலையாய கடமையாகும்.

2021 ஆண்டிலும் 24 மணி பூராகவும் சேவைகள் வழங்கியதன் ஊடாக 123,477 இருபது சம அலகுகள் நேரடியாக வினியோகம் செய்யப்பட்டு பாவனையாளர் சேவை நிலையம் மூலம் ரூபா 2,351.88 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. கொவிட் - 19 தொற்று நோயை ஏற்படுத்தும் வைரசு ஊழியர்களுக்கு தொடுகை மூலம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு, பூரண கொள்கலனகள்/ குறை கொள்கலன்களை ஒப்படைத்தல் மற்றும் கட்டணங்கள் செலுத்துதல் இலத்திரனியல் இணையவழி ஆவண வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொள்கலன்கள் கையாளும் நிலையத்தில் குறை கொள்கலன்கள் மற்றும் பல்வேறு நாடுகளுக்குச் சொந்தமான மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் 23,117 இருபதிலன் சம

அலகுகள் கையாளப்பட்டதுடன், உள்நாட்டு கொள்கலன்கள், மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் மற்றும் பல்வேறு நாடுகளுக்குச் சொந்தமான மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் உள்ளடங்கலாக பல்வேறு வகையான கப்பற் சரக்குகள் தொடர்பாக களஞ்சியத்தினுள் இடவசதிகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் பல்வேறு நாடுகளுக்குரிய மீள் ஏற்றுமதி கொள்கலன்களை ஏற்றுதல் மற்றும் தரையிறக்கும் கொள்ளளவு 14,106 இருபதின் சம அலகுகளாகும். குறை நிரம்பல் கொள்கலன்கள் தரையிறக்குதல் மூலம் ரூபா 202.24 மில்லியன் வருமானமொன்று ஈட்டியுள்ளதோடு, குறை நிரம்பல் கொள்கலன்கள் தரையிறக்கல் மற்றும் ஒப்படைத்தல் கட்டணமாகவும் தொகைபிரிப்பு கப்பற் சரக்குகள் ஒப்படைக்கும் கட்டணமாக ரூபா 1,184.68 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. பல்வெறு நாடுகளுக்குரிய மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் கையாளல் மூலம் ரூபா 210.19 மில்லியன் ஈட்டப்பட்டுள்ளது. விசேட மற்றும் சாதாரண கையாளல் மூலம் ரூபா 43.39 மில்லியன் வருமானமொன்று ஈட்டப்பட்டள்ளது. வெற்றுக் கொள்கலன்கள் தொடர்பாக அறவிடப்பட்ட தாமதக் கட்டணமாக மற்றும் கொள்கலன்களின் தன்மையை மாற்றும் கட்டணமாக ரூபா 121.29 மில்லியன்கள் ஈட்டப்பட்டுள்ளது.

(CFS-V) களஞ்சியம் புதுப்பித்ததன் காரணமாக பிணையிடப்படும் கப்பற்சரக்குகளுக்கான வசதிகளை மேம்படுத்தப்படுவதுடன் பிணையிடப்படும் கப்பற் சரக்குகளுக்கான கிராக்கியும் அதிகரித்ததோடு ரூபா 77.62 மில்லியன் மொத்த வருமானமும் ஈட்டப்பட்டுள்ளது.

கைவிடப்பட்ட கப்பற்சரக்குகள் மற்றும் சேதமான கப்பற் சரக்குகள் பகிரங்க ஏலத்தில் விற்கப்பட்டதன் மூலம் ரூபா 271.75 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதோடு, வ/ப இலங்கை துறைமுக முகாமைத்துவ ஆலோசனைச் சேவைகள் கம்பனி மூலம் கழிவு இரும்புகள், அகற்றப்பட்ட எண்ணெய், பயன்படுத்தப்பட்ட டயர் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் மேலதிக வருமானமாக ரூபா 11.40 மில்லியன் தொகையும் ஈட்டப்பட முடிந்துள்ளது.

2021 ஆண்டினுள் சரக்குகள் அகற்றிச் செல்லும் முகவர் நிறுவனங்களுக்கு புதிதாக 138 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதோடு, 1,350 அனுமிப்பத்திரங்கள் புதுப்பித்தல் மூலம் மொத்த அனுமதிப்பத்திரங்கள் 1,488 ற்காக ரூபா 31.82 மில்லியனும் ஏ" மற்றும் "பி " வகுப்பு வாப்பு இலிகிதர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தலின் மூலம் ரூபா 7.69 மில்லியன் வருமானமும் பெறப்பட்டுள்ளது. ஆண்டினுள் வழங்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட "ஏ" மற்றும் "பி" அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கைகள் முறையே 3,086 உம் 328 உம் ஆகும்.

2021 ஆண்டினுள் சேவைகள் வழங்கும் பகுதியினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட சேவைகள் மூலம் ஈட்டப்பட்டுள்ள ஒட்டுமொத்த வருமானம் ரூபா 4,625.72 மில்லியன் ஆகும்.

சரக்கு உரிமையாளர்களின் கட்டண சலுகைகள் தொடர்பில் 2021 ஆண்டில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சில் முன்வைக்கப்பட்ட 70 விண்ணப்பங்களில் 16 பரிந்துரைக்கப்பட்டு 03 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்

- களஞ்சிய முகாமைத்துவ கட்டமைப்பினை அமுல்படுத்துதல் பேலியகொடை களுஞ்சிய தொகுதி வரை விஸ்தரித்தல் தற்பொழுது இத்தொகுதி அனைத்து குறை பூரண கொள்கலன்கள் களஞ்சிய தொகுதிகளில் அமுல்படுத்தப்படுகின்றன.

- இலத்திரனியல் முறை வசதிகள் ஊடாக ஆவணங்களை சமர்ப்பித்தல், இலங்கை சுங்கத்திலிருந்து விடுவித்தல் மற்றும் இணைவழி உடாக கொடுப்பனவுகள் மேற்கொள்வதன் மூலம் ஆவணங்களின்றிய பூரண கொள்கலன்களை ஒப்படைக்கும் செயற்பாட்டினை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- பல்வேறு நாடுகளுக்குரிய மீள் ஏற்றுமதி கொள்கலன்கள் மீள் திட்டம் மற்றும் வெற்று கொள்கலன்களை அகற்றும் கையாளல்கள் தொடர்பான

ஆவணங்கள், துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு தொடுகையின்றி மற்றும் வாடிக்கையாளர்களின் வசதியைக் கருதி இணையவழி மூலம் ஒப்படைத்தல்

- களஞ்சியங்களிற்குள் நெஸ்ட்டேனரின் (கப்பற் பொருட்களை வைப்பிடும் பாரிய அளவிலான கொள்கலன்கள்) உபயோகத்தினை அதிகரிப்பதனூக களஞ்சியப்படுத்தும் கொள்ளளவை மேம்படுத்தல்.

- பிணைமுறைக் களஞ்சியத்தின் வெப்பக் கட்டுப்பாட்டு பிரதேசத்தை விஸ்தரித்து பொருட்களை பட்டியற்படுத்தி செம்மையாக பேணிச் செல்வதற்கு இராக்கைகள் புதிதாகப் பொருத்தி அனைத்து கப்பற் பொருட்களில் குறிப்பிடப்பட்ட பின்கார்ட் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- பண்டாரநாயக்க பாலத்திலுள்ள கொள்கலன் முனையத்தில் களஞ்சியக் கையாள் நடவடிக்கைகளில் உற்பத்தித்திறன் மட்டத்தினை அதிகரிப்பதற்கு ட்ரேலன் தொடர்பான கொள்கலன்களை ஏற்றுதல்/ இறக்குதல் வசதிகளை அபிவிருத்தி செய்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், பண்டாரநாயக்க பாலத்தின் களஞ்சிய தொகுதி காரியாலயம், ஓய்வறை மற்றும் ஏனைய பொது வசதிகளை சீரமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதோடு, குறித்த அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- பண்டாரநாயக்க பாலத்தின் மீள் ஏற்றுதல்/ பல்வேறு நாடுகளுக்குரிய மீள்ஏற்றுமதி கப்பற் சரக்குகள் தொடர்பாகவிருக்கும் அதிகரித்த கிராக்கிக்கு ஏற்ப இயக்கங்களை மேற்கொள்ளக் கூடியவாறு புதிதாக வேறொரு பிரதேசத்தை ஒதுக்குதல்.

கப்பலோட்டப் பகுதி

வழிகாட்டிச் சேவை

மீளாய்வாண்டினுள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த எல்லா வகையிலான கப்பல்களுக்கும் 24 மணித்தியாலங்கள் பூராக வழிகாட்டிச் சேவைகள் வழங்கப்பட்டன.

கப்பல்களின் வகை	கப்பல்களின் எண்ணிக்கை	வருகை நோக்கம்	கப்பல்களின் எண்ணிக்கை
கொள்கலன்	3,180	எண்ணெய் பெறுதல்	35
மரபு முறையான	62	பழுதுபார்த்தல்	42
உலர் மொத்தம்	167	பயணிகள் போக்குவரத்து	0
திரவ மொத்தம்	177	ஏனைய சேவைகள்	10
றோல் ஒன் றோல் ஒப்	01		
ஏனைய கப்பற்சரக்குகள்	01		
மொத்தம்			**3,675**

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவு

பிரதான இழுவைக் கல அதிபர் பிரிவினால் மீளாய்வாண்டினுள் கப்பல்களுக்கு செயற்திறனான தொடர்ச்சியான இழுவைக்கல சேவைகள் வழங்கி சிறப்பான பணியாற்றப்பட்டது. இப்பிரிவின் பிரதான பணிகள் பின்வருமாறு.

- கப்பல்களை நங்கூரமிடும் மற்றும் பயணிக்கும் சந்தர்ப்பங்களில் கப்பல்களுக்கு இயக்க இழுவைக்கலங்களை வழங்குதல்

- இழுவைக் கலங்களின் தட்டுக்களினது (DECK) புதுப்பிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளை நிறைவேற்றுதல்.

- கப்பல்களை கட்டி வைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு அகற்றப்பட்ட பாரிய கயிறுகளினால் இழுவைக் கலங்களுக்கான கயிறுகளும் விரிப்புகள் (Rope Mats) செய்தல், இழுவைக் கலங்களுக்கும் வேறு பிரிவுகளுக்கும் கென்வஸிலான திரைகள் (Awnings) தயாரிக்கும் நடவடிக்கைகள்

கப்பல்களின் நகர்வுகளுக்காக போதியளவு இழுவைக் கலங்கள் நாளாந்தம் ஈடுபடுத்தப்பட்டதோடு அவசர சந்தர்ப்பங்களுக்காக ஒரு இழுவைக் கலம் எதிர்பார்ப்பு சேவையில் ஈடுபடுத்தப்படுகிறது.

இழுவைக் கலங்களின் உதவியுடன் கையாளப்பட்ட மொத்த கப்பல்களின் எண்ணிக்கை நங்கூரமிடும் இழுவைக் கலங்களினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த கையாயளல் எண்ணிக்கை 16,869 என்பதுடன், அதன் விபரங்கள் பின்வருமாறு;

கலத்தின் பெயர்	கையாளல்கள் எண்ணிக்கை	மொத்தம்
MT Gotaimbara (65 BP)	852	
MT Suranimala (65 BP)	2085	
MT Barana – II	2040	
MT Nandimithra (55 BP)	2018	
MT Vijayabahu	735	
MT Airawana	1156	**8,886**
கொழும்பு துறைமுகத்திற்குள் வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் இழுவைக் கலங்கள்		
Tug Hercules	2416	
Tug Push Hardy	2766	
Tug Push Husky	2801	**7,983**
மொத்தம்		**16,869**

கொழும்பு துறைமுகத்தினுள் நங்கூரமிடப்பட்டுள்ள இழுவைக் கலங்கள்;

- MT Gotaimbara
- MT Suranimala
- MT Nandimithra
- MT Vijayabahu
- MT Barana -II
- MT Raja
- MT Airavana
- MT Deera

கொழும்பு துறைமுகத்தில் வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ள இழுவைக் கலங்கள்;

- Tug Hercules
- Tug Push Hardy
- Tug Push Husky

வெளி துறைமுகங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இழுவை கலங்கள்

திருகோணமலை துறைமுகம்

- MT Sinhabahu
- MT Neelamaha
- MT Mahasen
- MT Theraputhabaya

காலி துறைமுகம்

- MT Kanchadev
- MT Velusumana

ஹம்பாந்தோட்டை துறைமுகம்

- MT Varuna
- MT Ravana
- MT Vasabha
- MT Pandukabhaya

வருமான விபரம் – இழுவைக் கல சேவைகள் (கொழும்பு துறைமுகம்)

ஆண்டு	ரூ.மில்லியன்
2021 உண்மையான வருமானம்	1,567.53
2021 திருத்தப்பட்ட வருமானம்	1,854.07
2022 திட்டமிடப்பட்ட வருமானம்	1,584.46

பிரதான பொறியியல் அலுவலர் பிரிவு

ஆளணியினர்

அனைத்து இழுவைக் கலங்கள், வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் இயக்கம் மற்றும் பழுதுபார்ப்பு தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு 2021 ஆம் ஆண்டில் போதிய பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

கலங்களை இழுத்துச் செல்லுதல் வழிகாட்டி மற்றும் இயக்கங்களுக்குத் தேவையான கலங்களின் அன்றாட ஈடுபடுத்தப்படுகின்ற நாளாந்த பயணங்களுக்கு மேலதிகமாக இப்பிரிவின் ஆளணியினரால் அன்றாடம் நிறைவேற்றப்பட வேண்டிய பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

முகாமைத்துவத்தின் சிபாரிசு மீது பிரதான பொறியியல் அலுவலர் பிரிவுக்கு தேவையான இயந்திர சாதனங்கள்

வழங்குவதோடு, இழுவைக் கலங்களினது வழமையான பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு பிரதான பொறியியல் அலுவலகர் பிரிவு தயாரான நிலையில் உள்ளது.

துறைமுக தீயணைப்பு படைப் பிரிவு (PFB)

இப்பிரிவினால் உள்நாட்டு தீகாப்பு நியமங்கள் அனுசரிக்கப்பட்டு பேணப்படுவதோடு அவசர சந்தர்ப்பங்களின் போது ஏற்படும் விளைவுகளை குறைத்து 2021 ஆம் ஆண்டில் தீயணைப்பு பிரிவினால் மிகவும் செயற்திறனாக அவசர சேவைகளை நிறைவேற்றியுள்ளது.

மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன.

தீயணைப்பு தொடர்பான பதிலளிப்பு	32
கடற்படையின் தீயணைக்கும் படையின் ஒத்திகை பயிற்சி	*02*
எண்ணெய் தாங்கி கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை	179
வாயு தாங்கிக் கப்பல்களுக்கான	20
வெப்ப வேலைகள்	699
ஆபத்தான கப்பற் பொருட்கள் கையாளல்	11
துறைமேடை களஞ்சியங்களை கழுவுவதற்கான நீரை வழங்குதல்	43
நீரை வெளறியேற்றுதல்	02
எண்ணெய் மூலம் மாசடைதலின் கட்டுப்பாட்டுப் பணிகள்	15
எண்ணெய் கப்பல்கள் கண்காணிப்பு விஜயம்	274
ஆபத்தான கப்பற்சரக்குகள் தொடர்பான கண்காணிப்பு	476
இழுவைக் கலங்களுக்கு நீர் பவுசர்கள் வழங்குதல்	59
அவசர சந்தர்ப்பங்களில் இடத்திலிருந்து ஆட்களை வெளியேற்றும் பயிற்சிகள்	07
அவசர அழைப்புக்கள்	37

தீ காப்பு நடவடிக்கைகள்

- சகல கட்டிடங்கள் / பாரம்தூக்கிகள் / கலங்கள் / கப்பல்கள் வண்டிகள் தொடர்பான தீ காப்பு பரீட்சிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
- கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களின் தீயணைப்பு உபகரணங்களை பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.
- ஆண்டினுள் பரீட்சிக்கப்பட்ட தீயணைப்பு உபகரணங்களின் எண்ணிக்கை 2,750 ஆகும்.

வருமானம்

2021 ஆம் ஆண்டில் துறைமுக தீயணைப்புப் பிரிவினால் ஈட்டப்பட்ட வருமானம் பின்வருமாறு

விபரம்	அ.டொலர்	ரூபா
தீயனைப்புகளுக்கான அழைப்புக்கள்	19,460.00	1,595,400.00
வாயு தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை	25,900.00	
எண்ணெய் தாங்கிக் கப்பல்களுக்கான காத்திருத்தல் சேவை	186,132.00	
வெப்ப வேலைகளுக்கான காத்திருத்தல் சேவை	15,025.00	
ஆபத்தான கப்பற்சரக்குகளுக்கான காத்திருத்தல் சேவை	17,420.00	135,500.00
பரீட்சிப்பு விஜயங்களுக்கான கட்டணங்கள்	2,720.00	
எண்ணெய் மாசடைவு கட்டுப்பாட்டிற்கான அறவீடுகள்	8,970.00	691,600.00
அவசர சந்தர்ப்பங்கள்	1,660.00	10,000.00
மொத்த வருமானம்	**277,287.00**	**2,432,500.00**
அமெரிக்க டொல **277,287 x 202.70**	**56,206,074.90**	**2,432,500.00**
மொத்த வருமானம்	**இலங்கை ரூபாயில் 56,638,574.90**	

துறைமுக காப்பு பிரிவு

துறைமுகத்தினுள் மேற்கொள்ளப்படும் அனைத்து வகையிலான ஆபத்தான கப்பற்சரக்குகள் கையாளப்படுகையிலான பாதுகாப்பு அணுகு முறைகளை சகல நேரங்களிலும் அவதானித்து உரிய முறையில் பேணி உறுதிப்படுத்துவது துறைமுக காப்பு பிரிவாகும்.

வெப்ப வேலைகளுக்கான அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தளங்களில் பரீட்சிப்புக்கள் நடாத்தப்பட்டு அனுமதி வழங்கப்படாத வெப்ப வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டன. கடல் மாசடைதல்

தொடர்பிலான பரீட்சிப்புகளும் மேற் கொள்ளப்பட்டன தனிநபர் மற்றும் கடல்சார் விபத்துக்கள் தொடர்பில் ஆராயப்பட்டு பகுப்பாய்வுகள் செய்யப்பட்டன.

- கொழும்பு துறைமுகத்தில் 5,840 கப்பல்கள் வந்துள்ளதோடு அதில் ஆபத்தான கப்பல் சரக்குகள் மற்றும் தேசிய கப்பற் சரக்குகள் 532,373,344 மெட்ரிக் தொன் தரையிறக்கப்பட்டதோடு மீள் ஏற்றுமதி கப்பற் சரக்குகளாக 1,506,755,403 மெட்ரிக் தொன் தரையிற்க்கப்பட்டது.

- ஆபத்தான மீள் ஏற்றுமதி கப்பற்சரக்குகளைக் கொண்ட 39,500 கொள்கலன்களின் மாற்றியேற்றல்கள் மேற்கொள்ளப்பட்டன.

- பல்வேறு வகையிலான 295 எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்தன.

- மிகவும் ஆபத்தான (GPIE) பொருட்கள் 21,747 மெ.தொன்னும் வெடிக்கக் கூடிய தன்மையுடைய பொருட்கள் (GP IAE/ ITE) 25,314,131 மெ. தோன் கையாளப்பட்டது.

- துறைமுக தீயணைப்பு படையின் உதவியுடன் இரசாயன திரவ கசிவுகளை தடுத்தல் மற்றும் தீயனைப்பு செயற்பாடுகள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- ஆபத்தான கப்பற்சரக்குக் களஞ்சியங்கள் உட்பட ஏனைய களஞ்சியங்களின் பரிசோதனை உதவி துறைமுக காப்புப் பரிதோதகரின் ஒத்துழைப்புடன் காலத்துக்கேற்ப நடைபெறும்.

- வெப்ப வேலைகளுக்காக அனுமதி பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான பரிசோதனை மெற்கொள்வதற்கும், கடல் மாசடைதலை பரிசீலிப்பறதகும் கடல் மாசடைதலை தடுப்பதற்குமான வழிகாடட்டல் மற்றும் அது தொடர்பான பணிகளுக்கான அவதானிப்புகள் மேற்கொள்ளுதல்.

- தொழிற்சார் மற்றும் கடல்சார் சடுதி விபத்துக்கள் தொடர்பான விசாரனை மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

- துறைமுகத்திற்குள் ஆபத்தான கப்பற் சரக்குகளை கையாளல், களஞ்சியப்படுத்தல் மற்றும் கொண்டு செல்லல் மற்றும் அதனுடன் தொடர்புடைய அகற்றல் செயற்பாடுகள் தொடர்பாக மஹாபொல துறைமுக மற்றும் சமுத்திரவியல் கலாசாலையில் நடைப்பெற்ற விரிவுரைகளில் விளக்கமளிக்கப்பட்டது.

- துறைமுக உதவி காப்பு பரீட்சகர்களின் உதவியோடு ஐய கொள்கலன் முனையத்தில் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையத்தில் இணைக்கப்பட்டுள்ள ஊழியர்களினதும் மற்றும் மூவரிங் குழுக்களுக்கு (Mooring Gangs) தனியார் பாதுகாப்பு போன்று விசேடமாக தனியார் பாதுகாப்பு உபகரணங்களை பாவித்தல் மேற்பார்வை செய்யப்பட்டது.

- துறைமுக உதவி காப்பு பரீட்சகர்களின் உதவியோடு (Assistant Harbor Safety Instructors) திரவ பெற்றோலிய வாயு மற்றும் பெற்றோலியம் தரையிறக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட்டது.

- கடல் மாசடைதல் அதிகாரசபை (MEPA) யின் அனுமதியுடன் ஒப்பந்தக்காரரினால் செய்யப்படுகின் குப்பைகள் மற்றும் மாசடைந்த எண்ணெய் (Sludge oil) அகற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்பார்வை செய்யப்பட்டுது.

- துறைமுக உதவி காப்பு பரீட்சகர்களின் உதவியுடன் ஐய கொள்கலன் முனையம் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனைய துறைமேடைகளில் ஆபத்தான கப்பற் சரக்குகள் அடுக்கி வைக்கும் (Stacking) தொடர்ச்சியாக பரீசிலனைக்கு உட்படுத்தப்பட்டது. ஆபத்தான கப்பற் சரக்குகள் பற்றி அறிவிக்காமை தொடர்பில் கப்பல் முகவர்களுக்கு எரிதாக நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கரையோர வெளிச்ச வீட்டு பிரிவு

சர்வதேச கப்பல் மார்க்கங்கள் ஊடாக நீடிக்கப்பட்ட மேற்கு மற்றும் தெற்கு கரையோரங்களில் அமைந்துள்ள வெளிச்சவீடுகள் முறையாக பராமரிக்கப்பட்டன.

பிரவேச ஓடைப்பாதைகளிலுள்ள மிதப்பிகள்

மிதப்பிகள் தொடர்ந்து பரீட்சித்து பராமரிக்கப்படுகிறது. CASA, SLAVO , LASO மற்றும் இங்கிலாந்தில் நீரியல் ஆய்வு பகுதிக்கு வழங்கப்பட்ட சுற்றுநிருபனத்தின்படி செயற்படாத மிதப்பிகள் தொடர்பாக எச்சரிக்கை செய்யப்பட்டது.

வருமானம்- வெளிச்ச வீட்டு கட்டணம் - மூன்று துறைமுகங்களினதும்

	2019 உண்மையான வருமானம் ரூ.மில்லியன்	2020 *உண்மையான வருமானம் ரூ.மில்லியன;*	2021 உண்மையான வருமானம் ரூ.மில்லியன்
வருமானம் - வெளிச்ச வீட்டு கட்டணம்	1,711.97	1,650.83	1,519.77

துறைமுக கலப் பிரிவு

பிரதானமாக கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தரும் கப்பல்களை பாதுகாப்பாக கட்டி வைத்தல்/ விடுவித்தல் (mooring/unmooring) போன்றவற்றுக்கு உதவுவதற்காக வழிகாட்டிக் கலங்களுக்கு (Pilot Launches) கப்பல்களைக் கட்டி வைக்கும் பணியில் (mooring gangs) குழுக்களை(crew) ஈடுபடுத்துதல், தீவு மற்றும் தென் மேற்கு அலைதாங்கிகளுக்கு (Island breakwater) பல்வேறு வேலைக் குழுக்களை போக்குவரத்து செய்தல், துறைமுக நீர்ப் பகுதியை சுத்தமாக வைத்திருத்தல், ஜிராப் மிதவை பாரமுயர்த்திகளினால் அதிக பாரம்தூக்குவதும் துறைமுக கலப் பிரிவின் முக்கிய பணியாகும். வழிகாட்டி மற்றும் நங்கூரக் கலங்களின் அன்றாட பராமரிப்புகளும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

நீரியல் ஆய்வு பிரிவு

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்படும் சகல துறைமுகங்களினதும் நீரியல் ஆய்வுகள் போன்று துறைமுகத்தின் சம்பந்தப்பட்ட பகுதிகளின் வேண்டுகோளுக்கமைய அனைத்து காணிகளின் அளவீட்டுப் பணிகளும் நில அளவையாளர்களினால் பின்வருமாறு செய்து முடிக்கப்பட்டன.

கொழும்பு துறைமுகம்

- உட்புகு கால்வாய் மார்க்கத்தின் ஆழத்தை அளவீடு செய்தல்.
- உள்ளக துறைமுகத் தடாகத்தினதும் நங்கூரத்தளங்களினதும் ஆழத்தை அளவீடு செய்தல்.
- உட்புகு கால்வாயின் மிதப்பி அமைவிடங்களை அளவீடு செய்தல்.
- கொழும்பு துறைமுக வரை படத்தை மீள் திருத்தம் செய்தல்.
- ஜய கொள்கலன் முனையத்தின் திட்ட ஆலோசப் பணிகளை மேற்கொள்ளல்.
- கிழக்கு கொள்கலன் முனையத்தை விஸ்தரிக்கும் திட்டத்தின் ஆலோசனை பணிகளை மேற்கொள்ளல்.
- குத்தகை வாடகை ஒப்பந்தத்துக்கான மேற்கு கொள்கலன் முனைய திட்டத்தின் கட்டுப்பாட்டு வலயம் சட்டப்பகுதிக்கான இலங்கை துறைமுக அதிகார சபை காணிகளின் உரிமை அறிக்கை பெற்றுக்கொள்ளல்.
- கொழும்பு ஓத அலைகள் ஏற்ற இறக்க தரவு நிலையத்தின் அவதானிப்பு நடவடிக்கைக்காக மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.

காலி துறைமுகம்

- கடல் அலை ஏற்ற இறக்கம் மற்றும் காலநிலை தரவு நிலையத்தை மேற்பார்வை செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.
- குத்தகை வாடகை உடன்படிக்கைகளுக்கான ஆய்வுகள் மற்றும் திட்டமிடல் பணிகள் மேற்கொள்ளுதல்.

திருகோணமலை துறைமுகம்

- திருகோணமலை துறைமுகத்தின் கடல் (அலை ஏற்ற இறக்கம்) மற்றும் காலநிலை தரவு நிலையத்தை அவதானித்தல் மற்றும் பராமரித்தல்.
- புதிதாக நபர்கள் அத்துமீறி இருக்கும் பிரதேசங்களை அளவையிடல்.

கடலகப் பிரிவு

கப்பல்களுக்கு சேவைகள் வழங்குதல் இழுவைக் கலங்களை இயக்குபவர்கள், கடலக அளவையாளர்கள், சிறிய மற்றும் பாரிய பழுதுபார்ப்பு வேலைத்தளங்கள், எண்ணெய் மற்றும் எண்ணெய் கலந்த நீர், மற்றும் குப்பைகள் அகற்றுவதற்கான சேவைகள் தொடர்பாக வருடாந்தம் பதிவு செய்து கொள்ளல் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் இப்பிரிவினால் இணைப்பாக்கம் செய்யப்பட்டன.

அனுமதிப்பத்திர வகை	வழங்கப்பட்ட தொகை	வருமானம் (ரூபா)
கப்பல்களை பழுதுபார்க்கும் அனுமதிப்பத்திரம	146	14,185,817.91
டொக்யார்ட் அனுமதிப்பத்திரம	58	2,865,751.26
அளவை அனுமதிப்பத்திரம் (Survey Licence)	42	3,589,298.32
கப்பல்களுக்கான சேவைகள் வழங்குவோரின் அனுமதிப்பத்திரம்	112	11,339,608.80
படகு அனுமதிப்பத்திரம்	48	5,991,563.41
எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரங்கள்	09	478,568.70
மொத்தம்		**38,450,608.40**

இயந்திர வேலை பொறியியல் பகுதி

அனைத்து துறைமுகங்களின் கட்டமைப்புகள் மற்றும் துறைமுகங்களின் இயக்கம் மேற்கொள்ளுகின்ற/ இயக்கங்கள் மேற்கொள்ளப்படாத இயந்திர மற்றும் உபகரணங்களின் கட்டமைப்பு செயற்பாடுகளை பேணுதல் இயந்திர உபகரண வேலை பொறியியல் பகுதியின் பிரதான பணிகளாகும். நங்கூர இழுவைக்கலம், வழிகாட்டிக்காலம், சேறுவாரிக்கலங்கள் மற்றும் ஜய கொள்கலன் முனையத்தின் மற்றும் ஐக்கிய கொள்கலன் முனையத்தின் அனைத்து கொள்கலன் கையாளல் உபகரணங்களில் மற்றும் சிறு கொள்கலன் போக்குவரத்து ட்ரேலர் வண்டிகளின் அனைத்து கட்டமைப்புக்களையும் திருத்துவதற்கான சேவைகளை வழங்குதல், உருக்கினால் அமைக்கப்பட்ட கட்டிடங்கள், களஞ்சியங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களை புதிதாக நிர்மாணித்தலும், பழைய உருக்கினாலான கட்டிடங்கள் சார்ந்த கட்டமைப்புக்களையும் கழற்றி அகற்றுவதும் நடைபெறுவதோடு, நங்கூர இயக்க உபகரணங்கள் கடலகக் கலங்கள் மற்றும் அனைத்து துறைமுக மற்றும் துறைமுகம் சார்ந்த நடவடிக்கைகளிலும் இயக்கத் தேவைகள் தொடர்பான ''கிரப்' கலங்களில் சங்கிலிகள் மற்றும் கொழுக்கிகளை பரீட்சித்தல் மற்றும் பராமரித்தலும் இப்பகுதியினால் நிறைவேற்றப்படுகின்றன.

இவ்வாண்டினுள் இப்பகுதியினால் நிறைவு செய்யப்பட்ட பிரதான மற்றும் சிறு பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கொழும்பு எண்ணெய் வங்கிக்கு தேவையான 3200 மெட்றிக் தொன் கொள்ளளவு கொண்ட தாங்கியொன்றினை அமைத்தல்.
- கொழும்பு எண்ணெய் வங்கி தொடர்பாக நுரை தீயணைக்கும் தொகுதியொன்றினை (Foam Fire System) பொருத்துவதற்கு ஆரம்பித்தல்.
- இல J 10 கென்றி பாரம் தூக்கியிலுள்ள ட்ரோலி பீலிகளை அகற்றி (Trolley Rails) புதிதாக பொருத்துதல்.
- H1 4 பாரம் தூக்கியின் கட்டமைப்பை திருத்துதல்.
- கிழக்கு கொள்கலன் முனையத்தின் உள்நுழையும் வாயிலுக்கு நிறை அளவீட்டுப் பாலமொன்றை ஸ்தாபித்தல்.
- பயணிகள் முனையத்தின் உருக்குப் பாலத்தினை புணரமைத்தல் (முன்னேற்றம் 75%)
- மருத்துவமனை இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு உருக்கிலான 1000 கட்டில்களை அமைத்தல்.

- கொவிட் – 19 சிகிச்சை உபகரணமான 63 ஆவி பிடிக்கும் உபகரணங்களை உற்பத்தி செய்தல்

- ஹங்ஸகாவா ட்ரேஜர் தொடர்பாக சேறு அகற்றும் குழாய் மற்றும் Y வளைவொன்றை அமைத்தல்.

- சுங்கத்தின் வேண்டுதலுக்கு இணங்க பண்டார நாயக்க பாலத்தின் களஞ்சிய இல. 04 கட்டிடத்துக்காக புதிதாக இரு கதவுகள் அமைத்தல் அதன் இரு கதவுகளை திருத்துதல் மற்றும் பார்டிசன் வேலைகளை நிறைவு செய்தல்.

- கென்றி பாரம் தூக்கி (J – 03, J-02, J – 04, J – 01 J – 07, J – 16 ,J -15) அகியவற்றில் ட்ரோலி பீலிகளை புனரமைத்தல் மற்றும் J - 14 கென்றி பாரம் தூக்கி இல 17 மற்றும் 61 இல் உருக்கு கட்மைப்பை திருத்துதல்.

- கிழக்கு கொள்கலன் முனையத்தில் உள்ள (ECT Fenders) தொடர்பாக உருக்கினாலான 06 (brackets) களை திருத்தியமைத்தல்.

- மேற்குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு மேலதிகமாக இயந்திர வேலை பொறியியல் பகுதியின் 07 வேலைத்தளங்கள் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளுக்கு பாரிய அளவிலான 300 க்கும் மேற்பட்ட உருக்கு திருத்த வேலைகளும், பாரிய அளவிலான 450 க்கும் மேற்பட்ட இயந்திர வேலைகளும், பாரிய அளவிலான 650 க்கும் மேற்பட்ட பொருத்தும் வேலைகளும், 300 க்கும் மேற்பட்ட பல்வேறு இயந்திர வேலைகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இயந்திர உபகரண பொறியியல் பகுதி

இயந்திர உபகரண பொறியியல் பகுதி 09 பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன.

ஜய கொள்கலன் முனையம் மற்றும் கிழக்க கொள்கலன் முனையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளுகின்ற 19 பாரந்தூக்கிகள், இறப்பர் டயர்கள் பொருத்திய 62 கென்றி பாரம்தூக்கிகள் மற்றும் புகையிரதப் பீலி மிது பொருத்தப்பட்டுள்ள 04 கென்றி பாரந்தூக்கிகளினதும் பாமரப்புக்களைப் பேணும் பொறுப்பு இப்பகுதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியின் கீழ் இருக்கின்ற கப்பற் சரக்குகளைக் கையாளும் உபகரணங்களை பராமரிக்கும் இரு (02) பிரிவுகளினாலும் பிறைம்மூவர் வண்டிகள்இ முனைய ரெக்டர், ட்ரேல் வண்டிகள் ரீச் ஸ்ரெகர்ஸ் இயந்திரங்கள், டொப் லிப்டர்ஸ் இயந்திரங்கள் போர்க் லிப்ட் ட்ரக் வண்டிகளும் பராமரிக்கப்படுகின்றன.

மோட்டார் கரேஜ் மற்றும் டீசல் இயந்திரங்களை திருத்தும் பிரிவு மூலம் வாகனங்கள் பராமரித்தல் மற்றும் பூரண திருத்த வேலைகள் நிறைவேற்றப்படுகின்றன.

நடமாடும் பாரம்தூக்கிகள், மண் அகழும் உபகரணங்கள் மற்றும் கல் உருளை ஆகியவற்றை பராமரிப்பதும் இந்தப் பகுதியினாலேயாகும்.

இப்பகுதியினால் அமுலாகும் ஏனைய பணிகளுள் துறைமுக அதிகார சபைக்குத் தேவையான வாகனங்கள் குத்தகை வாடகை மூலம் மற்றும் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள், நுகர்வு எண்ணெய் வகைகள் குத்தகை முறையின் கீழ் பேணிச் செல்லல் மற்றும் பராமிப்பு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் பிரதானமாயமைகின்றது.

சிவில் பொறியியல் பகுதி

துறைமுகம் தொடர்பான கட்டமைப்பு, வசதிகள் வழங்கும் கட்டிடங்கள், இலங்கை துறைமுக அதிகார சபையின் உத்தியோகபூர்வ இல்லங்கள், துறைமுக தடாகத்தின் ஆழம் மற்றும் பிரவேசப் பாதையின் பராமரிப்பு நடவடிக்கைகளை பேணிச்செல்லல், உள்ளக பாதைகள், கொள்கலன் முனையங்கள், மேடைச்சுவர்கள், நீர் வழங்குதல் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் பங்காளர்களுக்கான பல்வேறு வேறு சேவைகள் வழங்குதல், அதேபோன்று

நாட்டில் பல பிரதேசங்களில் அமைந்துள்ள வெளிச்ச வீடுகளை பராமரித்தல் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் நிருவகிக்கப்படும் வேறும் ஏனைய துறைமுகங்களுக்குரிய சமுத்திரக் கட்டமைப்பை பேணிச் செல்வதற்கான சேவைகளை வழங்குதல் சிவில் பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்புகளாகும்.

அதற்கு மேலதிகமாக விலைகோரல் செயற்பாடு, பொருட்கள் கொள்வனவு செய்தல், நிர்மாணித்தல் பணிகளை மேற்பார்வை செய்தல், தரக்கட்டுப்பாடு உள்ளடங்கலாக திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுல்படுத்தல் மற்றும் நிர்மாண திட்ட ஒப்பந்தங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கொழும்பு துறைமுகத்தின் நேரடி தொழிலாளர் முயற்சிகளை பயன்படுத்தி சிறு புதிய நிர்மாணப்பணிகளை நிறைவேற்றுதல் ஆகியன சிவில் பொறியியல் பகுதியினால் நிறைவேற்றப்படுகின்றன. பிரதான பராமரிப்பு பணிகள் முன்னர் அடையாளங்காணப்பட்ட தேவைக்கேற்ப திட்டமிடப்பட்டுள்ளதோடு, சிறு பராமரிப்பு பணிகள் உள்ளக ஊழியர்களினால் மிகவும் துரித தேவைப்பாடுகளின் அடிப்படையில் நடைபெறுகிறது. சிவில் பொறியியல் பகுதியினால் வெற்றிகரமாக கழிவு முகாமைத்துவ தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டினுள் சிவில் பொறியியல் பகுதியினால் துறைமுகத்தில் நடைபெறுகின்ற பிரதான புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் கீழ் காட்டப்பட்டுள்ளவாறு சாரம்சப்படுத்தப்பட்டுள்ளன

- காலிமுகத்திடலை புனரமைத்தல்
- ஐய கொள்கலன் முனைய மேடையை புனரமைத்தல
- சைத்தியவில் வர்ணப்பூச்சு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளல்
- புதிய நீரிறைக்கும் அறையுடன் கூடிய CFS-1 களஞ்சியம் தொடர்பாக புதிய தீயணைக்கும் தொகுதியொன்றினை செயல்படுத்துதல்.
- கொழும்பு துறைமுகத்தில் எல்லைமதிலை திருத்தியமைத்தல்
- நீர்க் கோபுரங்களை திருத்துதல் மற்றும் வர்ணம் தீட்டுதல்
- பேலியகொடை தனிநபர் விடுதியை திருத்தியமைத்தல்
- ஐக்கிய கொள்கலன் முனையத்திலிருந்து கிழக்கு கொள்லன் முனையம் வரை இறப்பர்
- பண்டாரநாயக்க துறைமேடையில் நலன்புரி கட்டிடத்தை திருத்துதல்
- ஐக்கிய கொள்கலன் முனையத்தில் எண்ணெய் குழாய்களை அமைத்தல்
- இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உத்தேசித்த புதிய களஞ்சிய தொகுதியை நிர்மாணித்தல்
- காலி உல்லாச விடுதியை புணரமைத்தல்
- பண்டாரநாயக்க துறை மேடையில் இயக்கங்களை மேற்கொள்வதற்காக மேடையொன்று நிர்மாணித்தல்.

மின்சாரம் மற்றும் இலத்திரன் பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபை நிருவாகத்தின் கீழ் இருக்கும் அனைத்து துறைமுகங்களினதும் மின்சாரம் மற்றும் தொடர்பாடல் பொறியியல் துறையின் அனைத்து பொறியியல் செய்திட்டம் மற்றும் வசதிகளை திட்டமிடுதல், முகாமைத்துவம் செய்தல், அமுல்படுத்துதல் மற்றும் கட்டிடங்களை பராமரித்தல் மின்சாரம் மற்றும் இலத்திரன் பொறியியல் பகுதியின் பொறுப்பாகும்.

துறைமுக பணிகள் தொடர்பான அனைத்து வேலைகளிலும் 95% விடவும் அதிகரித்த பிரமானத்தில் பெற்றுக்கொடுத்தல் தொடர்பாக மின்சாரம் மற்றும் தொடர்பாடல் தொடர்பான அனைத்து சேவைகளையும் பேணிச்செல்வதற்கு பிரதான பொறியியலாளர் மற்றும் பிரதிப் பிரதான பொறியியலாளர்கள் இருவரின் கீழ் உயர்ந்த தகுதிகளைக் கொண்ட தொழிற்தரத்தில் மின்சாரம் / தொடர்பாடல் பொறியியலாளர்களின் குழுவொன்றினால் பூரா 24 மணி நேரத்திலும் செயல்படுத்தப்படும்.

மின்சாரம் மற்றும் இலத்திரன் பொறியியல் பகுதியின் விடயதானத்தின் கீழ் கீழ்வரும் பணிகள் 2021 ஆண்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன.

- கொழும்பு துறைமுகத்தின் உயர் மின் அழுத்த வலயத்தை மேம்படுத்துதல்.
- கூடிய மின் அழுத்தம் கொண்ட மற்றும் குறைந்த மின்னழுத்தத்துடன் கூடிய

பெனல்கள் உட்பட கப்பலில் இருந்து கரை வரை இயக்கங்களை மேற்கொள்கின்ற பாரம் தூக்கிகளுக்காக மின்சார இணைப்புக்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களுக்கு தேவையான மின்சாரத்தை பகிர்ந்தளித்தல் உட்பட கிழக்கு கொள்கலன் முனையத்தில் மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் வலையத்தை நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் அமுல்படுத்துதல். மின் இணைப்பு வலயத்தை நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் அமுல்படுத்துதல்.

- கிழக்கு கொள்கலன் முனையத்தில் கம்பி இன்றிய மற்றும் கம்பி கொண்ட தரவுகள் தொடர்பாடல் வலயமொன்றை செயல்படுத்துதல்.

- திருகோணமலை துறைமுகத்தில் மற்றும் காலி துறைமுகத்தில் உயர் மின் அழுத்தத்துடன் கூடிய மின்சார வலயத்தை மேம்படுத்துதல்.

- குறைந்த மின்னழுத்தமுடைய மின்சாரம் வழங்குதல். தொலைபேசி வலையம், கம்பி இன்றிய / கம்பியுடன் கூடிய தரவுகள் தொடர்பாடல் வலையத்தை அதிகரித்தல், இழுவைக்கலம், வழிக்காட்டி கலம், கடலக உபகரணங்கள் மற்றும் கடலக தொடர்பாடலைப் பேணிச் செல்வதற்கு தேவையான மின்சார விநியோகத்தை பராமரித்தல்.


கடலக பொறியியல் பகுதி

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து மிதவை கலங்களை பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல், கடலக இயக்க மற்றும் சிவில் பொறியியல் ஆகிய பகுதிகளுக்கும் இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் இருக்கும் ஏனைய துறைமுகங்களுக்கு அவற்றின் இயக்கப் பணிகளை செயற்றிறனோடு நிறைவேற்றுவதற்குத் தேவையான மிதவைக் கலங்கள் போதிய எண்ணிக்கை இருப்பதை உறுதிசெய்வது கடலக பொறியியல் பகுதியின் பிரதான பொறுப்பாகும்.

கடலகப் பிரிவு I

மீளமைக்கும் பொறியியல் பிரிவு

மீளமைக்கும் பொறியியல் பிரிவினால் பராமரிக்கின்ற கலங்கள்



2021 ஆண்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட இழுவைக் கலங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து இழுவைக் கலங்கள், "மேக" தீயணைப்புக் கலத்தினதும் சகல சேறுவாரி கலங்களினதும் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மீளமைக்கும் பொறியியல் பிரிவின் பிரதான பொறுப்பாகும். இந்த மிதவைக் கலங்களுக்கான லொயிட் பதிவேடு வகையீட்டுச் சோதனை (Lloyds Register Classitication Survey) தேவைப்பாடுகளை மேற்கொண்டு அவற்றின் பழுதுபார்ப்புகள் செய்யப்படும் வேளையிலும் கூட கொழும்பு துறைமுகத்தின் 04 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள், திருகோணமலை துறைமுகத்தின் 02 நங்கூரமிடலின் கலங்கள், காலி, காங்கேசன்துறை துறைமுகங்களில் தலா 01 நங்கூரமிடல் பணிகளிலான கலங்கள் சம்பந்தப்பட்ட இயக்கங்களுக்கான தேவைப்பாடுகளை இப்பிரிவினால் பூர்த்தி செய்ய முடிந்துள்ளது.

அதேபோன்று இரண்டு தோண்டும் கலங்களான நீர் உறிஞ்சும் "ஹன்சகாவா" கலமும் சேறுவாரும் "தியகொவுலா" கலமும் இப்பிரிவினால் 2021 ஆண்டினுள் உயர் இயக்க நிலையில் பேணப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் வகைப்பாடு அதிர்வெண்ணெய் உறுதிசெய்வதற்காக கலத்தின் மேற்பரப்பினை சுத்திகரித்தல்இ வர்ணம் பூசுதல்இ நீருக்கு கீழுள்ள பகுதிகளை பரீட்சித்தல் பிரதான மற்றும் இயந்திர சேவைகளைப் பேணுதல் மற்றும் ஏனைய


காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஹன்சகாவா தோண்டு கலத்தை 2021 ஆண்டு இறுதியில் சில மாதங்கள் சேவையிலிருந்து அப்புறப்படுத்தி வைப்பதற்கு நேர்ந்தது.

மேலும், குறித்த கலத்தை செயற்பாட்டு நிலையில் பேணிச்செல்வதற்கு உலர் துறைமுக ஆய்வுக்கு (Dry –Docking Surveys) பதிலாக நீர் உள்ளக ஆய்வு (In Water Surveys) மாற்றீடு செய்வதற்கு மற்றும் வருடாந்த மற்றும் ஏனைய காலத்துக்கேற்ற ஆய்வு செய்யப்பட்டது.

இவ்வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகளுக்கிடையே கோடாய்பர கலத்தில் உந்து விசை அலகை கழற்றி அகற்றுதல்இ தேய்வுற்ற பகுதிகளை அடையாளங் காணல் மற்றும் உள்நாட்டு ரீதியில் இயந்திர ரீதியில் தயாரிக்கப்பட்ட உரிய அளவை விட விசாலமான பகுதிகளை தேவையான அளவில் இயந்திர ரீதியில் தயாரித்தல். சாதாரண முறையில் ஒட்டுமொத்த பணிகள் மேற்கொள்ளப்படுவது பின்லாந்தில் Rolls Royce OY Ab கம்பனியினாலாகும். எனினும்இ நிலவிய கொவிட் -19 தொற்று நிலமை காரணமாக குறித்த பணிகளை நிறைவேற்றுவது மற்றும் உதிரிப்பாகங்கள் இயந்திர ரீதியில் தயாரிப்பதற்காக தொழிநுட்ப அறிவை பெற்றுக்கொடுப்பது இந்நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எனவேஇ இலங்கை துறைமுக அதிகார சபையின் பொறியியலாளர்களினால் அனைத்து உதிரிப்பாகங்களின் அளவீடுகள் தயாரித்து பாரிய அளவில் உதிரிப்பாகங்கள் உரிய அளவில் தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் கலங்களின் உற்பத்தி நிறுவனமான Rolls Royce OY AB கம்பனியின் சேவை பொறியியளாளர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மீளமைக்கும் பொறியியல் பிரிவின் பொறியியலாளர்களினால் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

பொறியியல் துறைமுக கலப்பிரிவு

2021 ஆண்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட வழிக்காட்டி இழுவைக்கலங்கள் (Pilot Launches), மூவரிங் இழுவைக்கலங்கள் மற்றும் வேறு கலங்களை திருத்துதல் மற்றும் பராமரித்தல் பொறியியல் துறைமுக கலப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். கடலகப் பகுதியின் இயக்கத் தேவைகளை நிறைவேற்றுவது போன்று இலங்கை துறைமுக அதிகாரசபையின் கீழுள்ள ஏனைய துறைமுகங்களின் இயக்க தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இப்பிரிவு ஆற்றல் பெற்றுள்ளது.



2021 ஆண்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கலங்கள்

பொறியியல் துறைமுக கலப்பிரிவின் பொறியியலாளர்களினால் "வழிக்காட்டி 15", "வழிக்காட்டி 14" ஆகிய வழிக்காட்டி கலங்கள் 02 இவ்வாண்டில் திருத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டினுள் திருகோணமலை மற்றும் காலி துறைமுகங்களில் கலங்களின் திருத்த வேலைகள் உள்ளடங்கலாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் அனைத்து வழிக்காட்டிக் கலங்கள், மூவரிங் இழுவைகலங்கள் மற்றும் ஏனைய கலங்களின் நாளாந்த பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன.

கடலகப் பிரிவு II

கப்பற்சரக்கு கலப் பிரிவு

இலங்கை துறைமுக அதிகார சபையில் பயன்படுத்தப்படும் அனைத்து கலங்களினதும் உருக்கு திருத்த வேலைகள், துருப்படிவுகளை உடைத்து மை பூசுதல் மற்றும் இயக்கப் பகுதியில் பயன்படுத்தப்படுகின்ற இழுவைக் கலங்கள், மோட்டார் மிதவைக் கலங்கள், நீர் வத்தைகள் மற்றும் அடுக்கு வத்தைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரிப்புகள் கப்பற்சரக்கு கலப்பிரிவினால் (Cargo Craft Section) இனால் மேற்கொள்ளப்படுகிறது.

2021 வருடத்தினுள் பல்வேறு வகையிலான கயிறு சிலிங்கை உற்பத்தி செய்து இலங்கை துறைமுக அதிகார சபையின் ஏனைய பிரிவுகளுக்கும் வெளிதரப்பினர்களுக்கும் விநியோகம் செய்வதற்கு இப்பிரிவிற்கு முடிந்துள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபைக்கு அதேபோன்று, வேறு வெளி நிறுவனங்களினால் வேண்டப்படும் பல்வேறு அளவுகளைக்கொண்ட திரைச் சீலைகள், கென்வஸ், மூடு சீலைகள் மற்றும் கூடார சீலைகளை உற்பத்தி செய்யும் தகைமையும் இப்பிரிவிற்கு முடிந்துள்ளது.

வருடத்தினுள் வழிக்காட்டிக் கலங்கள் 10,12,14 மற்றும் 15 மூவரிங் கலங்கள் 1 மற்றும் 3 மூவரிங் இழுவைக்கலங்களான "கோடைம்பர", "நந்திமித்ர" மற்றும் "தீர" ஆகிய இழுவைக் கலங்களில் பிரதான திருத்த வேலைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன. மேலும், நீர் வத்தைகள் 07,16,17 மற்றும் "திஸ்ஸ" இழுத்துச் செல்லும் இழுவைக்கலம் மற்றும் "தியகொவுலா" சேறுவாரிக் கலம் ஆகிய கலங்களின் பிரதான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை துறைமுக அதிகாரசபையின் Digger 4 கலம் சாதாரண மற்றும் பிரதான திருத்த வேலைகளுக்காக சறுக்கு வழிக்கு எடுக்கப்பட்டது. மேலும் கிழக்கு கொள்கலன் முனையத்தில் கென்றி பாரம்தூக்கி பீலிகள் பொருத்தும் பணிகள் மற்றும் அதனுடன் தொடர்பான மேற்பரப்பை தயாரித்தல் மற்றும் புகையிரத பீலிகளுக்கு வர்ணம் பூசும் பணிகளை குறிக்கப்பட்ட கால எல்லையினுள் நிறைவு செய்வதற்கு இப்பிரிவு உதவியது.

புதிய பேரே முனையம்

இயக்கப்பகுதியினால் பயன்படுத்தப்படும் உருக்கு கப்பற் சரக்கு வத்தைகள் பராமரித்தல் மற்றும் பழுதுபார்ப்பு இப்பிரிவின் பிரதான பொறுப்பாகும். இந்த ஆண்டினுள் நீர் வத்தைகள் 15, டெக் வத்தைகள் 2007, "நந்திமித்ர" மற்றும் "கோடைய்ம்பர" இழுவைக்கலங்கள் இரண்டினது பழுதுபார்ப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

கப்பல் நிர்மாணப் பிரிவு

இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து மிதவைக் கலங்களினதும் மரத்திலான திருத்த வேலைகள் மற்றும் வைபர் கிளாஸிலாலான பழுதுபார்ப்பு பணிகளை நிறைவேற்றுவது கப்பல் நிர்மாணப் பிரிவின் முக்கிய பொறுப்புக்களாகும். கப்பலோட்டப் பகுதியில் பயன்படுத்தப்படும் நங்கூரமிடும் இழுவை கலங்களினதும் மற்றும் வழிக்காட்டி கலங்களினதும் மரத்திலான தளபாடங்களின் பழுதுபார்ப்புக்கள் அடைப்புப் பலகைகளின் திருத்தப் பணிகள், கப்பல் நிர்மாண பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அதேப்போன்று 600 தொன் பாரம் தாங்கக்கூடிய கலங்களினது தண்டுகளினது பழுதுபர்ப்புக்கள்சறுக்கு வழிக்கு அடுக்குதல் மீண்டும் கடலுக்கு விடுவிக்கும் பணிகளும் அதன் பராமரிப்புப் பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. இவ்வருடத்தினுள் நங்கூரமிடப்படும் இழுவைக் கலங்களினதும் மிதவைக்கலங்களினதும் ஏனைய மரத்திலான மற்றும் அடைப்புப் பலகைகளின் திருத்தப் பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

மனிதவள அபிவிருத்தி பகுதி

மனித மூலதனம் இலங்கை துறைமுக அதிகார சபையின் பிரதான அங்கமாகும். 2021.12.31 ஆம் திகதிக்கு இலங்கை துறைமுக அதிகார சபையின் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 8,900 ஆகும். இவற்றுள் கொழும்பு துறைமுகத்திலுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 8,285 ஆவதுடன், காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் ஊழியர்களின் எண்ணிக்கை முறையே 331 மற்றும் 381 ஆகும். எம்முடைய திறன் விருத்தி மூலோபாய உள்ளக மற்றும் வெளியக நாநாவித மூலோபாயங்களினால் தொகுக்கப்பட்டது. ஊழியர்களின் நம்பிக்கையை மேம்படுத்தும் பொருட்டு வெளியிலிருந்து ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கு முன்னர் உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. ஆட்சேர்ப்பு திறன் அடிப்படையிலன்றி ஆண் பெண் பேதங்கள் மற்றும் அநீதியான செயற்பாடுகள் இன்றி இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

ஊழியர்களின் கவர்ச்சிகரமான சம்பளம்/ கொடுப்பணவிற்கு மேலதிகமாக, மருத்துவ காப்புறுதி, மருத்துவ சீட்டைகள் மீள் செலுத்துதல், தொழிற்சார் அபிவிருத்திக்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பு வழங்குதல் (தொழிற்சார் கொடுப்பணவுகள் செலுத்துதல்), தொழிற்சார் உறுப்புரிமை கட்டணங்களை மீள் செலுத்துதல் போன்றன பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

2021.12.31 ஆம் திகதிக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்களின் எண்ணிக்கை எமது தொழிலாளர்களை நிறுவன ரீதியான மூலோபாய திசைக்கு

ஈடுபடுத்துவது தொடர்பாக ஊழியர்களின் அனைத்து மனக்குறைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் முகமாக மனித வளங்கல் குழு, மேன்முறையீட்டு குழு போன்ற குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், கொவிட்-19 தொற்று நிலைக்கு மத்தியிலும் பல்வேறு தருனங்களில் இக்குழுக்கள் கூடி நிறுவன கொள்கைகள் மற்றும் வழிக்காட்டுதல்களுக்கு அமைவாக ஒவ்வொரு மேன்முறையீடுகளையும் விசாரணை செய்து தகுந்த தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

ஊழியர்களின் சுகாதார மற்றும் நல்வாழ்விற்காகவும் தொழிற்சார் வாழ்க்கையின் நடுநிலைதன்மையை பேணும் பொருட்டு விளையாட்டு மற்றும் நலன்புரி சமூக செயற்பாடுகள், அறிவுறுத்தல் நிகழ்வுகளில் பங்குக்கொள்வதற்கு போதிய சந்தர்பங்கள் ஊழியர்களிற்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்றன.

மீளாய்வு வருடத்தில், நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத தரத்திலுள்ள ஊழியர்களின் கட்டமைப்பு கீழ்வருமாறு

ஊழியர்களின் வகை	நிரந்தரம்	ஒப்பந்த அடிப்படையில்	மொத்தம்
நிறைவேற்று	526	01	527
நிறைவேற்று அல்லாத	4634		4634
தொழிநுட்ப / தொழிநுட்ப அல்லாத	3836		3836
மொத்தம்	**8996**	**01**	**8997**

2021 ஆம் ஆண்டில் புதிதாக 182 பேர் சேவையில் இணைத்துக கொள்ளப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 14 பேர் நிறைவேற்று தரத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டனர். இதற்கு மேலதிகமாக உள்ளக வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு 522 பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

நிறுவன செயற்பாடுகளை தடங்கல்கள் இன்றி முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு உள்ளக மற்றும் வெளியக வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் கீழ்காணும் பரீட்சைகள் நடாத்தப்பட்டன.

- கொள்வனவு அதிகாரி
- களஞ்சிய அதிகாரி
- முகாமைத்துவ உதவியாளர்
- உதவி பாதுகாப்பு அதிகாரி
- உயர் முகாமைத்துவ உதவியாளர்
- பொறியியளாளர்
- உதவி கண்காணிப்பாளர் (நலன்புரி)
- உதவி கண்காணிப்பாளர் (இயக்கம்)
- உதவி சமையலாளர்
- நிருவாக உத்தியோகத்தர்
- கண்காணிப்பாளர் (பாதுகாப்பு)
- திட்டமிடல் உதவியாளர்
- வேலை கண்காணிப்பாளர் (இயந்திர உபகரணம்)

அரசுக்கு சொந்தமான வியாபாரம் தொடர்பான இயக்க விதிமுறை - 01/21 இல் உள்ளடக்கப்பட்டுள்ள வழிக்காட்டல்களுக்கு அமைவாக நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்பு விதிமுறை, அங்கீகரிக்கப்பட்ட ஊழியக் கட்டமைப்பு, மனித வள கொள்கை ஆகியன தயாரிக்கப்படுகின்றன. அறிவு மற்றும் திறன் மிக்க ஊழியர்களை உருவாக்கும் நோக்கில் இக்கையேடுகள்/ ஆவணங்கள் இவ்வாண்டினுள் இறுதிக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தொற்றுநோய் நிலைமையிலும் ஒழுக்கமான ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்தும் பொருட்டு மனித வள பகுதி 2021 ஆம் ஆண்டில் அண்ணளவாக 159 ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்தியுள்ளது.

2021 ஆண்டில் பணியிலிருந்து விடைப்பெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை 482 ஆவதுடன் அவர்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓய்வு பெறுதல்	404
மரணித்தவர்கள்	34
சேவையிலிருந்து அகற்றப்பட்டவர்கள்	7
சேவையிலிருந்து தானாக விலகியவர்கள்	18
பணியிடத்தை விட்டு செல்லுதல்	17
மருத்துவ காரணிகளின் அடிப்படையில் ஓய்வு பெற்றவர்கள்	1
பணியின் நிறுத்தம்	1
மொத்தம்	482

விபத்துக்கள் காரணமாக 01 மரணம் மாத்திரமே நிகழ்ந்ததுடன் அதற்காக ரூபா. 550,000/- பணம் நட்டஈடாக செலுத்தப்பட்டது. திடீர் விபத்துக்கள் காரணமாக 35 ஊழியர்களிற்கு நலன்புரி விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் தனிப்பட்ட மனித உரிமைகள் பேணப்படுவதோடு சமூக நிறுவனங்களை நடாத்துவதற்கான மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமைக்கான ஒத்துழைப்பு வழங்கப்படும். தொழிற்சங்கங்கள் முகாமைத்துவத்துக்கிடையேயான கலந்துரையாடலின் போது 2021.01.01 ஆம் திகதி முதல் அமுலாகும்வாறு ஊழியர்கள் அனைவருக்கும் சிறந்த அளவில் சம்பள அதிகரிப்பொன்று பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் அதன் பின் கடந்த காலத்தில் ஏற்பட்ட சம்பள முரண்பாடு சீர்செய்யப்பட்டது.

மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலை

பயிற்சி பகுதியின் பின்னனி

இலங்கை துறைமுக அதிகார சபையின் பயிற்சி நிலையமான மஹாபொல துறைமுக கடல்சார் கலாசாலை துறைமுக ஊழியர்களுக்கு துறைமுகத்தை பயன்படுத்துபவர்களுக்கு , சமுத்திரவியல் துறை தொடர்பில் ஆர்வமுள்ள ஏனைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சியாளர்கள் மற்றும் தொழிற்சார் பயிற்சியாளர்களிற்கு பயிற்சி அளித்தல் எனும் பிரதான நோக்கத்தை அடையும் பொருட்டு பணியாற்றுகின்றது. மேலும் இலக்காகக் கொண்ட குழுக்களின் அறிவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கினை விருத்தி செய்து நிகழ்நிலைப்படுத்துவதற்காக அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், பட்டறைகள் மற்றும் நடைமுறை பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களில் ஊழியர்களின் சேவை ஆக்கத்திறனை, குழுவாக ஒன்றினைந்து பணியாற்றும் ஆற்றல், தொழிநுட்ப திறன்கள், நுகர்வோர் சேவைகள், பொது மக்களுடனான தொடர்பு மற்றும் ஆற்றப்படும் சேவையை மேம்படுத்துவதற்கான பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சான்றிதழ்கள் மூலமாக மதிப்பீடுகள் அதிகரிக்கின்ற பாவனையாளர்களை இலக்காகக் கொண்ட கற்கைநெறிகள் மூலமாக ஊழியர்களின் தேர்ச்சி மட்டத்தை அதிகரித்து துறைமுக இயக்கம் தொடர்பான நிபுணத்துவத்தை மேம்படுத்துவதற்கு தேவையான வசதிகளை மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக் கலாசாலை மேற்கொண்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில் 33,783,260 மனித மணித்தியாலங்கள் உள்ளடங்கும் வகையில் (சேவை நிலையப் பயிற்சி தவிர்ந்த) சுமார் 4,154 அபேட்சகர்கள் மஹாபொல துறைமுக கல்விக் கலாசாலையினால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக பட்டதாரி மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் ஏனைய அதற்கு சமனான தொழில்பயிற்சி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் 231 பேருக்கு சேவைக்கால பயிற்சிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் மொத்த பயிற்சி செயலாற்றுகை

பயிற்சி கற்கைநெறி	**பயிற்றப்படும் பயிலுனர்களின் எண்ணிக்கை**	**மனித மணித்தியாலங்கள்**
கடலக மற்றும் மாலுமி	1,435	18,135,550
தீயணைப்பு மற்றும் தொழிற்சார் சுகாதாரம்	827	4,159,550
உபகரணங்களை கையாளுதல்	1,711	8,775,650
முகாமைத்துவம்	107	1,842,500
தகவல் முறைமை	73	860,000
தொழிநுட்ப	1	10,000
மொத்தம்	**4,154**	**33,783,260**

2021 ஆம் ஆண்டின் மொத்த தொழிற்சார் பயிற்சி செயலாற்றுகை

பணியாளர் பிரிவுகள்	மாணவர்களின் எண்ணிக்கை
தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையின் பயிலுனர்கள்	-
அரச பல்கலைக்கழக மாணவர்கள்	51
தனியார் பல்கலைக்கழக மாணவர்கள்	92
ஏனைய தொழிற்சார் பயிற்சி நிலைய மாணவர்கள்	88
மொத்தம்	**231**

உலகிலுள்ள அனைத்து நிறுவனங்களைப் போன்றே மஹாபொல துறைமுக கடல்சார் கல்விக் கலாசாலையும் கொவிட் 19 தொற்று நோய் தாக்கத்தை எதிர்நோக்கியது எனினும், கொவிட் 19 தொற்று நிலையினை தடுக்கும் பொருட்டு சுகதார வழிமுறைகளை பின்பற்றுமாறு துறைமுக ஊழியர்கள் மற்றும் துறைமுகத்தை பயன்படுத்துபவர்களுக்கு மஹாபொல துறைமுக கடல்சார் கல்விகலாசாலையினால் பாரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

புதிய பதவியுயர்வு விதிமுறைக்கு அமைவாக இலங்கை துறைமுக அதிகார சபை ஊழியர்களின் திறன்கள் மற்றும் தகுதிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையான புதிய பயிற்றுவிக்கும் சந்தர்பங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

ஊழியர்களுக்கான பதவி உயர்வின் போது பெரும்பாலானவர்களுக்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு தேசிய தொழிற்சார் தகுதிகள் (NVQ) தேவைப்படுகின்றது என்பதை மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக்கலாசாலையினால் அவதானிக்கப்பட்டுள்ளதோடு இதற்கு தீர்வாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு பொருந்தும் வகையில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி தொடர்பான ஆணைக்குழு (TVEC) மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடன் (NAITA) ஒன்றினைந்து கட்டமைப்பு பயிற்சி நிகழ்ச்சியொன்று மற்றும் NVQ கற்கைநெறிகள் பலவற்றை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக 2021 ஆம் ஆண்டு கலாசாலை தகவல் முறைமை, முகாமைத்துவம் மற்றும் உபகரணங்களை கையாளல் ஆகிய பாடநெறிகளின் கீழ் இலங்கை துறைமுக அதிகார சபையின் பயிற்சி கற்கைநெறிகளிற்கான உயர் பெறுமதி சேர்க்கும் வகையின் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி தொடர்பான ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட NVQ பயிற்சி நிகழ்ச்சிகள் பல முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை துறைமுக அதிகார சபையில் நிறைவேற்றுத்தர மற்றும் நிறைவேற்று தரம் அல்லாத சேவை அலகுகளிலுள்ள ஊழியர்களின் அறிவு திறனை மேம்படுத்துதல் மற்றும் தகைமைகளை முழுமைப்படுத்தும் பொருட்டு துறைமுக இயக்க முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக ஏனைய பாடநெறிகளின் கீழ் சேவை வழங்கல் முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி, முகாமைத்துவ தகவல் முறைமை தொடர்பான டிப்ளோமா பாடநெறி, மனித வளங்கல் தொடர்பான டிப்ளோமா பாடநெறி, கணக்கீடு மற்றும் கணக்காய்வு தொடர்பான டிப்ளோமா பாடநெறி மற்றும் ஆங்கில டிப்ளோமா பாடநெறியை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

துறைமுகத்தின் ஒட்டுமொத்த ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்கு மேற்கொண்ட பங்களிப்பு

துறைமுகத்தின் ஒட்டுமொத்த ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்கான துறைமுக நடவடிக்கைகள் பற்றிய வேறுபட்ட விடயங்களின் கீழ் மஹாபொல துறைமுக கடல் சார் கல்விக் கலாசாலையினால் திறன் மேம்பாட்டுப் பயிற்சி செயலமர்வுகளும் நடாத்தப்படுகின்றன, அதாவது:

- துறைமுகத் துறை தொடர்பான நிதி / கணக்கியல் விதிமுறை
- துறைமுகம் தொடர்பான கணக்கியல் மற்றும் கணக்காய்வு
- பெறுகைக்கான விதிமுறைகள் மற்றும் களஞ்சிய முகாமைத்துவம்
- இலிகிதர் திறன் விருத்தி மற்றும் நிருவாக விதிமுறைகள்
- மனிதவள முகாமைத்துவம்
- நன்னோக்கிலான எண்ணப்பாடுகள்
- தொழிற்சார் சுகாதார மற்றும் காப்பு நடைமுறைகள்

- துறைமுக இயக்கம் மற்றும் முகாமைத்துவம்
- கைத்தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான பொறியியல் திட்டப்படம் வரைதல்.
- மோட்டார் வாகன கட்டுப்பாட்டுச் சுற்று (Motor Control Circuit)
- மின்சாரவியலாளருக்கான இலத்திரனியல் பயிற்சிநெறி
- நீர் குழாய் பொருத்துதல், ஒட்டுதல் பயிற்சிநெறி
- உயர் கணனிப் பயிற்சிநெறி
- உபகரணங்கள் கையாளல் பயிற்சி பாடநெறி

உள்நாட்டு மற்றும் சர்வதேச கப்பலோட்ட துறைக்கு பங்களிப்பு வழங்குதல்

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாலுமிகளுக்கு கடலக துறைச்சார் பாடநெறிகளை அறிமுகஞ்செய்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மஹபொல துறைமுக கடல்சார் கல்விக்கலாசாலை சர்வதேச ரீதியில் கப்பலோட்ட துறையில் முக்கிய பங்களிப்பை பெற்றுக்கொண்டுள்ளது. சர்வதேச ஊழியர்கள் இயக்கம் மற்றும் மாலுமிகளுக்கான தேசிய சங்கத்தின் (NUSS) பங்களிப்பின் கீழ் 25 கப்பலோட்டிகள் மற்றும் 75 வேலையற்ற மற்றும் சலுகைகள் பெறாத இலங்கை இளைஞர் யுவதிகள் மஹாபொல துறைமுக கடல்சார் கல்விக்கலாசாலையினால் பயிற்றுவிக்கப்பட்டதுடன் இப்பாடநெறி ஊடாக சர்வதேச கப்பற் சேவைகளில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொண்டுள்ளனர். மேலும், 1405 கப்பலோட்டிகள் சமுத்திரவியல் கடல்சார் கற்கைநெறியின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் அவர்கள் தற்போது பல்வேறு தரங்களில் பணியாற்றுகின்றார்கள்.

ISO 9001: 2015 தரச் சான்றிதழ்

IMO/STCW கொள்கை பிரகடனத்தின் கீழ் மாலுமிகளுக்கான எந்தவொரு கடல்சார் பயிற்சி நெறியை முன்னெடுப்பதற்கு ISO 9001: 2015 தர சான்றிதழ் கட்டாயமாக தேவைப்படுகின்றது. எனவேஇ இலங்கையின் முன்னனி சமுத்திரவியல் கற்கை நிலையமான Indian Registrar Quality Systems (IROS) நிறுவனத்தின் கீழ் ISO 9001: 2015 தர முகாமைத்துவ தொகுதி சான்றிதழ் பெற்றுக்கொண்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் IRQS மூலமாக ISO 9001:2015 வழிக்காட்டலின் கீழ் உறுதிப்பாட்டு கணக்காய்வொன்று மற்றும் புதிய கணக்காய்வு (1) மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வணிக கப்பற் செயலகத்தினால் நடாத்தப்பட்ட கணக்காய்வு செயற்பாடும் மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக்கலாசாலையினால் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது.

மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக்கலாசாலை இலங்கையிலுள்ள ஏனைய சமுத்திரவியல் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்

மஹாபொல துறைமுக மற்றும் கடல்சார் கல்விக்கலாசாலை இலங்கை கடற்படையுடன் கடல்சார் செயற்பாடுகள் சார்ந்த பயிற்சி நிகழ்ச்சிகளை முன்னெடுக்கையில் இலகுவான மற்றும் பௌதீக வளங்களை கூட்டாக பயன்படுத்தும் பொருட்டு இலங்கையில் அனுமதிக்கப்பட்ட ஏனைய கடற்சார் பயிற்சி நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளது.

- Lanka Academy of Technological Studies (Private) Limited
- CINEC
- UNK Global Maritime Institute
- Merchant Shipping Secretariat
- Ocean University
- Winston Company Pvt Ltd
- British Council
- Raknalanka Pvt Ltd
- Kothalawala Defence University

ஈட்டப்பட்ட வருமானம்

கொவிட் 19 தொற்று நிலைக்கு மத்தியிலும் உள்ளக மற்றும் வெளிவாரியான மாணவர்களிற்கு கட்டணம் அறவிடும் பாடநெறிகளை நடாத்துவதன் மூலம் மஹாபொல துறைமுகங்கள் மற்றும் கடல்சார் கல்விக்கலாசாலை குறிப்பிட்டளவு வருமானமொன்றை ஈட்டிக்கொண்டுள்ளது. 2021 சனவரி தொடக்கம் டிசெம்பர் வரையிலான காலப்பகுதியில் கட்டணம் அறவிடப்படும் பாடநெறிகள் மூலம் ரூபா 43,588,025/- வருமானமொன்றை ஈட்டிக்கொண்டுள்ளதுடன் இலங்கை துறைமுக பல்வேறு பகுதிகள் மூலம்


இலங்கை துறைமுகஅதிகார சபையின் இயக்கங்களின் செயற்திறன் உயர்த்தப்படுவதற்கு அதன் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சித் திட்டங்களின் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் ரூபா 17,217,000/- ஆகும். அதன்படி, 2021 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் ரூபா 60,805,025/- என்பதுடன் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கான மொத்த செலவினம் ரூபா 12,166,676/- ஆகும்.

மருத்துவப் பகுதி

தற்போதிருக்கும் கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக முகங்கொடுக்க நேர்ந்த சவால்களுக்கு மற்றும் தடைகளுக்கிடையிலும் மருத்துவப் பகுதியின் அன்றாட நடவடிக்கைகள் தடையின்றி நடைபெற்றது.

1. 2021 ஆம் வருட ஆரம்பத்தில் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு அமைய, இலங்கை துறைமுக அதிகாரசபை வளாகத்தினுள் கொவிட் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் தொடர்பாக கண்காணிப்பு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொவிட் 19 தொற்று உழியர் மரணம் பூச்சிய மட்டத்தில் இருந்தது.

2. கொவிட் 19 இற்கான மூன்று தடுப்பூசிகளும் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.



3. கொவிட் 19 இடைநிலை சிகிச்சை நிலையம் திட்டமிட்டு 2021.08.30 ஆம் திகதி பெலியகொடையில் அமைக்கப்பட்டது. கோவிட் - 19 தொற்றிய நோயாளிகளுக்கு சிக்கல்கள் ஏற்படாதவாறு மருத்துவ கண்காணிப்பின் கீழ் சிகிச்சையளிக்கப்பட்டது. இந்த நோய் கொவிட் - 19 இடைநிலை சிகிச்சை நிலையத்துக்கு மற்றும் சில சந்தர்ப்பங்களில் வேறு இடங்களுக்கு கொண்டு செல்வது முகாமைத்துவத்தின் அனுமதியின் கீழ் நடைபெற்றது.

4. கொவிட் 19 தொற்று நோய் நிலை உக்கிரமடையும் போது டெங்கு தடுப்பு நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டது. குறித்த டெங்கு நிகழ்ச்சிகள் நாளாந்தம் நிகழ்நிலைப்படுத்தப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றது.

5. உலக நீரிழிவு தினத்துக்கு இணையாக நிரிழிவு நோயாளர்களை அடையாளங்காணும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2021 ஒக்தோபர் 14 ஆம் திகதி முதல் நவம்பர் 14 ஆம் திகதிவரை நடாத்தப்பட்டது. நீரிழிவு நோயாளர்களாக தீர்மானிக்கப்படாத பல நோயாளர்களை இந்நிகழ்ச்சித் திட்டம் மூலம் அடையாளங் காணப்பட்டதோடு, நீரிழிவு நோயளர்களாக தீர்மானிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் தொடர்பாக இரத்தப் பரிசோதனை மற்றும் மருத்துவ பரிசோதனை நடாத்தப்பட்டது.

6. 2021 ஆம் வருடத்திலும் இரவு பகல் மருத்துவ சேவைகள் சிறப்பாக பேணிச் செல்வதற்கு முடிந்தது.

24 மணித்தியாலமும் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊர்தி வண்டி சேவை மூலம் பல உயிர்களை காப்பாற்றுவதற்கு அல்லது தமாதமின்றி சிகிச்சை பெற்றுக்கொடுப்பதற்கு முடிந்துள்ளது. துறைமுக வளவிற்குள் இரத்ததான நிகழ்ச்சிகள் போன்ற விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பாகவும் கிழக்கு கொள்கலன் முனையம் மற்றும் துறைமுக நகரத்துடன் தொடர்பான ஏனைய விழாக்களுக்கு விசேட அதிதிகள் வருகை தந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் மருத்துவ குழு உள்ளடங்கிய குறித்த ஊர்தி வண்டி சேவை நடாத்தப்பட்டது.

நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி

அறிமுகம்

இலங்கை துறைமுக அதிகாரசபை தனது நோக்கங்களை அடையப்பெறுதலில் மனித வளம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றது. பௌதிக வளங்களை

முகாமைத்துவம் செய்யும் செயன்முறையை விட மனித வளம் முகாமைத்துவ செயன்முறை முற்றிலும் மாறுப்பட்டது. அது தொடர்பாக கவனம் செலுத்தி தமது ஊழியர்களின் திருப்தியை விட சிறந்த வாழ்க்கைத் தரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுகின்ற வசதிகள் மற்றும் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் நோக்கத்தோடு நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதியின் பணிகள் பல்வேறு பிரிவுகள் ஊடாக 2021 வருடத்தினுள் பிரிந்து சென்றது.

பகல் / இரவு உணவு விநியோகம்

அலுவலக வகை ஊழியர்களுக்கு பகல் - இரவு உணவு மாத்திரமும் காவல்முறை அடிப்படையில் ஈடுபடுத்தும் ஊழியர்களுக்கு பகல், இரவு உணவுகளும் சிற்றுண்டியுடன் தேனீர் வழங்குவது மத்திய சமையலறைப் பகுதியினால் மேற்கொள்ளப்படுகிறது. 2021 ஆம் ஆண்டினுள் பகல் - இரவு உணவு வேளைகள் 2,617,089 க்காக 785,901,294/- ரூபாவும் தேனீர் சிற்றுண்டி மற்றும் கஞ்சி 4,144898 வேளைகளுக்கு 323,216,864/- ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஒட்டுமொத்த உணவுக்கான செலவு 1,109,118,158/- ரூபாவாகும்.

வெளி மருத்துவ பில்களை மீளீடுசெய்தல்

நடப்பு ஆண்டினுள் மூக்குக் கண்ணாடி பெற்றுக்கொடுப்பதற்காக 9,785,000/- ரூபாவும் ஏனைய வெளி நோய்க்கான மருத்துவ பில்களுக்கு 22,886,631/= ரூபா என்றவகையில் மொத்தமாக 32,651,631/= ரூபா ஊழியர்களுக்கு மீளச் செலுத்தப்பட்டுள்ளது.

ஊழியர்களின் பிள்ளைகளுக்கான கல்வி புலமைப் பரிசில்

க.பொ.த (சா/த) சித்தியடைந்த ஊழியர்களின் பிள்ளைகளுக்கு மாதமொன்றுக்கு 750/- ரூபா படி இரண்டு வருடங்களுக்கும், பல்கலைக்கழக கல்விக்காக மாதமொன்றுக்கு 2,000/- ரூபா வீதமும் பட்டப் படிப்பு தொடர்பான வருட எண்ணிக்கைக்கு ஏற்ப புலமைப்பரிசில் பெற்றுக்கொடுக்கப்படும். 2021 நடப்பு ஆண்டினுள் க.பொ.த (சா/தர) புலமைப்பரிசில் தொடர்பில் 2,187,000/- ரூபாவும், பல்கலைக்கழக மாணவர் தொடர்பில் 3,300,500/- ரூபாவுமாக மொத்தம் 5,487,500/- ரூபா செலவிடப்பட்டுள்ளது.

ஊழியர் போக்குவரத்துக்காக இலங்கை போக்குவரத்து சேவை விசேட பஸ் வண்டிகள்

தொற்றுநோய் நிலமையின் கீழ் துறைமுக பணிகளை தொடர்ச்சியாக பேணிச்செல்வது அத்தியாவசிய காரணியாயிருந்தது. எனவே, இலங்கை போக்குவரத்து சபையின் 23 பஸ் வண்டிகளை பயன்படுத்தி பல போக்குவரத்துப் பயணங்கள் காலையிலும் மாலையிலும் ஊழியர்களின் போக்குவரத்துக்காக 2021 ஆண்டினுள் ஈடுப்படுத்தப்பட்டது. அதற்காக 2021 ஆண்டில் 75,779,850/- ரூபா செலவாகியது.

கொவிட் - 19 தொற்றுநோய் பாதுகாப்பு

தொற்றுநோய் அவதான நிலமையிலும் சேவைக்கு வருகைதந்த ஊழியர்களுக்காக,

- அத்தியாவசியப் பொருட்களை துறைமுக வளவினுள்ளே கொள்வனவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.

- நோயத்தொற்றுக்குள்ளான ஊழியர்களை மருத்துவமணையில் சேர்க்கும் போது அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய பெகேஜ் ஒன்று பெற்றுக்கொடுத்தல்.

- மருத்துவமணையில் இருக்கும் கால எல்லையில் நோயாளியின் வீட்டுக்கு உலர் உணவு சலுகை பெகேஜொன்று பெற்றுக் கொடுப்பதற்றகு பதிலாக ரூபா 10,000/= தொகையொன்று தொற்றுக்குள்ளான ஊழியரின் சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும். அதற்காக 2021 ஆண்டு தொடர்பான ஆகுசெலவு 13,770,000/= ரூபாவாகியது. ஆகியன மேற்கொள்ளப்பட்டது.

தங்க வெகுமதி மற்றும் போசிலேன் தேனீர் கப் செட் வழங்குதல்

பதினைந்து வருடத்துக்கு மேல் சேவைக்காலத்தை நிறைவு செய்து

ஓய்வுபெறும் அல்லது கேட்டுவிலகும் ஊழியர்களுக்கு சேவைகாலத்துக்கு ஏற்ப தங்க நாணயம் பெற்றுக்கொடுக்கப்படும். அதேபோன்று 30 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்த அனைத்து ஊழியர்களுக்கும் பெறுமதியான போசிலேன் தேனீர் கப் செட் வழங்கப்படும். 2021 ஆம் ஆண்டினுள் தங்க வெகுமதி 394 உம், போசிலன் செட் 163 உம் வழங்கப்பட்டுள்ளன.

துறைமுக நலன்புரி பஸ்வண்டி சேவை

2021 ஆம் ஆண்டில் துறைமுக நலன்புரி பஸ்வண்டி பயன்பாடு Covid -19 நோய் நிலை காரணமாக செயல்படுத்தப்படாததோடு, கடமை பஸ்வண்டி போக்குவரத்து பயணங்கள் 78 உம், ஊழியர்களின் தேவைக்கான பயணங்கள் 166 உம் ஆக மொத்த பயணங்கள் 244 மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சலுகை வீட்டுக் கடன்

நலன்புரி வீடமைப்பு கடன் பெற்றுக்கொடுத்தலின் கீழ் 2021 ஆண்டினுள் (ரூபா 500,000) ஐந்து இலட்சம் தொகை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

நலன்புரி உண்டிச்சாலை

துறைமுக வளாகத்தினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ள நலன்புரி உண்டிச்சாலை மூலம் வருடத்தினுள் வருடாந்த மொத்த வாடகையாக ஒருகோடி, பதினேழு இலட்சத்து தொன்னூற்றி ஒன்பதாயிரத்து ஐநூற்று அறுபத்தியொரு ரூபா பதினொரு சதம் (ரூபா 11,799,561.11) தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது.

விசேட விழா நிகழ்ச்சிகளின் உபசாரப்பணிகள்

உயர் முகாமைத்துவத்தின் பூர்வாங்க அங்கீகாரத்துடன் விசேட விழா நிகழ்ச்சிகள் போன்றவற்றுக்கு உபசாரப் பணிகள் நடைபெற்றன.

நலன்புரி விழா மண்டபங்கள்

கடமைத் தேவைப்பாட்டுக்கு மாத்திரம் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனிநபர் விடுதி

கொவிட் ஆரம்ப சிகிச்சை நிலையமாக பயன்படுத்தப்பட்டதோடு, அந்த விடுதியிலிருந்தோரை, மோதரை விடுதிக்கும் கிழக்கு கொள்கலன் முனைய ஓய்வு விடுதிக்கும் மாற்றப்பட்டது.

நூதனசாலை

தற்போதிருக்கும் நிலைமையை கருத்திற் கொண்டு நூதனசாலை பார்வையிடுவது மட்டுப்படுத்தப்பட்டது.

தொழிநுட்ப தொடர்புகள்

இலங்கை துறைமுக அதிகார சபையின் உற்பத்தி திறனுக்கு தடை ஏற்படுத்துகின்ற சிக்கலான நிலைமைகளை ஓரளவு மட்டுப்படுத்தப்படுத்த முடிந்துள்ளது.

நூலக சேவைகள்

நலன்புரி நூலகங்கள் 19 தொடர்பாக அங்கத்துவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இரண்டு இலட்சம் (ரூபா 200,000/-) பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வசதிகள்

ரூபா ஏழு இலட்சத்து பன்னிரண்டாயிரம் (ரூபா 712,000/-) நிதி ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையம் மற்றும் ஆரம்ப பாடசாலை

அரசாங்க கொள்கைக்கு ஏற்ப தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதோடு, வருட இறுதியில் சகாதார வழிகாட்டுதல்களுடன் பிள்ளைகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டது.

ஓய்வறைகள்

உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உள்ளக விளையாட்டு உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

இறுதிச் சடங்கு உதவி

துறைமுக அதிகாரசபையில் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது மரணமாகும ஊழியர்களுக்கு அஞ்சலி செலுத்துதற்கு மலர்வளையமொன்றும் இரங்கல் பதாதைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு,

இந்த வருடத்தில் 11 மலர் வளையங்களும் 11 நினைவுச் சின்னங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டன.

சுற்றுலா விடுதிகள்

கொரோனா நிலைமை காரணமாக தற்காலிகமாக மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நலன்புரி விடுமுறை

2021 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 41 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததோடு, அதில் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்துடன் கூடிய விடுமுறை தினங்கள் 1638 1/2 தொடர்பாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

செயலக பகுதி

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிருவாக மையமாவது செயலகப்பகுதியாகும். தலைவர் காரியாலயம், உப தலைவர் காரியாலயம், முகாமைப்பணிப்பாளர் காரியலயம் மற்றும் மேலதிக முகாமைத்துவப் பணிப்பாளர் காரியாலயம் செயலகப்பகுதியில் அடங்குவதோடு அதிகாரசபையின் ஒட்டுமொத்த நிருவாக நடடிக்கைகளை இயக்குகின்றது.

அனைத்து பகுதிகள்/ பிரிவுகள் ஒருங்கிணைத்து உயர் முகாமைத்துவம் மற்றும் வெளி நிறுவனங்களுக்கு (துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சு, இராஜாங்க அமைச்சு, ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள்) தேவையான தகவல்களை சரியாக வழங்குவது முக்கிய பொறுப்பாகும். நிருவாக நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக பிரதான விழாக்களை ஒழுங்குசெய்தல், உயர் முகாமைத்துவத்தின் பங்குபற்றலில் நடைபெறும் கூட்டங்களுக்கு தேவையான வசதிகளை வழங்குதல், சமூகப் பொறுப்பு செயற்பாடுகள், (CSR) தொடர்பாக முன்னுரிமை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பிரதான பணிகள் செயலகப் பகுதியினால் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

2021 ஆம் ஆண்டினுள் 2020 வருடத்துக்குரிய வருடாந்த அறிக்கை செயற்பாட்டுத் திட்டம், கணக்காய்வு அறிக்கைக்கான பதில்கள், 2021 வருடம் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் துறைமுக அதிகார சபை தொடர்பாக அறிக்கை, பாராளுமன்றத்தில் அமைச்சிடம் சமர்பிக்கப்படும் கேள்விகளுக்கான விடை, வருடாந்த அறிக்கை, காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் தொடர்பான குறித்த பகுதிகளுடன் ஒருங்கிணைந்து தயாரித்து நிறைவு செய்து உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதேபோன்று, துறைமுக அதிகார சபையின் சில நிறைவேற்றுத்தரமல்லாத ஊழியர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று தண்டணைகளுக்கு எதிராக குறித்த ஊழியர்களினால் சமர்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுப்பது மேலுமொரு பணியாகும். 2021 ஆம் ஆண்டினுள் இவ்வாறான ஊழியர் மேன்முறையீடுகள் 17 கிடைத்துள்ளதுடன் வருட இறுதியாகும் போது அதில் 16 இன் செயற்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன. எஞ்சிய ஓர் (01) கோவைகள் தொடர்பாக மேன்முறையீட்டு சபையினால் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

செயலகப் பகுதி கடிதங்கள் பகிர்ந்தளிக்கும் நிலையமாக செயற்படுவதோடு, 2021 ஆம் ஆண்டினுள் பரவிய கொவிட் வைரஸ் தொற்று காரணமாக சேவைக்கு அழைக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை மட்டுப்படுத்த வேண்டியேற்பட்டது. எனவே, ஒரு தினத்தில் கடிதங்கள் விநியோகிப்பது ஒரு முறை மாத்திரம் சுகாதாரப் பாதுகாப்பு முறையை பின்பற்றி தாமதமின்றி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது.
நிருவாகப் பணிகள் முறையான நடைமுறைகளுக்கேற்ப பேணிச்செல்வதற்காக உயர் முகாமைத்துவத்தினால் அடிக்கடி எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் தொடர்பாக பெற்றுக்கொடுக்கும் ஆலோசனைகளுக்கு ஏற்ப 2021 வருடத்தில் 20 சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஊழியர்கள் தொடர்பாக அமுலில் உள்ள அக்ரஹார (ரன்) ஊழியர் சுகாதார காப்புறுதி திட்டத்தின் கீழ் 2021 ஆண்டில் கீழ்வருமாறு தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதி ஊடாக கொடுப்பணவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கொடுப்பனவின் தன்மை	கொடுப்பனவு வழங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை	செலுத்தப்பட்ட தொகை
மருத்துவமனையில் இருந்தவர்கள்	2167	94,800,167.81
பயங்கர நோய்கள்	36	30,215,879.00
மரணம்		
1. இயற்கை மரணம்	28	19,600,000.00
2. சடுதி விபத்து மரணம்	06	12,000,000.00
		156,616,046.81
ஊழியர்களின் மற்றும் குடும்ப அலகுகளின் காப்புறுதி தொடர்பாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட வருடாந்த தவணைப் பணம் (2020.09.01 முதல் 2021.08.31 வரை 12 மாதங்கள்)		**111,471,000.00**

இந்த ஆண்டினுள் நான்கு (04) பிரதான விழாக்கள் உரிய பகுதிகளுடன் ஒருங்கிணைந்து ஒழுங்குசெய்யப்பட்டது.

கொவிட் தொற்றுக்கிடையே துறைமுக உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் உல்லாச விடுதிகளில் அறைகள் ஒதுக்கிக்கொடுப்பது நிறுத்தப்பட்டபோதிலும், சுகாதார வழிமுறைகளுக்கு ஏற்ப 2021 நடுப்பகுதி முதல் மீண்டும் அறைகள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதி அனைவரினதும் நல்லாசி வேண்டி முழு பிரித் நிகழ்ச்சியொன்றும் நூறு (100) மார்க்க பூசகர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டது.

தகவல் முறைமை பகுதி

- முனைய முகாமைத்துவ தொகுதியில் (N4) தொகுப்பு மேம்படுத்தல் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளதோடு, 2021 ஏப்ரல் 29 ஆம் திகதியிலிருந்து செயல்பாட்டில் உள்ளது.

- Oracle E –B12 Suite தொகுதியில் தகவல்கள் பாதுகாப்பு தளம் DR Site அமுல்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, விலை கோரல் ஆவணங்கள் தயாரிக்கப்படுகிறது.

- பகுதியான தன்னியக்க கிழக்கு கொள்கலன் முனையம் தொடர்பாக முனைய முகாமைத்துவ தொகுதியின் பெறுகைக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, ஆரம்ப உதிரிப்பாகங்களின் தொகை கிடைத்து 16 மாதத்திற்குள் முழுமையாக அமுல்படுத்தப்படும்.

வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவப் பகுதி

செயற்பாடுகள்

கொழும்பு துறைமுகம், காலி துறைமுகம் மற்றும் திருகோணமலை துறைமுகம் உள்ளடங்கலாக அனைத்து நிறுவனங்களிற்கான பொருட்கள், உபகரணங்கள் மற்றும் எரிபொருட்களை தொடர்ச்சியாக வழங்குதல், வழங்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பகுதியின் முக்கிய பொறுப்பாகும். கொள்வனவு செய்தல் (உள்நாடு மற்றும் வெளிநாடு), இலங்கை துறைமுக அதிகார சபையின் அனைத்து பகுதிகள்/ பிரிவுகளிற்கு தேவையான எரிபொருள், இயந்திர உபகரணங்கள், உபகரணங்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் ஏனைய பொருட்களை களஞ்சியப்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் இப்பகுதியினால் முன்னெடுக்கப்படுகின்றது. ஏனைய அனைத்து செயற்பாடுகள்/ பொறுப்புக்கள் உள்நாட்டு கொள்வனவு, வெளிநாட்டு கொள்வனவு/ வார்ப்பு, நிருவாக, வவுச்சர், தொகை கட்டுப்பாடு மற்றும் பிரதான களஞ்சியங்கள் ஆகிய உபபிரிவுகள் இடையே பரவலாக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டின் முன்னேற்றம்

மீளாய்வுக்குற்பட்ட ஆண்டின்போது அனுமதியளிக்கப்பட்ட விலைமனுக்கோரல்களின் எண்ணிக்கை

கேள்வி மனுகோரலின் பெயர்	**கேள்வி மனுச் சபை கூட்டங்களின் எண்ணிக்கை**	**கேள்வி மனுச் சபை அங்கீகாரங்களின் எண்ணிக்கை**
திணைக்கள பெறுகைக்கான குழு (ரூபா 2,000,000/ க்கு மேல்)	12	290
அமைச்சரவையின் பெறுகைக்கான குழு- A (ரூபா 500,000/= முதல் 2,000,000/= வரை)	53	2,798
அமைச்சரவையின் பெறுகைக்கான குழு- B (அனுமதிக்க கூடிய எல்லை ரூபா 500,000/= க்கு குறைந்தது)	102	6,009

வெளிநாட்டு கொள்வனவுகளில் 2021 ஆம் ஆண்டின் மொத்த செலவினம்

- பொருட்களின் பெறுமதி (C&F Value)

  i. மூலதனமற்ற பொருட்கள் - ரூபா 439 மில்லியன்

  ii. மூலதனப் பொருட்கள் - ரூபா 5,613 மில்லியன்

- திறக்கப்பட்ட கடன் கடிதங்கள் (பொருட்கள் பொறுப்பேற்றல்(D/A) மற்றும் பொருட்களுக்கு செலுத்துதல் (D/P) உள்ளடங்கலாக) - 73

- திறக்கப்பட்ட ரெலிகிரபிக் ஒப்படைத்த கட்டளைகளின் எண்ணிக்கை - 23

2021 இல் வாப்பு பிரிவினால் அகற்றிச் செல்லப்பட்ட கப்பற் சரக்குகள் தொடர்பான விபரம்

கப்பற் சரக்குகள்	53
விமான சரக்குகள்	43
தபால் பொதி	02

31.12.2021 இலுள்ள இருப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூபா – 860,803,475.76

பிரதான களஞ்சியங்களும் மொத்த தொகை இருப்பு கட்டுப்பாடும்

- 2021 இன்போது களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதனமற்ற பொருட்கள்) **ரூபா 2,578,231,559.99**

- 2021 இன்போது களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதி (மூலதனப் பொருட்கள்)- **ரூபா** 2,813,929,728.79

- பயனாளிகள் பகுதியில் வெளியிடப்பட்ட பொருட்களின் பெறுமதி (மூலதனமற்ற பொருட்கள்) **ரூபா 2,550,530,581.97**

சட்ட பகுதி

1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விசேட துறைமுகங்களான கொழும்பு, காலி, திருகோணமலை காங்கேசன்துறைஇ ஒலுவில், புத்தளம், பருத்தித்துறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய துறைமுகங்களுக்கு இலங்கை துறைமுக அதிகார சபையின் சட்ட அலுவலர்கள், சட்ட ஆலோசகர்களுக்கு அதேபோல் இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் சபை, பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் இலங்கை துறைமுக சபை பணிப்பாளர்களுக்கு பகுதி தலைவர்களுக்கு மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் ஏனைய பகுதிகளுக்கும் சட்ட அலுவலர்கள் ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்.

சட்ட ஆலோசனைகள்

2021 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவத்திற்கும் மற்றும் பகுதித் தலைவர்களுக்கும் 165 க்கும் மேற்பட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக, இலங்கை துறைமுக அதிகாரசபையினைத் தரப்பாகக் கொண்ட மற்றும் சட்ட பகுதியின் விடயதானத்துக்கு உட்பட்ட ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள், பிணை முறிகள், உறுதிகள் (உரிமை கைமாற்றல்கள், குத்தகை, பிரகடனங்கள், அடகு வைத்தல்கள் போன்றவை) தொடர்பில் நகல் அறிக்கைகளை தயாரித்தல், அமுல்படுத்துதல் போன்ற ஏனைய பணிகளிலும் சட்டப் பகுதி ஈடுபட்டுள்ளது.

ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் பிணைமுறி, உறுதிகள்

2021 ஆண்டில் 23,குத்தகை வாடகை ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கை மற்றும் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் சட்டப் பகுதி மூலம் அமுல்படுத்தப்பட்டன. இந்த சட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக, பின்வரும் உடன்படிக்கைகள் மற்றும் பிணை முறிகளுக்குரிய பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கான ஊழியர்களின் சம்பளமற்ற விடுமுறை தொடர்பிலான பிணை மற்றும் பிணைமுறி ஒப்பந்தங்கள் - 04
- இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி மற்றும் கல்வி தொடர்பிலான பிணை மற்றும் பிணைமுறி ஒப்பந்தங்கள் - 03
- மாலுமி பிணை முறிகள் 16 மற்றும்
- சுங்க பிணைமுறிகள் 02

இலங்கை துறைமுக அதிகாரசபையினை தரப்பாகக் கொண்ட அனைத்து நீதிமன்ற விடயங்கள் தொடர்பிலும் சட்டமா அதிபர் மற்றும் வெளி சட்டத்தரணிகளின் உதவியோடு சட்டப் பகுதியின் நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன.

நீதிமன்ற செயற்பாடுகள்

2020 திசெம்பர் மாத இறுதியில் மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல்நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதிவான் நீதிமன்றம், தொழில் திணைக்களம், மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman) தொழில் நீதிமன்றம், தொழிலாளர் இழப்பீடு மற்றும் நடுவர் தீர்ப்பாய சபை மற்றும் சுங்க விசாரணை சபை முன்னிலையில் அனைத்து முழுமையான வழக்குகள் முறைப்பாடுகள் முறையீடுகள் 232 விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

2021 ஆம் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக / இலங்கை துறைமுக அதிகாரசபையினால் புதிய வழக்குகளுக்கான முறைப்பாடுகள், தொடர்பாக 80 விண்ணப்பங்கள் (மீயுயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதி மன்றம், மாவட்ட நீதிமன்றம், தொழில் நியாய சபைகள், நீதிவான நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு, தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம், தீர்ப்பளித்தல் மற்றும் தொழிலாளர் நட்டஈட்டு விசாரணை சபை மற்றும் சுங்க விசாரணை பிரிவு ஆகியவற்றில் சமர்ப்பிக்கட்டிருந்தன.) மொத்தமான 312 வழக்குகளுள் 38 வழக்குகளின் பணிகள் 2021 ஆம் ஆண்டு இறுதியில் முடிடைந்துள்ளன.

2021.12.31 ஆம் திகதிக்கு வழக்குகள்/ முறைப்பாடுகள;/ விசாரணைகள்/ விண்ணப்பங்கள் 274 மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் முடிவுறாத நிலையில் இருந்தன.

மீயுயர் நீதிமன்ற வழக்குகள்

2020 ஆம் ஆண்டின் இறுதியில் 48 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன 2021 ஆம் ஆண்டினுள் புதிதாக 17 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மொத்தமான வழக்குகள் 65 இல் 14 வழக்குகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன (02 வழக்குகள் மீளப் பெறப்பட்ட வழக்குகள் 02, விசாரணை முடிவடைந்த வழக்கு 01, நிராகரிக்கப்பட்ட வழக்குகள் 2021.12.31 ஆம் திகதிக்கு 51 வழக்குகள் மீயுயர் நீதிமன்றில் விசாரணை நிலையில் இருந்தன.

மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்

2020.12.31 வரை 31 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2021 ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எதிராக புதிதாக 23 வழக்குகள் தொடரப்பட்டன. மொத்த 54 வழக்குகளில் 12 வழக்குகள் மீளப்பெறப்பட்டன. மேலும் 01 வழக்கின் விசாரணை முடிவடைந்திருந்நன. 2021.12.31 வரை 40 வழக்குகள் மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

உயர் நீதிமன்ற வழக்குகள்

2020 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 31 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2021 ஆண்டினுள் புதிதாக 23 வழக்குகள் தாக்கல் செய்யப்படிருந்தன. மொத்தம் 54 வழக்குகளில் 12 வழக்குகள் நிராகரிக்கப்பட்டதுடன், 01 வழக்குகள் அகற்றிக்கொள்ளப்பட்டன. 2021.12.31 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றில் 11 வழக்குகள் விசாரணை நிலையில் உள்ளன.

மாவட்ட நீதிமன்ற வழக்குகள்

2020.12.31 ஆம் திகதிக்கு 15 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2021 ஆம் ஆண்டில் புதிதாக 11 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. மொத்தமான 26 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டன. 2021.12.31 ஆம் திகதிக்கு 25 வழக்குகள் மாவட்ட நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன.

நீதவான் நீதிமன்ற வழக்குகள்

2020.12.31 ஆம் திகதிக்கு 06 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன. 2021 ஆண்டினுள் புதிதாக 01 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 07 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு அனுகூலமாக நிறைவடைந்தன. 2020.12.31 ஆம் திகதிக்கு 06 வழக்குகள் நீதவான் நீதிமன்றில் விசாரணை நிலையில் இருந்தன.

தொழில் நியாய சபை வழக்குகள்

2021.12.31 ஆம் திகதிக்கு தொழிலாளர் நியாய சபையின் 15 வழக்குகள் விசாரணை நடாத்தப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் புதிதாக 08 வழக்குகள் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு, தொழில் நியாய சபையின் 23 வழக்குகளில் எந்தவொரு வழக்கும் நிறைவடையவில்லை. 2021.12.31 ஆம் திகதிக்கு 23 வழக்குகள் விசாரணை நிலையில் இருந்தன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள், தொழிலாளர் பிணக்குகள் (இணக்கம் தொடர்பிலான வழக்குகள்) பற்றியதில் தொழில் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பிலான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் ஊழியர் நட்டஈடு ஆணையாளரிடமும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்.

2020.12.31 ஆம் திகதிக்கு புதிதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 24 விண்ணப்பங்கள், தொழில் ஆணையாளர் முன்னிலையில் தீர்வை பெற்றுக்கொள்ளும் பொருட்டு 52 முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதோடு, பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பிலான பாராளுமன்ற ஆணையாளர் (Ombudsman) முன்னிலையில் 21 முறைப்பாடுகள் ஊழியர் நட்டஈடு ஆணையாளரிடம் எதுவித முறைபாடும் மேற்கொள்ளப்படவில்லை.

2020 ஆம் ஆண்டில் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்ட 06 விசாரிக்கப்பட்டு உள்ளன. புதிய விண்ணப்பங்களும், பொது மக்கள் முறைப்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரிடம் முன்வைக்கப்பட்ட 11 முறைப்பாடுகளும், சமர்ப்பிக்கப்படவில்லை. தொழில் தீப்பாய சபை மற்றும் பாராளுமன்ற ஆணையாளரிடம் எதுவித முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை. 2021 இல் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட 01 விண்ணப்பமும், இணக்கப்பாட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட 04 முறைப்பாடுகளும் நிறைவடைந்துள்ளன.

அதன்படி, 2021.12.31 ஆம் திகதிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 29 விண்ணப்பங்களினதும் இணக்கப்பாடு பெற்றுக்கொள்வதற்கான 52 முறைபாடுகளும், பொதுமக்கள் முறைப்பாடுகள் தொடர்பாக பாராளுமன்ற ஆணையாளர் முன்னிலையில் சமர்பித்த 21 முறைப்பாடுகளும் விசாரணை நிலையில் உள்ளன.

நடுவர் தீப்பாய வழக்குகள்

2020.12.31 ஆம் திகதிக்கு வணிக தீர்ப்பாய வழக்குகள் 02 உம், 06 கைத்தொழில் தீர்ப்பாய வழக்குகளும் விசாரணை செய்யப்படுகின்றன. 2021 ஆம் ஆண்டில் புதிய நடுவரொருவர் நியமிக்கப்பட்டதனால் அதுவரை விவாரணையிலிருந்த 03 கைத்தொழில் பிணக்குகள் தொடர்பாக புதிய இலக்கங்கள் ஒதுக்கப்பட்டன. எனவே, 03 கைத்தொழில் பிணக்குகள் விசாரணை முடிவடந்ததாகவும் புதிதாக கைத்தொழில் பிணக்குகள் உள்ளடங்கப்பட்டதாகவும் கருதப்பட்டது. பிணக்குகள் உள்ளடங்கப்பட்டதாகவம் கருதப்பட்டது. 2021 இல் எதுவித பிணக்குகளும் நிறைவடையவில்லை. 2020.12.31 ஆம் திகதிக்கு 02 வணிக பிணக்கு வழக்குகள், 05 கைத்தொழில் தீர்ப்பாய வழக்குகள் விசாரனை முடிவுறாத நிலையில் உள்ளன. (நடுவர் தீர்பாய சபையினால் வழங்கப்பட்ட தீர்ப்புகளிற்கு எதிராக இலங்கை துறைமுக அதிகார சபையினால் மேன்முறையீடுகள் சமர்பிக்கப்பட்டு முடிவடைந்துள்ள போதிலும், 02 வர்த்தக பிணக்குகளும் முடிவுறாத வழக்குகளாக கருதப்படுகின்றன).

சுங்க விசாரணைகள்

2020.12.31 ஆம் திகதிக்கு சுங்கத்தினால் 02 விசாரணைகள் கிடைக்கப்பெற்றுள்ளன 2021.12.31 ஆம் திகதிக்கு இரண்டின் விசாரணைப்பணி முடிவுறாத நிலையில் இருந்தன.

பாதுகாப்புப் பகுதி

- துறைமுக பிரவேச வாயில்களுடன் தொடர்பான பிரதேசங்களை அவதானிக்கும் தேவையாக இருக்கின்ற பாதுகாப்பு கண்காணிப்பு இரண்டு கெமெரா தொகுதிகள் இல 01 ஏ மற்றும் இல. 06 பிரவேச வாயில்களில் பொருத்தும் பணிகள் மேற்கொண்டுள்ளதோடு 2022

ஆண்டினுள் ஏனைய பிரவேச வாயில்ளுக்காகவும் கெமெரா தொகுதிகளை பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- கொழும்பு துறைமுகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக உயர் தொழில்நட்பத்தை அறிமுகப்படுத்தி பாதுகாப்பு பிரவேச வாயில்களில் சோதனையிடும் நடவடிக்கைகளுக்காக வெடிப்பொருட்களை அடையாளம் காணும் வசதிகளுடன் கூடிய 06 ஸ்கேனர் இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஆரம்ப பெறுகைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு 2022 ஆண்டு நிறைவடையும் போது இவ்வியந்திரங்களை பிரவேச வாயில்களில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

- பாதுகாப்பு ஊழியர்களின் துப்பாக்கி வெடிப் பயிற்சிகள் தொடர்பாக பாதகாப்பு பயிற்சிப் பாடசாலை வளவில் காற்று துப்பாக்கி பயிற்சி மைதானமொன்று தயாரிக்கப்பட்டதோடு, குறித்த பயிற்சிகளுக்கு 06 வாயு சக்தி துப்பாக்கி மற்றும் 03 வாயு சக்தி கைத்துப்பாக்கிகளும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2021 ஆம் ஆண்டினுள் துறைமுக வளாகத்தினுள் நடந்த 99 வாகன விபத்துக்கள் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, வாகனப் போக்குவரத்து சட்டங்களை மீறிய 11 சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு பகுதியின் கீழ் அமுலாகின்ற வருடாந்த மற்றும் தற்காலிக அனுமதிப்பத்திர அலுவலகமொன்றினால் 2021 ஆண்டினுள் வாகன மற்றும் ஆட்களுக்காக விநியோகிக்கப்பட்ட துறைமுக பிரவேச அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்கள் கீழ்க்குறிப்பட்டுள்ளது.

தொடர் இல	அனுமதிப்பத்திர வகை	அனுமதிப் பத்திர வாகனங்களின் எண்ணிக்கை	கிடைத்த வருமானம்
1	தற்காலிக தனிநபர் அனுமதிப் பத்திரம்	222723	102,248,893.20
2	தற்காலிக வாகன அனுமதிப் பத்திரம்	70270	70,120,719.40
3	வருடாந்த தனி நபர் அனுமதிப் பத்திரம்	7382	38,634,300.00
4	வருடாந்த வாகன அனுமதிப் பத்திரம்	11615	66,381,120.00
5	மூன்று வருடங்களுக்கான தனி நபர் அனுமதிப்பத்திரம்	991	14,397,750.00
6	புதிய வாகனங்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கான கட்டணம்	655	65,500,000.00
7	வாகனங்களுக்கு பதிலாக பயன்படுத்தும் வாகனங்களுக்கான கட்டணம்	152	3,800,000.00
8	தண்டப்பண வருமானம்	-	118,800.00
9	ஏனைய வருமானங்கள் (Pouch) பைகள் விநியோகம்	-	2000.00
	மொத்தம்	**313,788**	**361,203,582.60**

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி

தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி ஆரம்பம் முதல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் புகழை மேம்படுத்துவதற்கும், அதன் ஊழியர்களுக்கிடையில் மற்றும் வெளி நிறுவனங்களுக்கிடையில் ஆக்கபூர்வமான தொடர்புகளை பேணிச்செல்வதற்கும் உயர்மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இப்பகுதிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களுள் ஊடக நிறுவனம், பொதுமக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் முகவர் நிறுவனங்கள் மற்றும் வெளி

நிறுவனங்களுக்கிடையிலுள்ள தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகளை உறுதி செய்தல் பிரதான பொறுப்புக்களாகும். இலங்கை துறைமுக அதிகாரசபையின் நேக்கங்களை நிறைவேற்றலின் போது ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய முதற்தர அதிகாரமிக்கவர்களுடன் தொடர்புகளை முகாமைத்துவப்படுத்தல் இப்பகுதியின் முக்கிய அம்சமாகும்.

துறைமுகத் துறையுடன் தொடர்புடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்கள் ஏனைய தரப்பு நிறுவனங்கள் மற்றும் ஆர்வம் காட்டுகின்ற தரப்பினருடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு தொடர்பாடல் மற்றும் பொதுசன உறவுகள் பகுதி பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. கடந்த வருடத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட செயல்பாடுகள் மற்றும் நிகழ்ச்சிகள் ஊடாக ஏற்பட்ட பொதுமக்கள் தொடர்புகளை மேலும் உறுதிப்படுத்தி மென்மேலும் இலத்திரனியல் ஊடகங்களை கவர்ந்துகொண்டு பயனுறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

செய்திகளை தயாரித்தல் மற்றும் தொடர்பாடல் விசேட கட்டுரைகளை வழங்குதல் மற்றும் பல் ஊடகங்களை (Multemedia) இலக்காகக் கொண்டவர்களுக்கு தவல்களை வழங்குதல், அதேபோன்று மரபுரீதியான மற்றும் சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகளை திட்டமிடுதல், நடாத்துதல், முகாமைத்துவம் மற்றும் கண்காணித்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முன்னேற்றம் கருதி பிரபலமாக்குவதற்கு மற்றும் நல்லெண்ணத்தை அதிகரிப்பதற்கு ஏதுவான நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக கவனத்தை ஈர்ப்பது இப்பகுதியின் பங்களிப்பாவதுடன், முக்கிய இடத்தையும் பெறுகிறது. இது ஊடக, ஊடகப் பயணங்கள், ஊடக விழாக்கள் மற்றும் ஊடக கலந்துரையாடல்கள் செய்தி அறிவிப்புக்கள், வீடியோ திரைப்படங்கள், புகைப்பட அல்பம் மற்றும் ஏனைய அதனோடு சமனான நிகழ்ச்சிகள் ஊடாகவும் மற்றும் இப்பகுதியின் செயற்பாடுகள் மீது வெளியிடுகின்ற அறிக்கைகள் தயாரிப்பு மூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.


உள்ளக கணக்காய்வு பகுதி

நிருவாக செயல்முறைகளில் ஆக்கத்திறனை மதிப்பிடல், அச்செயன்முறைகளை உறுதிப்படுத்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் புதிய நிருவாக செயன்முறையை நிருவுவதற்காக உள்ளக கணக்காய்வு பகுதியினால் முக்கிய பணியொன்று நிறைவேற்றப்படுகிறது. தலைவர் மற்றும் கணக்காய்வு குழுவின் தலைவருக்கு உள்ளக கணக்காய்வு அறிக்கை பெற்றுக்கொடுக்கப்படும். உள்ளக கணக்காய்வு பகுதியின் பொறுப்பாவது உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை அமுல்படுத்துவதாகும்.

உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறை மற்றும் இடர் முகாமைத்துவம்

உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறைகள் மற்றும் அவற்றின் ஆக்கத்திறன் தொடர்பான பொறுப்பு பணிப்பாளர் சபைக்குறியதாகும். சோத்துக்களை பாதுகாத்துக்கொள்ளல், சரியான மற்றும் காலத்திற்கேற்ற தகவல்களை பெற்றுக்கொடுத்தல் மற்றும் தீர்மானங்கள் எடுத்தலின் போது மிகவும் அக்கறை கொள்ளுதல் தொடர்பாக வழிகாட்டுதல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு செயல்முறை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. நிதி இயக்கம், இணக்கக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் உட்பட அனைத்து செயல்முறைகளும் இதன்மூலம் உள்வாங்கப்படுகின்றது.

உள்ளக கணக்காய்வு பகுதியின் செயலாற்றுகை



வருமான கணக்காய்வு

துறைமுகத்தின் வருமானம் கிடைக்கப்பெறுதல்கள் தொடர்பான கணக்காய்வுகள், கணக்காய்வு வேலைத்திட்டத்திற்கேற்ப மேற்கொள்ளப்பட்டு அதனூடாக துறைமுக கட்டணங்கள் குறைவாக செலுத்தப்பட்டவையும் கண்டறியப்பட்டன.

கடன்பட்டோர் கணக்குகள், பிணக்கிற்குரிய சிட்டைகள் மற்றும் நிராகரிக்கப்பட்ட காசோலைகள், பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதோடு அவைகளின் வித்தியாசங்கள் அறிக்கையிடப்பட்டன. தரையிறக்கல் மற்றும் விநியோகப் பிரிவுகள் அன்றாடம் பரீட்சிக்கப்பட்டன.

செலவினக் கணக்காய்வு

மூலதன மற்றும் மீண்டு வரும் செலவினங்கள் மற்றும் களஞ்சிய கொடுப்பனவு வவுச்சர்கள் தொடர்பில் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய முறைகேடுகளும் வெளிப்படுத்தப்பட்டன. வாகன ஓட்டக் குறிப்புப் படிவங்களும் வாகன அனுமதி வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பரீட்சிக்கப்பட்டு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தயாரித்தல் தொடர்பில் தொடர்ச்சியாக கவனிக்கப்பட்டு கண்டறியப்பட்ட வித்தியாசங்கள் சுட்டிக்காட்டப்பட்டன.

நிதி கணக்காய்வு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்குஇ இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு மற்றும் ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைவாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கபடுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அதிகார சபையின் இறுதி கணக்குகள் பரீட்சித்தல் இப்பகுதியின் பொறுப்பாகும்.

விசாரணைகள்

தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க, விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஏனைய விசாரணைகள்

பணம் மற்றும் சிறு பண இருப்பு தொடர்பில் அவ்வப்போது திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு முரண்பாடுகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டன.

இணக்க கட்டுப்பாடு

தொழிலாளர் மற்றும் தொழிலாளரல்லாத ஊழியர்கள் சேவை நிலையத்தில் பிரசன்னமாகி இருப்பது தொடர்பில் திடீர் பரிசோதனைகள், அவசர சுற்றிவளைப்புக் குழுவினால் இரவு/ பகல் வேலைமுறைகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. கடமை நேரத்தில் அனுமதியின்றி சேவை நிலையத்தை விட்டுச் சென்ற ஊழியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதன் விளைவாக ஊழியர்கள் தமது சேவை நிலையங்களில் தங்கியிருப்பதற்கு இதன் சிறப்பான உந்துதலாக அமைந்துள்ளது.

களஞ்சியங்கள் தொடர்பான பௌதீக உறுதிப்பாடுகளைப் பரீட்சித்தல்

கொழும்பு துறைமுகத்தின் களஞ்சியங்களில் பௌதீகரீதியான உறுதிப்பாடுகளின் பரீட்சித்தல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதோடு, ஏனைய துறைமுகங்களினது வருடாந்த இருப்பு பரீட்சித்தல்களின் போது ஒத்தாசைகளும் வழங்கப்பட்டன.

பிரதான களஞ்சியங்களின் தொடர்ச்சியான உறுதிப்பாடுகள் பரீட்சிப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படாத பொருட்களின் இருப்பு அடையாளம் காணப்பட்டதுடன், தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு வழங்கல் பகுதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளி துறைமுகங்களின் கணக்காய்வு செயற்பாடுகள்

காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்கள்

காலி மற்றும் திருகோணமலை துறைமுகங்களில் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான கணக்குகள் கணக்காய்வு செய்து அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.



நிதி மீளாய்வு

ஆண்டறிக்கை 2021

வருமானம் (சகல துறைமுகங்களினதும்)

விபரம்	2021	2020	(துறைமுக நடவடிக்கைகள் சாரம்சம்) விபரம்	வருமானம் (ரூபா.மில்) 2021	2020
துறைமுக செயற்பாடுகளிலிருந்து வருமானம்	45,455	38,931	கப்பலோட்டம்	10,793	10,957
ஏனைய வருமானம்	15,152	13,726	கப்பற் சரக்கு ஏற்றுதல்/ இறக்குதல்	20,441	17,847
			வாப்பு கையாளல்	6,260	5,318
			துறைமுக வசதிகள்	6,176	3,444
			ஏனைய சேவை இயக்கம்	1,785	1,365
மொத்த வருமானம்	**60,607**	**52,657**	**உப மொத்தம்**	**45,455**	**38,931**


இயக்க மற்றும் ஏனைய செலவினங்கள் (சகல துறைமுகங்களினதும்)

(ரூபா.மில்லியன்)

விபரம்	2021 செலவினங்கள்	2020 செலவினங்கள்	(அதிகரித்தல்)/ குறைதல்	%
சொத்துக்களை பராமரித்தல்	1,457	957	(500)	(52)
எரிபொருள் , மின்சாரம் மற்றும் நீர்	2,509	2,309	(200)	(9)
வெளிநாட்டுக் கடன் மீதான வட்டி	800	1,532	732	48
மேலதிக நேரம்	5,850	4,941	(909)	(18)
தேய்மனாம் (தவணை முறையில் நிதி செலுத்துதல்)	3,957	4,090	133	3
சம்பளங்கள் வேதனங்கள் மற்றும் கொடுப்பனவுகள்	16,410	14,981	(1,429)	(10)
ஏனையவை	2,752	2,468	(284)	(12)
செலவினம்	**33,735**	**31,278**	**(2,457)**	**(8)**
வெளிநாட்டு நாணய மாற்று/ (நட்டம்/இலாபம்	1,270	1,052	(218)	(21)
வெளிநாட்டு நாணய மாற்று இழப்பு அடங்கலான மொத்தச் செலவினம்	**35,005**	**32,330**	**(2,675)**	**(8)**

கொழும்பு துறைமுகம்


2021 ஆம் ஆண்டில் கொழும்பு துறைமுகத்தில் ரூபா 25,107 மில்லியன் இயக்க இலாபமொன்று பதிவாகியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் தேறிய வருமானம் ரூபா 50,231 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2020 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 58,715 மில்லியனாவதோடு இது ரூபா 8,484 மில்லியன் அதிகரிப்பாகும். 2020 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 30,618 மில்லியன்களாகும். (ரூபா 999 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) 2021 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான செலவு ரூபா 33,232 மில்லியன்களாகும். (ரூபா 1,291 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) இது 9% குறைவாகும்.



காலி துறைமுகம்

2021 ஆம் ஆண்டில் காலி துறைமுகத்தில் 130 மில்லியன் இயக்க நட்டம் பதிவாகியுள்ளது. 2020 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் ரூபா 1,376 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் தேறிய இலாபம் 956 மில்லியன் ஆனதோடு அது ரூபா 420 மில்லியன் குறைவாகும்.


2020 வருடத்தில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 877 மில்லியன் ஆனதோடு (ரூபா 52 மில்லியன் அந்நிய செலாவணி நட்டம் அடங்கலாக) 2021 ஆம் அண்டில் செலவினம் ரூபா 828 மில்லியன் ஆகியது. (ரூபா 21 மில்லியன் அந்நிய செலாவணி இலாபம் அடங்கலாக) இது 6% குறைவாகும்.



திருகோணமலை துறைமுகம்

2021 ஆம் ஆண்டில் திருகோணமலை துறைமுகம் ரூபா 112 மில்லியன் இயக்க நட்டமொன்றை பதிவு செய்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் தேறிய மொத்த வருமானமான ரூபா 1,051 மில்லியனுக்கு ஒப்பாக 2021 வருடத்தில் தேறிய வருமானம் ரூபா 936 மில்லியன் ஆக பதியப்பட்டது. இது ரூபா 115 மில்லியன் குறைவாகும்.

2020 ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவினம் ரூபா 835 மில்லியன் ஆனதோடு, 2021 ஆம் ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவு ரூபா 946 மில்லியனாக பதிவாகியது இது 13% அதிகரிப்பாகும்.



உறுதியான நிறுவனரீதியிலான கலாசாரமொன்றினை உருவாக்குவதில் எமது ஊழியர்கள் மிகவும் முக்கியமான காரணியாவதால், இலங்கை துறைமுக அதிகாரசபையின் இயக்கங்களுடன் பொருந்தும் வகையில் மனிதவள ஒழுங்குபடுத்தலின் முக்கியத்துவம் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவம் சிறப்பாக அறிந்திருக்கிறது. எனவே, வெளியக/ உள்ளக ஆட்சேர்ப்பு, சேவை நிபந்தனைகள், அனுகூலமான முகாமைத்துவம், ஊழியர் பொதுநலம் அதேபோன்று ஊழயர்களின் திறமைகள் மற்றும் உளப்பாங்கினை விருத்தி செய்வதன் ஊடாக எமது மனித மூலதனத்தை விருத்தி செய்வதற்கு பரந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. 2021.12.31 ஆம் திகதிக்கு எமது ஊழியர்களின் எண்ணிக்கை 8900 ஆகும்.

எமது ஊழியர்களின் அர்ப்பணிப்பினூடாக இலங்கை துறைமுக அதிகாரசபையின் பெறுமானம் அதிகரித்துள்ளதோடு, அதற்கு பிரதி உபகாரமாக போட்டியான சம்பளம், பலவித பிரதிபலன்கள், கற்கை மற்றும் ஊழியர்களின் முன்னேற்றம் தொடர்பில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் அவர்களின் தகுதிகள் மற்றும் விசேட ஆற்றல் மீது சேவையாற்றுவதற்கான சூழலை உருவாக்குவதன் மூலம் இலங்கை துறைமுக அதிகாரசபையும் ஊழியர்களின் மதிப்பினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எமது ஊழியர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு புறம்பாக மேலால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினை மீளாய்வு செய்தல், நிறைற்றுதர மற்றும் நிறைவேற்று தரமல்லாத பதவிகளுக்கு புதிய ஆட்சேர்ப்பு விதிமுறையொன்று தயாரித்தல் மற்றும் தகுந்த சரியான உளப்பாங்கு, தேவையான அனுபவத்துடன் கூடிய ஊழியர்களை கவர்ந்து கொள்ளக்கூடிய பூரணமான மனிவளக் கொள்கையளொன்றினை தயாரிக்கும் செயற்பாட்டில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. ஊழியர்கள் ஆட்சேர்க்கும் போது, பதவியுயர்வு வழங்கும்போது, அல்லது சம்பளம் வழங்கும் போது ஆண்/ பெண் வேறுபாடு, இனம் அல்லது ஏனைய எதுவித வேறுபாடுகளும் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைக்கிடையிலும் மீளாய்வாண்டினுள் ஒட்டுமொத்த பணியாளர்களினதும் ஆரம்ப சம்பளத்திலிருந்து 25% சம்பள அதிகரிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு,நிறைவேற்றதரமல்லாத தரங்களில் இருந்து வந்த சம்பள முரண்பாடுகள் சிறப்பாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும் கொவிட் - 19 தொற்றுக்கால எல்லையில் பூஸ்டர் தடுப்பு மருந்து உட்பட அனைத்து தடுப்பு ஊசி மருந்துகளும் மற்றும் ஏனைய மருத்துவ உதவிகள் பெற்றுக்கொடுப்பதற்கு மேலதிகமாக, நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியாக பேணிச்செல்லல் மற்றும் ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினை பேணிச்செல்மலும் பொருட்டு வேலைமாற்றமுறை, வாகனப் போக்குவரத்து வசதிகள் பெற்றுக்கொடுத்தல் போன்ற பதிய விதிமுறைகளை உருவாக்குவதனூடாக எமது பணியினருக்கு சலுகைகள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மீளாய்வுக்குட்படும் ஆண்டினுள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஒன்றிணைந்த சமூகப் பொறுப்புக்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- க.பொ.த. (சா/த) மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சைகளில் மிகவும் சிறந்த முறையில் சித்தி பெற்ற துறைமுக ஊழியர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்கள் வழங்குதல்.

- துறைமுக ஊழியர்களது சிறு பிள்ளைகளின் நலன்புரி தொடர்பிலான சகல வசதிகளையும் கொண்ட பகல்நேர பராமரிப்பு நிலையம் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

- சகல வசதிகளையும் கொண்ட துறைமுக தீயணைப்புப் படைப்பிரிவு அதன் பணிகளில் கொழும்பு மாநகர சபைக்கு உதவியுள்ளதுடன் கொழும்பு மற்றும் அண்டிய பிரதேசங்களில் அவசர நிலைமைகளின் போது தீயணைக்கும் நடவடிக்கைகளில் தனது ஒத்துழைப்பையும் நல்கியுள்ளது.

- முல்லேரியாவிலுள்ள மனநோயாளர் வைத்தியசாலையின் நோயாளர் விடுதியொன்றை பராமரித்தல்.

ஒன்றிணைந்த நிருவாகம் என்பதன் பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய சகல தரப்பினர்களினதும் நலனுக்காக வளங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நிறுவனத்தை உரிய வழிகாட்டல்களோடு நிர்வகித்து நடாத்திச் செல்லப்படுவதற்காக அந்நிறுவனத்தினால் ஏற்படுத்தப்படும் ஒட்டுமொத்த செயற்பாடு இதுவாகும். நல்லாட்சி பேணப்படுதல் தொடர்பிலான முக்கிய பொறுப்பு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அதன் பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடையும் பொருட்டு அதன் செயற்பாடுகள், நிர்வாக மற்றும் உரிய முறையில் செயற்படுகின்றமை தொடர்பில் அவர்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் இதற்கு தொழில்சார் அலுவலர்கள் அவர்களுக்குரிய செயற்பாட்டுத் துறைகளில் பங்களிப்பு வழங்குவதன் மூலம் வசதிகள் செய்தல் வேண்டும். இப்பணியினுள் உள்ளக கணக்காய்வாளர்களுக்கு நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பில் பரீட்சிப்பதற்கும் அங்கீகார நடைமுறைகளிலிருந்து வழுகிச் செல்லும் சந்தர்ப்பங்கள் இருப்பின் அது தொடர்பில் அறிக்கை செய்யப்படுதலின் ஊடாக முக்கிய பணி மேற்கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இயக்க மற்றும் நிதிசார்ந்த விடயங்களில் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகையினை அடையப்பெறுவதற்கான பரிந்துரைகள் உள்ளக கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்டு அதனூடாக ஒட்டுமொத்த நல்லாட்சிக்கான பங்களிப்பு செய்யப்படுகின்றது.

நிதிசார்ந்த மற்றும் கையாளல் செயற்பாடுகள் அறிக்கை செய்யப்படும் உயர் நிலை மற்றும் தொடர்ச்சியான தன்மை தொடர்பில் தமக்கு வழங்கப்பட்டுள்ள பணிகள் எவ்வகையில் நிறைவேற்றப்படுகின்றதென்பதை முகாமைத்துவம் பணிப்பாளர் சபையுடன் தொடர்பு கொள்ளும் தகவல்களின் உயர் நிலை, வெளிப்படையான நிறுவனமொன்றினை நடாத்திச் செல்வதற்கு அவர்களின் உயர் அர்ப்பணிப்பு இன்றியமையாததாகும். இதற்கு உயர் நிலையிலான ஒன்றிணைந்த நிர்வாகம் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கு அதிகாரசபை உறுதிபூண்டுள்ளது.

அதிகாரசபையின் நிர்வாகம் பேணிச்செல்லல் தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்பு வகிக்கின்றது. சிறந்த நடைமுறைகள் செயற்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான சட்டதிட்டங்கள், விதிகள், அமைப்பு முறைகள் மற்றும் செயற்பாடுகள் மேம்படுத்தப்படுதலில் குறிப்பிடத்தக்க கவனம் அதிகாரசபையினால் தொடர்ச்சியாக செலுத்தப்படுகின்றது.
அதிகாரசபையினால் அதன் நிர்வாகப் பணிகள் தொடர்பான அமைப்பு முறைகள் தொடர்ச்சியான திருத்தங்களுக்கு உட்படுத்தப்படுகின்றன.

நிதி ஆண்டினுள் அதிகாரசபையினால் அனுசரித்து செல்லப்பட்டுள்ள சிறந்த ஒன்றிணைந்த நிர்வாக அடிப்படைகள் பின்வரும் தலைப்புக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

- பணிப்பாளர் சபை மற்றும் சபையின் உப குழுக்கள்
- உள்ளக கட்டுப்பாடு
- உள்ளக கணக்காய்வு
- ஒழுக்காற்று சட்டங்கள்
- பொது திறைசேரி, நெடுஞ்சாலைகள் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுடனான தொடர்பு
- நிதிச்சட்ட மற்றும் சட்ட முறையிலான தேவைப்பாடுகளுக்கு இணங்கி செயற்படுதல்
- அரச தொழில் முயற்சிகள் தொடர்பில் நல்லாட்சிக்கான வழிகாட்டல்கள்

நிதி அமைச்சின் அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் அரச தொழில் முயற்சி நல்லாட்சிக்கான வழிகாட்டல்களில் இனம் காணப்பட்ட சில சரத்துகளிலிருந்து ஒதுங்குவதற்கு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சர் ஆகியோரினால் ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளுக்கு அனுமதி வழங்குவதற்கு எடுத்த அமைச்சரவையின் தீர்மானம் பின்பற்றப்பட்டு துறையினுள் உயர் போட்டித்தன்மை மற்றும் செயன்முறையின் அரச துறை நிறுவனமொன்றாக மாறுவதற்கு தேவைப்படும் நெகிழ்வுத்தன்மையும், சுதந்திரமும் உறுதிப்படுத்தும் பொருட்டு "நிர்வாகம் தொடர்பான நடைமுறைக் கோவையொன்று" இலங்கை துறைமுக

அதிகாரசபையினால்
நகல்படுத்தப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையும் சபையின் உப குழுக்களும்

பணிப்பாளர் சபை தலைவர், உப தலைவர் மற்றும் 07 பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் உயர் தொழில் மற்றும் தனிப்பட்ட வகையில் நீதி நெறியுடையவர்களாகவும் அதிகாரசபை ஈடுபட்டிருக்கும் துறையின் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணிப்பாளர் சபைக்கு அங்கத்தவர்களைத் தெரிவு செய்தல் கீழ் கண்டவாறு அமையும்.

- துறைமுக அபிவிருத்தி அல்லது துறைமுக இயக்கம் அல்லது சட்டம் அல்லது நிதி விடயங்கள் அல்லது கப்பற்றுறை அல்லது வர்த்தகம் அல்லது பொறியியல் நடவடிக்கைகள் அல்லது நிர்வாகம், தொழிலாளர் தொடர்பு சம்பந்தமான அனுபவம் மற்றும் ஆற்றலுடையோர் என அமைச்சரினால் கருதப்படுவோரில் தலைவர் உட்பட பணிப்பாளர்கள் 04 பேர் அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

- சரத்தின் 13:1 பிரிவின் கீழ் முகாமைப் பணிப்பாளர் அமைச்சரினால் நியமிக்கப்படுவார்.

- நிதி விடயங்கள் தொடர்பிலான அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பொதுத் திறைசேரியின் பிரதிநிதியொருவர்.

- சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் மீன்பிடி தொடர்பான விடயங்களில் அமைச்சுக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவர்.

தலைவர் தவிர்ந்த உப சரத்து (1) (அ) அல்லது (1) (இ) யின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களிரொருவர் துறைமுக அதிகாரசபையின் உப தலைவராக அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

தலைவருக்கும், உப தலைவருக்கும், முகாமைப் பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் தெளிவாக வெவ்வேறாக விளக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று தரத்திலல்லாத சகல பணிப்பாளர்களும் ஆழ்ந்த அறிவு மற்றும் முறையான அனுபவங்களின் மீது அதிகாரசபைக்கு சேவைகளை வழங்குவர். இவ்வறிக்கையின் காலப்பகுதியில் பதவி வகித்த அதிகாரசபையின் பணிப்பாளர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் 17-22 ஆம் பக்கங்களில் காட்டப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபையின் பிரதான கடமைகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு

- மூலோபாயமான நோக்கங்கள், கொள்கைகள், குறிக்கோள்கள் மூலம் பணிகளைக் கையாள்தல்.

- நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றும் செயலாற்றுகையினை மேற்பார்வை செய்தல்.

- போதுமானளவு உள்ளக கட்டுப்பாடு மற்றும் உயர் தரத்திலான நெறியினைப் பேண உத்தரவாதமளித்தல்.

- நோக்கத்தினை அமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல், விதிமுறைகளை தயாரித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்கு உத்தரவாதமளித்தல்.

- சகல பிரதான வர்த்தக நடவடிக்கைகளின் இடர்பாடு நிலைமைகளை இனம்கண்டு தகுந்த போதுமான கட்டுப்பாடு பேணல், இடர்பாடு நிலைமைகள் தொடர்பில் காலத்திற்கேற்றவாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான குறித்த நிலைமை அறிக்கை செய்யப்படும் மேற்பார்வை செயல்முறை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றதென்பதில் உத்தரவாதமளித்தல்.

பணிப்பாளர் சபை தொடர்ச்சியாக கூட்டங்களை நடாத்துவதோடு

மீளாய்வுக்குட்படும் வருடத்தில் பணிப்பாளர் சபையானது 14 முறை கூடியது. பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்குத் தேவையான விபரங்கள் காலத்திற்கேற்ப பெற்றுக் கொள்ள முடியும். பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவரின் ஆலோசனையின் மீது நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதோடு ஒவ்வொரு பணிப்பாளர் சபையின் கூட்டத்திற்கு முன்னர் எல்லா பணிப்பாளர்களுக்கும் விபரமான அறிக்கை அனுப்பி வைக்கப்படும். பணிப்பாளர் சபையில் கலந்து ஆலோசிப்பதற்குள்ள ஏனைய விடயங்களில் இயக்கம், நிதிச் செயலாற்றுகை சுட்டெண்களை மீளாய்வு செய்தல், பிரதான மூலதன செலவினத் திட்டம் மற்றும் பிரேரணைகள் அதன் வரையறையினுள் அங்கீகரித்தலும் அடங்கும்.

முன்வைக்கப்பட்ட எல்லா பரிந்துரைகள் சம்பந்தமாக, பணிப்பாளர் சபையின் இறுதி அனுமதி கிடைக்கப்பெறுதலுக்குட்பட்டதாக சில பொறுப்புக்கள் தொடர்பில் செயற்படுவதற்கு கணக்காய்வுக் குழுவிடமும் முகாமைத்துவ குழு உள்ளடங்கலான சில உப குழுக்களிடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவக் குழு

தலைவர், உப தலைவர், முகாமைப் பணிப்பாளர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அடங்கலாக பணிப்பாளர் சபையின் 04 அங்கத்தவர்கள் உட்பட முழு நேர 07 பணிப்பாளர்கள், ஹாபர் மாஸ்டர் ஆகியோர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களாக செயற்பட்டனர்.

அன்றாட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கையாளல் நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படுகையில் வெற்றிகரமான வர்த்தக நிறுவனமொன்றாக மனிதவளம் உள்ளிட்ட வளங்களின் உச்ச பயன்பாடு பெறப்படுவதற்கும் துறைமுக நுகர்வோர்களுக்கும் ஏனைய சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்கப்படும் சேவைகளின் தன்மை உயர்த்தப்படுவதற்கும் முகாமைத்துவ குழு பல்வேறு பாகங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டது.

அதன் கூட்டங்களின் போது சகல கொள்கை சார்ந்த விடயங்கள் போன்று தீர்மானங்கள் நடைமுறைப்படுத்துதற்கு முன்னர் அவை பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் உடன்பாடு பெறுவதற்கு முன்னரும் துல்லியமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டன. தீர்மானங்கள் முன் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டன. இச்செயற்பாடுகள் தாமதங்களின்றி வெற்றிகரமாக நிறைவேற்றும் பொருட்டு முகாமைத்துவக் குழுவினால் மாதத்திற்கு இருமுறை கூடி தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன முகாமைத்துவக் குழுவினால் இவ்வருடத்தினுள் 11 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

கணக்காய்வுக் குழு

பணிப்பாளர் சபையின் அங்கத்தவரான பொது திறைசேரியின் பிரதிநிதி, சுங்கத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவர் இக்குழு கொண்டுள்ளது.

கணக்காய்வுக் குழுவினால் கொள்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடு விதிமுறைகளின் செயற்பாடு மீளாய்வு செய்யப்பட்டு செயற்திறனை ஆராயந்து பார்த்தல் மற்றும் உள்ளக கணக்காய்வு அறிக்கை மற்றும் அரசாங்க கணக்காய்வுக் கடிதங்கள் பரிட்சித்துப் பார்க்கப்பட்டு அவைகளின் பரிந்துரைகள் பகுதித் தலைவர்களினால் அனுசரிக்கப்படுகின்றவையென பணிப்பாளர் சபை ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேபோன்று பணிப்பாளர் சபையின் வழிகாட்டலின் கீழ் அதிகாரசபைக்கு நிதியினாலும் இயக்க செயற்பாடுகளினாலும் நிலவும் இடர்பாடுகள் சிறந்த முறையிலான வரைவிலக்கண செயற்பாடுகளினூடாக அடையாளம் காண்பதற்கும் அவ்வாறான இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்தும் பொறிமுறையொன்றினை அதிகாரசபை கொண்டுள்ளதனை முகாமைத்துவக் குழு உறுதிப்படுத்துகின்றது.

ஊழியர்கள் மற்றும் துறைமுக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நபர்களினது நலன்களின் வினைத்திறன் மேம்படுத்தப்படுவதற்கும் வளங்களினது உற்பத்தித் திறன் உயர்த்தப்படுவதற்குமான நிதி மற்றும் கையாளல் தொடர்பில் நிலவும் விதிகள்,

முறைமைகள் வலுப்படுத்தப்படுவதற்காக நாள் தோறும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கை செய்தல் இக்குழுவின் பொறுப்பாகும்.

உள்ளக கட்டுப்பாடு

எந்தவொரு அமைப்பிலும் செயற்திறன் மிக்க முகாமைத்துவத்திற்காக திறனாக இயங்கக் கூடிய உள்ளக கட்டுப்பாடு முறையொன்று இருப்பது அவசியமாகும். அதிகாரசபையின் உள்ளக கட்டுப்பாட்டு செயற்பாடுகளின் மீளாய்வு தொடர்பான சகல பொறுப்பும் பணிப்பாளர் சபையைச் சாரும். பின்பற்றப்பட வேண்டிய கொள்கை முறைகள் பற்றியதில் விரிவான ஒழுங்கு விதிகள் அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டு அவை அடிக்கடி மீளாய்வு செய்யப்பட்டு முறைப்படுத்தப்படும் வர்த்தக ரீதியான நோக்கங்களை அடைவதற்கு இடையூறாக இருக்கும் இடர்களுக்கு முகம் கொடுப்பதற்காக செயற்பாட்டு முறையொன்று திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய அதிகாரசபையின் சொத்துக்களை அனுமதியின்றி பாவித்தல் அல்லது அவற்றை பாதுகாத்தல், முறையான அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் நிகழும் தகவல்களின் நம்பகத்தன்மை தொடர்பான தேவையான அளவு சான்றுகளையும் இக்குழு வழங்கும்.

அதிகாரசபையின் அமைப்புக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களின் மூலம் அதன் திறன் நேர்மைத் தன்மை, சீரிய நிலைமை மற்றும் சிறந்த தொடர்பாடல் சூழல் பேணப்படுதலின் அதிகாரசபையின் அர்ப்பணிப்புடனான செயற்பாடு உள்ளக கட்டுப்பாட்டிற்கு உறுதுணையாகும்.

உள்ளக கணக்காய்வாளர்கள்

பூரண தகுதி வாய்ந்த பட்டயம் பெற்ற கணக்காளரொருவரினால் உள்ளக கணக்காய்வுப் பகுதியின் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்பகுதி, பூரண சுதந்திரமாக இயங்குகின்றது. தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவுக்கும் நேரடியாக பொறுப்பு வகிக்கும்.

தலைவரினதும் கணக்காய்வுக் குழுவின் அறிவுரைகளுக்கும் இணங்க இப்பகுதிக்குரிய விடய பணிகள் தயாரிக்கப்படுகின்றன. விடய உள்ளடக்கம் சம்பந்தப்பட்ட திருத்தங்களுக்காக தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன. பிரதானமாக முழு உள்ளக கட்டுப்பாடு தொகுதி உள்ளக கணக்காய்வுப் பகுதியினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. உள்ளக கணக்காய்வானது, உள்ளக கட்டுப்பாடு முறைகளின் வினைத்திறன் மற்றும் பயனானத்தன்மை தொடர்பான குறிக்கோள்கள் வெளிக்கொணரப்பட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக செயற்பாட்டுத் திட்டங்கள் மதிப்பிடப்படும்.

ஒழுக்கச் சட்ட விதிகள்

ஏற்றுக்கொள்ளக் கூடிய உயர் மட்ட ஒழுக்க நடைமுறை பேணப்படுதலுக்கு வழிகாட்டுவதற்காக ஒழுக்க விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. சகல பணிப்பாளர்கள், பகுதித் தலைவர்கள் மற்றும் ஊழியர்களினால் தமது அன்றாட கடமைகள் நிறைவேற்றப்படுகையில், தமது செயற்பாடுகளிலும் அதிகாரசபையின் புகழ் நாமத்திற்கும் தோற்றப்பாட்டிற்கும் பாதிப்பேற்படுத்தும் சந்தர்ப்பங்களில் உயர் நிலையிலான ஒழுக்க நெறியுடன் நேர்மையாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதலை அதிகாரசபை எதிர்பார்க்கின்றது.

ஒழுக்கச் சட்ட விதிகளின் அடிப்படைகள்;

- சகல நடவடிக்கைகளின் போது நேர்மை, நியாயம் மற்றும் பக்க சார்பின்மை பேணுதல்
- சட்டம் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு கீழ்ப்படிதல்
- நிறைவேற்றப்படும் சகல நடவடிக்கைகள் தொடர்பிலும் அந்தரங்கத்தன்மை.
- அதிகாரசபைக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் செயற்படுவதைத் தவிர்த்தல்.

அனுகூலமான திட்ட வரம்பு மற்றும் சாசன சட்ட தேவைகளுக்கு உட்படல்

எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கு ஏற்ப செயற்படுவதானது இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். இந்நோக்கப்பாட்டின் போது அதிகாரசபையானது எல்லா சாசன மற்றும் சட்ட தேவைகளுக்கும் ஏற்ப செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நிதி மற்றும் உள்ளக கணக்காய்வு

பகுதிகள் ஊக்கத்துடன் செயற்படுகின்றன. அதற்கு மேலதிகமாக சட்டப் பகுதி அதிகாரசபையின் வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கருமங்கள் சட்ட நியதிகளுக்கு ஏற்ப இடம்பெற உறுதிப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது.

துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சு, நிதி அமைச்சு மற்றும் நிதியமைச்சின் பொது திறைசேரியுடனான தொடர்பு

உரிய வழியில் மற்றும் மூலோபாயமான நோக்கத்தினை அடைந்து கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு வழிகாட்டும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர், அமைச்சின் செயலாளர் மூலம் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றனர். அதற்கு மேலதிகமாக நிதி அமைச்சின் பொது திறைசேரியின் தேவைக்கேற்ப மூன்றாண்டு காலத்திற்கான வர்த்தகத் திட்டம், நிதி மற்றும் ஏனைய இயக்க செயற்பாட்டு அறிக்கை உள்ளடங்கலான முழுமையான அறிக்கைகள் காலாண்டு அடிப்படையில் அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டன.

குறிப்பிடப்பட்ட பங்குதாரர் தொடர்பான வெளிப்பாடு

இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் கொடுக்கல் வாங்கல்கள் செய்யும் தரப்பினர் சம்பந்தமாகவும் தனிப்பட்ட அக்கறை அல்லது உறவு தங்களிடத்தில் இல்லையென பணிப்பாளர் சபை உறுதிப்படுத்தி அறிவிக்கின்றது.

பொறுப்பு

இலங்கை துறைமுக அதிகாரசபையின் நிதி அறிக்கைகள் அதிகாரசபையின் குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயத் தன்மையினைப் பிரதிபலிப்பதெனவும் அவ்வறிக்கையானது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேவைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளதென்பதும் பணிப்பாளர் சபையின் கருத்தாகும்.

எதிர்காலம்

உண்மைப் பெறுமதியுடன் ஒட்டுமொத்த திரட்டிய நிர்வாகம் நிலைத்து நிற்பதற்கு கண்மூடித்தனமான திருப்தியடையக்கூடிய முறைகள் மற்றும் கொள்கைகள் போன்றவற்றில் அன்றி உண்மையான முறையில் அனைத்து பங்காளர்களினதும் நம்பிக்கையினை வெல்லக் கூடிய உயர்ந்த செயல்பாட்டுடன் நியாய முறையில் பேணிச் செல்வதன் மூலம் நிலை நாட்டமுடியும் என்பதை இலங்கை துறைமுக அதிகாரசபை நம்புகின்றது. அதன் மூலம் தனது வர்த்தக நடவடிக்கைகளை வெளிப்படையுடனும் உயர்ந்த நம்பிக்கை மற்றும் தியாகத்துடனும் நிறைவேற்றுவதன் மூலம் அவர்களும் எமது மூலோபாயங்களுக்கு உதவியிருப்பர்.



துறைமுக புள்ளி விபரங்கள்

ஆண்டறிக்கை 2021

கொழும்பு துறைமுகம்

துறைமுக பரிமாணம்

துறைமுக பிரதேசம்

துறைமுக தடாக பிரதேசம்	184.6 ஹெக்டயார்
வட மேல் அலைதாங்கியின் நீளம்	810 மீட்டர்
வட கிழக்கு அலைதாங்கியின் நீளம்	330 மீட்டர்
மேற்கு நுழைவாயில்	230 மீட்டர் X 16 மீட்டர்
வடக்கு நுழைவாயில்	190 மீட்டர் X 13 மீட்டர்

வேலை நேரங்கள்
வருடத்தின் சகல நாட்களிலும் 24 மணித்தியால சேவை அடிப்படையில் கொழும்பு துறைமுகம் இயங்குகிறது.

2021 இல் கையாளப்பட்ட கப்பல் சரக்குகளின் அளவு

A-கொள்கலனிலிடப்பட்டவை	91.1%
B-பிரித்த மொத்தம்	0.8%
C-உலர் மொத்தம்	3.0%
D-திரவ மொத்தம்	5.1%

புதிய கொழும்பு தெற்கு துறைமுகம்

துறைமுகப் பிரதேசம்

துறைமுக தடாக பிரதேசம்	192.0 ஹெக்டயார்
தென்மேற்கு அலைதாங்கியின் நீளம்	5,140 மீட்டர்
வடமேற்கு அலைதாங்கியின் நீளம்	1,550 மீட்டர்
பிரதான நுழைவாயில்	570 மீட்டர் X 18 மீட்டர்

காலி துறைமுகம்

துறைமுக பரிமாணம்

நீர் பிரதேசம்	15.3718 ஹெக்டயார்
உட்பிரவேச கால்வாய்	140 மீட்டர்
நிலப் பிரதேசம்	16.4015 ஹெக்டயார்
மொத்த அதிகூடிய நீள அளவு	130 மீட்டர்
அதிகூடிய ஆழம்	7.3 மீட்டர்

வேலை நேரங்கள்

மே தினம் பகல் நேரத்தில் மாத்திரம் கப்பல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்பதோடு வருடத்தின் சகல நாட்களிலும் காலி துறைமுக வேலைகள் 24 மணித்தியாலய அடிப்படையில் இடம் பெறும்.

வழி விலகும் காலம்

கிழக்கு - மேற்கு பிரதான கடல் மார்க்கத்திலிருந்து பயணக் காலம் எதுவுமில்லை.

நங்கூர வசதிகள்

மொத்த கரையோர நங்கூரத்தளங்கள் – 05

நங்கூரத்தளம்	முழு நீளம் (மீ)	கரையோர ஆழம் (மீ)
குளோசன்பேர்க் ஜெட்டி	420	8.9
புதிய பாலம்	162	8.9
புதிய பாலம் / குறுக்காக	84	8.9

களஞ்சியசாலை வசதிகள்

பெயர் அல்லது அமைவிடம்	அலகுகளின் எண்ணிக்கை	சராசரி உயரம் (அடி.)	பிரதேசம் (ச.அ)	கொள்ளளவு (கன. அடி)	கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி)
இல. 01	06	23	20,000	460,000	10 உயரம்
இல. 02	12	23	40,000	920,000	10 உயரம்
ஜி.எஸ் சி டி	07	23	23333.3	536666.7	10 உயரம்
இதுஅச	05	23	16666.7	383333.3	10 உயரம்

இல.2 களஞ்சியசாலையின் 7 அலகுகள் 15.01.2018 – 14.01.2023 வரையிலான காலப்பகுதிக்கு காலி நிலக்கீழ் கேபள் டிபோர்ட்(GSCD)இற்கு வழங்கப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகம்

துறைமுக பரிமாணம்

நீர் பிரதேசம்	1,536 ஹெக்டயார்
உட்பிரவேச கால்வாய் (ஆகக் குறைந்த அகலம்)	500 மீட்டர்
நில பிரதேசம்	2,254 ஹெக்டயார்

வேலை நேரங்கள்

திருகோணமலை துறைமுகத்தில் மே தினத்தில் பகல் நேரத்தில் மாத்திரம் கையாளல் நடவடிக்கைகள் இடம்பெறுவதோடு திருகோணமலை துறைமுகத்தில் தவிர்ந்த வருடத்தின் அனைத்து நாட்களிலும் 24 மணித்தியால அடிப்படையில் சேவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கப்பல் பயணங்கள் பகல் காலங்களில் மட்டுமே இடம்பெறும்.

நங்கூரத்தள வசதிகள்

இலங்கை துறைமுக அதிகார சபையின் நங்கூரத்தளங்கள்

நங்கூரத்தளம்	முழு நீளம் (மீ)	கரையோர ஆழம் (மீ)
அஷ்ரப் இறங்குதுறை	250	12.5
பக்க துறைமேடைகள் (அஷ்ரப் இறங்குதுறை)	90 X 2	8.5
மட்கோவ் துறைமேடை	45	3.5
ரீரீஏ துறைமேடை (TTA)	190	2.0-4.0
சிலோன் துறைமேடை	50	2.5
நகர துறைமேடை	50	2.5
மூதூர் துறைமேடை	60	3.0
வீஎஸ்ஓ துறைமேடை (VSO)	25	1.5
பழைய நகர துறைமேடை	60	2.0
எண்ணெய் துறைமேடை	130	9.75

ஏனைய துறைமேடைகள்

நங்கூரத்தளம்	முழு நீளம் (மீ)	கரையோர ஆழம் (மீ)
பிரிமா துறைமேடை (உள்ளக)	122	5.9
பிரிமா துறைமேடை (வெளியக)	227	14.3
பிரிமா துறைமேடை (பன்நோக்கு)	170	10.3
டோக்கியோ சீமெந்து துறைமேடை	160	9.5

குதங்கள் பற்றிய விபரங்கள் – ரீரீஏ (TTA)

குதம்	பரிமாணம் (அடி	சராசரி உயரம் (அடி)	பரப்பளவு (ச.அடி)	கொள்கலன் அடுக்கும் உயரம் (அடி)	கொள்ளளவு (க.அடி)
இல. 01	75 X 34	-	2,550	12	30,600
இல. 02 மற்றும் 03	90 X 70	15	6,300	12	75,600
இல .04	190 X 95	19	18,050	14	252,700
இல. 05 A	150 X 110	25	16,500	15	247,500
இல 05 B	150 X 80	15	12,000	12	144,000
இல. 06	300 X 110	20	33,000	15	495,000
இல. 07	96 X 36	-	3,456	12	41,472

ஹம்பாந்தோட்டை துறைமுகம்

துறைமுக பரிமாணம்

துறைமுகப் பிரதேசம்

துறைமுக நீர் பிரதேசம்	200 ஹெக்டயர்
மேற்கு அலைதாங்கியின் நீளம்	350 மீட்டர்
கிழக்கு அலைதாங்கியின் நீளம்	250 மீட்டர்
உட்பிரவேச கால்வாய்	210 மீட்டர்
திருப்பும் வட்டம்	600 மீட்டர்

துறைமேடையின் நீளம்

பொதுவான கப்பற் சரக்கு துறைமேடை	600 **மீட்டர்**
சேவைத் துறைமேடை	208 மீட்டர்
எண்ணெய் துறைமேடை 1	310 மீட்டர்
எண்ணெய் துறைமேடை 2	300 மீட்டர்
நீர்த் தடாக ஆழம்	17 மீட்டர்
கப்பல் வடிவமைப்பு	100,000 நிறை தொன்

ஹம்பாந்தோட்டை துறைமுகம் - இரண்டாம் கட்டம்

துறைமுக பரிமாணம்

துறைமுகப் பிரதேசம்

பூர்த்தியடைந்ததன் பின்னர் மொத்த நீர்ப் பிரதேசம்	200 ஹெக்டயார் (கட்டம் 1 இன் நீர்ப் பிரதேசம் அடங்கலாக)
திருப்புவட்டம்	600 மீட்டர்
உட்பிரவேசக்கால்வாய்	210 மீட்டர்

துறைமேடையின் நீளம்

பிரதான கொள்கலன் நங்கூரத்தளம்	835.5 **மீட்டர்**
ஊட்டச்சேவை கொள்கலன் முனையம்	460 மீட்டர்
பல் நோக்கு நங்கூரத்தளம்	838.5 மீட்டர்
பரிமாற்ற நங்கூரத்தளம்	208 மீட்டர்
நீர்த்தடாகத்தின் ஆழம்	17 மீட்டர்
கப்பல் வடிவமைப்பு	100,000 நிறை தொன்

1505 போர்த்துக்கேயரினால் கடற்படைத்தளமாக / துறைமுகமாக உபயோகித்த ஆரம்பிக்கப்பட்டதுடன் மேற்கு உலகில் கொழும்பு பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தமை.

1875 7 ஆம் எட்வெட் மன்னரினால் டிசெம்பர் 09 ஆம் திகதி தென்மேற்கு அலைதாங்கிக்கான அடிக்கல் நாட்டப்படல்.

1882 கொழும்பு துறைமுகத்தின் நிர்வாகப் பணிக்காக "ஹாபர் போர்ட்" என்னும் பெயரில் சபையொன்று நிறுவப்படல்.

1885 1285 மீட்டர் நீளமான தென்மேற்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாகக்கப்படல்.

1898 335 மீட்டர் நீளமான வடகிழக்கு அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1899 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படல்.

1906 814 மீட்டர் நீளமான "ஐலன்ட்" அலைதாங்கியின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1906 உலர் துறைமேடையின் நிர்மாணப்பணிகள் பூர்த்தியாக்கப்படல்.

1909 உலர் துறைமேடைக்கான 250 மீட்டர் நீளமான வழிகாட்டிப் பாலத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல் (ஆழமான நீரில் அமைந்த முதல் கரையோர நங்கூரத்தளம் இதுவாகும்.)

1912 தற்போது ஐய கொள்கலன் முனையம் அமைந்திருக்கும் பிரதேசத்தில் நிலக்கரி இறக்கும் 18 துறைமேடைகளின் வேலைகள் பூர்த்தியாக்கப்படல்.

1912 தென்மேற்கு அலைதாங்கியின் பகுதி 550 மீற்றர் வரை நீடிக்கப்படல்.

1913 துறைமுக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக துறைமுக ஆணைக்குழு அமைக்கப்படல்.

1922 பெற்றோலிய எண்ணெய் வழங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு பூர்த்தி செய்யப்படல்.

1950 9 முதல் 11 மீட்டர் ஆழத்துடன் கூடிய 15 கரையோர நங்கூரத்தளங்கள் 7.5 மீட்டர் ஆழமான நீரில் 02 நங்கூரத்தளங்கள், 55,800 சதுர மீற்றர் கொண்ட அணமித்த களஞ்சியங்கள் மூலம் மேலும் குத வசதிகள் ஏற்படுத்தப்படுவதற்கான வசதிகள் வழங்கப்படுவதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1954 தென்மேற்கு அலைதாங்கியின் கரையோர நங்கூரத்தளத்தின் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு 02 ஆம் எலிசபெத் இராணியினால் அங்குரார்ப்பணம் செய்து வைப்பப்பட்டதனால் அது "எலிசபெத் இராணி இறங்குதுறை" எனப் பெயரிடப்பட்டது. அதில் நங்கூரமிடப்பட்ட முதல் கலம் இங்கிலாந்து அரசுக்குரிய "கோதிக்" எனும் கப்பலாகும்.

1956 17 கரையோர நங்கூரத்தளங்கள், அணமித்த களஞ்சியங்கள் மற்றும் குதங்கள் நிர்மாணிக்கப்படல்.

1958 கொழும்புத் துறைமுகத்தின் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்பட்டு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை ஸ்தாபிக்கப்படல்.

1964 காலி துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1967 துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் நிறுவப்படல்.

1967 திருகோணமலை துறைமுகத்தில் கப்பற்சரக்கு கையாளும் நடவடிக்கைகள் அரசமயமாக்கப்படல்.

1979 துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச்சபை மற்றும் துறைமுக ஒத்துப்பார்த்தலும் பாதுகாப்புக்குமான சேவைகள் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை ஒன்றிணைத்து இலங்கை இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவப்படல்.

1980 ஜப்பான் நாட்டின் உதவியுடன் கொழும்பு துறைமுகத்திற்கான பாரிய திட்டமொன்று தயாரிக்கப்படல்.

1980 எலிசபெத் இராணி இறங்குதுறையின் புதிய முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1982 முதலாவது ''கென்ட்ரி'' பாரம்தூக்கியான ''டன்கோ 80'' சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1982 ஜப்பானிய வ/ப ''பென்றாஓசன் வக்கச்சிக்கு'' ஒன்றிணைந்த கம்பனியுடன் புதிய கொள்கலன் முனையமொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடல்.

1983 சகல அங்கங்களுடன் கூடிய கொளகலன் முனையத்தின் 1 ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 சகல அங்கங்களுடன் கூடிய கொள்கலன் முனையத்தின் ii ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.

1984 ஹிற்ராச்சி வகையின் 04 றான்ஸ்பர் பாரம்தூக்கிகள் எலிசபெத் இராணி கொள்கலன் முனையத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1985 ஜய கொள்கலன் முனையத்தின் 01 ஆம் கட்ட வேலைகள் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

1987 இலங்கை துறைமுக அதிகார சபையின் மஹபொல பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்படுதல்.

1987 ஜய கொள்கலன் முனையத்தின் II ஆம் கட்ட வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1988 கப்பல்களைக் கட்டிவைப்பதற்கு கரைக்கு அப்பால் அமைந்துள்ள ஒருமுனை மிதவை நங்கூரத்தளத்தை அமைத்து சேவையில் ஈடுபடுத்தப்படல்.

1994 புதிய துறைமுக உட்புகு பாதையின் வேலைகள் பூர்த்தி செய்யப்படல்.

1995 ஜய கொள்கலன் முனையத்தின் III ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1996 ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்ட பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1998 ஜக்கிய கொள்கலன் முனையத்தின் வேலைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.

1998 இணைந்த துறைமுகங்கள் (அபிலயேற்றட் போட்ஸ்) சம்மேளனம் நிறுவப்படல்

1999 கிழக்கு கடற்கரையின் ஒலுவில் வெளிச்ச வீட்டை சேவையில் ஈடுபடுத்துதல் அத்தோடு ஒலுவில் கடல்சார் பயிற்சி நிலையத்தையும் திறந்து வைத்தல்.

1999 இராணி இறங்குதுறையில் சவுத் ஏசியா கேட்வே டேர்மினலின் (எஸ்.ஏ.ஜீ.ரீ)

	அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்படல்.
1999	திருகோணமலை துறைமுகத்தில் கரையோர நங்கூரத்தளங்களை நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.
2000	கொழும்பு தென் துறைமுகத்தின் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படல்.
2000	காலி துறைமுகத்தில் புதிய நங்கூரத்தளம் நிர்மாணிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்படல்.
2000	பேலியகொடை கொள்கலன் கப்பற்சரக்கு நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல்.
2000	காலி துறைமுகம் பிராந்திய துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்படும் குறிப்பிட்ட திட்டத்தின் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல்.
2000	வட பாலத்தின் 11 ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.
2000	ஒரே இடத்திலான ஆவணமாக்கல் நிலையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.
2001	காலி துறைமுகத்தின் புதிய துறைமேடை திறந்து வைக்கப்படல்.
2003	ஒலுவில் துறைமுக உட்புகு பாதையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.
2003	குறைகொள்கலன் (எல்.சி.எல்) மற்றும் பிரித்த மொத்த கப்பற் சரக்குகளுக்கான சேவைகள் வழங்கும் நிலையம் ஆரம்பித்து வைக்கப்படல்.
2003	இலங்கை துறைமுக அதிகாரசபையின் கடலக நூதனசாலை திறந்து வைக்கப்படல்.
2003	சிவில் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய கொள்கலன் முனையம் திறந்து வைத்தல்.
2004	ஐக்கிய கொள்கலன் முனையத்தின் கொள்கலன் கையாளும் பணிகள் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.
2004	இலங்கை துறைமுக அதிகாரசபையின் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது.
2004	பாரிய அளவிலான சேவைப் பிரிவான ஜய கொள்கலன் முனையம் தேசிய உற்பத்தித் திறனுக்கான விருதை பெற்றுக்கொள்ளல்.
2004	கொழும்பு துறைமுகத்தினால் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல்.
2005	ஒலுவில் துறைமுகம் மற்றும் வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படல்.
2005	தேசிய உற்பத்தித் திறன் தொடர்பான செயலகத்தினால் மத்திய தர சேவை பிரிவிற்கான திறன் சான்றிதழ் இலங்கை துறைமுக அதிகாரசபையின் மஹபொல பயிற்சி நிலையத்துக்கு வழங்கப்படல்.
2006	கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் பாதுகாப்பு மற்றும் மெகா போர்ட் உபகரணங்கள் அறிமுகம் செய்து வைக்கப்படல்.
2006	கொழும்பு தென் துறைமுக நிர்மாணம் தொடர்பிலான உத்தேச கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செய்திட்டத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.
2006	ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் (முதலாம் கட்டம்) விபரமான வடிவமைப்பு வேலைகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2007 ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைத்தல் மற்றும் நிதி ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2008 ஒலுவில் துறைமுக திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல்.

2008 கொழும்புத் துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுதல்.

2008 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள் ஏற்படுத்துதல் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதிகளின் நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பான உடன்பாடு கைச்சாத்திடல்.

2009 ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் கப்பல்களுக்கு எண்ணெய் வழங்கும் வசதிகள்,எண்ணெய்த் தாங்கித் தொகுதி மற்றும் நிர்வாக கட்டட நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டுதல்.

2009 ஜய கொள்கலன் முனைய முகாமைத்துவத் தொகுதி "NAVIS" வரை தரமுயர்த்துதல்.

2010 2010.08.15 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் பரப்பும் வைபவம்.

2010 2010.11.18 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படல்.

2010 ஜய கொள்கலன் முனையத்தில் 02 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல்.

2010 கொழும்பு துறைமுகத்தில் 04 மில்லியன் கொள்கலன் கையாளப்படுதல்.

2011 06 புதிய கென்ட்ரி பாரம்தூக்கிகளும் 30 றான்ஸ்பர் பாரமுயர்த்திகளும் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறுதல்.

2011 இலங்கை துறைமுக அதிகாரசபையின் கொழும்பு எண்ணெய் முனையத்தின் கொள்ளளவு அதிகரிக்கப்படுதல்.

2011 50 முனைய டிரக்டர்கள் துறைமுகத்துக்கு கிடைக்கப்பெறல்.

2011 கொழும்பு துறைமுக விரிவாக்கல் திட்டத்தின் கீழ் தென் கொள்கலன் முனைய ஒப்பந்தம் கைச்சாத்திடல்.

2011 ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் புதிய வர்த்தகங்கள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்.

2011 தென் கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படுவதனைக் குறிக்கும் நிலம் தோண்டும் வைபவம்.

2012 ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் ரோ ரோ கப்பல்களின் கையாளல் ஆரம்பிக்கப்படல்.

2012 கொழும்பு துறைமுக புளுமெண்டல் எண்ணெய் களஞ்சியத்தில் பழுதடைந்திருந்த எண்ணெய்க் குழாய் வழி மீள் மாற்றம் செய்யப்படல்.

2013 6.8 கி. மீட்டர் கொண்ட பாரிய அலைதாங்கி மற்றும் தெற்கு கொள்கலன் முனையத்துடனான கொழும்பு துறைமுகம் விரிவாக்கும்

	செய்திடடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.
2013	ஒலுவில் துறைமுகம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.
2013	கொள்கலன் முனையத் தொகுதியின் இறக்குமதி செய்யப்படும் நிறைவான கொள்கலன்களை ஏற்றும் மொடியூல் நடைமுறைப்படுத்தப்படல்.
2013	ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் நிர்வாகக் கட்டடம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படல்.
2014	ஹம்பாந்தோட்டை மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கப்பல்களுக்கான எண்ணெய் வழங்கும் வசதிகள் மற்றும் எண்ணெய்த் தாங்கித் தொகுதி வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.
2014	கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செய்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைத்தல்.
2015	கிழக்கு கொள்கலன் முனையம் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தல்.
2015	தர முகாமைத்துவ முறைமை தொடர்பிலான ISO 9001 – 2008 தரச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளல்.
2015	மாகம் ருஹுணுபுர மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தின் கட்டம் II இன் நீர்த்தடாகத்துக்கு கடல் நீர் நிரப்பும் வைபவம்.
2015	கொழும்பு துறைமுகத்தில் இருபது சம அலகு கொள்கலன் 05 மில்லியன் கையாளல்.
2016	கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தை(CFS 1) மீள் நிறுவுதல் (2016.08.10).
2016	இயந்திர உபகரண பொறியியல் பகுதியினால் ஜய கொள்கலன் முனையத்தில் உயரத்தில் குறைந்த புதிய டிரேலர் ஒன்றை நிர்மாணித்தல் (2016.08.31).
2016	பாரிய கொள்கலன் கப்பலான MSC Maya கொழும்பு துறைமுகத்தின் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்துக்கு (CICT) வருகை தரல் (2016.09.16).
2017	பூரணமாக மீள் நிர்மாணிக்கப்பட்ட கொள்கலன் கப்பற்சரக்கு நிலையத்தின் (CFS 1) கையாளல் பணிகள் ஆரம்பிக்கப்படுதல் (2017.05.31).
2017-	ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் துறைமுக கையாளல் தொடர்பில் சீனா மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையில் சலுகைக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுதல்.(2017.07.29)
2017	இணைந்த துறைமுகங்களின் சர்வதேச வலையமைப்பு தொடர்பிலான 19 ஆவது (International Network of Affiliated Ports (INAP) Conference (2017-11-07,08) மாநாடு இலங்கையில் ஆரம்பிக்கப்படுதல்.
2017	ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான பங்காளர்களின் உடன்படிக்கை (Shareholders Agreement) மற்றும் காணி குத்தகைக்கு வழங்கும் உடன்படிக்கை (Land Lease Agreement) (2017/12/08).

2017 இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் சைனா மேர்சன்ட் ஹோல்டிங்ஸ் கம்பனிக்கிடையில் ஹம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பான சலுகை உடன்படிக்கையின் கீழ் முதலாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல்.(2017.12. 09)

2017 கொழும்பு துறைமுகத்தில் 6 மில்லியன் இருபது சம அலகு கொள்கலன் கையாளப்படுதல் (2017.12.20).

2018 இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் வ.்.ப சைனை மேர்ச்சன்ட் போர்ட் ஹேல்டிங்ஸ் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஹம்பாந்தோட்டை துமைக சலுகைக்கான ஒப்பந்தத்தின் கீழ் 02 ஆவது கொடுப்பனவை ஏற்படுத்துதல்.

2018 கொழும்பு துறைமுகம் ஒத்துழைப்புடன் அபிவிருத்தி செய்வதற்காக சவுத்ஏசியா கேட்வே டர்மினல் (SAGT) மற்றும் கழம்பு இன்டநெஷனல் கன்டெயினர் டேர்மினல் (CICT) கம்பனிகளுக்களுடன் இலங்கை துறைமுக அதிகாரசபை புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு உட்படுதல்.

2018 2018 ஆம் ஆண்டில் சிறந்த துறைமுகத்திற்கன விருதை இலங்கை துறைமுக அதிகாரசபையினால் சர்வசே துறைமுகங்கள் ஒன்றியத் (Global Port Forum) திலிருந்து பெற்றுக்கொள்ளல்.

2018 இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் சைனா மர்ச்சன்ட் போர்ட் ஹோல்ட்டிங்ஸ் கம்பனிகளுக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுக சலுகைக்கான ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய இறுதிப்பங்கை (last franche) ஏற்பாடு செய்தல்.

2018 கொழும்பு துறைமுகத்தினால் முதன்முறையாக நடாத்தப்பட்ட "Colombo Port Award" விருது வழங்கும் விழாவை ஏற்பாடு செய்தல்.

2018 2018 முதலாவது அரையாண்டில் உலகில் அதிகூடிய கொள்கலன்களைக் கையாழும் துறைமுகமாக கொழும்பு துறைமுகம் தரப்படுத்தில் ஒப்படல் அல்பாலைனர் தரப்படுத்தலுக்கு ஏற்ப

2018 கொழும்பு துறைமுகம் இருபதின் சம அலகுகள் 7 மில்லியன் கொள்கலன்களை கையாழ்வதற்கு சக்தி பெற்றமை.

2019 பூகோளவியல் துறைமுக ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட விருது வழங்கும் நிகழ்வில் "2019 ஆம் ஆண்டிற்கான துறைமுக அதிகார சபை" க்குரிய விருதினை இரண்டாம் முறையாக இலங்கை துறைமுக அதிகார சபை வெற்றிக்கொண்டது.

2019 பூகோளவியல் துறைமுக ஒன்றிய விருது வழங்கும் நிகழ்வில் 2019 ஆம் ஆண்டிற்கான துறைமுக அரச பங்குதாரருக்குரிய விருதினை தொடர்ச்சியாக மூன்றாம் முறையாக இலங்கை துறைமுக அதிகார சபை வெற்றிக்கொண்டது.

2019 இலங்கை துறைமுக அதிகார சபைக்கான புதிய பிரதான அலுவலக கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2019 இலங்கை துறைமுக அதிகார சபையின் 40 ஆண்டு பூர்த்தியினை/ பூர்திவிழாவினை கொண்டாடுதல்.

2019 கொழும்பு துறைமுகத்தினால் இரண்டாம் தடவையாக / முறையாக ஏற்பாடுச் செய்யப்பட்ட கொழும்பு துறைமுகத்தின் விருது வழங்கல் மாலை ஆகஸ்ட் 31 ஆம் நாள் நடைப்பெற்றது.

2020 ஜய கொள்கலன் முனையத்தின் IV ஆம் கட்டத்தின் கீழ் அலை தாங்கியை 120 மீட்டர்களினால் நீட்டுவதற்கான நிர்மாணப்பணிகளை ஆரம்பித்தல்.

2020 ஜய கொள்கலன் முனையத்தின் V வது கட்டத்திற்காக கொண்டுவரப்பட்ட புதிய மூன்று கிரன்டி பாரந்தூக்கிகளை கிழக்கு கொள்கலன் முனையத்தின் இயக்க செயற்பாடுகளிற்காக பொறுத்துதல்.

2021 இலங்கை துறைமுக அதிகார சபையின் பணியாளர்களுக்காக 17 மாடிகளைக் கொண்ட கடல்சார் சேவைகள் வழங்கும் நிலையத்தை நிர்மாணித்தலை ஆரம்பித்தல்.

2021 கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை நிர்மாணிப்பதற்காக Adani Ports Economics Zone Limited **கம்பனி உள்நாட்டு பங்குதாரரான ஜோன் கீல்ஸ் நிறுவனம் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நிர்மாணித்து, இயக்கி, கையளிக்கும் ஒப்பந்தத்துக்கு கைச்சாத்திடல்.**



நிதி அறிக்கைகள்

ஆண்டறிக்கை 2021

2021.12.31 ஆம் திகதிக்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பின்வருமாறு:

கெப்டன் நிஹால் கெப்பெடிபொல
தலைவர்

கலாநிதி பிரசான்த்த ஜயமான்ன
உப தலைவர்

உபுல் ஜயதிஸ்ஸ
முகாமைத்துவ பணிப்பாளர்

மேஜர் ஜெனரல் ஜி. விஜித ரவிப்பிரிய
பணிப்பாளர்

செல்வி ஜே.சி. வெலிகம
பணிப்பாளர்

திருமதி. என்.ஏ.ஏ.பி.எஸ். நிஸ்ஸங்கா
பணிப்பாளர்

திரு. யூ.ஆர்.த.சில்வா
பணிப்பாளர்

டாக்டர் கிறிஸ்ரோ பெர்னாந்து
பணிப்பாளர்

எச் இசுரு பாலபடபெந்தி
பணிப்பாளர்

மீளாய்வாண்டினுள் பணிப்பாளர் சபையின் 14 கூட்டங்கள் நடைபெற்றன.

பணிப்பாளர் சபையின் உப குழுவாக செயல்படும் முகாமைத்துவக் குழுவின் இரண்டு (11) கூட்டங்கள் 2021 ஆம் ஆண்டினுள் நடைபெற்றது. சபையின் ஏனைய உப குழுவான கணக்காய்வுக் குழு 2021 ஆம் ஆண்டில் மூன்று (03) கூட்டங்களை நடத்தியது. கீழ்வரும் பணிப்பாளர்கள் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களாக செயல்படுகின்றார்கள்

செல்வி. ஜே.சி. வெலிகம
தலைவர்

மேஜர் ஜெனரல் ஜி. விஜித ரவிப்பிரிய
உறுப்பினர்

எச் இசுரு பாலபடபெந்தி
பணிப்பாளர்

கொழும்பு துறைமுகம் 2021 வருடத்தில் கொள்கலன்கள் இருபது சம அலகுகளின் 7.24 மில்லியன் கையாண்டுள்ளதுடன் 2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 5.8% அதிகரிப்பாகும். களம்பு இண்டர்நெஷனல் கன்டேனர் டர்மினல்ஸ் கம்பனியினால் கொள்கலன்கள் இருபது சம அலகுகளின் 3.21 மில்லியன் கையாண்டுள்ளதுடன், இலங்கை துறைமுக அதிகார சபையின் முனையங்களினால் கொள்கலன்கள் இருபது சம அலகுகள் 2.19 உம், சவுத் ஏசியா கேட்வே டர்மினல் கம்பனியினால் இருபதின் சம அலகுகள் 1.83 மில்லியன் கையாளப்பட்டுள்ளது கொழும்பு துறைமுகத்தின் கப்பற்சரக்கு மீள் ஏற்றுமதி கொள்திறன் 4.2% கையாளப்பட்டுள்ளது. 2020 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டில்உள்நாட்டு கொள்கலன்கள் கையாளல் 10% இனால் அதிகரித்துள்ளது.

- கொழும்பு துறைமுகத்தின் கையாளல் பரிமாணம் 2020 ஆம் ஆண்டில் 6,854,762 கொள்கலன் இருபதின் சம அலகுகளில் இருந்து 2021 ஆம் ஆண்டில் 7,249,358 இருபதின் சம அலகுகள் வரை அதிகரித்துள்ளது.

- 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது கொழும்பு துறைமுகத்தில் கையாளப்பட்ட மொத்த கப்பற் சரக்கு தொன்களின் பிரமாணம் -6.3% ஆல் அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டில் கொழும்பு துறைமுகத்திற்கு வருகைத்தந்த கப்பல்களின் எண்ணிக்கை 3,806 இலிருந்து 3,675 (-3.4%) வரை குறைவடைந்துள்ளது. 2020 ஆண்டில் கொள்கலன் கப்பல்களின் வருகையின் எண்ணிக்கை 3,281 முதல் 3,180 வரையில் 2021 ஆம் ஆண்டில் -(-3.1% ஆக குறைவடைந்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களிற்கு மற்றும் கொழும்பு துறைமுகத்திற்கு அதிகளவிலான கொள்கலன்கள் கப்பல்களை கவர்ந்துக்கொள்ளும் பொருட்டு இலங்கை துறைமுக அதிகாரசபையின் முகாமைத்துவத்தினால் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி மூலோபாயங்கள் பல செயற்படுத்தப்பட்டன. இலங்கை

துறைமுக அதிகாரசபையுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டும் பேணிச் செல்வதற்கும் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்வதற்கு பிரதான கப்பல் சேவைகளுடன் முனைய சேவைகள் ஒப்பந்தங்கள் இரண்டு (02) கைச்சாத்திடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக எதிர்பாராமல் வருகை தருகின்ற கப்பல்களை எமது முனையங்களில் கையாண்டு அதன் மூலம் மேலக கொள்கலன்கள் பரிமானததை கவர்ந்து கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை சாத்தியம் பெற்றுள்ளது.

இலங்கை துறைமுக அதிகாரசபை அதிவிசாலமான கொள்கலன் கப்பல்களைக் (ULCS) கையாளக் கூடிய வகையில் ஆழத்தில் கூடிய நங்கூரத்தள வசதிகள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கொழும்பு தெற்கு துறைமுகத்தில் நிர்மாணிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆண்டில் 14.25 மீட்டருக்கு கூடிய ஆழமான (draught) கொள்ளளவுடைய 270 கப்பல்கள் களம்பு இண்டர்நெஷனல் கன்டேனர் டேர்மினல் முனையத்தில் கையாளப்பட்டுள்ளது. இதன் விளைவாக பிராந்தியத்தில் மீள் ஏற்றுமதி கொள்கலன் மத்திய நிலையமாக கொழும்பு துறைமுகம் தமது இடத்தை தக்க வைத்துக்கொள்ள முடிந்துள்ளது. கப்பல்களின் பரிமாணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு புதிய ஒப்பந்தங்கள்/ தொடர்புகள் / கைப்பற்றிக்கொள்ளல்கள் மற்றும் ஏனைய தனியார் முனைய இயக்குனர்களினால் வழங்கப்படும் போட்டிதன்மையான விலைகள் மற்றும் விலை குறைப்பு ஆகிய சவால்களுக்கு மத்தியில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முனையங்களின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது.

2020 ஆண்டில் இலங்கை துறைமுக அதிகார சபையானது ரூபாய் 21 பில்லியன்கள் கையாளல்கள் இலாபத்தை ஈட்டிக்கொண்டுள்ளதுடன் 2021 ஆண்டில் ரூபாய் 25 பில்லியன் கையாளல் இலாபத்தை ஈட்டிக்கொண்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் தேறிய வருமானமான ரூபாய் 53 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2021 ஆண்டில் மொத்த வருமானம் ரூபாய் 61 பில்லியன்கள் ஆனதுடன் இது ரூபாய் 8 பில்லியன்கள் அதிகரிப்பாகும். 2020 ஆண்டில் வரிக்கு முன்னரான மொத்த செலவு, கடன் வட்டி மற்றும் அந்நிய செலாவனி இலாபம்/நட்டம் ரூபாய் 30 பில்லியன்களானதுடன் 2021 இப்பெறுமானம் ரூபா 33 பில்லியனாக அறியப்பட்டதுடன் இது 10% அதிகரிப்பாகும்.

நிதி அறிக்கை வெளியிடல் தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை


இலங்கை துறைமுக அதிகாரசபையின் சகல நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் கணக்குப் புத்தகங்கள் முறையாக பேணப்படுதலையும், அச்செயற்பாட்டின் நிலைமை மற்றும் வருடத்தின் இலாபம்/நட்டம் தொடர்பான உண்மையானதும் தெளிவான எண்ணப்பாடும் ஏற்படும் வண்ணம் அதன் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றதென்பதனை 1971 இன் 38 ஆம் இலக்கச் சட்டத்தின் (12) மற்றும் (13.6) ஆம் பிரிவின் மீது உறுதிப்படுத்துதல் இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர்களினது பொறுப்பாகும்.

ஒவ்வொரு அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் குழுமத்தினால் தனது சொத்துக்கள் பாதிப்படைந்துள்ளதாவென்பதை தீர்மானிப்பதற்கு சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள்,முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் உணரா

சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமானம் குழுமத்தினால் மீளாய்வு செய்யப்படும். பாதிப்படைந்திருந்தால் பாதிப்பின் நட்ட (இருப்பின்) அளவை தீர்மானிப்பதற்கு சொத்தின் மீள் இலாபப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். தனி சொத்தொன்றின் மீள ஈடுசெய்யக்கூடிய தொகை மதீப்பீடு செய்யமுடியாது இருப்பின் குழுமத்தினால் நிதி உற்பத்தி அலகு தீர்மானிக்கப்பட்டு சொத்து உரித்துப் பெறும் நிதி உற்பத்தி அலகின் மீள் இலாபப் பெறுமதி மதிப்பீடு செய்யப்படும்.

மீள் இலாப நிதி என்பது, எதாவது ஒன்றை விற்பதற்கு செலவாகும் ஆகு செலவு மற்றும் பயன்பாட்டிலுள்ள சொத்தொன்றை விற்பதற்குச் செலவாகும் ஆகு செலவுடன் பயன்பாட்டுப் பெறுமதி கழிக்கப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் நியாயபூர்வ பெறுமதியின் உயர் மட்டமாகும்.பயன்பாட்டு பெறுமதி மதிப்பிடப்படும் போது எதிர்கால நிதி கிடைக்கப்பெறுதல்கள் நிகழ்கால பெறுமதி கழிக்கப்பட்ட தொகைக்கேற்ப வரி செலுத்தப்படுவதற்கு முன்னர் கழிவு கட்டணமுறை பின்பற்றப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறு செய்யப்படுவது தற்போதிருக்கும் நிதியின் தற்காலப் பெறுமதி சொத்துடன் தொடர்புபடும் இடர் நேர் நிலைமைகளைக் கொண்ட சந்தை மதீப்பீடு தோன்றும் வண்ணம் கழிவு குறைப்பதற்கு முன்னர் இருந்த வரி நிலைமையினை பயன்படுத்துவதிலானாகும். இது தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படும் காசுப்பாய்ச்சலுடன் சீர் செய்யப்பட மாட்டாது.

ஏதாவது சொத்தொன்றின் மீள் இலாபத்தொகையானது (அல்லது நிதி உருவாக்ககூறு) அதன் நியாயபூர்வ பெறுமதியை விட குறைவாக மதிப்பிடப்பட்டிருப்பின் சொத்தின் நியாயபூர்வ பெறுமதி (நிதி உற்பத்திக் கூறு) அறவிட்டுக் கொள்ளக்கூடிய தொகை வரை கழிக்கப்படும். பாதிப்பின் நட்டம் விபரமான வருமானக்கூற்றில் தாமதியாது இனம் காணப்படும்.

2.5 நிதிசார் சொத்துக்கள்

2.5.1 நிதிசார் சொத்துக்களின் வகையீடு

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் குழுமத்தினால் தனது நிதிசார் சொத்துக்களின் கணிப்பீடு செய்யும் வகையின் மீது வகையீடு செய்யப்படுகின்றது.

- குறைவடையும் ஆகு செலவு மீது கணிக்கப்படும் நிதிசார் சொத்துக்கள்.
- ஏனைய விபரமான வருமானம் மீது நியாயபூர்வ பெறுமதிக்கு கணிப்பிடப்படும் நிதிசார் சொத்துக்கள்.
- இலாபம் அல்லது நட்ட அடிப்படையில் நியாயபூர்வ பெறுமதிக்கு கணக்கிடப்படும் நிதிசார் சொத்துக்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் குழுமத்தினதும் நிதி சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் காசுப் பாய்ச்சலின் ஒப்பந்த ரீதியான விதிகளின் மீது பாகுபாடு தங்கியிருக்கும்.

நியாயபூர்வ பெறுமதி மீது கணக்கிடப்படும் நிதிசார் சொத்துக்கள், இலாபங்கள் மற்றும் நட்டங்கள் விபரமான வருமானக் கூற்றில் அல்லது ஏனைய விபரமான வருமான கூற்றில் அறிக்கை செய்யப்படும். வியாபார நடவடிக்கைகள் தொடர்பாக வைக்கப்படாத உபகரணங்களின் முதலீடு தங்கியிருப்பது ஏனைய விபரமான வருமானம் மீது நியாயபூர்வமான பெறுமதிக்கு திணிவுகளின் முதலீடு கணக்கீடுவதற்காக இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் குழுமத்தின் மூலம் ஆரம்பமாக அறிந்துகொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் மறுக்க முடியாத தேர்வொன்றை மேற்கொண்டால் மாத்திரமேயாகும். நிலை மற்றும் குழுமத்தினால் நிதிச் சொத்துக்கள் மீள் வகையீடு மேற்கொள்வது குறித்த சொத்துக்கள் முகாமைத்துவம் செய்தல் வணிக மாதிரி மாறும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே.

2.5.2 சொத்துக்களை இனங்காணுதலும் அடிப்படைக் கணிப்பீடும்.

சொத்துக்கள் பூர்வாங்கமாக அடையாளங் காணப்படும் போது இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் குழுமத்தினால் நிதிசார் சொத்துக்கள் நியாயபூர்வ பெறுமதிக்கு

இலாபம் அல்லது நட்டம் மூலம் நியாயபூர்வ பெறுமதி காண்பிக்கப்படாதிருக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் நிதிச் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு அல்லது வழங்குவதற்கு நேரடியாக பொறுப்பளிக்கப்படும் கொடுக்கல் வாங்கல்களின் ஆகுசெலவுக்கு நிதிக் சொத்துக்கள் கணிப்பீடு செய்யப்படும். இலாபம் அல்லது நட்டம் மீது நிதிசார் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதற்கு கொண்டுவந்த நிதிசார் சொத்துக்களின் கொடுக்கல் வாங்கல்கள் விபரமான வருமானத்தில் செலவினமாக காட்டப்படும்.

2.5.3 பின்னர் மேற்கொள்ளப்படும் கணக்கீடுகள்

கடன் ஆவணங்களின் மீதான முதலீடு

கடன் ஆவணங்கள் மீது மேற்கொள்ளப்படும் பின்னரான மதிப்பீடுகள் சொத்துக்களின் முகாமைத்துவத்திற்கான குழுமத்தின் வர்த்தக மாதிரி மற்றும் சொத்துக்களின் குணாம்சங்களுக்கு ஏற்ப கிடைக்கப்பெறும் காசுப்பாய்ச்சல் மீது தங்கியிருக்கும். கடன் ஆவண வகையீடு மூன்று பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

குறைவடையும் ஆகு செலவு

முழுமையாக ஆரம்ப நிதித் தொகை மற்றும் வட்டி செலுத்துதல் உள்ளடங்கலான ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல் தொடர்பில் பேணிச் செல்லப்படும் சொத்துக்கள் தேய்மான ஆகு செலவிற்கு மதிப்பீடு செய்யப்படும். இந்த நிதிச் சொத்துக்களில் இருந்து கிடைக்கப்பெறும் வட்டிக்கு வருமான நடைமுறை வட்டி விகிதம் பின்பற்றப்பட்டு நிதிசார் வருமானத்தினுள் சேர்க்கப்படும். அடையாளம் காணப்படாமை காரணமாக எழும் ஏதாவது இலாபம் அல்லது நட்டம் விபரமான வருமான அறிக்கைகள் ஊடாக நேரடியாக அடையாளம் காணப்படுவதுடன் குறித்த அந்நிய செலாவணி இலாபம் அல்லது நட்டத்துடன் முன்வைக்கப்படும்.

ஏனைய விபரமான வருமானம் மீது நியாயபூர்வ பெறுமதிக்கு கணிப்பீடு செய்தல் (FVOCI)

உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட கூட்டு காசுப்பாய்ச்சல் மற்றும் நிதிசார் சொத்துக்களை விற்பதற்கு வைக்கப்பட்ட சொத்துக்கள் ஏனைய விபரமான வருமான சொத்துக்கள் மீது நிதிசார் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்படுவதுடன் சொத்துக்களில் காசுப்பாய்ச்சல்களில் பூர்வாங்கத் தொகை மற்றும் வட்டி செலுத்துதல் மாத்திரம் காண்பிக்கப்படும். ஏனைய விபரமான வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ள பாதிப்பின் கிடைக்கப்பெறுதல்கள் அல்லது நட்டம், வட்டி வருமானம் மற்றும் அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்கள் மற்றும் நட்டம் இனங்காண்பது தவிர்ந்த பொறுப்பேற்புப் பெறுமதியின் நகர்வுகள் ஏனைய விபரமான வருமானக் கூற்றின் மூலம் காண்பிக்கப்படுகின்றன. நிதிசார் சொத்துக்கள் இனங்காணப்படாதவிடத்து ஏனைய விபரமான வருமானக் கூற்றில் பூர்வாங்கமாக அடையாளங் காணப்பட்ட ஒன்றுசேர்ந்த கிடைக்கப்பெறுதல்கள் அல்லது நட்ட திணிவுகளில் இருந்து விபரமான வருமானம் வரை மீள வகையீடு செய்யப்பட்டு ஏனைய வருமானம் (நட்டம்)களில் காண்பிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிசார் சொத்துக்களின் மூலம் கிடைக்கப்பெறும் வட்டி வருமானம் சாத்திய வட்டி வருமான முறை பயன்படுத்தப்பட்டு நிதிசார் வருமானத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அந்நிய செலாவணி கிடைக்கப்பெறுதல்கள் மற்றும் நட்டம் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் (நட்டம்) முன்வைக்கப்பட்டுள்ளதோடு பாதிப்புக்கான செலவினம் விபரமான வருமானக் கூற்றில் புறம்பானதொரு பாகத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

இலாபம் அல்லது நட்டம் மீதான நியாயபூர்வ பெறுமதி (FVTPL)

குறைவடையும் ஆகுசெலவு அல்லது ஏனைய விபரமான வருமானம் மீதான நியாயபூர்வ பெறுமதிக்கான வழிகாட்டல்களுடன் சம்பந்தப்படாத சொத்துக்களின் இலாபம் அல்லது நட்டம் மீது நியாயபூர்வ பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்படுகின்றது. கடன் முதலீடுகள் மீதான இலாபம் அல்லது நட்டம் கிடைக்கப்பெறுதலின் பின்னர் இலாபம் அல்லது நட்டம் மீது நியாயபூர்வ பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டு விபரமான வருமானக் கூற்றில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதோடு இது எழும் காலப்பகுதியினுள் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள்/ (நட்டத்தினுள்) முன்வைக்கப்படும்.

திணிவு உபகரணங்களின் மீதான முதலீடுகள்

அனைத்து திணிவு முதலீடுகள், இலங்கை துறைமுக அதிகார சபையினாலும் குழுமத்தினாலும் பின்னர் நியாயபூர்வ பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்படுகின்றன. குழுமத்தின் முகாமைத்துவம் மூலம் நியாயபூர்வ பெறுமதியின் கிடைக்கப்பெறுதல்கள் மற்றும் நட்டங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் திணிவு முதலீடுகளில் முன்வைப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதால் முதலீடுகள் ஏற்றுக்கொள்ளப்படாமையின் பின்னர் விபரமான வருமானம் தொடர்பில் நியாயபூர்வ பெறுமதியின் கிடைக்கபெறுதல்கள் மற்றும் நட்டம் மீள் வகையீடு செய்யப்படமாட்டாது.

வருமானம் கிடைப்பதற்கு குழுமத்தின் உரித்து உறுதிப்படுத்தப்பட்டால் அவ்வாறான முதலீடுகளில் கிடைக்கப்பெறும் பங்கிலாபங்கள் தொடர்ச்சியாக ஏனைய வருமானமாக விபரமான வருமானக் கூற்றில் ஏற்றுக்கொள்ளப்படும். இலாபம் அல்லது நட்டம் மீது நிதிசார் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதிக்கு மதிப்பீடு செய்தலானது நிதிசார் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதியின் மாற்றமடைதல்கள் விபரமான வருமான கூற்றில் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் (நட்டங்களில்) குறித்தவாறு ஏற்றுக்கொள்ளப்படும்

ஏனைய விபரமான வருமானம் மீது நியாயபூர்வ பெறுமதிக்கு திணிவு மதிப்பீடு செய்யப்படும் முதலீடுகளின் பாதிப்படைதலுக்கான நட்டம் (மற்றும் பாதிப்படைதலுக்கான நட்டத்தின் மீள் அதிகரிப்பு பெறுமதி) நியாயபூர்வ பெறுமதியின் ஏனைய வித்தியாசங்களினால் அறிக்கை செய்யப்படமாட்டாது.

2.5.4 பாதிப்படைதல்

இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் குழுமத்தினால் அதன் குறைவடையும் ஆகுசெலவு மற்றும் ஏனைய விபரமான வருமானத்தின் நியாயபூர்வ பெறுமதி மீது பொறுப்பேற்கும் கடன் உபகரணங்கள் தொடர்பான எதிர்பார்க்கும் பற்று நட்டமா என மதிப்பீடு செய்யப்படும். இதற்கு பயன்படுத்தப்படும் பாதிப்புக்கான நடைமுறையின் பற்று இடர்நேரின் தெளிவான அதிகரிப்பு உள்ளதா எனும் காரணி மீது செயற்பாடு தங்கியிருக்கும்.

வர்த்தக கிடைக்கப்பெறுதல்களை கணிப்பீடு செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை இலங்கை நிதிக் கணக்கீட்டு நியமம் 09 மூலம் உறுதிப்படுத்தியுள்ள எளிய வழியினை பயன்படுத்துகின்றது. கிடைக்கப்பெறுதல்களின் பூர்வாங்க அடையாளம் காண்பது எதிர்பார்க்கப்படும் ஆயுட்கால நட்டத்தை அடையாளம் காண்பதன் மூலம் எதிர்பார்ப்பு ஆயுட்காலம் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் நட்டங்களின் விகிதம் வாடிக்கையாளர்களின் கொடுப்பனவு விபரம் மற்றும் பெற்றுள்ள முன்னரான தொடர்பான பற்றின் நட்டம் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுகின்றது. முன்னரான இலாப விகிதங்கள் அனைத்து பொருளாதார காரணிகளின் தற்போதைய மற்றும் எதிர்கால தகவல்கள் வெளிக்காட்டப்படும்வாறு சீர் செய்யப்படும். (முகாமைத்துவத் தீர்மானங்களின் மீது மாற்றமடையலாம்).

அடையாளம் காணப்படுதலில் இருந்து அகற்றுதல்

- நிதி சொத்துக்களில் இருந்து காசு பாய்ச்சலின் ஒப்பந்த ரீதியான உரித்துக்களின் காலம் தாண்டுதல், அல்லது
- நிதிசார் சொத்துக்களுக்கு மாற்றுதல் மற்றும் பரிமாற்றம் செய்தல் அடையாளம் காணப்படுதலில் இருந்து அகற்றுவதற்கு தேவையான தகைமைகள் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம்

இலங்கை துறைமுக அதிகாரசபை நிதிசார் சொத்துக்களில் இருந்து அடையாளம் காணப்பட்டு அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

நியாயபூர்வ பெறுமதி கணிப்பீடு செய்தல்

இலங்கை நிதி அறிக்கை நியமம் 13 இன் படி ஏதாவதொரு சொத்தொன்று விற்பதற்கு விதிக்கப்படும் விலை அல்லது சந்தை பங்காளிகளுக்கிடையில் ஏற்படும் முறையான கொடுக்கல் வாங்கலின் போது ஏதாவது பொறுப்பொன்றை ஒப்படைப்பதற்கு மதிப்பீடு செய்யப்படும் நாளில் செலுத்தப்படும் விலை நியாயபூர்வ பெறுமதி எனப்படும். சொத்தொன்றை விற்பதற்கான கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பொன்றை ஒப்படைப்பதற்கு சொத்து அல்லது பொறுப்புக்கான பிரதான சந்தையினுள் அல்லது பிரதான சந்தை ஒன்று இல்லாதவிடத்து சொத்து அல்லது பொறுப்புக்கான மிகவும் பயனான சந்தையினுள் நியாயபூர்வ பெறுமதி கணிப்பீடு செய்யப்படுதலின் மூலம் இது ஊகிக்கப்படும்.

சொத்து உச்ச பயன்பாட்டுடன் பயன்படுத்தப்படுவது அல்லது குறித்த சொத்தை அதிகமான மற்றும் உச்சமாக பயன்படுத்தக் கூடிய ஏனைய சந்தை பங்காளர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் பொருளாதர அனுகூலங்களைப் பெறுவதற்கு சந்தை பங்காளர்களுக்குள்ள ஆற்றலானது நிதிசாராத சொத்தொன்றின் நியாயபூர்வ பெறுமதி கணிப்பீடு செய்யப்படும் போது கவனத்தில் கொள்ளப்படுகின்றது.

நியாயபூர்வ பெறுமதி கணிப்பீடு செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் குழுமம் தகுந்த மதிப்பீட்டு நுட்பமுறைகளைப் பயன்படுத்துவதோடு அவதானிக்கக் கூடிய சம்பந்தப்பட்ட ஈடுபடுத்துதல்களின் பாவனையை உச்சமட்டத்திலும் அவதானிக்க முடியாத ஈடுபடுத்துதல்களின் பாவனையை மட்டுப்படுத்தியும் மதிப்பீடு செய்வதற்குப் போதுமான தரவுகளை அதிகாரசபையும் குழுமமும் கொண்டிருக்கின்றது. இது தொடர்பில் பின்வரும் ஈடுபடுத்தல்கள் பயன்படுத்தப்படும்.

முதலாம் மட்ட ஈடுபடுத்தல்கள் : கணிப்பீடு செய்யப்படும் திகதிக்கு இடைகூறுக்கு பெற்றுக்கொள்ள கூடிய உரித்துள்ள சொத்துக்கள் அல்லது பொறுப்புகளுக்கு முனைப்பான சந்தையினுள் இருக்கும் விலை. (சீர்செய்யப்படாத)

இரண்டாம் மட்ட ஈடுபடுத்தல்கள் : சொத்து அல்லது பொறுப்புகள் தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவதானிக்கக் கூடிய முதலாம் மட்ட தரவுகளில் உள்ளடங்கும் விலை தவிர்ந்த ஏனைய ஈடுபடுத்துதல்கள்.

மூன்றாம் மட்ட ஈடுபடுத்தல்கள் : சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் அவதானிக்க முடியாத ஈடுபடுத்தல்கள்.

நியாயபூர்வ பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்படும் சொத்துக்கள்

சொத்துக்களின் வகை	குறியீட்டு இலக்கம்	2021.12.31 ஆம் திகதிக்கு பெறுமதி	01 மட்டம்	02 மட்டம்	03 மட்டம்
ஏனைய விபரமான வருமானம் மூலமான நியாயபூர்வ பெறுமதியின் நிதிசார் சொத்துக்கள்					
அட்டவணையிடப்பட்ட முதலீடுகள்					
கொழும்பு டொக்யாட் தனியார் கம்பனி	8.1	173,583,565	173,583,565	-	-
அட்டவணையிடப்படாத முதலீடுகள்					
களம்பு இன்டர்நெஷனல் கன்டேனர் டேர்மினல்ஸ் கம்பனி	8.2	1,694,592,298	-	-	1,694,592,298
சவுத் ஏசியா கேட்வே டேர்மினல்ஸ் கம்பனி	8.2	812,178,873	-	-	812,178,873
ஹம்பாந்தோட்டை இன்டர்நெஷனல் போர்ட் குரூப் தனியார் கம்பனி		32,932,848,248			32,932,848,248
இலங்கை நிலக்கரி தனியார் லிமிடட்	8.2	10,696,928			10,696,928
		35,623,899,912	**173,583,565**	-	**35,450,316,347**

2.6 பட்டியல்படுத்தப்பட்ட பொருட்கள்

ஆகுசெலவிற்கேற்ப தொகை இருப்புப் பொருட்கள் காட்டப்பட்டுள்ளன. முதலில் வந்த முதலில் வழங்கிய (FIFO) முறை அடிப்படையில் ஆகுசெலவு தீர்மானிக்கப்படும். கலங்கள், கப்பற்சரக்கு கையாளல் உபகரணங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், நுகர்வுப் பொருட்கள் போன்று எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணெய் போன்றவை பட்டியலிடப்பட்ட பொருட்களில் உள்ளடங்கும். பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் பாவனைக்கன்றி மீள் விற்பனைக்குரியதாக மாட்டாது.

2.7 வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள்

கிடைக்கப்பெற வேண்டிய வர்த்தகப் பொருட்கள் என்பது பொதுவான வர்த்தக நடவடிக்கைகளின் போது வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிதிகளாகும். வர்த்தகங்கள் கையாளலின் பொதுவான சுற்றின் படி வருமானம் எதிர்பார்க்கப்படுவதுடன் அவை நடைமுறை சொத்துக்களாக வகையீடு செய்யப்படும். முக்கிய நிதிப்பாகங்கள் உள்ளடங்கப்படாது விடின் வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் அதன் நியாயபூர்வ பெறுமதிக்கு இனங்காணப்படுவதோடு அவ்வாறில்லாதுவிடின் வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல்களின் விலைகளுக்கு இனங்காணப்படும்.

ஒப்பந்த ரீதியான காசுப்பாய்ச்சல் ஒன்றுசேர்க்கும் நோக்கில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் பேணிச் செல்வதுடன் பின்னர் முனைப்பான வட்டி விகித பயன்பாட்டில் குறைவடையும் ஆகுசெலவிற்கு கணிப்பீடு செய்யப்படும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையின் பொதுவான இயக்கங்களுக்கு புறம்பாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களின் மூலம் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் எழுகின்றன.

இலங்கை நிதி அறிக்கையிடலின் நியமம் 09 கேற்ப வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் மீதான பாதிப்பின் நட்டம் கணிப்பிடுவதற்கும் அடையாளம் காண்பதற்கும் இலங்கை துறைமுக அதிகாரசபை எதிர்பார்க்கும் கடன் நட்ட மாதிரியை Expected Credit Loss Model (ECL) பயன்படுத்துகின்றது.

எளிய பிரவேசம் (Simplified Approach)

வர்த்தக கிடைக்கப்பெறுதல்களின் மீதான பாதிப்பை கணிப்பீடு செய்வதற்கு அடையாளங் காண்பதற்காக குறித்த உட்பிரவேசத்தை இலங்கை துறைமுக அதிகாரசபை பின்பற்றுகின்றது. எளிய பிரவேச பயன்பாடு காரணமாக பற்று இடர்நேர் மாற்றத்தை அவதானிப்பதற்கான தேவைப்பாடு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு எழாது. பூர்வாங்க ஏற்றுக்கொள்ளல் சந்தர்ப்பத்தில் இருந்து ஒவ்வொரு கணக்கறிக்கை செய்யப்படும் திகதிக்கு எதிர்பார்க்கும் கடன் நட்டங்கள், ஆயுட்கால அடிப்படையில் பாதிப்புக்கான நட்டம் அடையாளம் காணப்படுகின்றது.

செயன்முறையின் செயற்பாடு ஒன்றாக வர்த்தக கிடைக்கப்பெறுதல்களின் நட்டங்களைத் தீர்மானிப்பதற்கு ஏற்பாடுகளின் கோட்பாட்டை (Provision Matrix) இலங்கை துறைமுக அதிகாரசபை பயன்படுத்துகின்றது. வர்த்தக கிடைக்கப்பெறுதல்களின் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் மீது முன்னர் அவதானிக்கப்பட்ட செலுத்துதல்களின் புறக்கணிப்பு விகிதம் ஏற்பாடுகளின் கோட்பாடுகளின் மீது தங்கியிருக்கும் எதிர்கால அறிக்கை செய்யும் தினத்திலேயே முன் அவதானிக்கப்பட்ட செலுத்துதல்களின் புறக்கணிப்பு விகிதம் இற்றைநாள்படுத்தப்பட்டு எதிர்கால மதிப்பீடுகள் பகுப்பாய்வு செய்யப்படும். குறித்த அடிப்படையின் மீது இலங்கை துறைமுக அதிகாரசபை கணக்கறிக்கை செய்யும் தினத்திற்கு வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் மீதான ஏற்பாடுகளை மதிப்பீடு செய்து காலப்பகுதியினுள் இனங்காணப்படும் பாதிப்புகளுக்கான நட்ட அளவின் கட்டணம் அறவிடுவதை (அல்லது செலுத்துதல்களின் மீள் எழுச்சி) வருமானம் / செலவினமாக இனங்காணப்படுகின்றது.

	அடிப்படை	
1. இலங்கை படைகள் (ஏற்பாடுகள்)	12 மாதங்கள் வரை 12 மாதங்களின் பின்னர்	இல்லை 50%
2. அரசாங்க நிறுவனங்கள் (ஏற்பாடுகள்)	12 மாதங்கள் வரை 12 மாதங்களின் பின்னர்	இல்லை 100%
3. வழக்கு தொடரப்பட்டுள்ள கப்பல் முகவர்கள்		100%
4. கப்பல் முகவர்கள் – தடைசெய்யப்பட்டுள்ளதும் செயற்படுத்தப்படாதுள்ளதும்		100%
5. கப்பல் முகவர்கள் – குறிப்பிடத்தக்க தொகையைக் கொண்ட (ஒரு மில்லியனுக்கு மேல்) ஏற்பாடுகள்	12 மாதங்கள் வரை 12 மாதங்களின் பின்னர்	இல்லை 50%

2.8 காசு மற்றும் காசு சம மதிப்புகள்

கையிருப்பிலுள்ள காசு, வங்கிகளிலுள்ள வைப்புகள், ஆரம்ப முதிர்வு காலப்பகுதி மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைந்த காலம் கொண்ட குறுகிய கால உயர்

மட்ட ஒப்புரவு முதலீடுகள், காசுப் பாய்ச்சல் சம்பந்தப்பட்ட ஒன்றிணைந்த கூற்றில் காசு மற்றும் காசு சம மதிப்புகளுக்குரியதாகும்.

2.9 ஈடுபடுத்தப்பட்ட மூலதனம்

கொழும்பு துறைமுக ஆணைக்குழு, துறைமுக கப்பற்சரக்கு கூட்டுச் சபை, துறைமுக செவ்வை பார்த்தல் பாதுகாப்பு சேவைக் கூட்டுத்தாபனம் போன்றவற்றிற்கு சொந்தமாகவிருந்து இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு மாற்றப்பட்டு பொறுப்பளிக்கப்பட்ட சகல சொத்துக்களுக்குரிய நிதியங்களிலுமுள்ள பணம், அனைத்து கடன்கள், பொறுப்புக்கள் மற்றும் பிணைப்புக்கள் அடங்கிய அசையும் மற்றும் அசையாத சொத்துக்களும் ஆகும்.

2.10 நிதிசார்ந்த பொறுப்புக்கள்

குழுமத்தினால் நிதிசார்ந்த பொறுப்புக்கள் வேறு நிதிசார் பொறுப்புகளுக்கு வகையீடு செய்யப்படுகின்றன. கடன் பெறுதல்கள், வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் குழுமத்தின் ஏனைய நிதிசார்ந்த பொறுப்புக்களினுள் அடங்கும். ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவது நியாயபூர்வ பெறுமதி மற்றும் ஆகுசெலவு கொடுக்கல் வாங்கல்களுகல்களுடன் நேரடியாக தொடர்புபடும் பொருட்களுடனாகும். பூர்வாங்கமாக அடையாளங்காணப்பட்ட விடயங்களுக்குப் பின்னர் நடைமுறையிலுள்ள வட்டி முறை பாவனையில் குறைவடையும் ஆகு செலவாக இந்த நிதிசார் பொறுப்புக்கள் கணிப்பிடப்படுகின்றன. ஒப்பந்தத்தின் மீதான பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டுள்ள அல்லது இரத்துச் செய்யப்பட்டுள்ள அல்லது முடிவடைந்துள்ள சந்தர்ப்பமொன்றில் குழுமத்தினால் நிதிசார் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2.11 வர்த்தக மற்றும் ஏனைய செலுத்துல்கள்

வர்த்தக மற்றும் செலுத்தப்பட வேண்டிய ஏனைய பொருட்கள் என்பது பொதுவான வர்த்தக நடவடிக்கைகளில் வழங்குநர்களிடமிருந்து பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான கொடுப்பனவுகளுக்கான பொறுப்புக்களாகும். வர்த்தகமொன்றின் பொதுவான இயக்க சுற்று போன்று வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் நடைமுறை பொறுப்புக்களாக வகையீடு செய்யப்படுகின்றன.

வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தப்பட வேண்டிய பொருட்கள் ஆரம்பமாக நியாயபூர்வ பெறுமதிக்கேற்ப அடையாளங் காணப்படுகின்றது. இது கொடுக்கல் வாங்கல்களின் விலையாகும். பின்னர் கணிப்பீடு செய்யப்படும் போது ஆரம்ப இன்வோயிஸுக்குரிய குறுகிய காலத்தினுள் செலுத்துதல்களின் பெறுமதி கணக்கிடப்படுவதும் எதிர்பார்க்கப்படுவதால் பணத்தின் காலப் பெறுமதி முக்கியமற்றது.

2.12 கடன் பெறுதல்கள்

இலங்கை அரசாங்கம் மற்றும் நிதிசார் நிறுவனங்களிலிருந்தும் பெறப்பட்ட துறைமுக அபிவிருத்தி கடன் தொகைகள் குழுமத்தின் கடன் கணக்குகளில் உள்ளடங்கும். கடனுக்குப் பெறப்பட்டுள்ள பொருட்கள் ஆரம்ப சந்தர்ப்பத்தில் நியாயபூர்வ விலைக்கமைய ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் செலவு செய்யப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் ஆகுசெலவு அதன் தூய பெறுபேறாகும். கடனுக்குப் பெறப்பட்ட பொருட்கள் தொடர்பில் நடைமுறையிலுள்ள வட்டி முறை ஆகுசெலவாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. கடன் தொகை முறையாக சீர்செய்யப்படுதலின் மூலம் கணக்கீட்டு அறிக்கை செய்யப்படும் கால முடிவின் பின்னர் நடைமுறையிலிருக்கும் மிதக்கும் வட்டி வகிதம் பயன்படுத்தப்பட்டு குறைவடையும் ஆகு செலவாக கணக்கு வைக்கப்படுகின்றது.

கடன் தொகை பெறும் வசதிகள் ஆரம்பிக்கப்படுகையில் இருந்த கடன் தொகை தயார் செய்யப்படுதலின் கட்டணம், அமைப்பு ரீதியான கட்டணம், தயார் செய்தலின் கட்டணம் மற்றும் முகாமைத்துவக் கட்டணம் போன்றவை கடன் தொகை பெறப்படும் கொடுக்கல் வாங்கல்களின் ஆகுசெலவு கட்டணமாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

குறைவடையும் ஆகுசெலவுக்கு கடன் தொகையின் பொறுப்பேற்புப் பெறுமதி கணக்கிடப்படும் போது உண்டாகும் அந்நிய செலாவணி இலாபம் மற்றும் நட்டம் ஒவ்வாறு கணக்கறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் விபரமான வருமான கூற்றில் அடையாளங் காணப்படும்.

2.13 கடன் பெற்றுக்கொள்ளலின் ஆகுசெலவு

கடன் பெற்றுக்கொள்ளலின் ஆகுசெலவானது பொறுப்பேற்றல் மற்றும் பெறுமதியான சொத்துக்களின் நிர்மாணம் தொடர்பில் நேரடியாகத் தொடர்புபடுகின்றது. இந்த சொத்துக்கள் அவை எதிர்பார்க்கப்படும் பணிகளுக்காக தயார்செய்வதற்கு குறிப்பிடத்தக்க காலம் செல்லும். தயார் செய்வதற்கு எதிர்பார்க்கும் பணிகளுக்கு தயாராகும் வரை குறித்த சொத்துக்களின் ஆகு செலவில் சேர்க்கப்படுகின்றது.

ஏனைய சகல கடன் பெறுதல்களின் ஆகுசெலவானது விபரமான வருமான கூற்றில் அவை நடைபெறும் கால எல்லையினுள் இனங்காணப்படும்.

2.14 அரசாங்க உதவிக் கொடுப்பனவுகள்

நிதி அல்லாத உதவிக் கொடுப்பனவுகள் அடங்கலான அரசாங்க உதவிகள் அதன் நியாயபூர்வ பெறுமதிக்கமைய ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் குறித்த உதவிகள் பெற்றுக்கொள்ளப்படுதலின் பின்னர் குழுமத்தினால் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் அனுசரிக்கப்படுகின்றனவெனும் நியாயமான சான்றுபடுத்தல் இருக்கும் சந்தர்ப்பமொன்றின் போது அவ்வாறு செய்யப்படும்.

ஆகுசெலவுக்குரிய அரசாங்க உதவிக்கொடுப்பனவுகள் பின்னுரிமை செய்யப்படுவதோடு பூரண வருமான கூற்றின் மூலம் ஏற்றுக் கொள்ளப்படும். இதுவானது நஷ்டஈடு செலுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கும் ஆகுசெலவுக்கு ஏற்றவாறு உரிய காலத்தில் கவனத்திலெடுக்கப்படும்.

சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்களுக்குரிய அரசாங்க உதவிக்கொடுப்பனவுகள் அரசாங்க உதவிக் கொடுப்பனவுகளாக நடைமுறை சாராத பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதோடு இவை பூரண வருமான கூற்றில் அந்த வருமான சொத்துக்களில் எதிர்பார்க்கும் ஆயுட்காலம் அடிப்படையிலான நேர் கோடாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

நிதிசாராத உதவிக் கொடுப்பனவுகள், நிதிசாராத சொத்துக்களினது நியாயபூர்வ பெறுமதிக்கமைய கணக்கிடப்படுவதோடு கொடுப்பனவுகள் மற்றும் சொத்துக்களின் நியாயபூர்வ பெறுமதி அதற்கேற்ப கணக்கு வைக்கப்படும்.

2.15 நடைமுறை மற்றும் மாறுபடும் வரி பொறுப்புக்கள்

உரிய காலப்பகுதி தொடர்பில் வரிச் செலவினங்கள் நடைமுறை மற்றும் பின்னுரிமை வரிகளைக் கொண்டிருக்கும். ஏனைய பூரண வருமானங்களில் ஏற்றுக்கொள்ளப்படும் விடயங்களுக்குரிய அளவு தவிர்ந்த பூரண வருமான கூற்றில் வரிகளாக ஏற்றுக்கொள்ளப்படும். இந்த சந்தர்ப்பத்தில் வேறு பூரண வருமானத்திற்கும் வரிகள் அடையாளங் காணப்படும்.

தற்போதைய வருமான செலுத்துதல் துறைமுக அதிகாரசபைக்கு , குழுமங்களுக்குரிய கணக்குகள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் விதிக்கப்படும் செலுத்த வேண்டிய வரித்தொகை அடிப்படையாக வைத்து கணிப்பீடு செய்யப்படும். செலுத்த உள்ள வரித் தொகையை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தினால் வரி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் வழங்கப்படும்.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களினது வரி அடிப்படை மற்றும் அவை நிதிசார் கூற்றுக்களின் பொறுப்பேற்புப் பெறுமதிக்கிடையில் எழும் தற்காலிக ஏற்றத்தாழ்வுகளின் மீது பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சொத்து ஒன்றின் அல்லது அடிப்படை அங்கீகரித்தலின் போது எழும் சந்தர்ப்பங்களில் பின்னுரிமை வரிப் பொறுப்புக்கள் கணிப்பிடப்பட மாட்டாது. கணக்கீடு அல்லது வரி அறவிடக்கூடிய இலாபம் அல்லது நட்ட கொடுக்கல் வாங்கல்கள் நடைப்பெறும் சந்தர்ப்பத்தில் தாக்கம்

ஏற்படுத்தும் வர்த்தக கூட்டு தவிர்ந்த கொடுக்கல் வாங்கல்களின் போது சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் பூர்வாங்கமாக அடையாளம் காண்தலில் ஏற்படுமாயின் பின்னுரிமை வரிகள் கணிப்பிடபட மாட்டாது. அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இறுதியில் விதிக்கப்படும் வரி விகிதம் பாவிக்கப்படுதலின் மீது தீர்மானிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்ட பின்னுரிமை வரி சொத்துக்கள் ஒன்று சேர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது பின்னுரிமை வருமான வரி பொறுப்புக்கள் செலுத்தி முடிக்கப்பட்டதன் பின்னர் அவை தொடர்புபடும்.

எதிர்கால வரிகளில் கிடைக்கப்பெறும் இலாபம் தற்காலிக மாற்றங்களுக்கு தாக்கம் ஏற்படுத்தும் போது மாறுபடும் வரிச் சொத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தற்போது இருக்கும் வரிச் சொத்துக்கள் ஈடுசெய்வதற்கான சட்டரீதியான சொத்தொன்றின் கூடிய உரிமையுள்ள சந்தர்ப்பமொன்றில் மற்றும் ஒரேயொரு வரி அதிகார சபையினால் விதிக்கப்பட்டுள்ள மாறுபடும் வரி சொத்துக்களின் பொறுப்புக்களுக்கு வருமான வரி விதிக்கப்பட்டிருக்கும் சந்தர்பங்களில் பின்னுரிமை வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஈடுச்செய்துக்கொள்ள முடியும்.

2.16 ஊழியர்களுக்கான அனுகூலங்கள்

குழுமத்திற்குச் சொந்தமான அனுகூலங்கள் சம்பந்தப்படும் பங்களிப்பு தொடர்பிலான குறித்த திட்டங்களும் உள்ளன.

அ) குறித்த பங்களிப்புத் திட்டம்

குறித்த கொடுப்பனவுத் திட்டமானது பின்னரான சேவை அனுகூல மாற்றமடையும் திட்டமொன்றாக இருப்பதோடு இதன் கீழ் குழுவினால் வேறு நிறுவனமொன்றுக்கு குறிப்பிட்ட மாற்றமடையாத கொடுப்பனவு செலுத்தப்படுகின்றது. மேற்கொண்டு செலுத்தப்படுவதற்கான சட்டரீதியான அல்லது ஏனைய குறிப்பிட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றுவதற்கு குழுமம் பொறுப்பு வகிக்காது. இந்த நிதி செலுத்தப்பட வேண்டிய காலம் வரும்போது ஊழியர்களின் அனுகூலமாக இக்கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்படும்.

ஊழியரின் மொத்தச் சம்பளத்தில் 15% ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் குழுமத்தினால் செலுத்தப்படும்.

ஆ) குறித்த அனுகூல திட்டம்

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் முடிவில் குறித்த அனுகூல திட்டத்தின் தற்போதைய பெறுமதியானது குழுவின் பொறுப்பாகவிருக்கும், குறித்த அனுகூல திட்டம் ஆயுட்கால வீச்சு அலகு முறை பயன்படுத்தப்படும் சுயாதீனமாக தயாரிக்கப்பட்டு பெறுமதியின் மீது வருடாந்தம் கணிப்பிடப்படுகின்றது. நிகழ்கால மற்றும் சென்ற காலப்பகுதிக்கான சேவைகளுக்காக ஊழியரினால் உழைக்கப்பட்ட மதிப்பிடப்பட்டுள்ள எதிர்கால அனுகூலங்களுக்கு கழிவு வழங்கப்படுவதன் மூலம் அனுகூல பொறுப்பின் நிகழ்கால பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது.

அனுபவரீதியான சீர்செய்தல்கள் மற்றும் ஆயுள் கணிப்புவகை வழிகாட்டல்களின் மாற்றங்களினால் எழும் ஆயுள் கணிப்பு வகையின் கிடைக்கப்பெறுதல்கள், நட்டங்கள் அவை தொடர்புபடும் மொத்த வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்படும். ஓய்வு பெறுதலின் பொறுப்புகளுக்கு வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் நிதி பயன்படுத்தப்பட மாட்டாது.

இ) குறுகிய கால ஊழியர் அனுகூலம்

ஊழியரினால் சம்பந்தப்பட்ட சேவைகளுக்கு வழங்கும் நிதி கழிக்கப்படுவதன் மூலம் குறுகிய கால ஊழியர் அனுகூல பொறுப்புக்கள் கணிக்கப்படுகின்றன.

2.17 ஏற்பாடுகள் மற்றும் சடுதியான பிணைப்புகள்

அளவுரீதியான குறைத்தல்கள், சட்டரீதியான வேண்டுகோள் மற்றும் ஏனைய செலவினங்களுக்கான ஏற்பாடுகள் ஏதாவதொரு சென்றகால நிகழ்வொன்றின் பயனாக சட்டரீதியானதும் பிரயோசனமுள்ள பொறுப்பாக ஏற்றுக்கொள்ளப்படும். அந்த நிதியானது நம்பிக்கையூட்டும் வகையில் மதிப்பிடப்படுவதன் மூலம் குழுவிற்குரிய பொருளாதார வளங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அறிக்கை செய்யப்படும் திகதிக்குரிய மிகவும் நம்பிக்கையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு நிகழ்கால பொறுப்புக்கள் செழுமையாக்கப்படுவதற்குத் தேவையான மதிப்பிடப்படும் செலவுக்கான ஏற்பாடுகள் கணிப்பிடப்படும். மேலும் நிகழ்கால பொறுப்புக்கள் தொடர்பான இடர்நேர் மற்றும் நிச்சயமற்ற சந்தர்ப்பங்களும் இதனுள் அடங்கும்.

வளங்கள் வெளியே செல்லலின் தன்மை இல்லையெனில் அனைத்து சடுதியான பிணைப்புக்கள் நிதிசார் கூற்றுக்களின் குறிப்பில் காட்டப்படும்.

2.18 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டதன் பின்னரான வருமானம்.

இலங்கை நிதி அறிக்கையிடலின் நியமம் 15 இல் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களின் தேவைகளுக்கு ஏற்றவாறு இலங்கை துறைமுக அதிகாரசபை வாடிக்கையாளரோடு ஒப்பந்தத்தை ஏற்படுத்தும் ஒப்பந்த ஆரம்பத்தில் வாடிக்கையாளரோடு ஏற்படுத்திக்கொள்ளப்படும் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப குழுமம் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபை பொருட்கள் மற்றும் சேவைகளை மதிப்பீடு செய்வதுடன் வாடிக்கையாளருக்கு பொறுப்பளிப்பதற்கு உடன்பட்ட ஒவ்வொரு செயலாற்றுகை பொறுப்புக்கள்.

(அ) ஏதாவதொரு பொருள் அல்லது சேவை (அல்லது பொருட்கள் அல்லது பல சேவைகள்) அல்லது

(ஆ) சமனான மற்றும் வாடிக்கையாளருக்கு ஒப்படைக்கும் ஒரே முறையிலான / தன்மை கொண்ட வித்தியாசமான பொருட்கள் அல்லது சேவைத் தொடர்கள் இனங்காணப்படும்.

நிறுவனத்தினால் வாடிக்கையாளருக்கு உடன்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் (உதா சொத்தொன்று) ஒப்படைப்பதன் மூலம் செயலாற்றுகை பொறுப்பொன்றை நிறைவு செய்த போது அல்லது நிறைவு செய்து (வருமானம் ஒன்று கிடைக்கப்பெற்றதாக இடை கூறினால் இனங்காணப்படும். வாடிக்கையாளர் சொத்தின் பரிபாலனத்தை கைவிட்டால் (அல்லது எடுத்ததன் பின் குறித்த சொத்து ஒப்படைக்கப்படும்)

உரிய காலத்தின் பின்னர் பொருட்களினதும் சேவைகளினதும் நிருவாகம் ஒப்படைக்கப்படும் போதும் செயலாற்றுகை பொறுப்புகள் தொடர்பில் திருப்தி அடைந்து வருமானம் இனங் காணப்படும்.

செயலாற்றுகை பொறுப்பின் காலப்பகுதியினுள் நிறைவேற்றப்படாது விடின் இலங்கை துறைமுக அதிகாரசபை செயலாற்றுகை பொறுப்பை உரிய காலத்தினுள் நிறைவேற்றும்.

வருமானம் கணிப்பீடு செய்தல்

செயலாற்றுகை பொறுப்பு நிறைவேற்றப்பட்டதன் பின்னர் குறித்த செயலாற்றுகை பொறுப்பிற்காக ஒதுக்கப்பட்ட கொடுக்கல் வாங்கலின் விலை இலங்கை துறைமுக அதிகாரசபை வருமானமாக ஏற்றுக்கொள்கின்றது. கொடுக்கல் வாங்கல்களின் விலையை தீர்மானிப்பதற்கு ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் பயன்படுத்தப்படும் வர்த்தக ஆற்றல்கள் கவனத்தில் கொள்ளப்படும். கொடுக்கல் விலை என்பது மூன்றாந் தரப்பு சார்பாக அறவிடப்படும் நிதி தவிர்ந்த உடன்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளருக்கு பெற்றுக்கொடுத்ததன் மூலம் குழுமத்தினால் எதிர்பார்க்கப்படும் அனுகூலமாகும். கொடுக்கல் வாங்கல்களின் விலை தீர்மானிக்கப்படுகையில் பின்வரும்

அனைத்து விடயங்களும் இலங்கை துறைமுக அதிகாரசபை மற்றும் குழுமத்தினால் கருத்தில் எடுக்கப்படுகின்றன.

- மாறுபடும் தொகை
- மாறுபடும் தொகையின் எதிர்மதிப்பீடு
- ஒப்பந்தத்தில் விசேடமான நிதிப் பாகங்களைக் கொண்டிருத்தல்
- நிதிசாராத பெறுமதி
- வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டிய தொகை

நிறைவேற்றப்பட்ட இனங்காணக் கூடிய ஒவ்வொரு பிரதான நிலையின் சேவைகளை அடையாளங் காண்பதற்கு குழுமம் பின்வரும் அளவுகோல்களை பயன்படுத்தும்.

அ) தரையிறக்கல் மற்றும் வினியோக சேவைகள்

இறக்குமதி ஏற்றுமதி கப்பற் சரக்கு கையாளல்களுடன் தொடர்புபடும் கப்பற்சரக்குகளை ஏற்றுதல், இறக்குதல், களஞ்சியப்படுத்துதல் போன்றவற்றுக்கான கட்டணம் அறவிடுதல் ஆகிய சேவைகள் குழுமத்தினால் வழங்கப்படுகின்றது. இந்த சேவை விற்பனைகளுக்கான பணி அல்லது கொடுக்கல் வாங்கலை முடிவுறுத்தும் அடிப்படையில் சேவைகளை வழங்கும் கால எல்லையினுள் வருமானம் அடையாளங் காணப்பட்டு உண்மையாக வழங்கிய சேவை அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

(ஆ) கப்பலோட்டம் மற்றும் தொடர்புபடும் சேவைகள்

வெளிச்ச வீட்டு கட்டணங்களில் இருந்து கிடைக்கப்பெறும வருமானம், உட்பிரவேச கட்டணம் மற்றும் மேலதிக நேரக் கட்டணம், வழிகாட்டிக் கட்டணங்கள் கிடைக்கவேண்டிய இடத்தில் அதாவது கப்பல் வருகை தரும் நேரத்தில் இனங்காணப்படும். கப்பலோட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட சேவைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற வருமானம் குறித்த சேவைகள் பெற்றுக் கொள்ளும் காலப்பகுதியினுள் இனங்காணப்படுவதுடன் பணியொன்று அல்லது கொடுக்கல் வாங்கல் ஒன்று முடிவடைதலின் மீது மற்றும் உண்மையாக வழங்கப்பட்ட சேவைகள் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

இ) கப்பல் சரக்குகளின் போக்குவரத்து சேவைகள்

கொள்கலன் மற்றும் மரபுரீதியான கப்பற்சரக்கு கையாளல்களுடன் தொடர்புடைய கப்பற்சரக்கு போக்குவரத்து சேவைகளில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானம் சேவை வழங்கப்பட்ட காலத்துடன் அடையாளங் காணப்படுவதுடன் பணி அல்லது கொடுப்பனவை முடிவுறுத்தும் அடிப்படையிலும் உண்மையாக வழங்கப்பட்ட சேவை அடிப்படையிலும் மதிப்பீடு செய்யப்படும்.

வட்டி வருமானம்

பயனான வட்டி முறை பயன்பாட்டின் மீதான வட்டி வருமானம் ஏற்றுக்கொள்ளப்படும். கொடை வழங்குவதற்கு அல்லது கிடைக்கப்பெறுவதற்குள்ள கடன் தொகையில் பாதிப்பு ஏற்படுகையில் இலங்கை துறைமுக அதிகாரசபை அதன் பொறுப்பேற்புப் பெறுமதி மீள் இலாப பெறுமதிக்கு குறைப்பதுடன் அது நிறுவனத்தின் அடிப்படை பயனான வட்டி விகிதத்துடன் கழிவு செய்யப்பட்ட மதிப்பிடப்பட்ட நிதித் தொகையாக இருப்பதோடு வட்டி வருமானமாக தொடர்ச்சியாக கழிவு வழங்கப்படும். பாதிப்படைந்த கடன் தொகை மற்றும் கிடைக்கப்பெறுதல்கள் மீது வட்டி வருமானத்தின் அடிப்படை பயனான வட்டி விகித பாவனையின் மூலம் அடையாளங் காணப்படும். வங்கி மீதி மற்றும் வங்கிகளில் வைப்பு மீதான வட்டி வருமானம் ஒன்று சேர்ந்த அடிப்படையில் இனங்காணப்படும்.

குத்தகை மற்றும் வாடகை வருமானம்

எதிர்பாராத குத்தகை வாடகை வருமானங்கள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தின் போது அடையாளங் காணப்படுவதோடு எதிர்பாராத வரி வருமானம் தவிர்ந்த இயக்க

குத்தகை வாடகை உடன்படிக்கையின் கீழ் கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் குத்தகை வாடகை கால எல்லைக்கு அப்பால் எளிய நேர்கோட்டு அடிப்படையில் இனங்காணப்படும். குத்தகை வாடகை கால எல்லை என்பது வரி உடன்படிக்கையில் காண்பிக்கப்பட்டிருக்கும் நிலையான கால எல்லையும் அதை மேற்கொண்டும் நீடிக்கப்பட வேண்டிய கால எல்லையாக இருப்பதோடு இது தொடர்பில் குத்தகையாளருக்கு குறித்த வரி உடன்படிக்கை தொடர்ச்சியாக பேணிச்செல்லும் மாற்றுவழியாக இருக்கின்றது. குத்தகை வாடகை உடன்படிக்கையின் ஆரம்பத்தில் குத்தகையாளரினால் குறித்த மாற்றீடு பயன்படுத்தப்படுமென பணிப்பாளர்கள் காரணத்தோடு உறுதிப்படுத்துவர். வரி உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு கிடைக்கப்பெறும் தவணைகள் கிடைக்கப்பெறும் வகையில் விபரமான வருமானக் கூற்றினுள் அடையாளங் காணப்படும்.

அரச இறைமை வருமானம்

அரச இறைமை வருமானம் குறித்த கணக்கிலிருக்கும்ெ பொருட்களின் பெறுமதிக்கு ஏற்ப ஒன்றுசேர் அடிப்படையில் அடையாளங்காணப்படுவதோடு அரச இறைமை வருமானம் பொருளாதார விளைவுகள் மூலம் நிறுவனத்துக்கு பாய்ச்சல் நடைபெறுவதோடு அதன் மூலம் வருமான பங்குலாபம் சந்தேகமின்றி கணக்கிட முடியும்.

பங்கிலாப வருமானம்

கொடுப்பனவுகளை பெறுவதற்கான உரித்து சான்றுறுதிப்படுத்தப்படும் போது பங்கிலாப வருமானம் அடையாளங் காணப்படும்.

சொத்துக்கள் , இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் அகற்றப்படுதலின் மூலம் கிடைக்கப்பெறும் இலாப நட்டங்கள்

சொத்துக்கள், இயந்திர வகை மற்றும் உபகரணங்கள் அகற்றப்படுதலின் மூலம் கிடைக்கப்பெறும் தூய இலாபம் மற்றும் நட்டம் விபரமான வருமானக் கூற்றில் அகற்றப்படுதலின் பின்னர் கிடைக்கப்பெறும் வருமானம், சொத்தின் பொறுப்பேற்புப் பெறுமானம் மற்றும் சம்பந்தப்பட்ட விற்பனை செலவினம் கழிக்கப்படுதலின் பின்னர் கணக்கு வைக்கப்படும்.

2.19 செலவினம்

கையாளல் மேற்கொள்ளப்படுகையில் ஏற்படும் அனைத்து செலவினங்களும் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் இலாபத்தினுள் ஒன்றுசேர்க்கப்படும்.

2.20 அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் பின்னரான சம்பவ நிகழ்வு

அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் பின்னர் நிகழ்ந்த அனைத்து முக்கிய நிகழ்வுகள் கவனத்திற் கொள்ளப்பட்டு அதற்குத் தேவையான திருத்தங்கள் அல்லது தெரிவித்தல்கள் நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளன.

2.21 பொறுப்புக்கள்

அனைத்து பொருட்களுக்குரிய பொறுப்புக்கள் இனங்காட்டப்பட்டு அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.22 முக்கிய கணக்குகளின் மதிப்பிடல்கள் மற்றும் தீர்மானங்கள்

நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையின் போது முகாமைத்துவத்தினால் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் கணிக்கப்படுதல் ஏற்றுக்கொள்ளப்படுதலின் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் வழிகாட்டிகள் கவனத்திலெடுக்கப்படுகின்றன.

கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடு மற்றும் பிழைகளின் வித்தியாசங்கள்

2021.12.31 ஆந் திகதியில் முடிவடையும் வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்கள் சார்பில் முதல் தடவையாக இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இலங்கை நிதி அறிக்கை செய்யும் நியமங்கள் 15,09 மற்றும் 16 பயன்படுத்தப்பட்டுள்ளன. புதிய நிதி அறிக்கையிடும் நியமங்களின் பாவனை காரணமாக கணக்கீட்டு கொள்கைகளின் தன்மை மற்றும் ஏனைய மாற்றமடைதல்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன.

வழிகட்டல்களுக்கேற்ப இலங்கை துறைமுக அதிகாரசபை, இலங்கை நிதி அறிக்கை செய்யும் நியமம் இல 15 இல் பின்பற்றக் கூடியவற்றை அனுசரித்துச் சென்றுள்ளது. அதன்படி ஆரம்ப ஈடுபடுத்துதல் திகதி உள்ளடக்கப்படும் வருடாந்த கணக்குகள் அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியின் திணிவு மூலதனத்தில் தடுத்து வைக்கப்பட்ட ஈட்டல்களின் ஒன்றுசேர்ந்த மீதி (தகுந்தவாறு) சீர் செய்யப்படும். இந்த செயற்பாட்டின் கீழ் ஆரம்ப ஈடுபடுத்தல் திகதி வரை முடிவுறாத ஒப்பந்தங்களுக்கு மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை குறித்த நியமத்தை தெரிவு செய்துள்ளது.

இலங்கை நிதி அறிக்கை செய்யும் நியமம் 09 இல் காட்டப்பட்டுள்ளவாறு தவிர்ந்த இலங்கை கணக்கீட்டு நியமம் 08 கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டின் மதிப்பீடுகள் மற்றும் பிழைகளின் வித்தியாசங்களுக்கு ஏற்ப இலங்கை துறைமுக அதிகாரசபை இலங்கை நிதி அறிக்கையிடும் நியமம் 09 தைப் பயன்படுத்த மாட்டாது. இலங்கை நிதி அறிக்கையிடும் நியமம் 09 கேற்ப வகையீடு மற்றும் கணிப்பீடு செய்யும் தேவைப்பாடு இலங்கை துறைமுக அதிகாரசபையினதும் குழுமத்தினதும் நிலுவைகளுக்கு குறிப்பிடத்தக்க தாக்கம் ஏற்படுத்தாது. அதன்படி இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 09 இல் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை கணக்கீட்டு நியமம் 389 கீழ் நியாயமான பெறுமதிக்கு கணிப்பீடு செய்யப்பட்ட நிதி ஆவணங்களின் கணிப்பீடு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றது. நிதி ஆவணங்களின் வகையீடு பின்வருமாறு காண்பிக்க முடியும்.

ஆரம்ப கால முதிர்வின் போது கணிப்பீடு செய்யப்பட்ட அரசாங்க உண்டியல்கள் மற்றும் வைப்புக்களின் முதலீடுகள் (குறைவடையும் விலைக்கு) வகையீடு செய்யப்பட்டு கணிப்பீடு செய்யப்படும்.

- கால முதிர்வின் போது வகையீடு செய்யப்பட்ட கடன் ஆவணங்கள் குறைவடையும் விலைக்கு வகையீடு செய்யப்பட்டு கணிப்பீடு செய்யப்படும்.

- முன்னர் பெற்ற கடன் மற்றும் கிடைக்கப்பெறுதல்களாக கணிப்பீடு செய்யப்பட்ட வர்த்தக கிடைக்கப்பெறுதல்கள் மற்றும் ஏனைய கிடைக்கப்பெறுதல்கள் குறைவடையும் விலைக்கு வகையீடு செய்யப்பட்டு கணிப்பீடு செய்யப்படும்.

- "முன்னர் விற்பதற்குள்ளதாக" வகையீடு செய்யப்பட்டு அட்டவணையிடப்பட்ட மற்றும் அட்டவணையிடப்படாத கம்பனிகளின் திணிவு முதலீடுகள் ஏனைய விபரமான வருமானம் மூலம் நியாயமான பெறுமதிக்கு வகையீடு செய்யப்பட்டு கணிப்பீடு செய்யப்படும்.

2.22.1 நிதி கூற்றுக்களின் மீது கூடிய முக்கிய தாக்கம் ஏற்படுத்தும் கணக்கீட்டு கொள்கைகள் பயன்படுத்தப்படும் போது மேற்கொள்ளப்படும் முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு

(அ) மாறுபடும் வரிச் சொத்துக்களை அறிந்து கொள்ளல் எதிர்கால வரிகளுக்குட்படக் கூடிய வருமானத்தின் சாத்தியத்தன்மையை மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னுரிமை வரிச் சொத்துக்கள் பயன்படுத்தலின் அடிப்படையாகும்.

2.22.2 சொத்துக்கள்,பொறுப்புக்கள், வருமானம், செலவினம் ஏற்றுக் கொள்ளல் மற்றும் கணித்தலின் மீது மிகவும் முக்கிய தாக்கம் ஏற்படும் மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் பற்றியதான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) தேய்மான சொத்துக்கள் பற்றியதான பயனான ஆயுட்காலம்

முகாமைத்துவத்தினால் ஒவ்வொரு அறிக்கை செய்யப்படும் காலப்பகுதியினுள் தேய்மானமடையும் சொத்துக்களினது பயனான ஆயுட்காலம் மதிப்பிடப்படுவது மீளாய்வு செய்யப்படும். சொத்துக்களினது எதிர்பார்க்கும் பொருளாதார பயன்பாடு மீது இது அமைந்திருக்கும். இந்த மதிப்பிடல்களின் நிச்சயமற்ற தன்மை தொழில்நுட்ப காலப்பகுதிகளுடன் தொடர்புபடும். இந்த தொழில்நுட்ப காலப்பகுதிக்கமைய காலாவதியாகும் மென் பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களினது பயன்பாடு மாற்றமடையலாம்.

(ஆ) வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல திட்டம்

வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூலத் திட்டத்தின் பொறுப்புக்களினது நிகழ்கால பெறுமதியானது பல காரணிகளின் மீது தங்கியுள்ளது. பல வழிகாட்டல்கள் பயன்படுத்தப்பட்டு ஆயுள் கணிப்பு அடிப்படையில் இது நிர்ணயிக்கப்படுகின்றது. தள்ளுபடி கட்டணங்கள் அடங்கலாக வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூலத் திட்டத்தின் தூய ஆகுசெலவு மற்றும் பொறுப்பு நிர்ணயிக்கப்படுகையின் போது இந்த வழிகாட்டல்கள் பயன்படுத்தப்படும். இந்த வழிகாட்டல்களின் சில மாற்றங்களின் மீது வரைவிலக்கணமளிக்கப்பட்ட அனுகூல பொறுப்பேற்புப் பெறுமதிக்கு தாக்கம் ஏற்படுத்தும்.

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

3 சொத்துக்கள் இயந்திர சாதன வகை உபகரணங்கள்

குழுமம்	2021 சனவரி 01 ஆந் திகதி வரை	ஒன்று சேர்த்தல்கள்	(அகற்றப்படுதல்கள்)	மீள் வகையீடு சீர் செய்தல்கள்	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
3.1 வகை					
காணிகள்	51,806,736,202	-	-	-	51,806,736,202
இயக்க கட்டிடங்கள் மற்றும் அமைவுகள்	114,132,472,855	405,757,207	-	(319,500,000)	114,218,730,062
மிதவை உபகரணங்கள்	7,039,180,094	73,511,240	(52,130,000)	-	7,060,561,334
கையாளல் உபகரணங்கள்	27,131,505,282	478,155,422	(3,100,000)	-	27,606,560,703
இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள்	909,281,792	88,453,255	(1,324,561)	-	996,410,485
அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டிடங்கள்	988,932,121	62,613,089	(11,446,875)	-	1,040,098,335
ஊழியர்களின் விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள்	454,821,991	-	-	-	454,821,991
கணனி வன் பொருள்	561,612,464	57,051,048	(32,551,748)	-	586,111,765
மின்சாரம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்	2,452,228,059	258,071,582	(27,963,124)	-	2,682,336,517
அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	206,876,510	22,816,196	(2,391,984)	-	227,300,722
வாகனங்கள்	991,131,199	15,980,621	(17,563,509)	-	989,548,311
ஏனைய சொத்துக்கள்	433,278,876	80,472,550	(6,057,079)	-	507,694,347
	207,108,057,444	**1,542,882,209**	**(154,528,880)**	**(319,500,000)**	**208,176,910,773**

3.1.1 தேய்மானம்	2021 சனவரி 01 ஆந் திகதி வரை	ஒன்று சேர்த்தல்கள்	(அகற்றப்படுதல்கள்)	மீள் வகையீடு சீர் செய்தல்கள்	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
இயக்க கட்டிடங்கள் மற்றும் அமைவுகள்	31,875,913,546	1,315,217,360	-	(65,061,124)	33,126,069,783
மிதவை உபகரண்ங்கள்	6,992,466,554	10,988,780	(52,077,870)	-	6,951,377,464
கையாளல் உபகரணங்கள்	15,749,888,085	909,057,903	(3,096,900)	-	16,655,849,088
இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள்	622,600,925	48,159,118	(1,323,237)	832,913	670,269,720
அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டிடங்கள்	370,610,665	33,779,135	(11,709,652)	63,282	392,743,431
ஊழியர்களின் விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள்	255,304,885	15,491,800	-	-	270,796,685
கணனி வன் பொருள்	397,581,507	45,799,900	(32,519,196)	-	410,862,211
மின்சாரம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்	2,219,968,734	86,491,575	(27,925,610)	146,200	2,278,680,899
அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	158,120,482	16,766,796	(2,389,592)	34,817	172,532,504
வாகனங்கள்	799,941,896	33,175,307	(17,549,205)	(261,829)	815,306,169
ஏனைய சொத்துக்கள்	390,051,835	20,465,851	(6,051,022)	1,521,278	405,987,942
	59,832,449,113	**2,535,393,525**	**(154,642,283)**	**(62,724,462)**	**62,150,475,893**

3.1.2 முன் கொண்டு வரும் தூய பெறுமதி				2021 சனவரி 01 ஆந் திகதி வரை	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
சொத்துக்கள் இயந்திர சாதனங்கள் மற்றும் உபகரணங்கள்					
காணி				51,806,736,202	51,806,736,202
இயக்க கட்டிடங்கள் மற்றும் அமைவுகள்				81,092,660,279	82,256,559,309
மிதவை உபகரண்ங்கள்				109,183,870	46,713,540
கையாளல் உபகரணங்கள்				10,950,711,615	11,381,617,196
இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள்				326,140,766	286,680,866
அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டிடங்கள்				647,354,904	618,321,456
ஊழியர்களின் விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள்				184,025,306	199,517,106
கணனி வன் பொருள்				175,249,554	164,030,957
மின்சாரம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்				403,655,618	232,259,325
அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்				54,768,219	48,756,028
வாகனங்கள்				174,242,142	191,189,303
ஏனைய சொத்துக்கள்				101,706,405	43,227,041
				146,026,434,881	**147,275,608,332**
நிறைவடையாத வேலைகள்	**(குறிப்பு 3.3)**			2,764,042,687	993,693,029
				148,790,477,568	**148,269,301,361**

குழுமம்	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை	2020 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
சொத்துக்கள் இயந்திர சாதன வைக மற்றும் உபகரணங்களை சீர் செய்யப்பட்டது.	181,059,105	538,102,638
	181,059,105	**538,102,638**
	148,971,536,673	**148,807,403,998**

1. காணிகள் ரூபா 155,011,281.33 , வீட்டு உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 1,033,962.11 , மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் ரூபா 8,991.603.34 இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள் ரூபா 15,547,165.13 ஏனைய சொத்துக்கள் ரூபா 475,093.55 கணக்கில் உள்ளடங்கப்படும்
2. ரூபா. 55,695,295 பெறுமதியான சொத்துக்கள் மத ஸ்தலங்களாக பயன்படுகின்றன.
3. சொத்து பட்டியலுக்கு ஏற்ப 2020/12/31 ஆம் திகதி வரை முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா
4. 2021 ஆம் ஆண்டில் கணனி வன் மற்றும் மென் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகன பெறுமதிக்கு நிகரான சொத்துக்களிற்கு இடையில் முன்னெடுக்கப்படும் உள்ளக பரிமாற்றம்
5. பாவனையிலிருந்து முழுமையாக அகற்றப்பட்ட ஆனாலும் தற்போதும் பாவனையிலுள்ள 04 மோட்டார் வாகனங்களை குறித்த குழுவினால் கலந்துரையாடப்பட்டதுடன் அனுமதி பெறப்பட்ட கணக்காய்வாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக கடன் வழங்கப்பட்டது.

-

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

3 சொத்துக்கள் , இயந்திர சாதன வகை, உபகரணங்கள்

இ.நு.அ.ச	2021 சனவரி 01 ஆந் திகதி வரை	ஒன்று சேர்த்தல்கள்	(அகற்றப்படுதல்கள்)	மீள் வகையீடு சீர் செய்தல்கள்	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
3.1 ஆகு செலவு					
காணிகள்	51,806,736,202	-	-	-	51,806,736,202
இயக்க கட்டிடங்கள் மற்றும் அமைவுகள்	114,132,472,855	405,757,207	-	(319,500,000)	114,218,730,062
மிதவை உபகரணங்கள்	7,039,180,094	73,511,240	(52,130,000)	-	7,060,561,334
கையாளல் உபகரணங்கள்	27,131,505,282	478,155,422	(3,100,000)	-	27,606,560,703
இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள்	867,049,993	57,827,784	(1,324,561)	-	923,553,215
அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டிடங்கள்	988,932,121	62,613,089	(11,446,875)	-	1,040,098,335
ஊழியர்களின் விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள்	454,821,991		-	-	454,821,991
கணனி வன் பொருள்	556,554,287	56,349,448	(32,551,748)	-	580,351,988
மின்சாரம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்	2,452,228,059	258,071,582	(27,963,124)	-	2,682,336,517
அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	194,088,857	18,948,591	(2,391,984)	-	210,645,464
வாகனங்கள்	925,708,841	15,980,621	(14,304,580)	-	927,384,882
ஏனைய சொத்துக்கள்	433,278,876	80,472,550	(6,057,079)	-	507,694,347
	206,982,557,458	**1,507,687,533**	**(151,269,951)**	**(319,500,000)**	**208,019,475,040**

3.1.1 தேய்மானம்	2021 சனவரி 01 ஆந் திகதி வரை	ஒன்று சேர்த்தல்கள்	(அகற்றப்படுதல்கள்)	மீள் வகையீடு சீர் செய்தல்கள்	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
இயக்க கட்டிடங்கள் மற்றும் அமைவுகள்	31,875,913,546	1,315,217,360	-	(65,061,124)	33,126,069,783
மிதவை உபகரண்ங்கள்	6,992,466,554	10,988,780	(52,077,870)	-	6,951,377,464
கையாளல் உபகரணங்கள்	15,749,888,085	909,057,903	(3,096,900)	-	16,655,849,088
இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள்	603,508,827	44,593,960	(1,323,237)	832,913	647,612,464
அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டிடங்கள்	370,610,665	33,779,135	(11,709,652)	63,282	392,743,431
ஊழியர்களின் விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள்	255,304,885	15,491,800	-	-	270,796,685
கணனி வன் பொருள்	393,996,104	45,051,269	(32,519,196)	-	406,528,177
மின்சாரம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்	2,219,968,734	86,491,575	(27,925,610)	146,200	2,278,680,899
அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்	151,044,045	14,902,610	(2,389,592)	34,817	163,591,881
வாகனங்கள்	777,961,239	28,969,712	(14,290,276)	(261,829)	792,378,846
ஏனைய சொத்துக்கள்	390,051,835	20,465,851	(6,051,022)	1,521,278	405,987,942
	59,780,714,519	**2,525,009,955**	**(151,383,354)**	**(62,724,462)**	**62,091,616,658**

3.1.2 முன் கொண்டு வரும் தூய பெறுமதி				2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை	2020 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
சொத்துக்கள், இயந்திர சாதான வகை, உபகரணங்கள்					
காணி				51,806,736,202	51,806,736,202
இயக்க கட்டிடங்கள் மற்றும் அமைவுகள்				81,092,660,279	82,256,559,309
மிதவை உபகரண்ங்கள்				109,183,870	46,713,540
கையாளல் உபகரணங்கள்				10,950,711,615	11,381,617,196
இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள்				275,940,752	263,541,165
அலுவலகங்கள் மற்றும் நலன்புரி கட்டிடங்கள்				647,354,904	618,321,456
ஊழியர்களின் விடுதிகள் மற்றும் ஏனைய கட்டிடங்கள்				184,025,306	199,517,106
கணனி வன் பொருள்				173,823,811	162,558,183
மின்சாரம் மற்றும் இலத்திரனியல் சாதனங்கள்				403,655,618	232,259,325
அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்				47,053,584	43,044,812
வாகனங்கள்				135,006,036	147,747,602
ஏனைய சொத்துக்கள்				101,706,405	43,227,041
				145,927,858,381	**147,201,842,939**
நிறைவடையாத வேலைகள்	**(குறிப்பு 3.3)**			2,761,432,393	993,693,029
				148,689,290,774	**148,195,535,967**

இ.நு.அ.ச	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை	2020 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
சொத்துக்கள், இயந்திர வகை, உபகரணங்கள் சீர்செய்தல்	181,059,105	538,102,638
	181,059,105	**538,102,638**
	148,870,349,879	**148,733,638,604**

1. காணிகள் ரூபா 155,011,281.33 , வீட்டு உபகரணங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 1,033,962.11 , மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் ரூபா 8,991.603.34 இயந்திர சாதன வகை மற்றும் உபகரணங்கள் ரூபா 15,547,165.13 ஏனைய சொத்துக்கள் ரூபா 475,093.55 கணக்கில் உள்ளடங்கப்படும்

2. ரூபா. 55,695,295 பெறுமதியான சொத்துக்கள் மத ஸ்தலங்களாக பயன்படுகின்றன.

3. சொத்து பட்டியலுக்கு ஏற்ப 2020/12/31 ஆம் திகதி வரை முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா

4. 2021 ஆம் ஆண்டில் கணனி வன் மற்றும் மென் பொருட்கள் மற்றும் மோட்டார் வாகன பெறுமதிக்கு நிகரான சொத்துக்களிற்கு இடையில் முன்னெடுக்கப்படும் உள்ளக பரிமாற்றம்

5. பாவனையிலிருந்து முழுமையாக அகற்றப்பட்ட ஆனாலும் தற்போதும் பாவனையிலுள்ள 04 மோட்டார் வாகனங்களை குறித்த குழுவினால் கலந்துரையாடப்பட்டதுடன் அனுமதி பெறப்பட்ட கணக்காய்வாளர் சங்கத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களுக்கு அமைவாக கடன் வழங்கப்பட்டது.

3.2 குத்தகை வடகை சொத்துக்கள்

குழுமம் /இதுஅச	2021 சனவரி 01 ஆந் திகதி வரை	ஒன்று சேர்த்தல்கள்	(அகற்றப்படுதல்கள்)	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
ஆகு செலவு	95,285,000	663,157	-	95,948,157
தேய்மானம்	2,925,421	11,277,620		14,203,041

	2021 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை	2020 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை
முன் கொண்டுவரப்பட்ட தேறிய பெறுமதி	**81,745,116**	**92,359,578**

5 வருட கால எல்லைக்காக நிதிசார் குத்தகை வாடகையின் கீழ் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் மேலே காட்டப்படுகின்றது.

(இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளன)

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கானது

3.3 நடைபெற்றுவரும் மூலதனமிடலின் பணிகள்	இதுஅச				குழுமம்	
குழுமம் /இதுஅச	2021 சனவரி 01 ஆந் திகதி வரை	ஆண்டுக்கான செலவினம்	மாற்றப்படும்	2021 டிசம்பர் 31 ஆந் திகதி வரை	ஆண்டிற்கான செலவினம்	2021 டிசம்பர் 31 ஆந் திகதி வரை
கொழும்பு துறைமுக அபிவிருத்தி	325,823,761	1,888,341,443	425,179,102	1,788,986,102	-	1,788,986,102
காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி மற்றும் மறு சீரமைப்பு	56,539,172	80,274,056	24,399,314	112,413,914	-	112,413,914
காலி துறைமுகம்	30,805,033	16,714,359	14,224,188	33,295,203	-	33,295,203
காலி துறைமுக அபிவிருத்தி செய்திட்டம்	418,028,350	-	-	418,028,350	-	418,028,350
ஆ	101,131,656	61,407,761	4,357,374	158,182,043	-	158,182,043
துறைமுக நகர அபிவிருத்தி	2,924,107	-	-	2,924,107	-	2,924,107
மூலதன சொத்துக்களின் கொள்வனவு (உள்நாடு)	2,416,050	-	-	2,416,050	-	2,416,050
தலைமையக அலுவலகம்	4,582,998	-	-	4,582,998	-	4,582,998
கிழக்கு கொள்கலன் முனைய அபிவிருத்தி	9,296,201	151,557,018	-	160,853,218	-	160,853,218
கொழும்பு எண்ணெய் வங்கிக்காக எண்ணெய்த் தாங்கி நிர்மாணித்தல் **(குறிப்பு . 62)**	42,145,701	93,124,954	55,520,250	79,750,406	2,610,294	82,360,700
	993,693,029	**2,291,419,592**	**523,680,228**	**2,761,432,393**	**2,610,294**	**2,764,042,686**

முடிவுறாத வேலைகள் தொடர்பான கொள்கையின் "வேலைகளை நிறைவு செய்யும் சான்றிதள் சம்பந்தப்பட்ட திணைக்களத்திடம் வழங்கப்பட்டதன் பின்னர் முடிவுறாத வேலையின் கணக்குகளில் ஆகு செலவு ஈடுபடுத்துதல் " நிதிசார் கூற்றுக்களின் குறிப்புகளின் 2.4.1 இன் கீழ் வெளிப்படுத்தப்படுகின்றன.

4 உணரா சொத்துக்கள்

குழுமம்	2021 சனவரி 01 ஆந் திகதி வரை	ஒன்று சேர்த்தல்கள்	(அகற்றப்படுதல்கள்)	சீர் செய்தல்கள்	2021 டிசம்பர் 01 ஆந் திகதி வரை
4.1 ஆகு செலவு மீது					
(ஏ) 2007/08 வருடம் முதல் 2010/11 வருடம் வரை நிதி ஆண்டு தொடர்பாக அதிகாரசபையின் வருமான வரி கணக்கிடுதல் தொடர்பாக மேன்முறையீடொன்று வரி மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, அது இதுவரை

நிறைவடையாததனால் குறித்த வருடத்திற்காக வரி செலுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பாக ரூபா 6,387.4 மில்லியன் ஒதுக்கீடு நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக்கூற்றுக்களுக்கேற்ப கிடைக்கப்பெற வேண்டிய தடுத்து வைக்கப்படும் வரி நிலுவை ரூபா 723.41 மில்லியனும் பெயரளவிலான வரி செலவு ரூபா 403.29 மில்லியனும் மற்றும் பொருளாதார சேவைகள் வரி வரவு ரூபா 1,165.66 ஆகவும் காட்டப்பட்டிருந்த போதும் குறித்த வரிகள் ஒதுக்கலின் போது அவ்வரி தீர்க்கப்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது. எனவே, மேலும் குறித்த நிலுவை கிடைக்கக் கூடியவாறு காட்ட முடியாதிருந்த போதிலும் கணக்குகளில் குறித் சீர்செயதல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே, ரூபா 2,292.39 மில்லியன் தடுத்து வைக்கும் வரி பெயர் மாத்திரமான வரி மற்றும் பொருளாதார சேவைகள் வரி மீயாள்வாண்டின் இறுதியான போதிலும் கிடைக்க வேண்டிய நிலுவையாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) இலங்கை கணக்கீட்டு நியம இல 24 இல் 18,19 மற்றும் 21 பந்திகளுக்கு ஏற்ப நிதி ஆண்டுடன் தொடர்பான தரப்பினருடன் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் தன்மைகள், நிலுவைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக பயன்படுத்துனர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் தகவல்கள் தொடர்பாக தரப்பினரின் கொடுக்கல் வாங்கலின் கீழ் வெளிப்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறாயினும், அதிகாரசபையினால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் சொத்துக்கள் நீண்டகால வாடகை அடிப்படையில் கையளிப்பது தொடர்பில், 2017 ஆம் ஆண்டில் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் (HIPS) கம்பனியினால் மற்றும் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக இணைந்த (HIPG) கம்பனியினால் கிடைத்திருந்த ரூபா 164,479 மில்லியன் மாறுபடும் குத்தகை வாடகை தொடர்பாக மற்றும் மீளாய்வு ஆண்டில் தேறிய இலாபத்தை கணக்கிடும் போது வருமானக் கூற்றுக்கு வரவு வைக்கப்பட்டிருந்த மேற்படி நிலுவைகள் தொடர்பாக வருடாந்த மாறுபடும் குத்தகை வாடகை வருமானம் ரூபா 1,713 மில்லியன் அந்த மாறுபடும் குத்தகை வாடகை பெறுமதி மற்றும் புதிய எண்ணெய் தாங்கி நிர்மாணிக்கும் வேலை ஆரம்பிக்கும் முற்பணக் கொடுப்பனவுக்காக ஜய கன்டேனர் டர்மினல் கம்பனியினால் 2021 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்கு ரூபா 95.7 மில்லியன்கள் பெற்றுக்கொடுத்தல் ஆகிய தொடர்புபட்ட தரப்பினர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்று தொடர்பிலான குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கை கணக்கியல் நியம் இல. 37 இன் 85 ஆம் பந்திக்கு ஏற்ப ஒவ்வொரு ஏற்பாடு தொடர்பான இணைப்புத் தன்மை தொடர்பாக சிறு விபரமொன்று செலுத்த வேண்டிய கால வரையறை மற்றும் நிச்சமற்ற தன்மை தொடர்பாக வெளிப்படுத்த வெண்டியிருந்தாலும், அதிகாரசபையில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இருந்த ரூபா 6,706 மில்லியனின் உரிமை கூறக்கூடிய ஒதுக்கீடு தொடர்பாக மேற் குறிப்பிட்டவாறு செயற்பட்டிருக்கவில்லை.

(ஓ) இலங்கை துறைமுக அதிகாரசபையின் கணக்கியற் கொள்கை 2.4.3 மற்றும் இலங்கை கணக்கீட்டு நியம இல. 38 இல் 24 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றினால் கையகப்படுத்தப்பட்ட உணரா சொத்துக்களுக்கு ஆகுசெலவிற்கு பெறுமானமிடப்பட வேண்டியிருப்பினும் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த NAVIS – N4 முனைய முகாமைத்துவ கணனித் தொகுதி 2021 ஏப்ரல் 29 ஆம் திகதி முதல் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருந்ததோடு, தடுத்துவைக்கப்பட்ட தொகை (Refention) ரூபா 92.99 மில்லியன் மூலதனமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகாரசபையில் உணரா சொத்துக்கள் மற்றும் செலுத்த வேண்டிய தடுத்து வைக்கப்பட்ட தொகை ரூபா 92.99 குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஔ) நிதிக் கூற்று தொடர்பான குறிப்பு இல. 2.2.2 இற்கு ஏற்ப இணைக் கம்பனிகளின் முதலீடு பங்கு முறைமீது அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படுகின்றதென காட்டப்பட்டிருந்தது. மேற்படி கொள்கைக்கு ஏற்ப அதிகாரசபையின் இணைக்கம்பனியான ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைகள் கம்பனியில்

(HIPS) 2021 வருடம் தொடர்பான நட்டத்தினால் அதிகாரசபைக்குரிய இலாப/ நட்டம் பங்குகளான ரூபா 383.1 மில்லியன் நட்டம் இணைக் கம்பனியின் 2021 நகல்கள் நிதிக்கூற்றின் மீது அடிப்படையாக கணக்கிடப்பட்டிருந்தது.

(க) காலிமுகதிடலின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கை தொர்பாக அதிகாரசபையினால் 2018 வருடத்தில் செலவிடப்பட்டிருந்த ரூபா 7.61 மில்லியன்கள் தொகை காலிமுகத்திடலின் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையின் இணைக்கம்பனியொன்றான இலங்கை துறைமுக முகாமைத்துவ மற்றும் ஆலேசனை கம்பனியினால் கிடைக்க வேண்டிய தொகையொன்றாக அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்படாதிருந்தது. மேற்குறித்த நிதியினை செலுத்த முடியாதென கம்பனி அதிகாரசபைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது. இதன் காரணமாக மேற்குறித்த நிதியை பெற்றுக்கொள்வதில் நிச்சயமற்ற தன்மை நிலவிய போதிலும் நிதிக் கூற்றுக்களில் அதற்காக சேதப்படுத்தல்களான ஒதுக்கீடாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ங) அதிகாரசபைக்கு உரித்து அல்லாத மற்றும் அதிகாரசபையினால் இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத ஒலுவில் துறைமுகத்தின் செயல்திட்டம் தொடர்பாக காணிகள் கையேற்றல் தொடர்பில் காணிகளை இழந்தவர்களுக்கு செலுத்தப்படுகின்ற நஷ்டஈட்டுத் தொகை ரூபா 41.8 மில்லியன் நிறைவேற்றப்படாத வேலைகள்/ காணிகள் கணக்கினுள் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ச) ஒன்றிணைந்த நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள மாகம்புர துறைமுக முகாமைத்துவ கம்பனியின் சொத்துக்களில் உள்ளடங்கும் ரூபா 12.43 மில்லியன் தொகை, திறன்மதிப்பு பெறுமானமான ரூபா 0.26 மில்லியனான நிலையான சொத்துக்கள் மற்றும் கையிருப்பு தொகை ரூபா 0.17 மில்லியன் பௌதீக ரீதியாக இருக்கவில்லை. ரூபா 12.86 மில்லியனனான இந்த நட்டம் தொடர்பான ஏற்பாடுகளும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை.

மேலும் நிதி நிலைக் கூற்றுக்களுக்கு ஏற்ப 2019 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அக்கம்பனிக்கு அரசாங்கத்தினால் கிடைக்க வேண்டிய ரூபா 17.78 மில்லியன் நிலுவை கப்பல் எண்ணெய் காப்புறுதி தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 28.04 மில்லியனான நிலுவை மற்றும் கடனாளிகளிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூபா 3.58 மில்லியனான நிலுவை தொடர்பாக மற்றும் அத்திகதிக்கு கம்பனியினால் செலுத்த வேண்டிய ஏனையவைகள் தொடர்பாக ரூபா 7.3 மில்லியனான நிலுவை தொடர்பான மூல ஆவணங்கள், நிலுவைகள் உறுதிப்படுத்தும் கடிதங்கள் வயது பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் ஆதார தஸ்தாவேஜுகளும் கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஞ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு துணைக்கம்பனிகள் இரண்டினது நிதிக்கூற்றுக்கு ஏற்ப கிடைக்க வேண்டிய தடுத்து வைத்துக்கொள்ளும் குத்தகை நிலுவை ரூபா 6.57 மில்லியன் ஆவதோடு, தடுத்து வைத்துக்கொள்ளும் குத்தகைகளின் ரூபா 3.66 மில்லியன் தொடர்பான குத்தகை சான்றிதழ்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. குத்தகை சான்றிதழ்கள் இல்லாமை காரணமாக மேலே குறிப்பிட்ட தடுத்து வைத்துக்கொள்ளும் குத்தகை நிலுவை வருமானவரி செலுத்தும் போது குறைத்துக்கொள்வது தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று இருந்தது.

(ட) 2010 ஆம் ஆண்டில் தெற்காசிய பிரவேச முனையம் South Asia Gatway Terminal Ltd (SAGT) கம்பனி ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் வழங்கப்பட்ட மூன்று பாரந்தூக்கிகளினதும் பெறுமதியை பரிமாற்றிக்கொள்வதற்காக ரூபா 141.63 மில்லியன் பெறுமதிக்கு அக்கம்பனியின் பங்குகள் அதிகாரசபைக்கு பெற்றுத்தருவதாக உடன்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வண்டு முடிவுறும் வரையும் குறித்த பங்குகளின் உரிமை அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதனால் குறித்த கம்பனியின் பங்குகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை இல்லையென 2020 ஆம் ஆண்டில் நிலுவை உறுதிப்படுத்தல் மூலம் பதில் அளிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தெற்காசிய உட்பிரவேச முனைய கம்பனியுடன் ஒப்பந்த உடன்பாடொன்று ஏற்படுத்திக்

கொள்ளப்படாமையின் காரணமாக அதிகாரசபைக்குரிய கம்பனியின் பங்குகள் கிடைப்பது நிச்சயமற்ற நிலையில் இருந்ததோடு, அதிகாரசபை மேற்குறிப்பிடப்பட்ட கிடைக்க வேண்டிய பங்குகளின் பெறுமதிக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் ஒதுக்கீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதேபோன்று, 2022 பெப்பரவரி 02 திகதி நிலுவையை உறுதிப்படுத்துமாறு கோரிக்கையொன்று விடுக்கப்பட்டிருந்த போதிலும் நிலுவை உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ன) வளவுப் பிரிவில் காணி லெஜருக்கு ஏற்ப ரூபா 633.94 மில்லியன் பெறுமதியான 19 காணித்துண்டுகள் ஏனைய நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததாக காட்டப்பட்டிருந்ததோடு, நிதிப் பிரிவினால் பேணப்படுகின்ற முதலீட்டு சொத்துக்கள் தொடர்பான ஏட்டில் அக்காணிகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகாரசபையின் நிதிநிலை கூற்றில் முதலீட்டு சொத்துக்கள் ரூபா 633.94 மில்லியன் குறைவாக கணக்கெடுக்கபட்டிருந்ததோடு காணிப்பெறுமதி அப்பிரமானத்தில் அதிகரித்த பெறுமதியாக காட்டப்பட்டிருந்தது.

(த) அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சர்வதேச துறைமுக கூட்டுக்கம்பனி (HIPG) (பட்டியலிடப்படாத) பங்குகள் முதலீடுகளில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சாதாரண பெறுமதியான ரூபா 32,932.8 மில்லியனாக அக்கம்பனியின் 2020 ஆம் ஆண்டில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றின் பெறுமதி மீது கணக்கெடுக்கப்பட்டு குறிப்பிடப்பட்டிருந்ததோடு 2022 மே 19 ஆந் திகதி வரை 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த வருடத்திற்கு கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ந) 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட சொத்துக்கள் மீளாய்வுக் குழுவின் அறிக்கைக்கேற்ப 2021 திசம்பர் 31 ஆந் திகதிக்கு கொள்திறன் மதிப்பு ரூபா 403.68 மில்லியனான இயக்க கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்பு ரூபா 181.9 மில்லியான இயந்திர உபகரணங்கள் பௌதீக ரீதியாக அறிந்து கொள்ளப்பட முடியாமையினால் அச்சொத்துக்களின் இருப்பு நிச்சயமற்றதாக அவதானிக்கப்பட்டது.

மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு நிதி நிலைக் கூற்றில் விஸ்தீரன, வருமானக் கூற்றில் உரிமம் மாற்றமடையும் கூற்றில் மற்றும் நிதிஓட்ட கூற்றில் உள்ளடங்கப்பட்டுள்ள அளவீட்டு மாற்று முறைமை மூலம் உறதி செய்வதற்கு அல்லது சரிபார்ப்பதற்கு எனக்கு முடியவில்லை. இதன் காரணமாக நிதிநிலைக்கூற்று, விஸ்தீரண வருமானக் கூற்று, உரிமத்தை மற்றும் கூற்று மற்றும் காசோட்டக் கூற்று தயாரிக்கும் பெறுமதி அல்லது விடயங்களுக்கு அறிவிக்கப்படாத பெறுமானம் அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஏதாவது சீர்செய்தல்கள் தேவையானதா என எனக்கு உறுதி செய்ய முடியவில்லை.

1.3 அதிகாரசபையின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு பின் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கும் அதிகாரசபையின் 2021 வருடாந்த அறிக்கையில் உள்ளடங்கப்பட்டுள்ள எனினும் நிதிக்கூற்று மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படும் இந்த எனைய தகவல் தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்புகூற முடியும்.

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்தின் ஏனைய தகவல்கள் உள்ளடக்காததோடு நான் அது தொடர்பாக எதுவிதத்திலும் உறுதிப்படுத்தல் அல்லது கருத்தொன்றை வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக்கூற்று தொடர்பான எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பாவது மேலே அடையாளங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடிந்தபோது மற்றும் அவ்வாறு செய்வதனால் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது வேறுமுறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவுக்கேற்ப பிரமான அடிப்படையில் பொருந்துமா என்பதனை கருதுவதற்காகும்.

ஆதிகாரசபையின் 2021 வருடாந்த அறிக்கையை வாசிக்கும் போது அதில் குறிப்பிடத்தக்க அளவு பிழையாகக் காட்டுதல்கள் இருப்பதாக நான் அனுமானித்தல், சீர்செய்தல்கள் தொடர்பாக கட்டுப்படுத்தும் தரப்பினர்களுக்கு அக்காணிகளை தொடர்புபடுத்துதல் வேண்டும். மேலும், திருத்தப்படாத பிழையாகக் காட்டுதல்கள் இருந்தால் அவை அரசியமைப்பின் 154 (6) பிரிவுக்கு ஏற்ப என்னால் உரி காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் அறிக்கைக்கு உட்படுத்தப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் துணைத் தரப்பினர்களினதும் பொறுப்பு

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கேற்ப தயாரிப்பதும் நியாயமான முறையில் முன்வைப்பதும் மற்றும் மோசடிகள் அல்லது பிழைகள் காரணமாக ஏற்படக்கூடிய போதுமான பிழையான கூற்றுக்களிலிருந்து தவிர்ந்து நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படக் கூடிய வகையில் தேவையான உள்ளக நிர்வாகங்களைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது அதிகாரசபையினை தொடர்ச்சியாக பேணிச் செல்லக் கூடிய ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதோடு முகாமைத்துவம் அதிகாரசபையினை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பின் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதிருக்கும் போது இயக்கங்களை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதை தவிர்ந்த தொடர்ச்சியான நிலைநிற்றலின் அடிப்படை மீது கணக்கு வைத்தல் மற்றும் அதிகாரசபையின் தொடர்ச்சியான நிலைநிற்றலுக்குரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பான பொறுப்பானது நிர்வகிக்கும் தரப்பினர்களினால் வகிக்கப்படுகின்றன.

2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவின் படி அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலத்துக்குரிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் முறையாக புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிச் செல்லல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பிலான கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடாத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எனினும் அபிப்பிராயம் தெரிவிப்பதற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் காரணமாக இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராமொன்றிற்கான அடிப்படையினை வழங்குவதற்குரிய போதுமான மற்றும் தகுந்த கணக்காய்வு சான்றுகள் என்னால் பெற முடியவில்லை.

02. ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தும் தேவைப்பாடுகள் பற்றியதான அறிக்கை

2.1 2018 இன் இல: 19 ஆம் கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் கணக்காய்வுத் தேவைப்பாடுகள் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 இன் இல : 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி கணக்காய்வுக்கு தேவைப்படும் அனைத்து தகவல்களையும் தெளிவுபடுத்தல்களையும் என்னால் பெற முடியாதிருந்ததோடு எனது விசாரணையில் தோன்றுகின்றவாறு அதிகார சபையினால் சரியான நிதி அறிக்கைகள் பேணிச் செல்லப்பட்டுள்ளதனை என்னால் நிச்சயிக்க முடியவில்லை.

2.1.2 2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (111) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் சென்ற வருடத்துடன் நேரொத்ததாக இருக்கின்றன.

2.1.3 2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் படி என்னால் கடந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இல.1.2 (அ),ஆ,இ,ஈ,ஏ,ச ஆகிய பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ள இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் மீதும் வரையறுக்கப்பட்ட போதுமான விடயங்களினுள்ளும் பின்வரும் கூற்றுக்களை வெளியிடக் கூடியதான எதுவும் எனது அவதானிப்புக்கு உட்படவில்லை.

2.2.1 2018 இன் இல: 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி அதிகாரசபையின் நிர்வாக சபையின் உறுப்பினரொருவருக்கு அதிகாரசபையுடன் தொடர்புபடும் ஏதாவது உடன்படிக்கையொன்று தொடர்பில் நேரடியாகவோ அல்லது வேறு முறையிலோ பொதுவான வர்த்தக நிலைக்கு அப்பாற்பட்ட தொடர்புள்ளமை.

2.2.2 2018 இன் இல : 19 ஆம் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டின் படி பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த சம்பந்தப்பட்ட ஏதாவது எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு ஏதாவது அல்லது விசேட விதிமுறைகளுக்கு மாற்றமாக செயற்பட்டுள்ளமை.

சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றினை கவனத்திலெடுத்தல்	**அவதானிப்பு**
(அ) 1971 இன் இல : 38 ஆம் நிதிச்சட்டம் II ஆவது பந்தி மற்றும்	2021 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை அதிகாரசபையினால் நிலையான மற்றும் குறுகியகால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 52,344 மில்லியன் தொகை தொடர்பில் நிதி அமைச்சரின் உடன்பாடு கிடைக்கப் பெற்றிருக்க வில்லை.
(ஆ) 1971 இன் இல : 38 ஆம் நிதிச்சட்டம் 10 (5) பிரிவு மற்றும் 1979 இல 51 ஆம் இலங்கை துறைமுகங்கள் தொடர்பாக அதிகாரசபை சட்டத்தின் 30 ஆம் பந்தி	அரச கூட்டுத்தாபனமொன்றில் ஏதாவது ஆண்டில் மிகுதியாக ஏதும் இருப்பின் சட்டத்திலுள்ள கழித்தல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் எஞ்சியவை ஒன்றிணைந்த நிதியத்தில் வைப்பிலிடப்படுதல் வேண்டும். துறைமுகங்கள் தொடர்பாக சட்டமூலத்தின் படி துறைமுகத்திற்கு கையளிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட நிதிசார் ஒத்துழைப்பின் பிரகாரம் வருடத்திற்கு நூற்றுக்கு 8 மேற்படாத இலாபத்தை ஒன்றிணைந்த நிதிக்கு செலுத்துதல் வேண்டும். ஆயினும் 2016 இருந்து 2021 வரையிலான ஆண்டுகளில் அதிகாரசபை பெற்றிருந்த கூட்டுமொத்த தூய இலாபமான ரூபா. 69,686 மில்லியன் தொகை ஒன்றிணைந்த நிதியத்தில் ரூபா 600 மில்லியன் மாத்திரம் வைப்பிலிடப்பட்டிருந்தது. மேலும்,

		மேற்குறிப்பிட்ட இலாபத்தினுள் நீண்டகால குத்தகை அடிப்படை மீது தனியார் பிரிவிடம் வழங்கப்பட்டிருக்கும் தெற்காசிய நுழைவாயில் முனையம் (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) போன்றவற்றில் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் இரண்டு கம்பனிகளிடமிருந்து 2016 இருந்து 2021 வரை அதிகாரசபை அறவிட்டிருந்த ஒட்டுமொத்த ரூபா 12,918 மில்லியன் தொகை குத்தகை வாடகைக் கட்டணம் மற்றும் குறித்த காலப்பகுதிக்கு இறைமைக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்த ஒட்டுமொத்த ரூபா 19,582 மில்லியன் தொகையும் மேற்குறித்த இலாபத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த வருமானங்கள் துறைமுகத்தின் நேரடியான இயக்க வருமானங்கள் அல்லவென அவதானிக்கப்பட்டுள்ளது.
(இ)	1979 இல 51 கொண்ட இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகாரசபை சட்டம் (1) 37 (i) பிரிவு	அதிகாரசபையினால் அறிவிடப்படக்கூடிய கட்டணம், நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடன் விசாரித்து அமைச்சரின் அங்கீகாரத்துடன் அதிகாரசபையினால் விதிக்கப்படல் வேண்டும். அவ்வாறே அங்கீகாரம் பெற்றுக்கொண்டு 2019 ஆண்டில் திருத்தப்பட்ட கட்டணம் அறவிடும் ஏட்டில் (Tariff – 2019) 24 விடயத்துக்கு ஏற்ப கொள்கலன் தொடர்பாக களங்சியக் கட்டணங்களில் இருந்து விடுவிக்கப்படும் காலம் 21 தினங்களென காட்டப்பட்டிருந்த போதிலும் கப்பல் முகவர் நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட முனைய சேவைகள் ஒப்பந்தத்தில் (Terminal Service agreement) 45 தினங்களுக்கான சலுகை காலம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு, களஞ்சியக் கட்டணம் தொடர்பாக மீளாய்வு ஆண்டில் வழங்கப்பட்டிருந்த கட்டண சலுகை (Rebates on Stroge) ரூபா 2,286.44 மிலலியன் ஆனதோடு, கட்டண அறவீட்டுமுறை அட்டவணையில் (Tariff – 2019) குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளை காட்டிலும் மாறுபட்ட நிபந்தனைகள் உள்ளடங்கலாக முனைய சேவைகள் ஒப்பந்தங்கள் கைச்சத்திடப்பட்டிருந்தன. அதற்காக நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடன் விசாரித்து பெற்றுக்கொண்ட அங்கீகாரம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
	(11) 39 (ii) பிரிவு	அதிகாரசபையின் சாலையோர கொட்டகைகளில் வைக்கப்பட்ட பொருட்கள் குறித்த காலம் முடிவடைந்ததன் பின், 40 ஆவது பிரிவின் விதிமுறைகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு அதிகாரசபையினால் பகிரங்க ஏலத்தில்

	விற்பனை செய்ய முடியும். அவ்வாறு விற்பனை மூலம் கிடைத்த நிதியினால் குறித்த சுங்கவரி செலுத்தி அதிகாரசபையின் களஞ்சியக் கட்டணங்கள் மற்றும் நிருவாக செலுவுகளை கழித்துக்கொண்டு மிகுதி இருப்பின் அத்தெகையை பொது திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றினை பரீட்சிக்கும் போது , அவ்வாறு ஏலத்தில் விற்பதனால் கிடைத்த நிதியிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இருந்த தீர்க்கப்படாத நிலுவை ரூபா 385.14 மில்லியன் என அவதானிக்கப்பட்டதோடு, அதனுள் 2015 முதல் 2020 வரை கிடைத்த ஏல விற்பனை வருமானத்திலிருந்து குறித்த தர்பபினர்களுக்கு தீர்க்கப்படாத ரூபா 336.38 மில்லியன் நிலுவையொன்று இருந்தது. அவ்வாறே, 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை தீர்க்கப்படாத கடிதத் கோவைகளுக்கு, கறித்த அதிகாரசபையின் பகுதியாக ரூபா 63.31 மில்லியன் முந்திய வருட வருமானத்துக்கு அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும் அதில் ரூபா 52.57 மில்லியன் ஏல விற்பனை வருமனாத்திலிருந்து இலங்கை சுங்கத்துக்கு செலுத்த வேண்டிய சுங்க வரி மற்றும் பொது திறைசேரிக்கு வழங்கப்பட வேண்டிய பங்களிப்பினை அறிந்து கொண்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இல / PED/01/2021 கொண்ட அரசாங்க வர்த்தக முயற்சி சுற்று நிருபம் (1) 7 (3) பந்தி	அதிகாரசபையின் ஒவ்வொரு பிரிவுகளிலுமுள்ள செயற்பாடுகள் தொடர்பாக பிரதான செயலாற்றுகை சுட்டி (Key Performance Indicators) அறிமுகப்படுத்தி ஒவ்வொரு பிரிவிலும் செயலாற்றுகை மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பினும் அதிகாரசபையின் மீளாய்வு ஆண்டில் அத்தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.
(11) 3.2 பந்தி மற்றும் 2013 சனவரி 23 ஆம் திகதிய இல. DMS/F1/3/3-1 கொண்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட கடிதம்	ஏதாவதொரு நிறுவனத்தினால் ஆட்சேர்ப்பு விதிமுறையொன்றை தயாரித்து அரச வியாபார முயற்சி திணைக்களத்தின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்தும் அதிகாரசபையினால் நகல்கள், ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு விதிமுறை தாயாரித்திருந்த போதிலும், அதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(உ) 2019 பெப்ரவரி 12 ஆம் திகதிய இல MPS/AD/06/83-2017 கொண்ட துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட கடிதம்.	துறைமுக அதிகார சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு வழங்கும் விதிமுறைகளை அங்கீகரிக்கும் வரை அதிகாரசபையின் அனைத்து ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வு வழங்க வேண்டாமென அறிவித்திருந்த போதிலும் அதிகாரசபையினால் 2021 ஆம் ஆண்டில் மாத்திரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமல் இடைநிலை சேவைகளுக்கு உட்பட்ட 227 பதவிகளுக்கு பதவி உயர்வுகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.
(ஊ) 2021 சனவரி 01 ஆம் திகதிய இலங்கை துறைமுக அதிகாரசபையின் உள்ளக சுற்று நிருப இல. 2021/02 இல 01 மற்றும் 07 பிரிவின் 1 மற்றும் 11 பிரிவுகள்	அதிகாரசபையின் அலுவலர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிப்பதற்கு அனுமதி வழங்கும் கால எல்லை முதலாவதாக இல்லம் பெற்றுக்கொடுத்த திகதியிலிருந்து ஆகக் கூடிய கால எல்லை 5 வருடங்களாவதோடு குறித்த கால எல்லை பூரணமாகியதன் பின் மேலும் 1 வருட காலத்துக்கு வசிக்கும் அலுவலகரின் மாதாந்தம் ஆரம்ப சம்பளத்திலிருந்து 12.5% தொகையொன்று அறவிட்டு இல்லக் கமிட்டியின் அனுமதியுடன் தங்கியிருக்க முடிகின்றது. அவ்வாறாயினும் அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்களுக்கு ஏற்ப 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக மேற்கொண்ட எழுமாற்று சோதனைக்கு ஏற்ப 06 வருடங்கள் முதல் 28 வருடங்கள் வரையான கால எல்லைக்குள் குறித்த உத்தியோக இல்லங்களிலிருந்து வெளியோறாமல் தங்கியிருக்கும் அலுவலர்களின் எண்ணிக்கை 413 ஆக அறியப்பட்டுள்ளது.
(எ) 2021 ஒக்தோபர் 14 ஆம் திகதிய இல 1 நிப/நிக/கொ /41/2021 கொண்ட இலங்கை துறைமுக அதிகாரசபையின் உள்ளக சுற்றுநிருப 2-12 பிரிவு	தலைவர்களினால் பெற்றுக்கொண்ட முற்பணத் தொகையை குறித்த ஆண்டு நிறைவடைவதற்கு முன்னர் நிவர்த்தி செய்ய வேண்டியுள்ளதுடன் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இலங்கை தறைமுக அதிகாரசபையின் பல்வேறு பகுதிகளினால் 106 தடவைகள் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 80.89 மில்லியன் முற்பணம் மற்றும் கொள்வனவிற்காக ஒழங்குனர்களுக்கு செலுத்திய ரூபா 22.27 மில்லியன் முற்பணம் விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 2.15 மில்லியன் 6-12 மாத காலப்பகுதிக்கு ரூபா 2.97 மில்லியன் 2-5 வருட காலத்திற்கும், ரூபா 1.5 மில்லியன் 5 வருடங்களிற்கு மேற்பட்ட தீர்க்கப்படாதிருந்தது. இவ்வாறு நீண்ட காலமாக முற்பணம் தீர்க்கப்படாமையின்

	காரணமாக கணக்காய்வுக்கு அறியப்படாதிருந்தது.
(ஏ) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இல 01/2021 கொண்ட அரசாங்க வர்த்தக சுற்றுநிருபத்துடன் வழங்கப்பட்ட அரசாங்க வரத்தகம் தொடர்பான கூட்டமைத்த நல்லாட்சி வழிகாட்டுதலில் 2.2.5 பிரிவு	இணைக்கம்பனி தொடர்பான தாய்க்கம்பனியின் பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட இணைக் கம்பனிக் கொள்கையொன்று (Bord approved Subsidiary Policy) தயாரித்து அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவிருந்த போதிலும் அதிகாரசபைக்குரிய இணைக்கம்பனி தொடர்பாக தயாரிக்கப்பட்ட இணைக்கம்பனியின் கொள்கையொன்று இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை.
(ஐ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புதிய முற்பணம் தனியார் வருமான வரி வட்டம்	மாதாந்த நிலையான இலாபம் ரூபா 250,000 க்கு கூடிய அனைத்து ஊழியர்களின் முற்பன தனியார் வருமான வரிக்கு உட்படுவதோடு வரி செலுத்தும் போது ஊழியர்களின் விருப்பத்துக்கு அல்லது நேரடியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு செலுத்த முடியும். முற்பண தனியார் வருமான வரி கணக்கிடுவதற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வரி வட்டத்திற்கேற்ப ஊழியர்களுக்கு கிடைக்கும் அனைத்து நிதி மற்றும் நிதியல்லாத கருத்திறகொள்ளப்படல் வேண்டும். அவ்வாறாயினும் இலங்கை துறைமுக அதிகாரசபையிலுள்ள ஊழியர்களினால் வரிகள் குறைப்பதற்காக விருப்பம் தெரிவித்த ஊழியர்களின் 33 பேரின் முற்பணம் தனியார் வருமான வரி கணக்கிடும் போது வீட்டுக் கொடுப்பனவு போக்குவரத்து கொடுப்பனவு மற்றும் ஏனைய நிதியல்லாத கொடுப்பனவுகள் எதுவும் கருத்திற் கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

2.2.3 2018 இல 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைக்கு ஏற்ப, அதிகாரசபையின் அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகளுக்கு ஏற்புடையதாகாதவாறு செயற்படுத்தப்பட்டுள்ளதென்பது,

2.2.4 2018 இன் இல: 19 கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகளுக்கேற்ப, அதிகாரசபையின் வளங்களை சிக்கனமாக செயற்றிறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் குறித்த சட்டதிட்டங்களுக்கு எற்ப கொள்வனவு செய்து பயன்படுத்தப்படாமை.

3. ஏனைய காரணிகள்

(அ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகாரசபையின் கால எல்லையை தாண்டிய மொத்த கப்பல் முகவர்களின் கடன்பட்ட நிலுவை ரூபா 1,667.57 மில்லியன் ஆனது அது மொத்த கப்பல் முகவர் கடன்பட்ட நிலுவையின் 55% ஆகும்.

(ஆ) கப்பல் முகவர்களினால் துறைமுக சேவை வசதிகள் பெற்றுக்கொள்ளும் போது முன்னர் செலுத்தப்பட்ட முற்பணம் தொகையில் இருந்து மெய்யான செலவுகளை

தீர்த்ததன் பின் 2021 திசெம்பர் 31 திகதிக்கு மீண்டும் செலுத்தாமல் கிடைத்த முற்பணமாக நிதிக்கூற்றுக்களில் எஞ்சியிருந்த நிலுவை ரூபா 631,97 மில்லியன் ஆவதோடு அதில கொழும்பு துறைமுகத்திற்கு சொந்தமான ரூபா 619.39 மில்லியனிலிருந்து ரூபா 150.43 மில்லியன் சேவையை பெற்றுக்கொண்டு 06 மாதத்திலிருந்து 5 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ரூபா 619,39 மில்லியன் சேவையை பெற்றுக்கொண்டு 06 மாதம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேலும் முகவர்களினால் துறைமுக சேவைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இன்வொய்சு பெறுமதியை விட கூடுதலாக செலுத்தப்பட்ட நிதித்தொகை, கப்பல் முகவர் வரவு நிலுவையாக (Shipping agent credit balance) நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டடிருந்தது 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு குறித்த நிலுவை ரூபா 508.68 மில்லியன் என்பதுடன் உம் அதில் ரூபா 503.38 மில்லியன் 111.55 சேவையை பெற்றுக் கொண்டு 06 மாதங்கள் முதல் 5 வருட மாதங்களை விட கூடிய காலம் கடந்திருந்தாலும் அவற்றினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகாரசபையின் 24 பகுதிகள் மூலமாக முன்மொழியப்பட்ட அலுவலர்களின் விபரங்களிற்கு ஏற்ப 77 பதவி வெற்றிடங்களிற்காக அனுமதிக்கப்பட்ட அலுவலர்களிற்கு மேலதிகமாக 513 ஊழியர்களை பணிகளில் ஈடுபடுத்தியிருந்த போதிலும் அதிகாரசபையின் இயக்க நடவடிக்கைகளில் (Operations) நேரடியாக தொடர்புபடும் பகுதிகளில் 633 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் இருந்தன அதேபோல் அதிகாரசபையின் இயக்க நடவடிக்கைளிற்கு நேரடியாக தொடர்புபடாத 12 பிரிவுகளில் 427 ஊழியர்கள் மேலதிகமாக இருந்தார்கள் 2021 ஆம் ஆண்டினுள் மிகையான ஊழியர்கள் இருந்த பகுதிகளுக்காக ரூபா 1இ173 மில்லியன் மேதிக கொடுப்பனவு உள்ளடங்கலாக ரூபா 5,850 மில்லியன்கள் மேலதிகமாக கொடுப்பனவாக வருடத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

மேலும் தாபன கோவையின் VIII பந்தியின் 2 (1) பிரிவின் படி மேலதிக நேரம் பெறுவதற்கு போதுமான மேலதிக நேர வேலைகள் உரியவாறும் நியாயமாகவும் செய்யப்பட்டுள்ளதாவென ஆராய்ந்து பார்த்து பொறுப்பு வாய்ந்த அலுவலர் திருப்தியடைதல் வேண்டும். அது தொடர்பில் விதிக்கப்பட்ட வேலையின் அளவு நிறைவேற்றப்பட்டுள்ளதெனவும் வேலைகள் இல்லாதிருக்கும் காலத்துக்கு மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாதென கவனத்திற் கொள்வதற்கான உரிய பரீட்சிப்புக்கள் மற்றும் அறிக்கைகளை பேனும் முறையொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும். ஆனால் குறித்த மேலதிக நேரக் கொடுப்பனவுகள் பத்தியதில் ஆற்றப்பட்ட வேலை அறிக்கைகள் கணக்காய்வில் முன்வைக்கப்படவில்லை.

(ஈ) கொழும்பு துறைமுகத்தில் தற்போது கொள்கலன்களை கையாளும் முனையங்களில் ஆழம் (Draft) 14.25 மீட்டருக்கு மேற்பட்ட கப்பல்கள் வரக்கூடிய முனையங்களால் கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையம் (CICT) மற்றும் கிழக்கு கொள்கலன் முனையம் (ECT) காணப்படுகின்றன. கொழும்பு சர்வதேச கொள்கலன் முனையத்தின் வருடாந்த பரிமாணம் ரூபா 2.4 மில்லியன் இருபது சம அலகுகளாகும். 2021 ஆம் ஆண்டில் அம்முனையத்திற்கு சுமார் 270 கப்பல்கள் வருகை தந்ததுடன் 3.2 மில்லியனிற்கு மேற்பட்ட மொத்த கொள்கலன்கள் கையாளப்பட்டது. இதுவானது ஆகக் கூடிய பரிமாணத்தை தாண்டியுள்ளதென அவதானிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகம் விரிவாக்கும் செய்திட்டம் தொடர்பில் இலங்கை வங்கியின் நிதி ஏற்படுத்தி வருடாந்தம் 0.8 மில்லியன் கொள்கலன் அளவுகளின் பரிமாணம் கொண்டதும் நிர்மாண ஆகுசெலவு ரூபா 11,168 மில்லியன் தொகை கொண்டதும் 18 மீட்டர் ஆழம் மற்றும் 440 மீட்டர் நீளமானதுமான கிழக்கு கொள்கலன் முனையத்தின் கட்டம் I இன் நிர்மாணப் பணிகள் 2016 ஏப்ரல் மாதம் நிறைவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சரவையின் தீர்மானமொன்றிற்கேற்ப ஜயகொள்கலன்

முனையத்துக்காக கொள்வனவு செய்த கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளக்கூடிய மூன்று பாரம் தூக்கிகள் 2020 பெப்பரவரி 07 ஆம் திகதிய இல PA/HD/25 கொண்ட பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி கிழக்கு கொள்கலன் முனையத்தில் (ECT) பொருத்தப்பட்டு, அங்கு இயக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பின்னர் அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. அதன் பின் 2021 பெப்பரவரி 09 ஆம் திகதிய இல: அப /21/0198/328/005 ரீபிஆர் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி கிழக்கு கொள்கலன் முனையத்தை அபிவிருத்தி செய்தல், இயக்க உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசரயின் பூரண உரித்துடன் கொள்கலன் முனையமாக இயக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களுக்கு ஏற்ப 2021 ஆம் ஆண்டில் 30 கொள்கலன் கப்பல்கள் (பாரிய கப்பல்கள் அல்லாத) இம்முனையத்திற்கு வருகை தந்ததுடன் 106,454 கொள்கலன்கள் கையாளப்பட்டது. இதன்படி முனையத்தின் பயன்பாடு 13.3% சதவீதமாகவிருந்தது முனையத்தில் அதியுச்ச கொள்கலன் கையாளலை மேற்கொள்வதற்கு தேவையான கப்பலில் இருந்த கரைவரை இயக்கங்களை முன்னெடுக்க தேவையான கப்பலில் இருந்து கரைவரை இயக்கங்களை மேற்கொள்ளக் கூடிய பாரிய அளவிலான பாரந்தூக்கிகளை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தக்காரருடன் அ.டொலர் 282.56 மில்லியன் பெறுமதியான மதிப்பீட்டு ஆகுசெலவிற்கு 2021 மே மாதம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் 2021 திசெம்பர் 18 ஆம் திகதி வழங்கல் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டது. ஒப்பந்தத்திற்கு ஏற்ப வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பண கொடுப்பனவு அ.டொ 56.51 மில்லியன் என்ற போதிலும், இவ்வறிக்கையின் திகதி வரையில் செலுத்தப்பட்ட தொகை அ.டொலர் 18 மில்லியன்கள் என்பதுடன், உடன்பாட்டுக்கு அமைவாக பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையினால் வங்கிக்கு அதிகாரசபையின் டொலர் கையிருப்பின் மூலமாக குறித்த முறையில் அந்நிதியை விடுவிப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்ட போதிலும் வங்கியினால் அக்கொடுப்பனவுகளை ஒப்பந்தக்காரருக்கு விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. வேலைகளை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தை செலுத்துவது முழுமையாகாமையின் காரணமாக திட்டமிடல் மீளாய்வு கூட்டம் தற்போது வரையில் நடைபெறாமையின் காரணமாக உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவில்லை.

(உ) 2011 ஆண்டில் இலங்கை சுங்கத்துக்கு தெரியப்படுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரம்தூக்கிகள் தொடர்பில் ரூபா 1,580 மில்லியன் தொகை சுங்கத்தண்டப் பணமாக சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்தது. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் கட்டண குறைப்பு தொடர்பில் சுங்க புலனாய்வுத் தீர்ப்பு மீது நிதியமைச்சரிடம் மேன்முறையீடொன்றை மேற்கொள்ளக் கூடியதாக இருந்ததும் அதிகாரசபையினால் அவ்வாறானதொரு மேன்முறையீடு முன்வைக்கப்படவில்லை. இது தொடர்பில் கணக்குகளில் ரூபா 957.9 மில்லியன் தொகை நிகழாவற்றிற்கான வைப்பாக ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் அதிகார சபை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு நிராகரிக்கப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கு எதிராக 2020 ஆண்டில் உயர் நீதிமன்றில் மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 மார்ச் 09 ஆந் திகதிய நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்திற்கேற்ப அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது சுங்கத் தண்டப்பணமான ரூபா 50 மில்லியன் வரை குறைப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) அதிகாரசபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப, இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமாகவுள்ள 3 ஏக்கர், 6.46 பேர்ச்சஸ் மற்றும் சுமார் 145 - 130 சதுர மீட்டரான பூமி பிரதேசத்துடன் கூடிய 14 காணித்துண்டுகளுக்காக சைச்சாத்திடப்பட்ட குத்தகை வாடகை ஒப்பந்தங்களில் (Leasing Agreement) ஒப்பந்தக் கால எல்லை 2021 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது முடிவடைந்திருந்தது. அவ்வாறாயினும், ஒப்பந்தங்களை நிகழ்நிலைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை அதிகாரசபையினால் எடுக்கப்படாதிருந்ததால்

சட்டரீதியான சிக்கல்கள் ஏற்படும் அவதானம் கணக்காய்வின் போது நிராகரிக்க முடியாது.

(எ) வரைப்பட இல சிஒ/சிஒஎல்/2012/1047 ஆம் கொழும்பு டி.ஆர்.விஜயவர்தன மாவத்தையில் அமையப்பெற்றுள்ள ரூபா 604.52 ஏக்கர் 3 ரூட் 9.61 பேர்ச் காணியை தாமரை கோபுரத்தை அமைக்கும் பொருட்டு நகர அபிவிருத்தி அதிகார சபையின் சொத்தின உரிமத்தை கையளித்திருந்த போதும் உரிய நடைமுறைகளிற்கு அமைய பெறுமதியை ஏடுகளிலிருந்து அகற்றி உரிமையை உறுதியொன்றின் மூலம் காணி கையளிக்கப்படவில்லை.

(ஏ) காணி வரைப்பட இல எல்/எஸ்/எம்ஐஎஎஸ்/344 ஆம் கொழும்பு 01 பிரதான வீதி மற்றும் ஒல்கொட் மாவத்தைக்கு எல்லையாக உள்ள ரூபா 947. மில்லியன் பெறுமதியான 02 ஏக்கர் காணியை சுங்க திணைக்களத்தின் கட்டிடத்தை அமைப்பதற்கு வழங்கிய போதும் காணியை மதிப்பீடு செய்து சட்டரீதியாக கையளிப்பதற்கு மற்றும் மொத்த பெறுமதியை ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு இவ் அறிக்கை வெளியிட்ட திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஐ) 2021 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பிணக்குகளைக் கொண்ட கடனாளிகள் (Dispute Debtors) ரூபா 59.78 மில்லியன் மற்றும் மீள் தீர்ப்பதற்கு (Re – dispute) அனுப்பப்பட்ட கடனாளிகளின் ரூபா 4.63 மில்லியன் தொகையும் இருந்தன.

(ஒ) தெற்கு பிராந்தியம் அபிவிருத்தி செய்யும் நோக்கில் காலி துறைமுகத்தில் பல்பணி முனையமொன்றை நிர்மானிப்பது தொடர்பில் 2006 மார்ச் 28 ஆம் திகதி இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் (JBIC) வங்கிக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட கடன் உடன்படிக்கையொன்றின் மீது செயற்படுத்துவதற்கு உடன்பட்டிருந்தாலும் உலக மரபுரிமையொன்றாக பெயரிடப்பட்டுள்ள காலி கோட்டைக்கு அருகில் குறித்த நிர்மாணத்தை மேற்கொள்வதற்கு யுனெஸ்கோ (UNESCO) அமைப்பின் அனுமதி பெற வேண்டியிருந்தது. இதற்கு மூன்று வருடங்களுக்கு மேல் சென்றதால் கடன் வழங்குனரினால் கடன் காலஎல்லையை நீடிக்காததன் காரணமாக இந்த செய்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன்படி இது தொடர்பில் செலவு செய்யப்பட்ட ரூபா 418 மில்லியன் தொகையின் அதிகாரசபையின் குறித்த மீளாய்வு ஆண்டின் நிதிக்கூற்றில் செயற்படுத்துகின்ற வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேலதிகமாக அதிகாரசபையின் கணக்காய்வுக் குழு எடுக்கப்பட்ட தீர்மானத்தினத்திற்கு ஏற்ப, இத்தொகை கணக்கிலிடப்பட வேண்டிய முறைகள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு மீளாய்வு சபையினால் 2021 ஏப்ரல் 04 ஆந் திகதி அதிகாரசபையிடம் வினவப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் ஆலோசனைகள் இதுவரை கிடைக்கப்பெறாததோடு, குறித்த செலவு மூலதன அல்லது கடன்பட்ட செலவாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதிவரை அறிந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) உயர் பாதுகாப்பு வலயமாக பெயரிடப்பட்டிருக்கும் துறைமுக வளவினுள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் மூலதன வரவு செலவு ஊடாக அனைத்து வாயில்கள் மற்றும் பினையிடப்படும் களஞ்சியங்கள் தொடர்பில் முறையே ரூபா 60 மில்லியன்கள், ரூபா 150 மில்லியன்கள் தொகைகள் செலவு செய்யப்பட்டு அவதானிப்பு கமெரா தொகுதி (CCTV) பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இதற்கு ரூபா 150 மில்லியன் தொகை மற்றும் ரூபா 600 மில்லியன் தொகையை வருடாந்த வரவு செலவில் ஒதுக்கப்பட்டதுடன் 2021 மார்ச் 09 ஆம் திகதிய இல: PA/MD/46 கொண்ட அதிகாரசபையின் முகாமைத்துவ பணிப்பாளரின் கடிதம் மூலம் CCTV கெமரா தொகுதியொன்று பொருத்துவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று இது தொடர்பாக 2020 சனவரி 30 ஆந் திகதிய இலக்கம் PFD/DFD/103/CM/03 கொண்ட நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கேற்ப அமைச்சரவையினால் நியமிக்கப்படுகின்ற பெறுகைக்கான குழுவொன்றும் (CAPC)

மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்றும் (TEC) நியமிப்பதற்கு 2020 பெப்பரவரி மாதம் 13 ஆந் திகதிய இல: அப/20/0174/222/003 கொண்ட அமைச்சரவை தீர்மானத்தினால் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. அவ்வாறாயினும் குறித்த அங்கீகாரத்தை இரத்து செய்யாது CCTV கெமரா தொகுதியை பொருத்துவதற்கு 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டிருந்த வரவு செலவு ஏற்பாட்டு முகாமைத்துவ சபையின் தீர்மானமொன்றிற்கேற்ப திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பகுதியின் அலோசனை நடவடிக்கைகளுக்காக மாற்றப்பட்டிருந்தது. அதற்கேற்ப உயர் பாதுகாப்பு வலயமொன்றான துறைமுக அதிகாரசபையில் CCTV கெமரா பொருத்தும் பணிகள் நடைபெறாததோடு, இதன் காரணமாக பாதுகாப்பு தொடர்பான சிக்கலொன்றின் போது தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாத அவதான நிலையிலிருந்து மீள்வதற்கு மேலதிக இயக்க நடவடிக்கைகளின் வெளிப்படைத் தன்மை மற்றும் செயற்றிறன் தொடர்பாக தகவல்களை பரீட்சிக்க முடியாதென அவதானிக்கப்பட்டது.

(ஙள) ஹம்பாந்தோட்டை துறைமுக திட்டத்துக்காக காணி கையேற்றல் தொடர்பில் காணிகளை இழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 108.77 மில்லியன் தொகையொன்று ஹம்பாந்தொட்டை பிரதேச செயலாளர் காரியலயத்துக்கு வெளிக்கடமைக்காகவும் மற்றும் காணிகள் சுத்தம் செய்தல் தொடர்பாகவும் 2014 ஆம் ஆண்டில் ரூபா 4.39 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 30 ஆம் திகதியாகும் போதும் குறித்த நட்டஈடு செலுத்துதல் தொடர்பாக அறிக்கையொன்று இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் குறித்த காணிகளின் உரிமை அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(க) 2019 திசெம்பர் 04 ஆம் திகதி கப்பலொன்று கொழும்பு துறைமுகத்தின் ஜயகொள்கலன் முனையத்தில் மோதுதல் காரணமாக ஏற்பட்ட விபத்து காரணமாக ஜய கொள்கலன் முனையத்தின் நீர்த்தடை (Cassion), வேகத்தடுப்பி (Fenders) துறைமுக மேடைச் சுவர் (Quay wall) ஆகியவற்றுக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. குறித்த சேதம் ரூபா 315.90 மில்லியன் என மதிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறே மேற்குறிப்பிட்ட சேதம் தொடர்பாக ரூபா 384.42 தொகையொன்று 2019 திசெம்பர் 30 ஆம் திகதி அதிகாரசபைக்கு கிடைத்திருந்தும் வேகத்தடுப்பி தவிர்த்து ஏனையவற்றில் இதுவரை திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ங) அதிகார சபையினால் தற்போது பிரதான கையாளல்களை முன்னெடுக்கின்ற ஜயா கொள்கலன் முனையத்தின் நீளம் 600 மீட்டர்கள் மாத்திரம் என்பதனால் 330 மீட்டர்கள் நீளமான இரண்டு கப்பல்களை ஒரே நேரத்தில் கையாள்வதற்கு சிரமம் என்பதாலும் அதிகார சபைக்கான சந்தை வாய்ப்புக்கள் கைநழுவுகின்றமையாலும் அம்முனையத்தை 120 மீட்டர்களினால் நீளமாக்குவதற்கு மற்றும் நங்கூரதளத்தை 15 மீட்டர்களினால் ஆழமாக்குவதற்கு 2017 யூலை மாதம் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. 2018 நவம்பர் 29 ஆம் திகதி இலங்கை துறைமுக அதிகார சபை மற்றும் China Harbour Engineering Company Ltd (CHEC) கம்பனி நிறுவனத்துடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் ஆகுசெலவு ரூபா.5,035.30 மில்லியன்களாகும் (வட் இன்றி). ஒப்பந்த நிபந்தனை இல 8.1 பிரிவின் பிரகாரம், ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 07 நாட்களிற்குள் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான அறிவித்தலை ஒப்பந்தகாரருக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன், அதிலிருந்து 02 ஆண்டுகளின் பின்னர் 2020 நவம்பர் 23 ஆம் திகதி திருத்தங்கள் உள்ளடங்கலாக (Addendum1) பணிகளை ஆரம்பிப்பதற்கான அறிவித்தல் விடுக்கப்பட்டது. ஒப்பந்தம் தொடர்பாக மீள கலந்துரையாடி புதிய முன்மொழிவுகளுக்கேற்ப மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு 2020 செப்தெம்பர் 29 ஆம் திகதி இல20/1403/328/001/TBR இலக்கமிடப்பட்ட அமைச்சரவை முடிவுகளின் கீழ் மீண்டும் அனுமதி பெற்றுக்கொண்டமையே இக்கால தாமதத்திற்கான காரணமாகும். சீர்திருத்தத்தின் பின்னர் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தம் 2022 யூலை 23 ஆம் திகதி அளவில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் இச்செய்திட்டம் 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 30 வீதமாகும்.

(ச) வடக்கு கிழக்கு உட்பிரவேச வலய கருதுகோளை அடைந்து கொள்ளும் நோக்கில் காங்கேசன்துறை துறைமுகத்தை மீளமைப்பதற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 45.27 மில்லியன் கடன்தொகையொன்றினை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம், இந்திய நிறுவனம் மற்றும் ஏற்றுமதி வங்கி (எக்ஸிம் வங்கி) ஏற்றுமதி வங்கிக்கு இடையில் டொலர் கடன்கள் ஒப்பந்தமொன்றுக்கு 2018 சனவரி 10 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கடன் ஒப்பந்தம் கைசாத்திட்டு சுமார் நான்கு வருடங்கள் கடந்திருந்த போதிலும் துறைமுக நிர்மாண நடவடிக்கைகள் இதுவரை ஆரம்பித்திருக்க வில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகல்களுக்கு ஏற்ப 2020 மே மாதம் வரை பூமியின் உரிமை தொடர்பாக நடைபெற்ற சிக்கல்களை தீர்க்கப்படாததோடு குறித்த மாதம் வரை துறைமுக பாதுகாப்பு தொடர்பான விலக்கழிப்பு தொடர்பான சான்றிதழ் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அச்சான்றிதழ் பெற்றுக்கொண்டதன் பின் 2020 ஒக்தோபர் மாதத்தில் முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை சேவைகள் தொடர்பான ஒப்பந்தத்தை இந்திய கம்பெனியொன்றுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிடப்பட்ட செயல்திட்டத்தின் சீர்திருத்த நடவடிக்கைகள் 2021 செப்தெம்பர் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 மே மாதம் வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டு சட்ட மூலத்திற்கு ஏற்ப குறித்த செயல்திட்டம் தொடர்பாக ரூபா 1001 மில்லியன் செலவிடுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும் குறித்த ஆண்டில் ரூபா 142.3 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்த்த மூலதன செலவில் 14.2% மாத்திரம் இருந்தது. அதேபோன்று, 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு டொலர் 45.27 மில்லியன் கடன் தொகையிலிருந்து செலவிடப்பட்டிருந்த அளவு டொலர் 0.745 மில்லியன் மாத்திரம் ஆவதோடு நிதி பயன்படுத்தாத காரணத்தினால் கடன் ஒப்பந்தத்தில் 7.1 பிரிவின் பிரகாரம் ஒதுக்கி பெற்றுக்கொள்ளப்படாத கடன்தொகை மீது அர்ப்பணிப்பு கட்டணம் (Commitment Charges) கட்டணமாக அமெரிக்க டொலர் 9,537.34 (ரூபா 1.94 மில்லியன் தொகையொன்று இந்தியாவின் எக்ஸிம் வங்கிக்கு செலுத்துவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு நேர்ந்ததோடு அது எதிர்பாராத செலவாக அவதானிக்கப்பட்டது.

(ஞ) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கப்பல் முகவர் நிறுவனத்துக்கு தள்ளுபடிகள் (Volume rebates) பெற்றுக்கொடுக்கும் போது இலங்கை துறைமுக அதிகாரசபையுடன் முனைய சேவைகள் ஒப்பந்தம் Terminal Service Agreements) எற்படுத்திக்கொள்ளப்பட்ட கப்பல் முகவர் நிறுவனம் தொடர்பாக ஒப்பந்தத்தில் உடன்பட்ட ஆகவும் குறைந்த செயற்பாட்டு எல்லைகள் (Minimum TEU's to qualify for the rebates scheme) அடிப்படையாகக் கொள்ளப்படுவதோடு 2020 ஆம் ஆண்டினுள் அவ்வாறு அடைந்து கொள்ள வேண்டிய ஆகவும் குறைந்த செயற்பாட்டு மட்டத்தைவிட குறைந்த செயற்பாட்டு மட்டத்துடன் கப்பல் கூடிய கப்பல் முகவர் நிறுவனங்கள் இரண்டு தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 26.95 மில்லியன் தள்ளுபடிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்தது.

டப்லியு. பீ. சீ. விக்ரமரத்தின
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

பெயர்

இலங்கை துறைமுக அதிகார சபை

நிறுவனத்தின் நிலைமை

1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க பாராளுமன்ற சட்ட விதிகளின் பிரகாரம் கொழும்பு துறைமுக ஆணைக்குழு துறைமுக கப்பல் சரக்கு கூட்டுச்சபை, துறைமுக ஒத்துப்பார்த்தல் மற்றும் பாதுகாப்பு சேவைகள் கூட்டுத்தாபனம் என்பவற்றினை ஒன்றினைத்து 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி துறைமுக அதிகாரசபை நிறுவப்பட்டது.

அமைப்பு விதியிலுள்ள அம்சங்கள்

தேசிய பொருளாதாரத்துக்கு பாரிய பங்களிப்பினை வழங்கும் நிறுவனமாக இலங்கை துறைமுக அதிகாரசபை விளங்குகின்றது. வருமானத்தினை ஈட்டிக்கொள்ளல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற செயல்பாடுகளில் முதன்மை நிலையிலுள்ள நிறுவனமென்ற வகையில் அதிகாரசபை ஆற்றும் பணியின் மூலமாக உயர்நிலை சேவையில் பூரணமாக தனது பங்களிப்பினை அது செலுத்துகின்றது. பல்வேறு வகைகளில் அதனுடன் பங்களிப்புச் செய்யும் நிறுவனங்கள் மற்றும் துறைமுக பாவனையாளர்களுடன் காணப்படுகின்ற முனைப்பான தொடர்பு அதன் இயக்க வளர்ச்சிக்கு முக்கிய காரணியாக அமைகின்றது. இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய தொழிற்பாட்டு அம்சங்கள் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- நிலைத்திருக்கும் தன்மை
- காலத்திற்கேற்றதும் பிழைகளற்றதும்
- சாதனைக்குரிய உத்தரவாதம்
- குழு உணர்வு
- அர்பணிப்பு
- உற்பத்தித்திறனை அடையாளங் காணுதல்
- பூரணமான செயலாற்றுகை

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்கள் அதிகாரசபையின் அனைத்து ஊழியர்கள் தொடர்பிலும் பராமரித்துச் செல்லல் பிரதான நிறைவேற்றுனராக முகாமைத்துவப் பணிப்பாளரினதும் சிரேஷ்ட முகாமைத்துவ ஆணையாளரினதும் பொறுப்பாகும்.

தலைமை அலுவலகம்

கொழும்பு துறைமுகம்

இல : 19, சைத்திய வீதி
கொழும்பு – 01
தொ.பே.இல : (+94 11) 2421201, 2421231
தொ.நகல் : (+94 11) 2440651

காலி துறைமுகம்

கிலொசன்பார்க் இறங்குதுறை
மாகாலி
காலி
தொ.பே.இல : (+94 91) 2232213, 2234936

திருகோணமலை துறைமுகம்

புதிய நிர்வாக கட்டடம்
சீனக் குடா
திருகோணமலை
தொ.பே.இல : (+94 26) 2222460

வங்கியாளர்கள்

இலங்கை வங்கி (பிரதான வங்கி)
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி

கணக்காய்வாளர்

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
இல: 306/72, பொல்துவ வீதி,
பத்தரமுல்லை

இணையத்தளம்

www.slpa.lk